

ஸ்ரீமன் மத்வ கதாம்ருதம்

ஸ்ரீமன்மத்வ கதாம்ருதம்

சுமத்வவிஜய சர்க்கங்களின் சுருக்கம் மற்றும் இதர தகவல்களுடன்

கன்னட மூலம்: திரு. A.B. ஷ்யாமாச்சார்

தமிழில் மொழிபெயர்த்தவர்: 'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்

ஸ்ரீமத்வ கதாம்ருதம்
(சுமத்வவிஜய சர்க்கங்களின் சுருக்கம் மற்றும் இதர தகவல்கள்)

எழுதியவர் (கன்னட மூலம்):
A.B.ஷ்யாமாச்சார், B.Tech, FTC, DBM, DSQC, MA

தமிழில்:
'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
கைப்பேசி: 89044 58276

முதல் பதிப்பு : (தமிழில்) : 2018
பிரதிகள் : 1000
பக்கங்கள் : xyz

விலை: ரூ. 100

அச்சிட்டோர்:

ஜகன்னாதகேசவ பப்ளிகேஷன்ஸ்
பெங்களூரு

|| ஸ்ரீ திக்விஜயராமோ விஜயதே ||
ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீமத்வாசார்ய மூல மஹாசம்ஸ்தானம்

உத்திராதி மடம்

5th Cross, Shankarapuram, Basavanagudi, Bengaluru - 04. Ph: 080-2242 6203

Camp: Holenarasipura Date: 24/03/2011

ஜகத்குரு ஸ்ரீமன்மத்வாசார்ய மூல மஹாசம்ஸ்தானம்
ஸ்ரீமத் உத்தராதி மடாதீசரான
ஸ்ரீஸ்ரீ 1008 ஸ்ரீசத்யாத்ம தீர்த்த ஸ்ரீபாதங்களவரின்
அனுக்ரஹ செய்தி

'கமனாசனசங்கதாதிலீலா: ஸ்ம்ருதிமாத்ரேண பவாபவர்கதாத்ரீ:' என்று நாராயண பண்டிதாசார்யர் சொன்னதைப்போல, ஸ்ரீமதாசார்யரின் சிந்தனை, அவரது வாழ்க்கையின் சிறுசிறு சம்பவங்களின் சிந்தனையும், நம் வாழ்க்கையின் பிரச்னைகளைக் களைந்து நிரந்தரமான சுகத்தை வழங்குகின்றன. அவரது வாழ்க்கையை நமக்கு தெரியப்படுத்தும் அற்புத கிரந்தம் ஸ்ரீசுமத்வவிஜயம். இது இதிகாச காவியமும் ஆகும். மந்திரதுல்ய கிரந்தமும் அகும். இதனை படிப்பவர்கள் ஸ்ரீமன் மத்வாசார்யரின் அருளுக்குப் பாத்திரமாவர்.

இந்த நோக்கத்தில் நமது பிரிய சிஷ்யரான ஸ்ரீ ஷ்யாமாச்சார் அவர்கள் சுமத்வவிஜயத்தின் கதைச் சுருக்கத்தை அழகாக அனைவரும் அறியும் வண்ணம் சேகரித்து, ஸ்ரீமத்வ கதாம்ருதம் என்ற தொகுப்பாக வெளியிட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியான விஷயம். ஸ்ரீமதாசார்யரின் வாழ்க்கைக்கு சம்பந்தப்பட்ட இதர பல தகவல்களையும் பல கிரந்தங்களிலிருந்து தொகுத்து ஓரிடத்தில் கொடுத்திருப்பது மிகச் சிறப்பு. சுமத்வவிஜயத்தின் சுருக்கத்தை விளக்கும் அவரது இந்த முயற்சி ஸ்ரீமதாசார்யர் மற்றும் வேதவியாசர் மகிழ்ச்சியடைவர் என்பதில் சந்தேகமில்லை. இந்த புத்தகத்தின் பலனை அனைத்து ஆராய்ச்சியாளரும் அடையட்டும். ஸ்ரீ ஷ்யாமாசாரிடமிருந்து இதைப் போன்ற இன்னும் பல கிரந்தங்கள் வரட்டும். இதற்காக ஸ்ரீஹரி அவருக்கு ஆயுள், ஆரோக்யம், செல்வம், உற்சாகம், திறன் ஆகியவற்றைக் கொடுக்கட்டும். விசேஷமாக ஞான, பக்தி, வைராக்கியத்தை அருளட்டும் என்று ஆத்மஉபாசனாமூர்த்தியான ஸ்ரீமூலராம திக்விஜயராம வேதவியாஸர்களை வேண்டிக்கொள்கிறோம்.

நாராயண ஸ்மரணைகளுடன்

ஸ்ரீ1008 ஸ்ரீசத்யாத்மதீர்த்த ஸ்ரீபாதங்களவர்
ஸ்ரீஉத்தராதி மடம்

முன்னுரை

இந்த உலகம் உண்மை. இது அனைவரின் அனுபவம். அனாதி காலத்திலிருந்து அனைவரும் காணும் உண்மை. என்றால் ஜீவன் மற்றும் ஜடங்களும் உண்மையே. உடன் அதிலிருக்கும் உயர்/தாழ்வு நிலைகளும் உண்மையே. என்றால் இவற்றிற்கு உயிர் கொடுப்பவன், காப்பவன் ஒருவன் இருக்கவேண்டுமே? அவன் இவர்களிடமிருந்து வேறுபட்டு ஸ்வதந்த்ரனாக இருப்பதற்கு சாத்தியமா? அப்படியென்றால் அவர் யார்? அவனின் குண தர்மங்கள் என்ன? அவனுக்கும் ஜீவனுக்கும் இருக்கும் சம்பந்தம் என்ன? அவனை அடையும் வழி என்ன? அதை தெரிந்துகொள்ளும் வழி எது? ஜீவனுக்கு முடிவு இருக்கிறதா? மோட்சத்தை அடையும் வழி என்ன? இப்படி சம்சாரத்தில் மூழ்கியிருக்கும் ஜீவனுக்கும் இருக்கும் கேள்விகள் பற்பல. இவற்றிற்கு எதிரான வாதங்களும் இல்லாமலில்லை. நாஸ்திக வாதங்கள், அத்வைத வாதங்கள், வேதத்திற்கு எதிரான வாதங்கள், மாயாவாதம் போன்றவை சஜ்ஜனர்களின் மனதை கலங்கடிக்கின்றன. இந்த அனைத்திற்கும் பதிலளிக்கும் விதமாக அவதரித்து வந்தவர் ஸ்ரீமன் மத்வாசார்யர்.

ஜகன்னாதனை ஜகத்திற்கு அறிமுகம் செய்வித்தர் ஸ்ரீமத்வர். இவர் ஸ்ரீஹரியின் பிரதிபிம்பர். சர்வக்ஞர், வேதங்கள் புகழக்கூடியவர். ஜீவோத்தமராகிய வாயுதேவரின் மூன்றாவது அவதாரமான இவர் அனைத்து ஜீவருக்கும் த்ராணர் (காப்பாற்றுபவர்) - பிராணர். என்றைக்கும் இவரது ஞான, சக்திகளுக்கு மறைவு/குறைவு இல்லை. அதற்கே வேதங்கள் இவரை அமிர்தம் என்று அழைக்கின்றன. ஸ்ரீமதாசார்யரை அறியாமல் ஸ்ரீஹரியை அறியமுடியாது. தோஷங்கள் அற்றவரான இவர் மட்டுமே ஸ்ரீஹரி பரிபூர்ணன் என்று அழைக்கத் தக்கவர். பூர்ணப்ரக்ஞர் என்னும் காரணப்பெயரைக் கொண்ட இவர் அறியாததே இல்லை. சொல்லாததும் இல்லை. அவரது சர்வமூல கிரந்தங்கள் அனைத்திற்கும் மூலம் மட்டுமல்லாமல் அவரின் ஸ்வரூபமே ஆகியிருக்கின்றன.

ஸ்ரீமதாசார்யரின் வாழ்க்கையின் ஒவ்வொரு துளியும் பவித்ரம் மற்றும் மோட்சத்திற்கான வழியாகும். அதற்கே இவர் ஜகத்குரு எனப்பட்டார். ஆன்மிக உலகிற்கு தலைவரானார். சார்வபௌமர் என்று அழைக்கப்பட்டார். ஆகவே இவரது சித்தாந்தம் இறுதியான சித்தாந்தம் எனப்பட்டது.

ஸ்ரீமன் மத்வாசார்யரின் திவ்யமான வாழ்க்கைச் சரிதத்தை வெளிப்படுத்திய சிறந்த கிரந்தம் - சுமத்வவிஜயம். இதனை எழுதியவர் த்ரிவிக்ரம பண்டிதரின் மகனான நாராயண பண்டிதர். இது ஒரு சாஸ்திர காவியமும் ஆகும். துல்லியமான ஆதாரமுள்ள கிரந்தமும் ஆகும். இதிகாசப் பின்னணி கொண்ட கிரந்தம் எனப்படுகிறது. சமஸ்கிருத சாகித்ய உலகில் சிறப்பான இடத்தைப் பெற்று

மிகச்சிறந்த காவியம் என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய சுமத்வவிஜயத்தின் நாயகர், உலகத்தையே காப்பவரான, முக்யபிராணரின் அவதாரமான ஸ்ரீமதானந்த தீர்த்தர். இவர் சர்வக்ஞர். அனைத்து நற்குணங்களையும் கொண்டவர். அனைத்து தேவர்களாலும் வணங்கப்படுபவர். அனைத்து லட்சணங்களையும் கொண்டவர். அனைத்து சாஸ்திரங்களிலும் வல்லவர். அனைவரையும் காப்பவர். துர்மதங்களை நிராகரிப்பவர். சர்வமூலங்களை இயற்றியவர். சர்வோத்தமனின் நிஜ தாசர். ஜீவோத்தமரான இவர், ஸ்ரீஹரியின் ஆணைப்படி சஜ்ஜனர்களை காப்பாற்றுவதற்காக தரைக்கு இறங்கி வந்த மகானுபாவர். இவை அனைத்தையும் நிரூபிக்கும், மேலும் பல மகிமைகளை சுமத்வவிஜயத்தில், அழகுற விளக்கப்பட்டிருக்கின்றன. மந்திர துல்யமான, அனைத்து வரங்களையும் கொடுக்கவல்ல இந்த கிருதி தினமும் படிக்க, கேட்க, பாராயணம் செய்யப்படும் கிரந்தமாக நம் பரம்பரையில் புகழ்பெற்றிருக்கிறது.

இதில் மொத்தம் 16 சர்க்கங்கள், 1008 ஸ்லோகங்கள் உள்ளா. ஸ்ரீமதாசார்யரின் திவ்ய சரித்திரத்தின் மகிமையை வெவ்வேறு விதமாக வர்ணிக்கும் ஒரேயொரு கிரந்தமாக இருக்கிறது சுமத்வவிஜயம். ஸ்ரீமதாசார்யரின் த்வைத சித்தாந்தத்தின் தத்வங்களையும் நிரூபிக்கும் கிரந்தமாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட சுமத்வவிஜயத்தை படித்தல், கற்பித்தல் ஒவ்வொரு மாத்வரின் கடமையாகும். மூல குருவைப் பற்றியே அறியாதவர்கள், குரு உபதேசத்திற்கு, குரு இயற்றிய கிரந்தங்களை படிப்பதற்கு, நித்யகர்மானுஷ்டாங்களை செய்வதற்கு அருகதை அற்றவர்கள்.

ஸ்ரீமத்வரின் அவதார லீலைகள், காட்டிய மகிமைகள், கூறிய தத்வங்கள், இயற்றிய கிரந்தங்கள், செய்த உதவிகள் ஆகியவற்றை நினைப்பது, பாடுவது நமது பிறவிப்பயன். இவற்றை நமக்கு அறியக்கொடுத்த சுமத்வவிஜயம் ஒரு மரியாதைக்குரிய கிருதியாகும். ஸ்ரீமதாசார்யரின் அற்புதமான திவ்ய சரித்திரத்தை எவ்வளவு பேர் எவ்வளவு முறை பேசினாலும் முடியாத விஷயம். ஏனென்றால், இந்த சரித்திரம் ஒவ்வொருவரின் வீட்டிற்கும், ஒவ்வொருவருக்கும் போய்ச் சேரவேண்டும். இந்தப் புத்தகம் இதே நோக்கத்தின் ஒரு சிறு முயற்சியாகும்.

ஒவ்வொரு சர்க்கத்தின் சாரமும் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. முடிந்தவரை அனைத்து ஸ்லோகங்களையும் கவனத்தில் கொண்டு, அதன் சாரம் எடுக்கப்பட்டுள்ளது. ஆண், பெண், குழந்தை, முதியோர் என அனைவருக்கும் சுமத்வவிஜயத்தின் சுருக்கம் தெரியவேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. நாராயண பண்டிதரின் சுமத்வவிஜயத்தை படிப்பதற்கும், ஸ்ரீமதாசார்யரின் கிரந்தங்களை படிப்பதற்காக ஆசையையும் வளர்க்கும் முயற்சியாக இது கருதப்படுகிறது. ஒரு சாதாரணனின் இந்த முயற்சியை, சஜ்ஜனர்கள் ஏற்றுக்கொண்டு ஸ்ரீமதாசார்யரின் அருளுக்குப் பாத்திரராக வேண்டுமென்பது என் ஆசை.

ஸ்ரீமத்வரின் கதையானது நம் மனதை சுத்தப்படுத்தவும், நித்ய கர்மங்களின் பலன்களைப் பெறவும், ஞான பக்திகள் வளர்வதற்கும், சுமத்வவிஜயத்தின்

ஒவ்வொரு சர்க்கத்தின் சுருக்கத்துடன், ஶ்ரீமதாசார்யருக்கு சம்பந்தப்பட்ட பல விஷயங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை அனைவருக்கும் பயன்படும் என்று கருதுகிறேன். இதை உருவாக்கியதில் எனதென்று எதுவும் இல்லை. விஷயத்தை சேகரித்தது மட்டுமே ஆகும். சுமத்யவிஜயத்திற்கு இருக்கும் உரைகள், பற்பல கிரந்தங்கள், உபன்யாசங்களின் உதவியுடன், எனக்குத் தெரிந்தவற்றை உங்களுக்குத் தெரியப்படுத்த என்னாலான சிறிய முயற்சியே இந்தப் புத்தகம். இதிலிருக்கும் குறைகள், பிழைகள் என்னுடையதே. குருகளுடையது அல்ல. ஏதாவது நிறைகள் இருந்தால் அவை, என் முதல் குருவான தி.பீமசேனாசார்ய, சந்தேபிதனூர், வித்யாபுத்தியை கற்பித்த பிற குருகள், மற்ற நண்பர்களுடையதாகும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுமத்வவிஜயத்தின் சுருக்கமான, ஶ்ரீமத்வரின் கதைச் சுருக்கமான இப்புத்தகம், மத்வமதத்தைப் பின்பற்றுபவர்களின் கைகளை அடைந்திருக்கிறது. ஶ்ரீமதாசார்யரின் கதையானது, எவ்வளவு விதமாக, எந்த வடிவில், எவ்வளவு பேரினால் பிரசாரம் ஆனாலும், போதவே போதாது. இந்த சிறிய சேவைக்கு, ஶ்ரீமதாசார்யரின் பரம்பரையில் வந்த பரமபூஜ்ய குருகளான ஶ்ரீமத் உத்தராதி மடாதீசரான ஶ்ரீஶ்ரீ 1008 ஶ்ரீசத்யாத்ம தீர்த்த ஶ்ரீபாதங்கள் தமது அருளினை வழங்கி, இதற்கு தமது அமிர்த செய்தியினையும் வழங்கியிருக்கிறார்.

முழு வாழ்க்கைக்கும் ஶ்ரீபாதங்களவரின் அருளுக்குப் பாத்திரனாகி, அவரது திவ்ய சரணங்களில் விழுந்து அவருக்கு அனந்தானந்த நமஸ்காரங்களை சமர்ப்பிப்பேன். இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு பல மூல மற்றும் இதர கிரந்தங்களைப் பார்த்து குறிப்பெடுத்தேன். அது ஒரு பெரிய பட்டியலே. அந்தப் புத்தகங்களை எழுதிய அனைவருக்கும் பணிவு கலந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். இதனை சரிபார்ப்பதில் ஶ்ரீ.H.R. சத்யநாராயணராவ் உதவியிருக்கிறார். அவருக்கு என் நன்றிகள். தக்க நேரத்தில் எழுத்துக்கோர்ப்பினை செய்த துளசி இம்ப்ரெஷன்ஸ் ஶ்ரீமதி தேவிகா ரவிக்கும், விரைவாகவும் சரியாகும் அச்சடித்துக் கொடுத்த துர்கா அச்சகத்தினருக்கும் என் நன்றிகள்.

தபஸ்வினோ தானபராயஷஸ்வினோ மனஸ்வினோ மந்த்ரவித: சுமங்கலா: |
க்ஷேமம் ந விந்தந்தி வினா யதர்பணம் தஸ்மை சுபத்ரஷ்ரவஸே நமோ நம: ||

மரியாதைக்குரிய

A.B. ஷ்யாமாச்சார்

ஸ்ரீ மத்வ ஸ்தோத்திர மாலா

ஸ்ரீமதானந்த தீர்த்தாக்யான் குரூன் வித்யா திவாகரான் ।
வந்தே குதுஷ்டிதுர்போத வ்யாஸ சித்தாந்த தீபகான் ॥ -- ஸ்ரீபத்பனாப தீர்த்தர்

யோ பாரதி மபஹ்ருதாம அசுரை: சஹாஸ்ய
கோபி: ஷுபாம் பகவதீமசுரான் நிஹத்ய ।
உத்பாத்ய சாதம் குபிதாமத வைஷ்ணவீம் தாம்
சக்ரே கரோது ஸ தசத்ருமதிர்ஹி காம் ந: ॥ -- ஸ்ரீ நரஹரி தீர்த்தர்

வ்யாப்திர்யஸ்ய நிஜே நிஜேன மஹஸா பக்ஷே சபக்ஷே ஸ்திதி:
வ்யாவ்ருத்திஸ்ச விபக்ஷதோऽத விஷயே சக்திர்ன வை பாதிதே ।
நைவாஸ்தி ப்ரதிபக்ஷ யுக்திரதுலம் ஷுத்தம் ப்ரமாணம் ஸ மே
பூயாத்தத்வ வினிர்மயாய பகவான் ஆனந்ததீர்த்தோ முனி: ॥ -- ஸ்ரீ ஜயதீர்த்தர்

தர்மவிக்ஞான வைராக்ய பரமைஸ்வர்ய ஷாலின: ।
ஆனந்ததீர்த்த பகவத்பாதான் வந்தே நிரந்தரம் ॥ -- ஸ்ரீ ஜயதீர்த்தர்

லசது ஸ்ரீமதானந்த தீர்த்தேந்துர்னோ ஹ்ருதம்பரே
யத்வஸ்சஷ் சந்திரிகா ஸ்வாந்த ஸந்தாபம் வினிக்ருந்ததி ॥ -- ஸ்ரீ ஜயதீர்த்தர்

முக்யப்ராணாய பீமாய நமோ யஸ்ய புஜாந்தரம் ।
நானவீர சுவர்ணானாம் நிகஷாஷ்மாயிதம் பபௌ ॥
ஸ்வாந்தஸ்தானந்த ஷய்யாய பூர்ணஞானரஸார்ணவே ।
உத்துங்க வாக்தரங்காய மத்வ துக்தாப்தயே நம: ॥ -- நாராயண பண்டிதாசார்யர்

அப்ரமம் பங்கரஹிதம் அஜடம் விமலம் சதா ।
ஆனந்ததீர்த்த மதுலம் பஜே தாபத்ரயாபஹம் ॥ -- ஸ்ரீ வியாஸராஜர்

ஸ்ரீமதானந்த தீர்த்தார்ய பாதபங்கஜ ரேணவ: ।
பவித்ரயந்து மாம் நித்ய பாபபாடன பண்டிதா: ॥ -- ஸ்ரீ வியாஸராஜர்

உபஸ்விதாயாம் ஹரிபக்திதாயாம் விபஸ்சிதாம் சம்சதி பூஜ்யதாயாம் ।
க்ருபாலுதாயாம் சுவிரக்ததாயாம் விபத்ரிபோர்மத்வ முனே ஸம: க: ॥
-- ஸ்ரீ வாதிராஜர்

ஷுத்தயானாதி ஸித்தாய ஸ்வாத்யா யோன்னத்த புத்தயே ।
ஹ்ருத்யாய நிரவத்யாய மத்வாய ச நமோ நம: ॥ -- ஸ்ரீ வாதிராஜர்

உர்வ்யாம் சத்கர்ணதாம் யாந்தி யத்குணாகர்ணனே ரதா: ।
அர்ணவம் குணரத்னானாம் பூர்ணபோதம் தமாஸ்ரயே ॥ -- ஸ்ரீ விஜயீந்திரர்

வேதபேத விவிதோருசுஷாகம் போதபூர்வக குணாட்ய பலேதம் ।
ஆதரேண பஜதாம் பலதம் மோததீர்த்த சுரபோருஹமீடே ॥ -- ஸ்ரீ ரகூத்தம தீர்த்தர்

யத்வாக் விஸ்தர ரஷ்மிபிர் ஜகதிதம் சன்மார்க மாலம்பிதம்
ஸத்ஸித்தாந்த வராரவிந்தனிவஹா விஸ்தார மாஸாதிதா: ।
து:ஸித்தாந்த மஹாந்த காரனிகரா தேஷாந்த முல்லங்க்ரிதா:
சோsயம் மத்வதிவாகரோ பவது சஞ்ஞான ப்ரகாஷாய மே ॥ -- ஸ்ரீ வித்யாதீசர்

ஷர்வாதி சர்வகீர்வாண நிர்வாண கதி ஹேதவ: ।
பூர்ணப்ரக்ஞ பதாம்போஜ பாம்சவ: பாண்டு ந: சதா ॥ -- ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள்

அஸாதூனாம் நிபந்தே குண்டிதம் சூத்ரமஞ்சஸா ।
வ்யாக்யாதம் மேன சர்வக்ஞம் வந்தே பாஷ்யக்ருதம் முனிம் ॥
-- ஸ்ரீ சத்யநாத தீர்த்தர்

ஹ்ருத்தமோ நாசகம் சாஸ்த்ர ப்ரபயா தத்வபாஸகம் ।
பலதம் பூர்ணபோதாக்ய சிந்தாமணிமஹம் பஜே ॥ -- ஸ்ரீ வேதேஷ தீர்த்தர்

மத்வவாக் காமதேனுர்னோ பூயாத் சுமதிதுக்ததா ।
ஸ்வபோஷகாணாம் யா தோக்திஸதாம் சர்வமபீப்ஸிதம் ॥ -- ஸ்ரீ யதுபத்யாசார்யர்

ஸ்ரீமதானந்த தீர்த்தார்ய சரணாம் ஆஸ்ரயேனிஷம் ।
ருத்ராதி சர்வவிபுதை: சம்சேவ்யா விஷ்டதௌ சதாம் ॥ -- ஸ்ரீ ஸ்ரீனிவாச தீர்த்தர்

உத்வேல வியாஸ தந்த்ர வ்யவசித நிகிலாபிக்ஞ ஹ்ருதானவத்யா
நந்த த்ரய்யந்த பாவ ப்ரகடனகடனா சர்வதந்த்ர ஸ்வதந்த்ரே ।
சம்வர்ணே மந்த்ரவர்ணை: அனிதரவிஷய ஸ்பர்ஷிபி: பாவமானே
ரூபே லோகைக தீபே ப்ரசரது ஹ்ருதயம் மாமகம் மத்வ நாம்னி ॥
-- ஸ்ரீ வாதீந்த்ர தீர்த்தர்

ஆராமதாம ஸ்ரீராமராமம் த்ரஷ்டம் கதோsம்புதே: ।
பாரம் ஸ பாரயேதேதத் காண்டகாண்ட நிதிம் மயா ॥ -- ஸ்ரீ சத்யதர்ம தீர்த்தர்

ஸ்ரீமதானந்த தீர்த்தேந்து ஸம்பூதா பாஷகௌமுதீ ।
பூயாத் சகலசந்தாப த்வாந்த த்வாந்த நிக்ருதனீ ॥ -- ஸ்ரீ விஷ்ணு தீர்த்தர்

மாயாவாத தமோவ்யாப்தி ரஞ்சஸா யேன வாரிதா ।
ப்ரகாசிதம் ச தத்வம் தம் பஜே மத்வ திவாகரம் ॥ -- ஸ்ரீ சத்யத்யான தீர்த்தர்

யோ விப்ரலம்ப விபரீத மதிப்ரபூதான்
வாதான் நிரஸ்ய க்ருதவான் புவி தத்வவாதம் ।
சர்வேஸ்வரோ ஹரிரிதி பிரதிபாதயந்தம்
ஆனந்ததீர்த்த முனிவர்யம் அஹம் நமாமி ॥ -- ஸ்ரீ சுமதீந்த்ர தீர்த்தர்

சுத்தம் ப்ரமாணமதுலம் பரதத்வ வினிர்ணயே ।
ஆனந்த தீர்த்தோ பகவான் ப்ரதிஷேத் சத்ருஷம் முனி: ॥
-- ஸ்ரீ சத்யப்ரமோத தீர்த்தர்

***

பொருளடக்கம்

மத்வகதாம்ருதம்

முதல் சர்க்கத்தின் சுருக்கம்

ஸ்ரீமன் நாராயணனை வணங்கும் மங்களாசரணத்துடன் சுமத்வவிஜயத்தின் முதல் சர்க்கத்தை துவக்கும் நாராயண பண்டிதாசார்யர், இந்த கிரந்தத்தின் நோக்கம் மற்றும் பின்னணியை இங்கே விளக்கியிருக்கிறார். வாயுதேவரின் அவதாரங்களான ராமாயணத்தின் ஹனுமந்த மற்றும் மகாபாரதத்தின் பீமசேனரின் கதையை சுருக்கமாக வர்ணித்திருக்கிறார். மூன்றாம் அவதாரமான ஸ்ரீமதாசார்யரின் அவதாரத்தின் பின்புலத்தின் விவரங்களும் இங்கு இருக்கின்றன.

காந்தாய கல்யாண குணைகதாம்னே நவத்யுனாத ப்ரதிமப்ரபாய |
நாராயணாய அகிலகாரணாய ஸ்ரீபிராண நாதாய நமஸ்கரோமி || (1-1)

இந்த உலகத்திற்கு நிமித்த காரணனான (efficient cause - அனைத்து மாற்றங்களுக்கும் காரணனான), ஸ்ரீ மற்றும் பிராணதேவருக்கு தலைவனான, மனதை மகிழ்விக்கும்படியான அழகினைக் கொண்ட ஸ்ரீமன் நாராயணனை வணங்கி, முதல் ஸ்லோகத்தில் வியாஸ-கிருஷ்ண ரூபங்களை வணங்கியிருக்கிறார். பிறகு, ஸ்ரீமதாசார்யரின் புகழ் நம் அனைவரின் அஞ்ஞானத்தையும் போக்கி, சுத்தமான ஞானத்தை வழங்கட்டும் என்று வணங்குகிறார். வணங்குதலுக்குரிய தம் தந்தை மற்றும் குருவான ஸ்ரீத்ரிவிக்ரம பண்டிதாசார்யரை வணங்கி, குருபக்தி மிகவும் முக்கியம், இதிலிருந்தே ஹரிபக்தி, '**முகுந்தபக்த்யை குருபக்திஜாயை'** (1-5) ஆகவே, ஜகத்குருவான வாயுதேவரின் அவதார லீலைகளை வர்ணிக்கிறேன் என்று சங்கல்பம் செய்கிறார். **'தாம் மந்த்ரவர்ணை: அனுவர்ணனீயாம் சர்வேந்த்ர பூர்வைரபிவக்து காமே'** (1-6) மிகவும் மகிமை பொருந்திய வாயுதேவரின் லீலைகளை வர்ணிப்பது, வேத மந்திரங்களைவிட அழகானது. ருத்ரர் முதலான தேவர்களாலும் வர்ணிக்கப்படுபவை. இதை விளக்குவது தமது தகுதிக்கு அப்பாற்பட்டது என்று தனது தன்னடக்கத்தை வெளிப்படுத்தி, எவ்வளவு முடியுமோ அதற்கேற்ப குருகளின் மகிமைகளை வர்ணித்து **'மனோவிசுத்தை சரிதானுவாத:'** (1-7), அத்தகைய குருகளின் வர்ணனை நமது மனங்களை சுத்திப்படுத்தட்டும் என்று விருப்பத்தை வெளிப்படுத்துகிறார்.

தமது இந்த விவரிப்பில் ஏதும் வேறுபாடுகள் இருந்தால், எப்படி ஒரு முத்து மாலையில் ரத்னங்கள் முன்னும் பின்னுமாக இருந்தாலும் அந்த மாலை சிறப்பானதாக இருக்குமோ அப்படி சஜ்ஜனர்கள் இந்த காவியம் என்னும் முத்து மாலையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறார்.

முதலாம் அவதாரமான ஹனுமந்தனின் சிறப்புகளைப் பற்றிய வர்ணனை

த்ரேதாயுகத்தில் மகாவிஷ்ணு, துஷ்டர்களைக் கொல்லவேண்டி தசரதனின் மகன் ராமனாக அவதரித்தார். அவரின் ஆணைப்படியே, ஜீவோத்தமரான, ஜகத்குருவான

வாயுதேவர் கேசரி என்னும் கபியின் மனைவியான அஞ்சனாதேவியிடம் அவதரித்தார்.

யே யே குணா நாம ஜகத் பிரசித்தா: யம் தேஷு தேஷுஷ்ம நிதர்ஷயந்தி | சாக்ஷான் மஹாபாகவத பிரபர்ஹம் ஶ்ரீமந்தமேனம் ஹனுமந்தமாஹு: || (1-10)

உலகத்திலுள்ள அனைத்து நற்குணங்களுக்கும் சிறந்த எடுத்துக்காட்டு என்றால் அது 'ஹனுமான்' (ஹனு என்றால் ஞானம், எல்லையில்லா ஞானம் கொண்டவர் ஹனுமான்) என்று சொல்லலாம். சிறு வயதிலிருந்தே பல அற்புதமான செயல்களை புரிந்து, சுக்ரீவனின் நண்பனாக இருந்த ஹனுமான், காட்டினில் ரமாபதியை ராம ரூபத்தின் கண்டார். இந்த புராண புருஷோத்தமனின் பாதாரவிந்தங்களை மிகவும் மரியாதையுடன் வணங்கி, பல அசுரர்களை அழித்த ராமனுடன் சுக்ரீவனை நட்பு கொள்ளச் செய்தார்.

ஶ்ரீராமன் மூலமாக வாலியை வதம் செய்வித்து, சுக்ரீவனை அரசனாக பதவியேற்க வைத்தார். மாய-சீதையை தேடுவதற்கு ஹனுமான் தெற்கு திசையை நோக்கி விரைந்தார். இது ஶ்ரீராமனால் விடப்பட்ட பாணத்தைப் போல, எதிரிகளை பயம்கொள்ளச் செய்வது போல் இருந்தது. கடலைத் தாண்டி, மாறுவேடத்தில் இலங்கையில் பிரவேசித்த ஹனுமான், ஶ்ரீராமனின் விருப்பத்தை சீதைக்கு தெரிவித்து, தன் வாலின் நெருப்பினால் இலங்கையை எரித்து, சூடாமணியைப் பெற்று மறுபடி கடலைத் தாண்டி ஶ்ரீராமனின் பாதத்தில் வணங்கினார். சீதையின் கதையை விவரித்தார்.

இந்தச் செயல் மிகவும் அற்புதம். இது ஹனுமனால் மட்டுமே செய்ய முடிந்தது. ராமனுக்காக சேதுவில் பாலம் கட்டி, சீதையை கடத்திய ராவணனை தன் முஷ்டியால் குத்தினார். **'முஷ்டி பிரஹாரம் தஷகாய'** என்று ராவணன் தன் பத்து தலைகளிலும் ரத்தம் வழியுமாறு குத்தினார். ஶ்ரீஹரியின் பூஜைக்குக் கொண்டுவரும் பூவைவிட மிகவும் சுலபமாக சஞ்சீவினி மலையைக் கொண்டு வந்த ஹனுமந்தன், பவித்ரளான சீதை மற்றும் ராமனுடன் அயோத்திக்கு வந்தார்.

பரமமங்கள மூர்த்தியான ஶ்ரீராமனை பல காலம் சேவித்த ஹனுமந்தனுக்கு சீதாதேவி **'மணிமஞ்சு மாலா வியாசேன தீர்காம் கருணாம் பபந்த'** (1-22) ரத்னமாலையைக் கொடுத்து **'ஸ்வாத்மானமேவைஷ ததௌ'** (1-26) அருளினாள். ஏகாந்தபக்தரான இவருக்கு ஶ்ரீராமசந்திரன் 'சஹபோக' என்னும் மிகச்சிறந்த பதவியான பிரம்மபதவியைக் கொடுத்து அருளினார். எந்த பலனையும் எதிர்ப்பார்க்காத, ஶ்ரீராமனின் சேவையையே வேண்டிய ஹனுமந்தன் மிகச்சிறந்த விரக்தி கொண்டவர். ஶ்ரீராமன் வைகுண்டத்திற்குச் சென்றார். ஹனுமந்தன் இன்றைக்கும் கிம்புருஷ கண்டத்தில் ராமதியானத்தில் இருக்கிறார். ஶ்ரீராமனே தலைவன் என்று நினைத்து பஜித்து வரும் சிரஞ்சீவியான இவர், சஜ்ஜனர்களுக்கு அருளி வருகிறார். எங்கும் காணமுடியாத சிறந்த பக்தனான ஹனுமனுக்கு ஶ்ரீராமன் எவ்வளவு அருளினார் என்று நான் எப்படி வர்ணிப்பேன் என்கிறார் பண்டிதர்.

இரண்டாம் அவதாரமான பீமனின் சிறப்புகளைப் பற்றிய வர்ணனை

த்வாபரயுகத்தில் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக வாயுதேவர், குந்தியிடம் பீமனாக அவதரித்தார். குழந்தையான பீமன், குந்தியின் கையிலிருந்து தவறி கீழே விழ, அங்கிருந்த மலை உடைந்து தூள்தூளானது. முன்னர் இந்திரனின் வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்டபோது, மலையின் இறக்கைகள் மட்டும் கத்தரிக்கப்பட்டிருந்தன. பீமனின் உடல், இந்திரனின் வஜ்ராயுதத்தைவிட வலிமையானது என்று இதிலிருந்து தெரிகிறது.

ஹஸ்தினாபுரத்தில் பீமனின் பால-லீலைகளை, கவி மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார். சிறு வயதிலிருந்தே சிறந்த பலசாலி. இதை பொறுக்காத துரியோதனன் முதலானவர்கள், இவரைக் கொல்ல முயன்றனர். 'காலகூட' விஷத்தைக் கொடுத்தபோது அதை சுலபமாக ஜீரணம் செய்தார். விஷம் கொண்ட பாம்புகளால் கடிபட்டபோது, அந்த பாம்புகளே இறந்தன. பிரமாணகோடி என்னும் ஆழமான பள்ளத்தில் பீமனை வீசினர். மிகவும் சுலபமாக அங்கிருந்து மேலேறி வந்தார் பீமன். உலகிற்கே பிராணனான இவரின் இந்த லீலைகள் ஒன்றும் அதிசயமல்ல. இதற்கு கவி **'ஜகஜ்ஜீவன தேத்ர சித்ரம்' (1-31)** என்று வர்ணிக்கிறார்.

பிறகு அரக்கு மாளிகையில் தர்மன் முதலானவரை எரிக்க முற்பட்டதை, பீமன் தனது யோகசக்தியில் கண்டு, அவர்களுக்குப் பதிலாக துஷ்டர்களை அதில் எரித்து, தாய் மற்றும் சகோதரர்களை காப்பாற்றினார். காட்டினில் ஹிடிம்பனைக் கொன்று, வேதவியாசரின் ஆணைப்படி ஹிடிம்பியை மணம் புரிந்தார். **'சமர்ப்ய க்ருத்யானி க்ருதி க்ருதானி' (1-33)** இதுவரை தான் செய்த புண்ணியங்களை கிருஷ்ணனுக்கு அர்ப்பித்து, இனி செய்யப்போகும் அனைத்து செயல்களும் ஸ்ரீஹரி பூஜை என்று சிந்தித்தார். இத்தகைய சிந்தனை, ஞானியான இவருக்கு சாத்தியமே.

விஷ்ணுபாதங்களையே எப்போதும் சிந்தித்து வந்த பீமசேனர், எதிரிப் படையினரை அனாயாசமாக எதிர்கொண்டு அவர்களை அழித்தார். பாரதியே ஆன திரௌபதியை மணம் செய்து, கிருஷ்ணனை வணங்கினார். போரிட வந்த துஷ்ட அரசர்களைக் கொன்று கிருஷ்ணனை மகிழ்வித்தார். ஜராசந்தனைக் கொன்று, தர்மராஜர் மூலமாக ராஜசூய யாகத்தை எந்தப் பிரச்னையுமில்லாமல் செய்வித்தார்.

சூழ்ச்சிமிக்க சூதாட்டத்தில் சஜ்ஜனர்கள் தோற்றனர். துச்சாதனனின் அட்டகாசம், விலக்கிலிருந்த திரௌபதியின் கூந்தலைப் பிடித்து இழுத்து அவளின் ஆடையை அவிழ்க்க முயன்றதால், இவர்கள் அனைவரையும் கொல்வதாக பீமன் சூளுரைத்திருந்தார்.

'விருகோதராக்னே: குருதேஜ சாபு:' (1-38). பாண்டவர்கள் வனவாசத்தில் இருந்தபோது, கிர்மீர அசுரர்கள், பீமசேனன் என்னும் நெருப்பினால் கொல்லப்பட்டனர். திரௌபதிக்கு சௌகந்திகா புஷ்பத்தைக் கொண்டு வரும்போது, கந்தமாதன மலையில், மணிமந்த மற்றும் அவனது நண்பர்களான க்ரோதவஷர் என்னும் பலரை கொன்றார். அஞ்ஞாதவாசத்தில் இருந்தபோது, கீசகனைக் கொன்றார். காட்டுத்தீ எப்படி காட்டினை அழிக்குமோ, அவ்வாறு ஸ்ரீகிருஷ்ணனின்

ஆணையில் பீமன் என்னும் காட்டுத்தீ எதிரிகள் என்னும் காட்டினை அழித்தார். அனைத்து கௌரவர்களையும் கொன்றார்.

இங்கு பண்டிதாசார்யர் பீமனைக் குறித்து சொல்லும்போது **'கிருஷ்ணாங்க்ரி பங்கேருஹ ப்ருங்க ராஜ:'** **(1-43)** என்கிறார். மலர்களைச் சுற்றிவரும் தேனியைப் போல கிருஷ்ணனின் பாத-கமலங்களை பீமன் வணங்கினார். திரௌபதியின் முக-கமலங்களுக்கு அன்னப்பறவையைப் போல இருந்தார். தனது ஆட்சியில் இருந்த மக்கள் என்னும் கமலங்களுக்கு, சூரியனைப் போல காட்சியளித்து, தனது சகோதரர்களுடன் ஒளிர்ந்தார்.

ஸ்ரீகிருஷ்ணனின் ஏகாந்த பக்தனாகி, திரௌபதிதேவியின் அன்புக் கணவராகி, மக்களுக்கு சிறந்த தலைவனாகி, துஷ்டர்களைக் கொன்று, தனது சகோதரர்களுடன் வாழ்ந்தார். சிறந்த அரசாட்சி புரிந்து, மக்களைக் காத்து, அசுரர்களின் மனதில் துன்பத்தைக் கொடுத்து, அர்ஜுனனின் பேரனான பரிக்ஷித்தை அரசனாக நியமித்து, ஸ்ரீகிருஷ்ணனையே தியானித்தவாறு தன்னுடைய மூல ரூபத்தை சென்றடைந்தார்.

ஸ்ரீமத்வ அவதாரத்தின் பின்புலம்

பீமசேனரால் கொல்லப்பட்ட அசுரர்கள், மிகவும் துக்கமடைந்து மறுபடி கலியுகத்தில் இதே பூமியில் பிறந்து, அவர்களின் சுபாவத்திற்கேற்ப, ஸ்ரீஹரியை நிர்குணன் என்று வர்ணிக்கும் கெட்ட சாஸ்திரங்களை படைத்தனர். மணிமந்தன் என்னும் அசுரன், ருத்ரதேவரிடம் வரம் பெற்று, கலியுகத்தில் சங்கரன் என்று அவதரித்தார். மக்களிடம் நன்மதிப்பு பெறுவதற்காக சன்யாசியாக வந்தார். இந்த உலகம் பொய் (மித்யா), தேவர்களுக்கு நற்குணங்களே இல்லை, ஜீவ-பிரம்மன் ஒன்றே என்று வேதங்களுக்கு எதிராக பொய்யுரைகளையே பரப்பி, அந்த மதத்தை பரப்புமாறு கிரந்தங்களைப் படைத்தார். ஆகையால் மக்கள் இவரை 'பிரச்சன்னபௌத்தர்' என்று அழைத்தனர். வேதவியாசர் சொன்ன கருத்துகளுக்கு நேர்மாறான கருத்துகளை எழுதினார். வேதவியாசரின் பிரம்மசூத்ர என்னும் சூரியனை, தனது துஷ்ட உரை என்னும் மேகத்தினால் மறைத்து, உண்மையான கருத்துகளையே மறைத்தார். அதனால், ஞானிகள் இவரை 'மஹாதஸ்கரன்' என்று அழைத்தனர்.

அனைத்து நற்குணங்களையும் பெற்றவனான ஸ்ரீஹரியை சஜ்ஜனர்களின் மனதிலிருந்து மறையுமாறு செய்தனர். **'விஷ்வம் மித்யா விபுரகுணவான் ஆத்மனாம் நாஸ்தி பேதோ'** **(1-55)**. பார்க்கும் உலகம் பொய். ஸ்ரீஹரி குணங்கள் இல்லாதவன். ஸ்ரீஹரி மற்றும் ஜீவர்களுக்கு பேதம் இல்லை என்னும் கருத்து மக்களிடையே பரவத் துவங்கியது. இங்கு கவி, மாயாவாதத்தை ஒரே ஸ்லோகத்தில் சொல்லியிருக்கும் விதம் மிக அழகானது. இனி ஸ்ரீஹரியைத் தவிர நமக்கு வேறு போக்கிடம் இல்லை என்று சஜ்ஜனர்கள் உணர்ந்தனர்.

நாராயண பண்டிதரின் சுமத்வவிஜயத்தின் அனைத்து சர்க்கங்களின் கடைசி ஸ்லோகத்திலும் 'ஆனந்த' என்னும் சொல் இடம்பெற்றிருக்கிறது. ஆகையாலேயே இந்த கிரந்தம் 'ஆனந்தாங்க' என்று புகழடைந்திருக்கிறது. சுமத்வவிஜயத்தைப்

படித்தல், பாராயணம் செய்தல் ஆகியவை மகிழ்ச்சியைக் கொண்டு தருகிறது. ஆனந்தரூபி ஸ்ரீஹரியிடம் பக்தி செய்யவும் இதுவே காரணமாக இருக்கிறது. நித்ய-ஆனந்தமான மோட்சத்தைப் பெறுவதற்கும் இதுவே வழிகாட்டியாக இருக்கிறது.

***

இரண்டாம் சர்க்கத்தின் சுருக்கம்

இந்த சர்க்கத்தில், ஸ்ரீநாராயண பண்டிதாசார்யர், மத்வாசாரியரின் அவதாரத்தின் பின்புலம், ஸ்ரீஹரியின் ஆணை, மத்யகேஹ பட்டர் தம்பதிகளின் அறிமுகம், அவர்கள் அனந்தாசனத்தில் செய்த சேவை, மத்வரின் பிறப்பு, வாசுதேவனின் பற்பல பால்ய லீலைகள் ஆகியவற்றை விவரித்திருக்கிறார்.

பூர்ணபிரக்ஞரின் அவதாரத்திற்கான தேவை

விக்ஞான பானுமதி கால பலேன லீனே துர்பாஷ்ய சந்தமஸ சந்ததிதோ ஜனேந்தே ।
மார்காத்சதாம் ஸ்கலதி கின்ன ஹ்ருதோ முகுந்தம் தேவாஸ்சதுர்முக முகா: ஷரணம் ப்ரஜக்மு: || (2-1)

உலகத்தில் சஜ்ஜனர்களின் ஞானம் என்னும் சூரியன், கலியின் பிரபாவத்தாலும், துர்பாஷ்யங்களின் துர்போதனைகளாலும் அஸ்தமனம் ஆகி, அஞ்ஞானம் என்னும் இருள் சூழ்ந்து, அவர்கள் தர்மத்தின் வழியிலிருந்து பிறழத் தொடங்கினர். சுக்ஞானம் பிறந்து, அவர்கள் தர்மத்தின் வழியில் திரும்பவேண்டும் என்று பிரம்மாதி தேவதைகள் முகுந்தனை வேண்டினர். ஸ்ரீஹரியானவர் த்ரியுகஹூதி - அதாவது மூன்று யுகத்தில் மட்டுமே அவதாரம் செய்பவர். பிரம்மதேவருக்கோ அவதாரமே இல்லை.

ஆகையால், இந்த நற்காரியத்தை செய்வதற்கு சர்வக்ஞரான வாயுதேவரால் மட்டுமே சாத்தியம் என்று, ஸ்ரீஹரி வாயுதேவரிடம் **'வேதாந்த மார்க்க பரிமார்கண தீன தூனா' (2-3)** குழப்பத்தில் இருப்பவர்களுக்கும், சத்-பக்தர்களுக்கும், வேதாதி சாஸ்திரங்களின் உண்மையான பொருளை அறியச்செய்து, என் நற்குணங்களை நிர்ணயம் செய்து சஜ்ஜனர்களை மகிழ்வுறச் செய்' என்று ஆணையிட்டார். சுரர்களின் வேண்டுதல், சஜ்ஜர்களின் மேல் இருந்த கருணை, இதற்குமேல் ஸ்ரீஹரியின் ஆணை - என அனைத்தையும் கருத்தில் கொண்டு வாயுதேவர் பூமியில் அவதாரம் செய்ய விருப்பம் கொண்டார்.

சஜ்ஜனர்களுக்கு அனுப்பிய நற்செய்தி

உடுப்பியில் மகர சங்க்ரமணத்தின் உற்சவம். பக்தர்களின் கூட்டம். எங்கும் உற்சாகம். அப்போது ஒரு சம்பவம் நடந்தது. ஒரு குறைந்த அறிவுள்ள ஒருவரின் மேல் அனந்தேஸ்வரரின் ஆவேசம் வந்ததால், அவர் த்வஜஸ்தம்பத்தின் மேல் ஏறி,

மக்கள் கூட்டத்தைப் பார்த்து இப்படியாக உரக்கச் சொல்லத் துவங்கினார் - **’உத்பத்ஸ்யதே ஜகதி விஸ்வ ஜனனி வ்ருத்தி: விஷ்வக்ஞ ஏவ பகவானசிராதிஹேதி’** (2-8). விரைவிலேயே சர்வக்ஞரான மகாபுருஷர் ஒருவர் இங்கு அவதரிப்பார் - என்றார். இதைக் கேட்ட சஜ்ஜனர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று.

மத்யகேஹ பட்டரின் பின்புலம், மத்வாவதாரம்.

கர்மபூமியான பரத கண்டத்தில், மேற்கு கடற்கரையோரம் இருக்கும் உடுப்பிக்கு அருகில் இருக்கிறது பாஜக கிராமம். இது பரசுராமரால் நிர்மாணிக்கப்பட்ட, துர்காதேவி நிலைகொண்டிருக்கும் விமானகிரி இருக்கும் க்ஷேத்திரம். இங்கு நல்மனம், நற்புத்தி கொண்டவர், கல்வி கற்றவர், ஸ்ரீஹரியையே எப்போதும் நம்பும் பக்தரான மத்யகேஹ பட்டர், யோக்யளான, நற்குலத்தில் பிறந்தவரான வேதவதி என்னும் மனைவியுடன் வசித்து வந்தார். தர்மத்தில் நம்பிக்கை கொண்டவர், மகாபாரத மற்றும் புராணங்களின் ரகசியங்களை அறிந்தவராகையால் ‘பட்ட’ என்று அழைத்துக்கொண்ட இவரை மக்கள் ’மத்யகேஹ பட்டர்’ என்று அழைத்தனர்.

’கோவிந்த சுந்தரகதா சுதயா…’ (2-15) மகாபாரத, ராமாயண புராணங்களில் சொற்பொழிவு ஆற்ற வல்ல மத்யகேஹ பட்டர், கோவிந்தனின் அழகான கதைகளினால் சஜ்ஜனர்களின் மனதை மகிழ்வுறச் செய்துவந்தார். அப்போது அத்வைதிகளின் கருத்துக்களினால், பட்டர் தத்வத்தைப் பற்றிய குழப்பத்தில் சிக்கி வருத்தம் கொண்டார். தாம் நரகத்திற்குச் செல்லாமல் இருப்பதற்காக, சர்வக்ஞரான நல்ல கற்றறிந்தவனான தோஷங்கள் இல்லாதவனான ஒரு மகனைப் பெறுவதற்கு விரும்பினார்.

’த்ராதா ய ஏவ நரகாத் ச ஹி புத்ர நாமா…’ (2-17). புன் என்னும் நரகத்திலிருந்து பெற்றோரை காப்பாற்றுபவனே புத்ரன் எனப்படுகிறான். ஆகையால் அத்தகைய மகன் ஒருவன் வேண்டுமென்று விரும்பினார். முன்னர் கர்தம, பராசர, பாண்டுராஜன் ஆகியோர் எப்படி நற்சந்ததியைப் பெற்று நற்கதி அடைந்தனரோ அதேபோல், கருணாமயியான, தன் குலதெய்வமான நாராயணனின் பாதம் பணிந்து நல்ல மகனைப் பெற வேண்டி, ரஜதபீடபுரத்தில் இருக்கும் ஸ்ரீ அனந்தேஸ்வரனை வேண்டி **‘பேஜே புஜங்க சயனம் த்விஷடப்த காலம்’** (2-19), தம்பதிகள் 12 ஆண்டுகாலம் சேவை செய்தனர். இவர்களின் சேவை விவரத்தை கவி மிகவும் அழகாக விவரித்துள்ளார். ஷம தம ஆகிய ஆறு குணங்களைப் பெற்று, மனதை அடக்கி, குறைந்து உண்டு, அதிகமாக பக்தி செய்து, **‘ஸ்வச்சம் ச தேஹமதிகம் விமலீசகார’** (2-20) என்று தனது உடலை மேலும் பவித்ரம் ஆக்கிக்கொண்டார்.

முன்னர் அதிதி கஸ்யபர் பின்பற்றியதைப் போல, மத்யகேஹ பட்டர் தம்பதிகள் பயோவிரதம் முதலான விரதங்களை மேற்கொண்டு ஸ்ரீமன் நாராயணனை மகிழ்வித்தனர். இவர்களின் சேவையைக் கண்ட நாராயணனும் மகிழ்ந்தான். தன் கருணை மழையைப் பொழிந்தான். தானே அவர்களிடத்தில் வந்து நிலைத்தான். இதனால், மத்யகேஹரின் மனைவி கருவுற்றாள். ஒன்பது மாதங்கள் கழித்து தகுந்த காலம் வந்தது. ஸ்ரீஹரியின் ஆணைப்படி வாயுதேவர் தனது ஒரு

அம்சத்தினால் பூமியில் இறங்கி, உடுப்பியில் அனந்தேஸ்வரனை வணங்கி, பின் மத்யகேஹ பட்டர் இல்லத்தை நோக்கி விரைந்தார்.

சம்பூர்ண லக்ஷண சணம் நவ ராஜமான த்வாராந்தரம் பரம சுந்தர மந்திரம் தத் ।
ராஜேவ சத்புரவரம் புவனாதி ராஜோ நிஷ்காசயன் பரமசௌ பகவான் விவேஷ ।। (2-25)

அந்த கர்ப்பத்தில் இருந்து துக்கம் அனுபவித்துக் கொண்டிருந்த ஜீவனை வெளியே இழுத்து, ஸ்ரீநாராயணனின் பிரதிபிம்பரான வாயுதேவர், தான் உள்ளே பிரவேசித்ததும், அந்த ஜீவன் 32 லட்சணங்களைக் கொண்டதாயிற்று. அங்கிருந்த ஜீவனைச் (குபேரனின் சேவகனான மணிபத்ரன்) சேர்ந்தார். வாயுதேவருக்கு கர்ப்பவாசம் முதலான தோஷங்கள் இல்லை என்று அறியவேண்டும். பூமியில் இவர் அவதாரம் செய்த அந்த நாள் விஜயதசமி. (விளம்பி சம்வத்சரம் ஆஸ்வீஜ சுக்ல தசமி புதன் மதியம்).

வாசுதேவனின் பால்ய லீலைகள்

வாயுதேவரின் அவதாரத்தினால் சஜ்ஜனர்கள் மகிழ்ச்சியடைந்தனர். துர்ஜனர்கள் துக்கமடைந்தனர். இதனை அறிவிப்பதுபோல், தேவலோகத்தில் இருக்கும் வாத்தியங்கள் முழங்கின. அனந்தாசனனை வணங்கி தம் ஊருக்குத் திரும்பிக்கொண்டிருந்த மத்யகேஹ பட்டருக்கு இந்த வாத்திய இசை கேட்டது. மகன் பிறந்ததைக் கேட்ட அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். நல்ல லட்சணங்களைக் கொண்ட மகனைக் கண்டார். ஸ்ரீஹரியை நினைத்தார். **’ஜாதகர்மாதி கர்ம நிவஹம் விததே சுகர்மா’ (2-28)**. ஜாதகர்ம முதலான கர்மங்களைச் செய்து, வாயுதேவரின் அவதாரமான அந்தக் குழந்தைக்கு வாசுதேவ என்று பெயர் இட்டார். வாசுதேவனின் அருகாமையையே விரும்பும், முக்யபிராணரே ஆன அந்தக் குழந்தைக்கு இது சரியான பெயரே என்று தேவர்கள் மகிழ்ந்தனர்.

’பிராணேஸ்வர: பிராணிகண பிரணேதா’ (1-9). குழந்தைக்கு பால் தேவைக்காக மூடில்லாய என்பவர் ஒரு பசுவினைக் கொடுத்தார். பின்னர் அவர் தமது மகனுக்கு மகனாகப் பிறந்து, ஆசார்யரின் சாஸ்திரங்களைப் படித்து அறிஞரானார். **’தானம் த்ருவம் பலதி பாத்ர குணானுகூல்யாத்’ (2-30)** - தகுந்தவருக்குக் கொடுத்த தானமானது, அதிக பலன்களைத் தரும் என்பது உண்மைதானே. **‘ஸ்வாமினே புத உபாயனமார்பயத் ச:’ (2-31)** - ஸ்ரீஹரியின் கருணையால் பெற்ற மகனை, அனந்தேஸ்வரனுக்கு சமர்ப்பித்தார்.

அன்றொரு நாள் இரவு. பாஜகவிற்கு தன் சிஷ்யர்களுடன் திரும்பிக் கொண்டிருந்தார் பட்டர். அப்போது ஒரு ஆச்சரியமான சம்பவம் நடந்தது. அந்தக் காட்டில் இருந்த ஒரு பூதம், அனைவரையும் துன்புறுத்தக்கூடியது. ஆனால் இவர்களை ஒன்றும் செய்யவில்லை. ’இந்தக் குழந்தையினாலேயே நீங்கள் தப்பித்தீர்கள். இது சத்தியம். நீங்கள் அனைவரும் உயிர் பிழைத்திருப்பது, இந்தக்

குழந்தை செய்த புண்ணியத்தாலேயே. இவன் சாதாரண குழந்தையல்ல. குழந்தை உருவத்தில் இருக்கும் உலகத்தைக் காப்பவன். உலகத்தின் பிராணநாதன் இவனே - என்ற குரல் கேட்டது.

எப்போதும் குழந்தையை விட்டுப் பிரியாத தாய், ஒரு முறை அவசர வேலையாக வெளியில் போகவேண்டியிருந்ததால், அவனை தன் மகளிடம் ஒப்படைத்துச் சென்றார். அப்போது இந்தக் குழந்தை அழத் தொடங்கியது. அந்தப் பெண்ணால் அந்த அழுகையை நிறுத்த முடியவில்லை. பசுக்காக அங்கு வைத்திருந்த வெந்த கடலைகளை அக்குழந்தைக்கு கொடுத்தாள். மகனை நினைத்தவாறு தாய் வீட்டிற்கு விரைந்து வந்தாள். நிரம்பிய வயிறுடன் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைக் கண்டு வியப்படைந்தாள். விஷயத்தை அறிந்தாள்.. என்ன ஆகப்போகிறதோ என்று வருத்தமுற்றாள்.

காலகூட விஷத்தையே குடித்து ஜீரணம் செய்த குழந்தை இது என்பதை அறியாமல், தோஷங்களைப் போக்கவேண்டி தந்தையானவர் மந்திரங்களைப் படிக்கலானார். **'சர்வோபி தன்முக சஹாஸ ரசாயனோக்த:'** **(2-42)**. குழந்தையின் களையைக் கண்ட மக்களின் வாழ்வு எப்போதும் நலமாக இருந்தது. உலகத்தின் செயல்கள் யாரினால் நடைபெறுகிறதோ அத்தகைய வாயுதேவர், வாசுதேவனாக ஒரு சாதாரண குழந்தையைப் போல தன் மழலைப் பேச்சினைத் துவக்கினார். பிஞ்சுக் கால்களால் நடந்தார். மெதுவாக எழுந்து நின்றார். நடக்கத் துவங்கினார். **'சர்வம் ததஸ்ய பவனஸ்ய விடம்பனம் ஹி'** **(2-44)**. இதெல்லாம் மக்களுக்குக் காட்டுவதற்காக செய்த மாயையே.

ஒரு நாள் காலை வேளை. மத்யகேஹ பட்டரின் எருது, மேய்வதற்குக் கிளம்பியது. இந்தச் சிறுவன் அதன் வாலினைப் பிடித்து, யாரும் பார்க்காதபோது அதனுடனே புறப்பட்டான். இதை அறியாத பெற்றோர், உறவினர் நண்பர்கள் அனைவரும், பட்டரின் ஒரு வயதுக் குழந்தையை காணவில்லை என்று வருத்தத்துடன் தேடத் துவங்கினர். குழந்தையை எருதுடன் காட்டில் பார்த்தேன் என்று ஒருவர் சொன்னதை, மாலையில் திரும்பி வந்த குழந்தையைக் கண்டதும் நம்பினர்.

அப்போது அவர்களுக்கு உண்டான மகிழ்ச்சியை **'சிந்தாமணீந்திரமிவ சிந்தித தம் தரித்ரோ விக்ஞான மார்க்கமிவ விஷ்ணுபரம் மமுக்ஷு:'** **(2-49)** என்று கவி வர்ணிக்கிறார். கேட்பதையெல்லாம் கொடுக்கும் சிந்தாமணி ஒரு ஏழைக்குக் கிடைத்ததைப் போல, ஸ்ரீஹரியை விளக்கும் தத்வஞானமானது, முக்தியை வேண்டுபவனுக்குக் கிடைத்ததைப் போல ஆயிற்று. உண்மையில் இந்தச் சிறுவன் தன்னை நம்பியவர்களுக்கு ஒரு சிந்தாமணியே ஆவான். இப்படி சிறுவன் திரும்பக் கிடைத்தது, அனந்தாசனனின் அருளே என்று அனைவரும் நம்பினர்.

ஒரு நாள், மத்யகேஹ பட்டருக்கு எருதினை விற்ற வியாபாரி, அதற்கான பணத்தைப் பெறவேண்டி அவர் வீட்டிற்கு வந்தான். அப்போது விளையாடிவிட்டு திரும்பிய வாசுதேவன், தந்தையை உணவு உண்பதற்கு அழைத்தான். வியாபரிக்கு பணம் கொடுக்கும்வரை தான் உண்பதில்லை என்று கூறி, வாசுதேவனை

உணவுண்ணச் சொன்னார் பட்டர். அந்த வியாபாரிக்குக் கொடுக்கவேண்டிய பணத்திற்கு பதிலாக, தன் கை நிறைய புளியங்கொட்டைகளை எடுத்துக் கொடுத்தான் வாசுதேவன். அந்த வியாபாரியும் மிகவும் மகிழ்ச்சியுடன் அதையே பெற்றுச் சென்றான்.

பிறகு ஒரு நாள், வியாபாரிக்கு பணம் கொடுக்க பட்டர் சென்றபோது - 'அன்றே உன் மகனிடமிருந்து பணம் பெற்றேனே' என்றான் அந்த வியாபாரி. இனி நீங்கள் கடனாளி இல்லை என்றான். **'பீஜச்சலேன புருஷார்த்தமஹோ விசிஷ்டம்' (2-52).** உண்மையில் வாயுதேவரே ஆன வாசுதேவன் கொடுத்த புளியங்கொட்டைகள், அந்த வியாபாரிக்கு மோட்சத்தையே கொடுத்ததாக ஆயிற்று.

பாலகிருஷ்ணனைப் போலவே தன் பால லீலைகளைக் காட்டிய வாசுதேவனை கிருஷ்ணனைப் போலவே அனைவரும் கண்டனர். வணங்கினர். ஸ்ரீபிராணதேவரின் அவதாரமான பால்ய-மத்வரின் சரித்திரம் புனிதமானது. அவரைப் பார்த்தவர்களே தன்யர். அறிந்தவரே பாக்யவந்தர்.

ஸ்ரீஹ்ருஷிகேச தீர்த்தர் தனது 'சம்பிரதாய பத்ததி'யில் வாசுதேவனின் லீலைகள் இன்னும் பலவற்றை தெரிவித்திருக்கிறார்.

***

மூன்றாவது சர்க்கத்தின் சுருக்கம்

வளர்ந்து வந்த வாசுதேவன், மக்களுக்கு தனது பால்ய லீலைகளைக் காட்டினான். பாரதிபதி ஆனவனுக்கு அக்ஷராப்யாசம், வித்யாப்யாசம், வயதுக்கு ஏற்றாற்போல் பிரம்மோபதேசம். 'லிகுச' சொல்லிற்குப் பொருள் சொல்வது, பாம்பு வடிவில் வந்த அசுரனைக் கொன்றது, ஜகத்குரு ஆனவனுக்கு குருகுலவாசம், குருவின் மகனின் தலைவலிக்கு தீர்வு, குருதட்சிணையாக் ஐதரேய உபநிஷத்தினை நிரூபித்தல் - ஆகியவை இந்த சர்க்கத்தில் உள்ளன. சாதாரணமாக இருந்து, அசாதாரண செயல்களைச் செய்ததன்மூலம், தான் யார் என்பதை ஒவ்வொரு கட்டத்திலும் தனது அற்புத லீலைகளினால் அறிவித்தான் வாசுதேவன்.

அத கதாசன சுந்தர நந்தனஸ்மித முகேந்து த்ருஷாம் தயிதௌ ந்ருணாம் |
மஹமதோ நிஜபந்து முதேமுதா ப்ரயயது: ஸ்வஜனை: சஹ தம்பதி || (3-1)

எப்போதும் சிரித்த முகத்துடன் அழகாக இருந்த வாசுதேவன், பாலகிருஷ்ணனைப் போல அனைவரின் கண்களுக்கும் பௌர்ணமியின் சந்திரனைப் போல் காட்டிக்கொண்டு அனைவரின் அன்பிற்கும் பாத்திரமானான். இதனால் மத்யகேஹ பட்டர் அனைவரின் நண்பரானார். ஒருமுறை ஒரு திருமண நிகழ்ச்சிக்காக நடுவெரி என்னும் கிராமத்திற்கு அனைவரும் புறப்பட்டனர். அங்கு உற்சவத்தின் கொண்டாட்டம், குதூகலத்தில் தாய் மூழ்கினாள். வாசுதேவனுக்கு நேரம் போகவில்லை. த்ருவனைப் போல் வெளியே புறப்பட்டான். மூன்று வயதுக் குழந்தை தனியாகப் போவதைக் கண்டவர்களின் கேள்விக்கு **'ஸ்மிதமனாகுலம்**

உத்தரமாதனோத்’ **(3-3)**, கம்பீரமான சிரிப்பே பதிலாயிற்று. குடுமூரு என்னும் ஹரனின் கோயிலுக்குப் போய் வணங்கி, அங்கிருந்து தாளெகுட என்னும் கோயிலுக்கு வந்து நாராயணனை வணங்கினான்.

பிறகு **‘ரஜதபீடபுரம் பிரயயாவஸௌ’** **(3-5)** ரஜதபீடபுரம் (உடுப்பி) போய்ச் சேர்ந்தான். அங்கு அனந்தேஸ்வரனை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். இது 10 அஸ்வமேத யாகங்களைச் செய்த பலன்களை விட அதிக பலன்களைக் கொடுப்பதாக இருந்தது என்று தேவர்களும் பிராமணர்களும் கருதினர். பரிசுத்தரான வாயுதேவர் எந்நேரமும் ஸ்ரீஹரியை பார்த்தவாறு, பாடியவாறு, துதித்தவாறு இருப்பார். ஆனால் இன்று செய்த நமஸ்காரங்கள் **’நனு சாது ஜனான் சமஷிக்ஷயத்’** **(3-7)** சஜ்ஜனர்களுக்கு ஒரு நல்ல உதாரணமாக இருந்தது.

தன் மகனே தன்னுடைய உலகம் என்றிருந்த மத்யகேஹர், அவனைக் காணாமல் வருந்தி தேடத் துவங்கினர். வழியில் கண்டவர்களிடம் கேட்டவாறு நடந்தார். நறுமணத்தைக் கண்ட தும்பி எவ்வளவு ஆனந்தப்படுமோ அப்படி தன் மகனின் சிரித்த முகத்தைக் கண்டதும் மத்யகேஹர் மகிழ்ச்சியடைந்தார். வருத்தத்தில் வந்த கண்ணீரை அடக்கிய அவர், மகனைக் கண்டதும் வந்த ஆனந்தக்கண்ணீரை மறுபடி அடக்கினார். ‘எப்படி யாருடன் வந்தாய்?’ என்று கேட்டார். ‘அப்பா, தாளெகுடத்து நாராயணனே என்னுடன் வந்தான்’ என்ற சிறுவன் கூறினான்.

’நனு சகா மம கானன கோ விபு:’ **(3-12)** ஸ்ரீஹரியே தன்னுடன் வந்தான் என்றான். மத்யகேஹர் அனந்தாசனத்தில் **‘அயி க்ருபாலய பாலய பாலகம்’** **(3-15)**, ’ஸ்ரீஹரியே குழந்தையை எப்போதும் காப்பாற்று’ என்று வேண்டி மனைவி மக்களுடன் வீட்டிற்குத் திரும்பினார். விமானகிரியில் (துர்கா மலை) நிலைத்திருக்கும் லட்சுமிதேவி தன் மகனே ஆன இந்தக் குழந்தையை பார்த்துக் கொண்டாள். வாசுதேவன் சில காலம் பாஜகத்தில் இருப்பதற்கு இதுவே காரணம்.

சர்வக்ஞருக்கு அக்ஷராப்யாசம்

பாரதிபதியான தன் மகனுக்கு மற்ற குழந்தைகளைப்போல ஒரு நல்ல முகூர்த்தத்தில் அக்ஷராப்யாசம் செய்வித்தார் மத்யகேஹ பட்டர். அடுத்த நாளும் வந்தது. **’’லிபி குலம் நனு தாத கதே தினே லிகிதமேவ புனர்லிகிதம் குத:’** **(3-19)**. வாசுதேவன், ‘அப்பா, நேற்று எழுதிய எழுத்துக்களையே இன்றும் ஏன் எழுத வைக்கிறீர்?’ என்றவுடன் தந்தைக்கு வியப்புடன் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. ஏகபாடியான (ஒரே ஒரு முறை படித்தால் புரிந்துக் கொள்பவன்) மகனின் திறனைக் கண்ட தந்தை, அடுத்தடுத்து பாடங்களை எடுக்கத் துவங்கினார். சில நாட்களிலேயே தனது பேச்சுத்திறனால் மக்களின் மனங்களை வெல்லத் துவங்கினான் வாசுதேவன்.

ஒரு முறை தாயுடன் ஒரு உற்சவத்திற்குச் சென்றான். அங்கு ஒரு நிகழ்ச்சி. த்யௌதபட வம்சத்தின் சிவபிராமணர் ஒருவரால் புராண சொற்பொழிவு நடந்துகொண்டிருந்தது. வாசுதேவன் தன் சந்தேகத்தைக் கேட்டான். ’ஹே பிராமணரே! நீங்கள் சொல்வது வியாச சுகர்களுக்கு ஒப்புவதில்லை’ என்றான்.

மக்கள் அந்த சொற்பொழிவை புறக்கணித்து, சிறுவனின் திறமையை புகழ்ந்தனர். புலிக்குட்டி கர்ஜிக்கும்போது, நரியின் கூக்குரலை யார் கேட்பார்கள்? மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, சரியான பதிலையும் கொடுத்தான். அங்கிருந்த மக்களின் மகிழ்ச்சியும், வாயுதேவரின் வெற்றியைக் கொண்டாடிய தேவர்களின் மகிழ்ச்சியும் ஒன்றானது. வாசுதேவனை அனைவரும் பாராட்டினர். பிறகு வீட்டிற்குத் திரும்பிய வாசுதேவன், அனைத்தையும் தந்தைக்கு தெரிவித்தான். யார் சொன்னது சரி என்று கேட்டான். சரியான விளக்கத்தைக் கொடுத்த மகனின் பதிலே சரி என்றதோடல்லாமல், இது தனது தலைவனான அனந்தேஸ்வரனின் மகிமையாலேயே ஆனது என்று நினைத்தார்.

சிறந்த சொற்பொழிவாளரான மத்யகேஹ பட்டர் ஒரு நாள் புராணம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது **‘சகல லோக மனோ நயனோத்ஸவ: சதுரதீ:’ (3-28)** அனைத்து மக்களின் கண்களுக்கும், மனதிற்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பவனான வாசுதேவன் மெதுவாக எழுந்து, ‘அப்பா, ‘லிகுச’ என்னும் சொல்லிற்குப் பொருள் சொல்லாமல் ஏன் மேலே சென்றீர்?’ என்றான். அதற்கு தந்தை பதில் சொல்லாததால், மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ‘லிகுச’ என்னும் சொல்லிற்கு ‘ஹெப்பலஸு’ (மரத்தின் பெயர்) என்று பொருள் சொன்னான். மகனின் இந்த பதில், தந்தைக்கு மகிழ்ச்சியும், பெருமையும் கொடுத்தது.

பாரதிபதிக்கு பிரம்மோபதேசம்

இப்படி பலவிதமான அற்புதங்களை சஜ்ஜனர்களுக்குக் காட்டி வியப்படையவைத்த வாசுதேவனுக்கு, நல்லதொரு முகூர்த்தத்தில் (ஆறாவது வயதில்) உபநயனம் செய்வதற்கு மத்யகேஹர் தீர்மானித்தார். நல்ல முகூர்த்தம், ஞானிகளின் சங்கமம், உற்றார் உறவினர்களின் வருகையில் வாசுதேவனுக்கு உபநயனத்தை நடத்தி முடித்தார். இந்த நல்ல நாளுக்காக காத்திருந்த வேதாபிமானி தேவதைப் பெண்கள், வெகுகாலமாக வாசுதேவனின் முகம் என்னும் அரங்கத்தில் வாசம் செய்யவேண்டுமென்று எண்ணி, தம் கணவர்களுடன் வந்தனர்.

வேதங்களில் சொல்லப்பட்டிருந்தவாறு உபநயனத்தை நடத்தி முடித்த மத்யகேஹ பட்டர் மகனுக்கு, **‘பரிசராக்னி குரு சரித விரத: சுசரண: பட சாது சாதாகமான் |’ (3-35)** - ’மகனே, அக்னியை, குருவினை வணங்கி பிரம்மசரிய நியமம் கொண்டவன் ஆகு, தோஷங்கள் இல்லாத வேதங்களைப் படி’. மூன்று லோகத்து குருகளான முக்யபிராணருக்கு பட்டர் கொடுத்த உபதேசத்தைக் கேட்ட தேவதைகள் - பாவி-பிரம்மருக்கு (எதிர்கால பிரம்மன்) செய்யும் உபதேசமா இது? என்று சிரித்தனர். நியமிக்கப்பட்ட கர்மங்களை சரியாகச் செய்யும் மகனைக் கண்ட மத்யகேஹர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். வாயுதேவரின் விஷயத்தில் ஆச்சரியம் தேவையா?

மணிமந்தன் என்னும் அசுரன் பாம்பின் வடிவில் வந்து ‘சர்வமயோऽசுர:’, தன் விஷ ஜுவாலையினால் மக்களை அச்சுறுத்தி பயங்கரமாக உலவி வந்தான். ஒரு நாள் இந்த அசுரன், ஆகணாஷ்மசமரான (யாராலும் வெல்லப்பட முடியாதவர்) வாசுதேவனைக் கொல்லவேண்டி அவனின் காலைக் கடித்தான். அப்போது

வாசுதேவன் தன் அழகான கால் கட்டைவிரல்களினால் அவனை மிதித்தான். அசுரன் மடிந்தான். இந்தச் செயல் வாயுதேவரால் சாத்தியமாகி, சஜ்ஜனர்களுக்கு பிரியமானதாக இருந்தது. தேவதைகள் மகிழ்ச்சியடைந்தனர்.

எதிர்கால பிரம்மனுக்கு குருகுல வாசம்

வேதங்களால் புகழப்படும் இந்த எதிர்கால-பிரம்மன், உபநயன காரியத்தால் வேதங்களைப் படிக்கும் அதிகாரத்தைப் பெற்றார். ருத்ர, ப்ருஹஸ்பதி, இந்திர ஆகிய தேவதைகளால் எந்நேரமும் பூஜிக்கப்படலானார். ஆனால், மனித வடிவில் இருந்ததால் குருகளில் பாதங்களில் விழுந்து, பாடத்தைத் துவங்கினார். சாதாரணரைப் போல பாடத்தைப் படித்த வாசுதேவனின் மனதில் அனைத்து வித்யைகளும் **'கரதளே கலு கந்துகவத் சதா சகலயா கலயா சஹ வித்யயா' (3-42).** அனைத்து பாடங்களும் கையிலிருக்கும் பந்து போல தெள்ளத்தெளிவாகத் தெரிந்தன. ஞானஸ்வரூபரான வாயு அவதாரத்திற்கு, குருகுலவாசம் என்பது முரணாகத் தெரிந்தது.

குருகளான தோடிந்தில்லாய-ரிடத்தில் வாசுதேவனைவிட வயதான, பழைய மாணவர்கள் இருந்தனர். சக மாணவர்களுடன் விளையாட்டில் ஈடுபட்டாலும், பாலமத்வர் அனைத்து வகுப்பிலும் முதலாதவராக வந்தார். மனோவேகத்தைவிட வேகமாக கடலினைத் தாண்டி சஞ்சீவி மலையையே கொண்டு வந்த திறமைசாலியான வாயுதேவருக்கு இது ஒன்றும் பெரிய விஷயமில்லை. இவரின் திறனைக் கண்டு 'இவர் பீமனே' என்னும் பேச்சு இருந்தது.

கிரஹண நிக்ரஹணே கிரஹணே த்ருடேகுரு பரோத்தரணாதி விதௌபடௌ |
இஹ விபாவுபசார தியா ந்ருணாம் ருதமயம் நனு பீம இதீரிதம் || (3-48)

பாண்டவ கௌரவர்கள் சிறுவர்களாக விளையாடிய காலத்தில், அனைத்து பாடங்களிலும், விளையாட்டிலும் பீமசேனன் தனது திறமையைக் காட்டி அனைத்திலும் எப்படி முதலாமவனாக வந்தாரோ, அதைப்போல இந்த வாசுதேவன் தன் பாலலீலைகளினால் அந்த பீமனைப் போலவே இருக்கிறான் என்று அனைவருக்கும் நினைவுபடுத்தினான்.

இப்படி விளையாட்டினில் ஈடுபட்டிருந்த வாசுதேவனைக் கண்டு, அவனின் உண்மையான திறனைக் காணாத பூகவன வம்சத்தைச் சேர்ந்த குருகள் மிகவும் வருத்தம் கொண்டார். ஒரு முறை பாடம் படிக்கும்போது, அதில் கவனத்தை செலுத்தாமல் இருந்த வாசுதேவனைக் கண்ட குரு **'படஸி நோ ஷட தே சகிபி: சமம் கிமதி' (3-50)** - 'ஏ சிறுவனே, எப்போதும் கவனமற்று இருக்கிறாய். சக மாணவர்களைப் போல் ஏன் மனம் கொடுத்து படிப்பதில்லை?' என்றார். வாசுதேவனோ 'குருகளே, நீங்கள் ஒவ்வொரு பதமாக விளக்கிச் சொல்வது எனக்கு பிடிக்கவில்லை' என்றான். இதைக் கேட்டு கோபமடைந்த குரு **'வத விஷாரத வாத யதேப்சிதம்' (3-51)** - பெரிய அறிஞரைப் போல பேசும் நீ, அடுத்த பாடத்தைச் சொல், பார்க்கலாம்' என்றார்.

உடனே வாசுதேவன், குருகள் சொல்லிக் கொடுத்திராத அடுத்த பாகத்தை சரியான உச்சரிப்புடன் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தான். குருகள் வியப்படைந்தார். தேவதைகள் மகிழ்ச்சியடைந்தனர். பால-மத்வரின் பெருமை பரவத் துவங்கியது. ஒரு முறை கேட்டதை தெரிந்துகொள்வதில் என்ன வியப்பு, ஒரு முறைகூட கேட்டிராத பற்பல வேதமந்திரங்களை தன்னுடைய மகிமையினால் அறிந்திருந்தார்.

குருவின் மகனுக்கு அருளினார்

ஒரு முறை வாசுதேவன், குருவின் மகனுடன் காட்டிற்குச் சென்றிருந்தான். நண்பனுக்கு பிறப்பிலிருந்தே இருந்த தலைவலி அப்போது மிகவும் கடுமையாயிற்று. அப்போது வாசுதேவன் தன் நண்பனின் காதுகளில் தன் வாயை வைத்து ஊதினான். உடனடியாக அந்த தலைவலி பிரச்னை தீர்ந்துபோனது. பிறகு அது வரவேயில்லை. இப்படியாக தன் குருவின் மகனுக்கு அருளினார்.

குருதட்சிணை மோட்சத்திற்கான வழியாயிற்று

சாக்ஷாததோப நிஷதோ விபுரைதரெய்யா: பாடச்சலேன விஜனேர்தரசம் ப்ருவாண: |
அத்யாபகாய விததார விமோக்ஷ பீஜம் கோவிந்த பக்திமுசிதாம் குருதக்ஷிணாம் ஸ: | (3-55)

ஒருமுறை தன் குருவினிடம் ஐதரேய உபநிஷத் படிக்கும் சந்தர்ப்பத்தில், தனிமையில், மிகச் சிறந்த, மோட்சத்திற்கான வழியான, சிறப்பு அர்த்தங்களைக் கூறி விஷ்ணுபக்தியினை அவரிடம் வளர்த்தார். இதுவே சிறுவன் குருவிற்கு அளித்த குருதட்சிணை ஆகும். பிறகு தேவதைகள் வாசுதேவனை ‘ஸ்வாமி, துஷ்டர்களை திருத்துங்கள், ஸ்ரீஹரியின் குணங்களை தெரியப்படுத்துங்கள், சஜ்ஜனர்களை காப்பாற்றுங்கள்’ என்று வேண்ட, மூன்று உலகத்திற்கும் குருவான இவர், தம் குருவினிடமிருந்து ஒப்புதல் பெற்று, குருகுலத்திலிருந்து புறப்பட்டார்.

***

நான்காவது சர்க்கத்தின் சுருக்கம்

வாசுதேவன் சன்யாசி ஆவதென்று முடிவு, அச்யுதப்ரேக்ஷரின் பின்புலம், தடை போட தந்தை செய்த முயற்சிகள் வீணானது, அச்யுதப்ரேக்ஷரைக் காண வாசுதேவன் பயணம், சகோதரன் பிறப்பு, சன்யாசி ஆதல், ‘பூர்ணப்ரக்ஞ’ என்ற பெயர் பெறுதல், ரஜதபீடபுரத்து குளத்தில் கங்கை தோன்றுதல், அச்யுதப்ரேக்ஷர் மூலமாக இஷ்டசித்தி பாடம் கேட்டல், அதில் முதல் ஸ்லோகத்திலேயே பூர்ணப்ரக்ஞர் 32 பிழைகளைக் கண்டுபிடித்தல், வேதவியாசருக்கு ஒப்புதலான ஸ்ரீமத்பாகவத பாடத்தை சொல்லுதல் - ஆகிய விஷயங்கள் இந்த சர்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

அனன்ய சங்காத் குணசங்கிதா ஹரே: ஜனஸ்யமான் து விசிஷ்ட சேஷ்டிதம் | அசங்கமஸ்மாத் ப்ரகடி கரோம்யஹம் நிஜம்பஜன் பாரமஹம்ஸ்யமாஸ்ரமம் || (4-2)

சஜ்ஜனர்களின் மேலுள்ள கருணையினால், தேவதைகளுக்கு தவறான அர்த்தங்களைக் கற்பித்து மக்களைக் குழப்பும் மாயாவாதிகளைக் கண்டித்து, சஜ்ஜனர்களுக்கு சத்வைஷ்ணவ சித்தாந்தத்தை போதித்து உதவுவதற்கு அவதரித்த வாசுதேவன், மேற்கொண்டு செய்யவேண்டியதை யோசித்தான். ஸ்ரீஹரியிடம் பக்தி பெருகுவதற்கு உலகத்தின் மேல் விரக்தி வேண்டும். தேவனிடத்தில் அன்பு வருவதற்கு, தற்காலிக விஷயங்களின் மேல் வெறுப்பு வரவேண்டும். சஜ்ஜனர்கள் இவற்றை தங்கள் நடைமுறைக்கு கொண்டுவருவர். ஆகையால், தானும் வைராக்கியத்தைக் காட்டி சன்யாசி ஆவேன் என்றான் வாசுதேவன்.

துஷ்டர்களை அழிக்கத் தக்கவர் வாசுதேவர். ஆனால் அந்தச் செயலை செய்வதற்கு துர்காதேவி அவதரிக்கிறாள் ஆகையால், **'சமஸ்த சம்வியாபினமாத்ம தாயகம்' (4-4),** தண்டம் பிடித்து சன்யாசி ஆவேன் என்று சூளுரைத்து, அதற்கு விஷ்ணுவின் அனுமதியைப் பெறவேண்டி, திரும்பத்திரும்ப அவரை வேண்டினார்.

'குரோ:கிலான்வேஷணவான் ஜகத்குரு: ததா ஜகாமாகிலலோக சிக்ஷக: ||' (4-5) - சன்யாசி ஆவதற்கு ஒரு தக்க குருவைத் தேடுவோம் என்று புறப்பட்டார். தானே ஜகத்குருவானாலும், இந்தச் செயல் உலகத்தைத் திருத்துவதற்காக செய்வதுதானே!

அச்யுதப்ரேக்ஷரின் பின்புலம்

விரக்தி கொண்ட ஒரு சன்யாசி. எப்போதும் அச்யுதனையே வணங்கியதால் அச்யுதப்ரேக்ஷர் என்று அழைக்கப்பட்டார். ஹம்ஸ நாமக பரமாத்மாவின் பரம்பரையில் வந்த மஹானுபாவர். **'புரைஷ கருணாகர சித்த சுத்திமத்வரான்ன புக்த்யாகில பாண்டவாலயே |' (4-7)** - இவர் போன பிறவியில், பிக்ஷை பெற்று உண்ணும்போது, திரௌபதியின் கையில் தயாரான சுத்தமான அன்னத்தைப் பெற்று உண்ட சன்யாசி. ஆகையால் சுத்தமான மனது உடையவராக இருந்தார். இவரின் குருவிற்கு இறுதிக்காலம் நெருங்கியது. சிஷ்யனை அருகில் அழைத்தார்.

'மாயா சமயோப பாதிதம் நிரன்வயாத் சுவ்ரத மாஸ்ம விஸ்வசீ:' (4-10) - 'நானே பரப்பிரம்மன், என்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று மாயாவாதத்தில் சொல்லியிருப்பதை நம்பாதே. மாயாவாதத்தின் ஆத்மைக்ய (பரமாத்மாவுடன் போய் சேர்வது) என்னும் தத்வம், எனக்கோ என் முன்னோர்களுக்கோ அனுபவத்திற்கு வரவில்லை. ஆகையால் உண்மையான ஞானத்திற்கு 'முகுந்தம் பஜ' அந்த முகுந்தனை எப்போதும் பஜித்திரு' என்று ரகசியமாக தெரிவித்தார்.

பிறகு அச்யுதபிரேக்ஷர் இந்த சத்யவாதத்தை திரும்பத்திரும்ப யோசித்தவாறு, அடுத்த நிலை என்னவென்று அறிவதற்கு, ரஜதபீடபுரத்தை அடைந்து இந்திராபதியான அனந்தேஸ்வரனை தினமும் வணங்கலானார். பக்தரான இவருக்கு பக்தவத்ஸலான ஸ்ரீஹரி இன்னொருவர் மேல் ஆவேசம் கொண்டு ஒரு செய்தியைக் கூறினார். 'ஒரு சிஷ்யர் கிடைப்பார், அவன் மூலமாக என்னை அறி'.

பொறுமையுடன் காத்திருந்த அச்யுதப்ரேக்ஷரிடம், சர்வக்ஞரான வாயுதேவர் சிஷ்யராக சேர்வதற்கு வந்து சேர்ந்தார்.

மத்யகேஹ தம்பதியினரின் கலக்கம். பால-மத்வரின் அறிவுக்கூர்மை

மகனின் முடிவைக் கேட்டு மத்யகேஹ தம்பதிகள் துக்கமடைந்து, வாசுதேவன் அச்யுத்ப்ரேக்ஷரிடம் சிஷ்யனாக இருப்பதையும் சன்யாசி ஆகப்போவதையும் அறிந்து, புத்திரபாசத்தால் மகனிடத்தில் வந்தனர். 'உன்னை விட்டால் எங்களுக்கு கதி வேறு யாரும் இல்லை. நாங்கள் இருக்கும்போது நீ சன்யாசி ஆவது சரியில்லை' என்று வயதான தம்பதிகள் தங்கள் மனநிலையைக் கூறி, **'பரீத்ய புத்ராய நதிம் விதேனது:'** **(4-16)**, மகனை சுற்றிவந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தும் விட்டனர்.

'பெரியவர்கள், சிறியவர்களை வணங்குவது சரியல்ல. ஸ்ரீஹரியே உங்களை வணங்க வைத்து, எனக்கு அனுமதி அளித்திருக்கிறான்' என்று புன்சிரிப்புடன் வாசுதேவன் கூறினான். பெற்றோரால் பதில் அளிக்கமுடியவில்லை. மகனை சன்யாசி ஆகவேண்டாம் என்று கூறி, குருவினை வணங்கி, பின் தம்மிடத்திற்குத் திரும்பினர்.

மகனின் முகம் மறுபடி மறுபடி நினைவிற்கு வந்தது. ஒவ்வொரு நொடியும் ஒரு கல்பமாகத் தோன்றியது. தாங்கமுடியாமல் மறுபடி மகனிடம் வந்தனர். குத்யாடி-மடத்தில் குருவுடன் இருந்த மகனைக் கண்டனர். இம்முறை வாசுதேவனிடத்தில் கோபம் கொண்ட மத்யகேஹர், அவர் சன்யாசி ஆகக்கூடாதென்று உபவாசம் மேற்கொண்டு, உயிரையும் விடுவேன் என்று பயமுறுத்தினார். அப்போதே வாசுதேவன், தன் ஆடையைக் களைந்து, கௌபீனம் அணிந்து - **'ஹே தாத குருஷ்வ ஸாஹசம்'** **(4-21)** - 'அப்பா, இப்போது நாடகமாடுங்கள்' என்று சொல்லி **'ஷுபாந்தராயம் ந பவாம்ஸ்சரேதிதி'** **(4-21)** - நற்காரியத்திற்கு என்றும் தடை போடாதீர்கள் என்றான். பிராணதேவரின் அனுமதி இல்லாமல், பிராணனை எப்படி விடுவது? இறுதிவரை ஒப்புக்கொள்ளாத தந்தை - **' ந புத்ர பித்ரோரவனம் வினா ஷுபம் வதந்தி'** **(4-22)** - 'நீ இல்லாமல் எங்கள் கதி என்ன?' என்றார்.

யதா விரக்த: புருஷ: பிரஜாயதே ததைவ சன்யாச விதி: ஸ்ருதௌ ஸ்ருத: |
ந சங்கஹீனோபி பரிவ்ரஜாமி வாம் அஹம்து சுஷ்ரூஷுமகல்பயன்னிதி || (4-23)

'எப்போது ஒருவருக்கு விரக்தி வருகிறதோ, அப்போதே அவர் சன்யாசி ஆகிவிட வேண்டும்' என்று சொல்லி, 'உங்களுக்கு ஒரு சேவகனைக் கொடுக்காமல் நான் சன்யாசி ஆவதில்லை' என்றான். **'ந சா சவித்ரீ விரஹம் சஹேத தே |'** **(4-24)** - 'நான் சாஸ்திரங்களை அறிந்தவனாகையால், நான் இதற்கு ஒப்பினாலும், உன் தாய் ஒப்பவேண்டுமே?' என்றதும், வாசுதேவன் தந்தையை வணங்கி அவரின் அனுமதியைப் பெற்றான்.

வீட்டிற்குத் திரும்பிய மத்யகேஹர் இந்த விவரங்களை மனைவியிடம் தெரிவித்தார். சர்வக்ஞரான வாசுதேவன் சொன்னதைப் போல - ஸ்ரீராமனுக்கு

பரமபக்தனான லட்சுமணனைப் போல, பீமனுக்கு அர்ச்சுனனைப் போல - மத்யகேஹருக்கு இன்னொரு மகன் பிறந்தான். வாசுதேவனை எப்போதும் விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன் என்றதால், அவர்களுக்கு இன்னொரு மகன் பிறந்தான். ஆசார்யரை நம்பியவர்களுக்கு, அவரின் சித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்களுக்கு, அவர் வேண்டியதைக் கொடுப்பார்.

ஒருமுறை வீட்டிற்குத் திரும்பிய வாசுதேவன், தன் தம்பியைக் காட்டி, 'இனி இவனே உங்கள் சேவகன்' என்றார். ஆனாலும் சன்யாசி ஆவதற்கு தாய் அனுமதி அளிக்கவில்லை. 'அம்மா, என்னை நீங்கள் மறுபடி பார்க்கவேண்டுமெனில், அனுமதி அளியுங்கள். இல்லையெனில், இனி என்னை பார்க்க வாய்ப்பில்லை' என்றார். மகன் சன்யாசி ஆனாலும் பரவாயில்லை, நம் கண்ணிலேயே இருப்பானே என்று தாயானவர் மிகவும் துக்கத்துடன் அனுமதி அளித்தார்.

வாசுதேவன் பூர்ணப்ரக்ஞர் ஆனார்

ஜகத்குருவான, ஜீவோத்தமரான வாசுதேவன் **'சதா ஸமஸ்ராஷ்ரமபாக்' (4-30)**, தேவர்களில் சிறந்தவனானாலும், குருகளிடம் வந்து, அனைத்து விதிகளையும் பூர்த்தி செய்து, சன்யாச ஆசிரமத்தைப் பெற்றார். அனைத்தையும் அறிந்த வாசுதேவன், அவற்றை சர்வோத்தமனுக்கு சமர்ப்பித்து, அனைத்து விதிகளையும் அனுசரித்தார். மந்திர ஜபத்திற்கு முக்கிய அதிகாரியான வாயுதேவரே, யதிஆஸ்ரமத்திற்கும் முக்கிய அதிகாரி என்று காட்டினார்.

'குணானு ரூபுன்னதி பூர்ணபோத இத்யமுஷ்ய நாம த்விஜவிருந்த வந்தித: |' (4-33) - வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் விதிகளை அனுசரித்து, பொருத்தமான பெயரான, பூர்ணபோத (பூர்ணப்ரக்ஞ) என்னும் பெயரை, அச்யுதப்ரேக்ஷர் வைத்தார். (அப்போது பூர்ணப்ரக்ஞரின் வயது 10, சௌம்ய சம்வத்ஸரம், ஆண்டு 1248). எவ்வித வெளி-அலங்காரங்களும் இல்லாமல், தண்டத்தைப் பிடித்து ஒளியுடன் விளங்கிய பூர்ணபிரக்ஞரை மக்கள் புகழ்ந்தனர். இதனை பண்டிதர் அற்புதமாக விளக்கியுள்ளார்.

**நிரங்கராகம் முகராக வர்ஜிதம் விபூஷணம் விஷ்டப பூஷணாயிதம் |
அமும் த்ருதாஷாடமவேக்ஷ்ய மேனிரே ஸ்வபாவ ஷோபானுபமேபி ஜந்தவ: || (4-34)**

அனைத்து தேவதைகளாலும் வணங்கப்படும் பூர்ணப்ரக்ஞர், தமது குருகளை சாஷ்டாங்கமாக வணங்கினார். சரியான நியமத்தை பின்பற்றுவது பற்றி உலகத்திற்கு எடுத்துக் காட்டினார்.

கற்றுத் தருவதற்கு பதில் கற்றார்

தனது சிறந்த சிஷ்யனுக்கு அனைத்தையும் கற்றுக் கொடுப்பதாக திட்டமிட்டிருந்த அச்யுதப்ரேக்ஷர், பூர்ணப்ரக்ஞரே அனைத்தையும் சரியான வழியில் செய்துவருவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்து, அவரிடமிருந்து தான் பல விஷயங்களைக் கற்றார். ஒரு முறை அனந்தேஸ்வரனை வணங்கிக்

கொண்டிருந்த பூர்ணப்ரக்ஞரை, அந்த ஸ்ரீஹரியே, அங்கிருந்த ஒருவர் மேல் ஆவேசம் கொண்டு, அச்யுதப்ரேக்ஷரிடம் அழைத்து வந்து - 'உங்களின் புண்ணியத்தாலேயே இவரை உங்களிடத்தில் அனுப்பினேன். இவரிடமிருந்து உண்மையான தத்வஞானத்தை அறியவும்' என்று கூறினார். தன்யனானேன் என்ற குரு, அனந்தேஸ்வரனுக்கு நன்றி கூறினார். **'அசங்கபூஷா நனு சாது-சங்கிதா' (4-39).**

பூர்ணப்ரக்ஞர் தாம் கங்கா ஸ்நானத்திற்குக் கிளம்புகிறேன் என்றதும், சிஷ்யனைப் பிரிந்திருக்க வேண்டுமே என்ற விரக தாபத்தில் அச்யுதப்ரேக்ஷர் ஸ்ரீஹரியிடம் வேண்டினார். அப்போது ஸ்ரீஹரி இன்னொருவரிடத்தில் ஆவேசம் கொண்டு - இன்னும் மூன்று நாட்களில் கங்கை இங்கே இருக்கும் அனந்த சரோவரத்தில் பிரவேசிப்பாள் - என்ற செய்தியை சொன்னார். அதன்படியே பாகிரதி அங்கு பிரவேசித்தாள். இப்படி ஸ்ரீஹரி, ஸ்ரீமதாசார்யருக்கு அருளியதைப் போல், இன்றும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பாகிரதி, மத்வ சரோவரத்திற்கு வருகை தருகிறாள். மத்வ சரோவரத்தில் கங்கையின் உருவச்சிலை இருக்கும் நிருருதி (தென்மேற்கு) திசையிலிருந்து, கங்கை பாய்ந்து வருவதை பலர் பிரத்யட்சமாக கண்டிருக்கின்றனர்.

பூர்ணப்ரக்ஞரின் திக்விஜயம் (பயணம்)

ஆசிரமம் பெற்ற 40வது நாளில், பூர்ணப்ரக்ஞர், வாசுதேவ பண்டிதன் என்னும் அறிஞருடன் 3 நாட்களுக்கு வாதித்து, ஜெயித்து, ஜயபத்திரம் பெற்றார். அச்யுதப்ரேக்ஷர் தன் சிஷ்யனை மேலும் அறிவாளியாக்குவதற்காக அத்வைத கிரந்தமான 'இஷ்டசித்தி'யை பாடம் சொல்லத் துவங்கினார். பூர்ணப்ரக்ஞர் அமர்ந்தார். 32 எழுத்துக்கள் கொண்ட முதல் ஸ்லோகத்தில், 32 பிழைகள் இருப்பதாகத் தெரிவித்தார். அவற்றிற்கான பதில் பின்னர் வருகிறது என்றார் குரு. அவற்றை அப்போது விளக்குமாறு கேட்டார் சிஷ்யர். பதிலளிக்க முடியாமல் கோபம் கொண்ட குரு **'பவத் ப்ரவத்க்ருத்வ சமர்த்ததா ந மே' (4-46)** - 'உனக்கு விளக்கும் திறன் எனக்கில்லை' என்றார். ருஜுகணஸ்தரான வாயுதேவருக்கு ஸ்ரீஹரியைத் தவிர குரு வேறு யாருமில்லை. இந்த வாதத்தைக் கேட்ட மக்களுக்கு, அத்வைத சாஸ்திரம் சொல்வது சரியா தப்பா என்ற சந்தேகம் எழுந்தது. அப்போது பூர்ணப்ரக்ஞர் சரியான பாடத்தை சொல்லத் துவங்கினார்.

புதோபிதானம் ஸ்ரவணம் புதேதரோ த்ருபம் விதத்யாத் வி முமுக்ஷூராத்மன: |
யதிர்விசேஷாதிதி லோகா சோதனாத் ப்ரவக்தி மாயா சமயம்ஸ்ம பூர்ணதீ: || (4-47)

ஞானியானவர்களுக்கு பாட, பிரவசங்கள் செய்வது எவ்வளவு முக்கியமோ, அஞ்ஞானிகளிக்கு அவற்றைக் கேட்பது அவ்வளவே முக்கியம். சம்சாரத்திலிருந்து விடுதலை விரும்பும் அனைவரும் செய்யவேண்டிய கடமை இது. பாட பிரவசனங்கள் யதிகளுக்கு மிகவும் முக்கியம் என்று, சிஷ்யரின் வேண்டுகோளுக்கிணங்க, மாயாவாதத்தையே சொல்லத் துவங்கினார் குரு. ஆசார்யரின் பிரவசனங்கள் ஒப்பிடமுடியாதவையாக இருந்தன. குறைகளற்ற,

சந்தேகங்கள் அற்ற, சரியான வர்ணனை மற்றும் பதில்கள், இவற்றைக் கேள்விப்பட்டு பல அறிஞர்களும் இவரின் சொற்பொழிவுகளுக்கு வரத்துவங்கினர்.

ஸ்ரீமதாசார்யர் முக்காலும் உணர்ந்தவர்

ஒரு முறை அச்யுதப்ரேக்ஷர் சிஷ்யருக்கு பாகவத பாடத்தை சொல்லியபோது, தமது ஐந்தாறு வேறு சிஷ்யர்களின் கையெழுத்து பிரதிகளிலிருந்து வெவ்வேறு பாடங்களைப் படிக்கவும், ஸ்ரீபூர்ணப்ரக்ஞர் அவற்றிலிருந்து ஒரு பிரதியைக் காட்டி **'பிரகாரமேகம் ப்ரபுரப்யதாத் த்ருடம்' (4-49)** இதுவே வேதவியாசருக்குப் பிடித்த பாடம் என்றார். இவரது முழுமையான ஞானம் அனைவருக்கும் தெரியவந்தது.

அப்போது குரு, ஜகத்குருவான வேதவியாசரின் மூல பாடத்தை அறிந்திருந்ததால் **'நிகத்யதாம் கத்யமிஹைவ பஞ்சமே' (4-51)** 'இதே கிரந்தத்தின் ஐந்தாம் ஸ்கந்தத்தின் கத்ய பாகத்தை பொருளுடன் விளக்கவும்' என்று கேட்டார். ஆசார்யர் சொன்ன பதில் சரியாக இருந்தது. எத்தகைய மகிமை! 'என்னே உன் நினைவுத் திறன்' என்று குரு புகழ, ஆசார்யரோ, **'பூர்வ ஜென்மஸு ஹி வேத புரேதம் சர்வம்' (4-53)** 'இவற்றை நான் சென்ற பிறவியில் படித்தேன்' என்றார்.

இப்படி பல்வேறு வகைகளில் வெளிப்பட்ட பூர்ணப்ரக்ஞரின் புகழ், அஞ்ஞானம் என்னும் இருட்டினை போக்கும் சூரிய ஒளியைப் போல, சுஜனர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் நிலவொளியைப் போல, உலகத்தில் வியாபித்தது. உண்மையைச் சொல்லவேண்டுமெனில், ஆசார்யரின் புகழ் சூரிய சந்திரர்களின் ஒளியைவிட அதிகமாக பிரகாசித்தது என்று அங்கிருந்த மக்கள் மற்றும் தேவதைகள் அனைவரும் கருதினர்.

***

ஐந்தாம் சர்க்கத்தின் சுருக்கம்

பூர்ணபிரக்ஞருக்கு வேதாந்த சாம்ராஜ்யத்தில் அபிஷேகம், ஆனந்ததீர்த்தர் என்னும் பெயர், வாதங்களில் வெல்லுதல், புத்திசாகர மற்றும் வாதிசிம்மனை தோற்கடித்தல், சங்கரபாஷ்யத்தை கண்டித்தல், சூத்ர வியாக்யான, கன்யாகுமரி வரையிலான தென்னிந்திய பயணம் - முதலான விஷயங்கள் இந்த சர்க்கத்தில் வருகின்றன.

ஸ்ரீபூர்ணபிரக்ஞருக்கு வேதாந்த சாம்ராஜ்யத்தில் அபிஷேகம்

வேதாந்த சாம்ராஜ்யத்தில் ஸ்ரீமன் மத்வாசார்யரை அதிபதி ஆக்கவேண்டுமென்று விரும்பிய அச்யுதப்ரேக்ஷர், அதனை நிறைவேற்றி அவருக்கு 'ஆனந்ததீர்த்த' என்று பெயரிட்டார்.

ஆனந்த ரூபஸ்ய பரஸ்ய பாத்ரதீ: ஆனந்த சந்தாயிசு சாஸ்திர க்ருத்சயத் |
ஆனந்த தீர்த்தேதி பதம் குருதிதம் பபூவ தஸ்யாத்யனுரூப ரூபகம் || (5-2)

ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய சாஸ்திரங்களைப் படைக்கக்கூடியவர், ஆனந்தரூபியான ஸ்ரீஹரியிடம் எப்போதும் தியானத்தில் இருப்பவர் மற்றும் ஆனந்தரூபனான ஸ்ரீஹரிக்கு ப்ரியமானவர் - ஸ்ரீபூர்ணப்ரக்ஞர். ஆகையாலே, அச்யுதப்ரேக்ஷரால் கொடுக்கப்பட்ட 'ஆனந்ததீர்த்த' என்னும் பெயர் மிகப் பொருத்தமானதாகும். இது வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் 'மத்வ' என்னும் பெயருக்கு சமமான பெயரே ஆகும்.

தர்க்கவாதிகளை வாதத்தில் தோற்கடித்த அனுமான தீர்த்தர்

ஒருமுறை அச்யுதப்ரேக்ஷரின் நண்பரான சன்யாசி ஒருவர், தனது சிஷ்யர்களுடன் ரஜதபீடபுரத்திற்கு வந்தார். தர்க்க சாஸ்திரங்களில் வல்லவரான அவரது சிஷ்யர்கள் அதில் வாதம் செய்ய மத்வாசார்யரை அழைத்தபோது, ஜீவர்களில் காணப்படும் வேறுபாட்டினை வெறும் தர்க்கத்தினால் நிரூபிக்க முடியும் என்று, அதற்கு ஒரு உதாரணத்தையும் கூறினார். அதற்கு ஸ்ரீமதாசார்யர் 'பேத சத்ய' (வேறுபாடு உண்மை). ஆனால் வேத புராணங்களின் உதவியில்லாமல், தனியாக வேறுபாட்டினை நிரூபிப்பது சாத்தியம் இல்லை என்று சொல்லி, அவரது வாதங்களை கண்டித்தார்.

அதற்கு பதிலளிக்கமுடியாத வாதிகள் 'உலகம் என்பது பொய். சிப்பிக்குள் முத்து என்பதுபோல' என்று அடுத்த வாதத்தைத் துவக்க, ஸ்ரீமதாசார்யர் 'உலகம் உண்மை. பானையைப் போல காண்பதினால்' என்று பதிலளித்து அவரை முழுமையாக வாயடைக்கச் செய்தார். தர்க்கம் என்றும் சுதந்திரமான (தனியான) ஆதாரம் என்று ஏற்றுக்கொள்ள முடியாததால், வெறும் தர்க்கத்தினால் எதையும் நிரூபிக்கமுடியாது என்று சொல்லி **'ஜகாம நாம்னாப்யனு மான தீர்த்ததாம் |' (5-7)** அனுமானத்தை (கேள்வி / தர்க்கம்) முழுமையான அறிந்தவராகையால் இவர் 'அனுமான் தீர்த்தர்' என்று அழைக்கப்படுவார் என்று அங்கிருந்த அறிஞர்கள் அபிப்ராயப்பட்டனர்.

புத்திசாகர மற்றும் வாதிசிம்மரை தோற்கடித்தல்

பௌத்தத்தில் சிறந்தவரான, வேதங்களை வெறுப்பவரான 'வாதிசிம்ம' என்பவர், 'புத்திசாகர' என்பவருடன் சேர்ந்து அச்யுதப்ரேக்ஷரிடம் வாதம் செய்வதற்கு வந்தனர். (பாவபிரகாசிகையில், வாதிசிம்மன் பௌத்த பண்டிதனான புத்திசாகரனுடன் வாதிட்டு தோற்று, அவனின் சிஷ்யர் ஆனவர் என்று இருக்கிறது). இருவரும் பூர்ணப்ரக்ஞரை தோற்கடிப்பதற்கு வந்தனர். மிகுந்த கர்வம் கொண்டிருந்த அவர்களை வெல்வதற்கு ஆசைப்பட்டு, சத்சித்தாந்தத்தில் சிறந்தவரான, வாதிகளை வெல்லக்கூடியவரான (வேறொரு மடத்தில் இருந்த) பூர்ணப்ரக்ஞரை, அச்யுதப்ரேக்ஷர் ரஜதபீடபுரத்திற்கு வரச்செய்தார்.

வாதத்தில் வல்லவரான பூர்ணப்ரக்ஞர், எதிராளியின் கதையை (Mace) அம்பினால் அழிப்பதுபோல சுலபமாக தன் வாதத்தின் மூலம் வாதிசிம்மனின் வாதங்களை வீழ்த்தினார். அடுத்து வாதிசிம்மன், ஆசார்யரின் திறனைப் பார்த்து பொறாமையில், வேறொரு விஷயத்தைப் பற்றிய 18 மாற்று விஷயங்களைப் பற்றி பேசத்துவங்க, சூரியன் தனது கிரணங்களால் இருட்டினை விலக்குவதுபோல, ஸ்ரீமதாசார்யர்

மிகச்சுலபமாக, அந்த எல்லா விஷயங்களையும் வியாசரின் வாக்கியங்களினால் கண்டித்தார். பண்டிதனும், கர்வம் கொண்டவனுமான புத்திசாகரனையும் இதே போல வென்றார். (இந்த சம்பவம், ஸ்ரீமதாசார்யர் பீடாதிபதியாகி சில மாதங்களிலேயே நடந்ததாகும்).

வாதிசிம்மன் மற்றும் புத்திசாகரன், வேறு வழி இல்லாமல் வாதம் நாளை தொடரட்டும் என்றனர். அதற்கு ஸ்ரீமதாசார்யர் - உங்களுக்கு பதில் தெரிந்திருந்தால் இப்போதே சொல்லவும் எனவும், அதற்கு பதிலளிக்க முடியாமல் வாயடைத்துப் போயினர். அவர்கள் இருவரும் இரவோடு இரவாக ஊரைவிட்டு ஓடிப்போயினர். இதை அறிந்த ஊர் மக்கள், ஆசார்யரே வென்றார் என்று அறிந்தனர். ஸ்ரீமதாசார்யரின் வாக்-சாதுர்யம், பாண்டித்யம் ஆகியவற்றைக் கண்டு அனைவரும் மெய் மறந்தனர்.

ஸ்ரீமதாசார்யரினால் பிரம்மசூத்ர பாஷ்யத்தின் உபதேசம்

வியாசரினால் இயற்றப்பட்ட பிரம்மசூத்ரத்தின் பொருளுக்கும், சங்கராசாரியர் இயற்றிய பிரம்மசூத்ர பாஷ்யம் சொல்லும் விஷயத்திற்கும் சம்பந்தமே இல்லாததைக் கண்ட ஸ்ரீமதாசாரியர், அதனை தகுந்த ஆதாரங்களுடன் நிரூபித்தார். **'மான்யோன் வயோன்யோன்யமஹோ ந த்ருஷ்யதே' (5-18)** - அந்த பாஷ்யத்தின் குறைகளை சஜ்ஜனர்களுக்கு நிரூபித்துக் காட்டினார்.

ஸ்ரீவியாசரினால் இயற்றப்பட்ட பிரம்மசூத்ரத்தில், விஷ்ணு சர்வோத்தமத்வம், தோஷங்கள் இன்மை, உலகம் உண்மை, ஜீவ-ஈச பேதம் ஆகியவை விளக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சங்கராசார்யரின் பாஷ்யத்தில், பிரம்மன் நிர்குணன், அருவம், ஜீவ-ஈசரில் வேறுபாடு இன்மை, உலகம் பொய் ஆகியவற்றை உரைத்துள்ளார். இவை வேதங்களுக்கும், வேதவியாசருக்கும் சம்மதம் இல்லாதவை என்று சொல்லி, அதிலிருந்த குறைகளை எடுத்துக் காட்டினார். இந்தக் குறைகளுக்கு அங்கிருந்த பண்டிதர்களால் பதிலளிக்க முடியவில்லை.

ஆகையால், சூத்ரத்திற்கு எதிரான விஷயங்களை தமது பாஷ்யத்தில் எழுதினால் அதை எப்படி ஆதாரமாகக் கொள்ளமுடியும் என்று, அதிலிருந்த குறைகளை ஸ்ரீமதாசார்யர் எடுத்துச் சொன்னபோது, அச்யுதப்ரேக்ஷர் மற்றும் அங்கிருந்த பண்டிதர்கள் அனைவரும் வியாசரின் சூத்திரங்களுக்கு உண்மையான பொருளைத் தரக்கூடிய பாஷ்யத்தை இயற்றுமாறு ஸ்ரீமதாசார்யரை வேண்டினர். அப்போதே ஸ்ரீமதாசார்யர், வேத புராணங்களின் அடிப்படையில், வியாசருக்கு சம்மதமான, ஸ்ரீஹரியின் சர்வோத்தமத்வம், தோஷங்கள் இன்மை, உலகம் உண்மை, ஜீவ-ஈச பேதம் ஆகிய விஷயங்களை சரளமாக விளக்கினார். இதுவே பின்னர் அவர் இயற்றப்போகும் சூத்ர பாஷ்யத்திற்கு முன்னுரையாயிற்று.

ஒருமுறை மத்யகேஹ தம்பதிகளுக்கு, தமது மகனே ஆன ஆசார்யரை பார்க்கவேண்டுமென்ற ஆசை வந்து, அவரிருந்த இடத்திற்கு வந்தனர். இதுவரை கண்டிராத ஒளியுடன், தேஜஸ்ஸுடன் இருந்த ஆசார்யரைக் கண்டு மகிழ்ந்தனர். பண்டிதரே ஆன பட்டர், ஆசார்யரின் ஞானாம்ருதத்தைப் பருகினார். முன்னர் இவர்

சன்யாசி ஆவதை எதிர்த்தவர், தற்போது இவரின் நற்குணங்களைக் கேள்விப்பட்டு, வந்து பார்த்து, மகிழ்ந்தார்.

ஸ்ரீஅச்யுதப்ரேக்ஷர் மற்றும் லிகுச வம்சத்தில் வந்த இன்னொரு சன்யாசி (ஸ்ரீமன் மத்வாசார்யருக்கு முன்னரே அச்யுதப்ரேக்ஷரிடம் சன்யாசம் வாங்கியவர்), ஸ்ரீமத்வாசார்யரிடம் - அவர் பிரம்மசூத்ர மற்றும் உபநிஷத்களுக்கு உண்மையான பொருளை அறிந்தவராததால் - **சூத்ரார்த்த விச்சேத் குரு பாஷ்யமஜ்ஜஸ' (5-25)** சூத்ரத்திற்கு சரியான பொருள் தரக்கூடிய பாஷ்யத்தை எழுதவேண்டும் என்றனர். அதற்காகவே அவதாரம் எடுத்து வந்திருந்த பூர்ணப்ரக்ஞர், குருகளின் பேச்சில் இருந்த உண்மையான நோக்கத்தை மட்டும் ஏற்றுக்கொண்டார்.

'அஸ்மப்யமாசக்ஷ்வ விசக்ஷணோசிதம் பாவம் து சூத்ரோபநிஷத் விவக்ஷிதம்' (5-28) அப்போது ஸ்ரீமதாசார்யர் கொடுத்த உபதேசமானது, சஜ்ஜனர்களின் மனதின் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்து, அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. **'பிரமோத தீர்த்தானன சந்திரசந்திரிகா வியாக்யாபிதா விஷ்ணுபத ப்ரகாஷினி' (5-29)**. மத்வரின் முகம் என்னும் நிலவிலிருந்து பாஷ்யம் என்று வந்த ஒளியானது மிகவும் வெளிச்சமாக இருந்தது. அதிலிருந்து வந்த பிரம்மசூத்ர பாஷ்யத்தின் பாடம், பாராயணம் ஆகியவை நம் பாவங்களைப் போக்கி மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இத்தகைய மகனைக் கண்டு மத்யகேஹ பட்டருக்கான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஆசார்ய மத்வரின் ஒளி, புகழ், சிறப்பு ஆகியவற்றைக் கண்டு மெய்மறந்து, அவரை அமிர்தம் என்று நினைத்து தன் மனதில் இருத்திக் கொண்டார்.

மத்வாசார்யரின் தென்னிந்திய வெற்றிப் பயணம்

பிறகு மத்வாசார்யர், அச்யுதப்ரேக்ஷருடன் தெற்கு திசையில் பயணப்பட்டு விஷ்ணுமங்களத்திற்கு தலைவனான விஷ்ணுவை பக்தியுடன் வணங்கினார். அங்கு ஒரு கிருகஸ்தர் ஸ்ரீமதாசார்யரை சோதிப்பதற்காக, உணவிற்குப் பிறகு ஒரு குலை வாழைப்பழத்தை வைத்து, அதனை உண்ணச் சொன்னார். 200க்கும் அதிகமான பழங்களை, அனாயாசமாக தின்றும், வயிறு மெலிந்து இருந்ததைக் கண்ட அச்யுதப்ரேக்ஷர் வியப்புடன் இதன் பின்னணி என்னவென்று கேட்க, ஸ்ரீமதாசார்யர், **'அங்குஷ்ட மாத்ரம் ஜடரப்ரதிஷ்டிதம் ஜாஜ்வல்யமானம் மம ஜாத வேதசம் |' (5-33)** கட்டைவிரல் அளவிற்கான ஒரு நெருப்பு என் வயிற்றில் இருக்கிறது. இது உலகத்தையே சுட வல்லது என்று தம் ஸ்வரூபத்தை குருவிற்கு ரகசியமாக தெரிவித்தார். (ஆசார்யரின் முந்தைய அவதாரமான பீமாவதாரத்திலும் ஒரு வண்டி உணவினை தின்றார் என்று மகாபாரதம் சொல்கிறது).

வியாசருக்கு சம்மதமில்லாத மதங்களை ஆதாரத்துடன் நிராகரித்து, சத்-சித்தாந்தத்தை நிரூபித்து, விஷ்ணுமங்களத்திலிருந்து புறப்பட்டு முன்னே சென்றனர். கேரளத்தின் பெருமையான, மனத் தூய்மையைக் கொடுக்கும் 'பயஸ்வினி' ஆற்றினைப் பார்த்து, துஷ்டர்களை அழிப்பதற்காக பின்னர் இங்கு அவதாரம் செய்யவிருக்கும் துர்காதேவியை ஸ்ரீமதாசார்யர் சிந்தனை செய்தார்.

பின்னர் தன் பயணத்தில் முன்னெடுத்த ஸ்ரீமதாசார்யர், எதிரில் வந்த குவாதிகளை வீழ்த்தி, திருவனந்தபுரத்திற்கு வந்து அங்கு சேஷசாயியான பத்பனாபனை வணங்கி, வித்வத்சபையில் வேதாந்த சாம்ராஜ்யத்தின், பிரம்மனின் நற்குணங்கள், தோஷங்கள் இன்மை, ஜீவ-ஜடர்களிடம் ஈசனுக்கு இருக்கும் பேதம் ஆகிய விஷயங்களை விளக்கியவாறு பிரம்மசூத்ரத்தின் பொருளை உபதேசம் செய்யலானார்.

அப்போது (திருவனந்தபுரத்தில்), குதுபுஸ்துரு என்னும் குலத்தில் பிறந்தவரான துஷ்டன் மற்றும் கர்விஷ்டனான மாயாவதி ஒருவன் ஸ்ரீமதாசார்யரைக் குறித்து, பிரம்மசூத்ரத்திற்கு பாஷ்யம் எழுதாத ஒருவர், அதைப்பற்றிப் பேசுவது எப்படி சரியாகும் என்று கேட்டார். அதற்கு ஸ்ரீமதாசார்யர், 'நான் சொன்ன விஷயத்திற்கு ஏதாவது மறுப்பு இருந்தால் சொல்' என்றார். அதற்கு அவனால் பதில் அளிக்கமுடியவில்லை. அங்கிருந்த பண்டிதர்கள், அனைத்து லட்சணங்களையும் ஒருங்கே பெற்ற ஆசார்யரை மிகவும் புகழ்ந்தனர். லட்சண சாஸ்திரங்களில் சொல்லியதைப் போல 32 லட்சணங்களையும் ஒருங்கே பெற்ற இந்த உத்தமரைக் கண்ட அந்த சபையினர், தழுதழுத்த குரலில் ஸ்ரீமதாசார்யரை புகழ்ந்து பேசினர். இதனைக் கேட்டு பொறுக்காத குதுபுஸ்துரு வம்சத்தைச் சேர்ந்த அந்த பண்டிதன், ஸ்ரீமதாசார்யரின் தண்டத்தை தான் முறிப்பதாக சத்தியம் செய்து, ஆனால் அதை செய்யமுடியாமல் அங்கிருந்து வெளியேறினான்.

பிறகு ஸ்ரீமதாசார்யர், திருவனந்தபுரத்தில் இருந்த பல தீர்த்தங்களில் குளித்து, கன்யாகுமரிக்குச் சென்று, அங்கும் குளித்து பின் தனுஷ்கோடிக்குச் சென்றார். ஸ்ரீராமனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட, ராமேஸ்வரன் என்று அழைக்கப்படும் லிங்க ரூபத்திலிருந்த ருத்ராந்தர்கத ஸ்ரீமன் நாராயணனை வணங்கினார். அங்கு, வெவ்வேறு சாஸ்திரங்களில் அறிஞர்களான பண்டிதர்களை வென்று, சத் சித்தாந்தத்தை நிறுவியவாறு, தன் குருவான அச்யுதப்ரேக்ஷருடன் ராமேஸ்வரத்தில் சாதுர்மாச விரதத்தினை மேற்கொண்டார்.

பிறகு ஸ்ரீரங்கத்திற்கு வந்த ஸ்ரீமதாசார்யர், அங்கு பவித்ரமான காவேரி நதிக்கரையில் வீற்றிருக்கும், மங்களங்களை அருள்பவனான ரங்கனாதனை வணங்கினார். அங்கிருந்து பல்வேறு க்ஷேத்திரங்களுக்குச் சென்று, துர்கா, சிவன், ஸ்கந்தன் ஆகியோரின் அந்தர்யாமியான சர்வோத்தமனான ஸ்ரீஹரியை வணங்கி, பயணத்தில் ஸ்ரீமுஷ்ணத்திற்கு வந்து, அங்கு மக்களின் பயன்பாட்டிற்காக தண்ட தீர்த்தத்தை நிர்மாணித்தார். (பாஜத்தில் இருக்கும் வாசுதேவ தீர்த்தத்தைப் போலவே இன்றும் இந்த தண்ட தீர்த்தம் இருக்கிறது). பின் வடக்கு நோக்கிப் புறப்பட்டார்.

பின் ஸ்ரீமதாசாரியர் பயஸ்வினி நதிக்கரையில் இருந்த ஒரு ஆலயத்தில் பிரவேசித்தார். உலகப் புகழ்பெற்றவரான, சர்வக்ஞரான, மகத்தான ஒளி பொருந்தியவருமான ஸ்ரீமதாசார்யரைக் கண்டதும், கற்றறிந்த பல பண்டிதர்கள் அந்த ஆலயத்திற்கு விரைந்தனர். அந்த சபையில் ஸ்ரீமதாசார்யரின் முக-ஒளி, மாயாவாதிகளின் ஒளியை முற்றிலுமாக மறைத்தது. சஜ்ஜனர்களின் கண்களை

மற்றும் மனங்களை ஸ்ரீமதாசாரியர் நிறைத்தார். இங்கு நாராயண பண்டிதர், ஸ்ரீமதாசார்யரின் அழகான தோற்றத்தை வர்ணிக்கிறார்.

சுஸ்மிதேந்தும் அரவிந்த லோசனம் ஸ்வர்ணவர்ணமதி பத்ர பாஷணம் |
வீத பூஷமபி விஷ்வபூஷணம் தம் தித்ருக்ஷூரலமாப தஜ்ஜன: || (5-51)

ஸ்ரீமதாசார்யரின் பாண்டித்யம், அவரது முக-காந்தியை, உடலமைப்பு அலங்காரங்களை பண்டிதர் இவ்வாறாக வர்ணிக்கிறார்.

வித்யோரு த்யுதிதீர தாரக திரஸ்காரே பதங்காயிதோ
துர்வாதீப குதர்க கும்பதலனே சிம்ஹ பிரபர்ஹாயித: |
லோலாலோலக லோகத்ருக் குமுதினீ சம்ஹ்லாதனே ப்ஜாயித:
சம்சன்மண்டல மண்டனாயித உத ஸ்வானந்த தீர்த்தோ பபௌ || (5-52)

முக்தி மார்க்கத்தைக் காட்டும் நற் சாஸ்திரங்களை படைக்கும் ஸ்ரீமதாசார்யர், நட்சத்திரங்களைப் போல் காட்சியளிக்கும் மற்ற அறிஞர்களுக்கு எதிரில், ஞானம் என்னும் ஒளி பொருந்திய சூரியனைப் போல் காட்சியளிக்கிறார். வீரமிக்க சிங்கதைப் போல, எதிரில் வரும் யானையைப் போன்ற மாயாவதிகளின் நெற்றியில் அடித்து அவர்களை வெல்கிறார். குமுதினி மலர்களை பூக்கச் செய்யும் நிலவினைப் போன்றவர். அறிஞர்களின் சபையில், ஈடுஇணையற்ற ஒளியைப் பொருந்தியவராக காட்சி அளிக்கிறார்.

***

ஆறாவது சர்க்கத்தின் சுருக்கம்

இந்த சர்க்கத்தில் - ஐதரேய சூக்தத்தின் பொருள், விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் ‘விஸ்வ’ என்னும் சொல்லின் பொருள், தான சூக்தத்தின் பொருள், ‘அபாலா’ சொல்லின் சிறப்புப் பொருள், கீதா பாஷ்யம் இயற்றுதல், முதல் பத்ரி யாத்திரை, கீதா பாஷ்யம் சமர்ப்பித்தல், வியாசரின் பாராட்டு, ஆசார்யரின் மௌன விரதம், சிஷ்யர்களுக்கான செய்தி, வேதவியாசர் மேல் பத்ரிக்கு அழைத்தல், ஸ்ரீசத்ய தீர்த்தரின் குருபக்தி, அவருக்கு ஆசார்யரின் அருள் - ஆகிய விஷயங்கள் இந்த சர்க்கத்தில் உள்ளன.

ஐதரேய சூக்தத்தின் சிறப்புப் பொருள்

பயஸ்வினி நதிக்கரையில் ஒரு ஆலயத்தின் மண்டபத்தில் வீற்றிருந்த ஆசார்யரை நோக்கி ஒரு பண்டிதர், ஐதரேயத்தின் ஒரு சூக்தத்தை விளக்கவேண்டுமென்று கேட்டார். ஆசார்யர், மிகத் தெளிவாக, சரியான உச்சரிப்பில், அனைத்து லட்சணங்களுடன் அந்த வேத சூக்தத்தைக் கூறி, அதன் பொருளையும் கூறினார். ஆசார்யரின் சூக்த உச்சரிப்பு, தேவகுருவான பிருஹஸ்பத்யாசார்யரின் சூக்த உச்சரிப்பையும் விட சிறந்ததாக இருந்தது.

அங்கிருந்த பண்டிதர்கள் அதற்கு வேறொரு பொருளினைக் கூற, 'நீங்கள் கூறியதும் சரியே' என்றார்.

ஸ்யாத் ததேத்தமபி சம்பவிதார்த்த: த்ர்யர்ததாம் ஸ்ருதிஷு வித்த தஷார்த்தம் |
பாரதம் நனு ஷதார்த்தமபி ஸ்யாத் வைஷ்ணவம் பத சஹஸ்ர தயம் ஹி || (6-4)

வேதங்களுக்கு மூன்று அர்த்தங்கள், மகாபாரதத்திற்கு பத்து, விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் ஒவ்வொரு பெயருக்கும் நூறு அர்த்தங்கள் உள்ளன என்று சொல்லி, அதற்கு ஸ்காந்த புராணத்தின் உதாரணத்தைக் கூறினார். இதையே பாவப்ரகாசிகையில்,

த்ரயோர்த்தா: சர்வவேதேஷு தஷார்த்தா: சர்வபாரதீ |
விஷ்ணோ: சஹஸ்ரநாமாபி நிரந்தரஷதார்த்தகம் || இதி வசனாத் || (பா.ப்ர)

என்று எழுதியிருக்கிறார்.

'விஷ்வ' சொல்லின் பொருள்

அப்போது அங்கிருந்த பண்டிதர்கள், விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் ஒவ்வொரு பெயருக்குமான நூறு பொருளை ஆசார்யரால் சொல்ல முடியாது, அவரை வென்றுவிடலாம் என்று எண்ணி, அதனை தங்களுக்குச் சொல்லுமாறு கேட்டனர். ஆசார்யர் 'வர்ணயாமி' (சொல்கிறேன்) என்று, அதை அவர்கள் அப்படியே திரும்பச் சொல்லவேண்டும் என்றார்.

ப்ரத்யய ப்ரக்ருதி சங்கம பங்கீ ஷப்தசாஸ்திர விஹிதாம் ப்ரதிதர்ஷ்ய |
சுத்ததீ: ஸ்ருதி ஷிர: ஷத சித்தான் அப்யதாத சபதி விஷ்வ பதார்த்தான் || (6-7)

இலக்கணத்திற்கு ஒப்பி, வேத புராணங்களில் சொல்லியவாறு, 'விஷ்வ' என்னும் சொல்லிற்கு நூறு அர்த்தங்களை சொல்லத் துவங்கியதும் (சுமார் 50க்கும் மேற்பட்ட அர்த்தத்தை கூறியதும்), அங்கிருந்த பாரதம் முதலான கிரந்தங்களில் வல்லவர்களான பண்டிதர்கள், ஆசார்யர் கூறுவதை பின்பற்ற முடியாமல் தவித்தனர். அவரின் முக-கமலத்திலிருந்து பிரவாகமாக வந்த சொற்களைக் கேட்டு திக்பிரமை பிடித்து அமர்ந்தனர். அதனை திரும்பச் சொல்ல முடியாததை எண்ணி வருந்தினர். 'ஆசார்ய மத்வர் சர்வக்ஞர், தேவதைகளைவிட சிறந்த திறன் படைத்தவர்' - **'தேவதாஸ்வசுலபா ப்ரதிபா தே மானுஷேஷு சபலேஷு கதா கா'| (6-10)** - என்று ஆசார்யரை புகழ்ந்தனர். அவரிடம் மன்னிப்பு கேட்டவாறு விழுந்து வணங்கினர்.

தான சூக்தார்த்தம்

அதே பயஸ்வினி நதிக்கரையில், வேத சாஸ்திரங்களில் வல்லவர்களான, பல சாஸ்திரங்களில் பண்டிதர்களான, அறிஞர்கள் நிறைந்த இன்னொரு சபையில் ஸ்ரீமதாசார்யர் பிரவேசித்தார். அனைத்திலும் அறிஞரான மத்வரின் திறமையைக் கேட்ட அந்த சபையினர் - வேறொரு தேசத்திலிருந்து வந்து நம்மை இவர்

வென்றால், மொத்த கேரள தேசத்திற்கே அது அவமானம் என்று எண்ணி - ஹொரநாட்டின் அறிஞர் ஒருவரை முன்னிறுத்தி - 'தானம் செய்பவர்களை புகழ்ந்து; தானம் செய்யாதவர்களை இகழ்ந்து' - என்னும் தான சூக்தார்த்தத்தை விவரிக்குமாறு கேட்டனர்.

ஸ்ரீமதாசார்யர் தான சூக்தத்தை சரியாக விளக்கியவாறு - 'ப்ருண்யாத்' என்னும் சொல் 'ப்ருண் தானே' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து வந்தது என்றார். பண்டிதர்களோ 'ப்ருணீயாத்' என்பது 'ப்ருண' வேர் அல்ல; அது 'ப்ரேஜ ப்ரேணனே' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து வந்தது என்றனர். ஆசார்யரோ - உங்களுக்கு ப்ர, ப்ரி, ப்ரு, ப்ரே இவற்றின் வேறுபாடே தெரியவில்லை - என்றார். சரியான இலக்கணத்தை எடுத்துக்கூறினார். இன்னொருமுறை நீங்கள் அக்ஷராப்யாசம் செய்து கொள்ளவும் என்று அவர்களை கேலி பேசிய ஆசார்யர் தமது சர்வக்ஞத்வத்தை நிரூபித்தார்.

அபாலா சொல்லின் பொருள்

இன்னொரு சபையில் வேறொரு சூக்தார்த்தத்தை விளக்கும் சந்தர்ப்பத்தில் ஆசார்யர், 'அபாலா' என்னும் சொல்லிற்கு 'இள வயதுப்பெண்' என்று பொருள் கூறினார். ஆனால் அங்கிருந்த பண்டிதர்கள், அபாலா என்றால் குஷ்டரோகி என்று சொல்ல, ஆசார்யர் - இங்கு இப்போது ஒரு புருஷர் வருவார். அவரிடம் இதற்கான விளக்கத்தைக் கேளுங்கள் - என்றார். அதே போல் அப்போது அங்கு வந்தவரிடம் கேட்க - அவரும் அதையே (இள வயதுப்பெண்) சரியான பதிலாகக் கூறினார். **'சர்வவித் யதிரிதி ப்ரதிதோபூத்' (6-21)** - ஸ்ரீமதாசார்யர் சர்வக்ஞர், வேதங்களை அறிந்தவர், முக்காலும் உணர்ந்தவர்' என்று அந்த தேசத்து பண்டிதர்கள் அனைவரும் ஆசார்யரை கொண்டாடினர். ஆசார்யரின் கீர்த்தி முழு நிலவைப் போல் பிரகாசித்தது. உலகத்தின் ஒரேஒரு சர்வக்ஞாசாரியர் என்று பெயர் பெற்றார்.

பத்ரி பயணம் மற்றும் கீதா பாஷ்யம் சமர்ப்பணம்

சிவன் முதலான தேவதைகளின் ஆலயங்களில், அவர்களில் அந்தர்யாமியாக இருக்கும் ஸ்ரீஹரியை வணங்கியவாறு, ஸ்ரீமதாசார்யர், ரஜதபீடபுரத்து ஸ்வாமியான அனந்தேஸ்வரனை நெருங்கினார். திரௌபதிதேவிக்கு துர்யோதனனின் சபையில் துச்சாததனால் ஏற்பட்ட அவமானத்திற்கு அவர்கள் அனைவரையும் தான் அழிப்பேன் என்று பீமசேனர் சபதம் செய்ததைப்போல, ஆசார்ய மத்வர், மிகவும் பவித்ரமான வேத உலகத்திற்கு, தவறான பாஷ்யங்களால் ஏற்படும் அநியாய, அபசாரங்களைக் கண்டு, அவற்றை இயற்றிய துஷ்ட பரம்பரையை தாம் கண்டனம் செய்யப்போவதாக சபதம் செய்தார்.

வேதசமூகத்தைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றவராக, பிரம்மசூத்ர பாஷ்யத்தை இயற்ற நிச்சயித்து, சூத்ரகாரரின் அனுமதியைப் பெறவேண்டி, பத்ரிக்குச் செல்ல தீர்மானித்தார். நீண்ட பயணத்தை மேற்கொள்பவர்கள், உறவினர்களுக்குப் பயன்படும்படி செல்வங்களை விட்டுச் செல்வதுபோல, ஆசார்யரும், என்றும்

நாசமாகாத, உத்தமமான, இஷ்டார்த்தங்களை கொடுக்கக்கூடிய, ஸ்ரீபகவத்கீதா பாஷ்யத்தை இயற்றி அச்யுதப்ரேக்ஷருக்கும், உடனிருந்த மூத்த யதிகளுக்கும் கொடுத்தார். **'ஹரிகீதா பாஷ்யமேவ விரசய்ய ததாதாத்' | (6-32)**. துஷ்ட சித்தாந்தங்களை நிராகரிக்க, பிரம்மசூத்ரத்திற்கு சரியான, வேதவியாசருக்கு பிடித்தமான, பாஷ்யத்தை இயற்றத் தீர்மானித்தார்.

ஸ்ரீஹரியின் ஆணையை நிறைவேற்றும் பொருட்டு, தான் க்ஷேத்திரப் பயணம் மேற்கொள்வதாக, ஆசார்யர் தம் குருவிடம் (அச்யுதப்ரேக்ஷருக்கு, புருஷோத்தம தீர்த்தர் என்னும் பெயர் இருந்தது என்று கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகிறது) அனுமதியைப் பெற்றார். ஸ்ரீஹரி எப்போதும் பூர்ணப்ரக்ஞரை அருளட்டும் என்று அச்யுதப்ரேக்ஷர் வேண்டினார். பின், ஆசார்யர் தம் சிஷ்யர்களுடன் வடநாட்டுப் பயணம் மேற்கொண்டார். பயணத்தில், தவறான உரைகளைக் கண்டித்தவாறு, வேத சாஸ்திரங்களில் உண்மையான பொருளை உபதேசித்தார்.

புத்திஷுத்தி கரகோ நிகராட்யம் தீர்த்த சாதமுபயம் ச தரண்யாம் |
ஆத்ம மஜ்ஜனத ஏவ நிகாமம் பர்யஷோதயத மந்தமனீஷ: || (6-35)

ஸ்வயம் பவித்ரரான ஆசார்யர், கங்காதி நதிகளில் குளித்து அவற்றையும் பவித்ரமாக்கினார். ஹரிபாதோதகமான கங்கையை தலையில் தெளித்துக்கொண்டு, தமது சிஷ்யர்களுடன் கங்கையை கடந்து பதரிகாஸ்ரமத்தை அடைந்தார். அங்கு சர்வோத்தமனான நாராயணனை வணங்கி, **'ஹரி கீதா பாஷ்யமார்பயதுபாய நமஸ்மை' (6-38)** - என்று தாம் இயற்றிய கீதா பாஷ்யத்தை காணிக்கையாக சமர்ப்பித்தார். குரு / தேவதைகளைக் காணச் செல்லும்போது வெறும் கையில் போகக்கூடாதென்னும் விஷயத்தை இங்கு தெரிவிக்கிறார்.

நாராயணனின் அருளை வேண்டியவராக, ஆசார்ய மத்வர் தனிமையில் கீதா பாஷ்யத்தின் மங்களாசரண ஸ்லோகமான 'தேவம் நாராயணம்... | கீதார்த்தம் வக்ஷ்யாமி ஷக்தித: ||' என்று தன் சொற்பொழிவை துவக்கினார். உலகத்தின் தலைவனான நாராயணன் மத்வரிடம் 'யாராலும் விளக்கமுடியாத கீதையின் மொத்த பொருளையும் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அவை அனைத்தையும் இங்கு சொல்லவில்லை. ஆகையால், மங்களாசரண ஸ்லோகத்தில் 'ஷக்தித:' என்பதற்கு பதில் 'லேஷத:' என்ற சொல்லை பயன்படுத்துங்கள்' என்றார். ஆசார்யரும் நாராயணனின் ஆணையை சிரமேற்கொண்டு அந்த மாறுதலை செய்தார்.

தேவம் நாராயணம் நத்வா சர்வதோஷ விவர்ஜிதம் |
பரிபூர்ணம் குரூம்ஸ்சான் கீதார்த்தம் வக்ஷ்யாமி லேஷத: || -- கீதாபாஷ்யம்

மத்வரின் சொற்பொழிவு ஸ்ரீமன் நாராயணனுக்கு எவ்வளவு பிடித்திருந்தது என்றால், இரவில் சிஷ்யர்கள் தூங்கியபோது, 'பூர்ணப்ரக்ஞரே, இன்னொரு முறை கீதாபாஷ்யத்தை சொல்லுங்கள்' என்ற நாராயணனின் ஆணையின்படி, இன்னொரு முறை சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். இதனால் ஆசார்யரின்

பணிவு, சர்வக்ஞத்வம் மற்றும் நாராயணனுக்கு ஸ்ரீமதாசார்யர் மேல் இருந்த அன்பு இவை தெரியவருகின்றன.

காஷ்ட மௌன மததாதுபவாசம் சுத்த மப்யக்ருத சுத்த ஹ்ருதிச்சன் |
நித்யதுஷ்ட ஹரிதோஷ விசேஷம் சிந்தயன் ப்ரபுமனந்த மடாந்த: || (6-44)

அமைதியான சுபாவத்தைக் கொண்டவரான ஸ்ரீமதாசார்யர், ஸ்ரீமன் நாராயணனின் அருளை வேண்டி, தினமும் விடியலில் அலகனந்தா நதியில், விதிபூர்வமாக குளித்து, பதரி நாராயணனின் ஆலயத்தில் (அனந்தமடம்) நாராயணனை சிந்தித்தவாறு காஷ்டமௌன விரதம் (48 நாட்கள் மௌனம்) மற்றும் உபவாசத்தை மேற்கொண்டார். இது சிஷ்யர்களுக்கான பாடமாகவும் இருந்தது. இப்படி விரதங்களை அனுசரித்த மத்வரை, வேதவியாசர் தமது ஆசிரமத்திற்கு வருமாறு அழைத்தார்.

ஸ்ரீவேதவியாசரின் ஆசிரமத்திற்கு (மேல் பதரி) புறப்படும் முன், தமது சிஷ்யர்களுக்கு நற்செய்தி கூறினார் ஆசார்யர்.

நேத்ருஷம் ஸ்தளமலம் ஷமலக்னம் நாஸ்ய தீர்த்த சலிலஸ்ய சமம் வா |
நாஸ்மதுக்தி சத்ருஷம் ஹிதரூபம் நாஸ்தி விஷ்ணு சத்ருஷம் நனு தெய்வம் || (6-47)

உலகத்தில் அனைத்துப் பாவங்களையும் போக்கும் இந்த பதரி க்ஷேத்திரத்தைப் போல வேறு இல்லை, இங்கு பாயும் கங்கைக்கு சமமான தீர்த்தம் வேறெங்கும் இல்லை, தேவதைகளில் மகாவிஷ்ணுவிற்கு சமமான தெய்வம் வேறு யாரும் இல்லை. என் உபதேசங்களுக்கு இணையான, நற்பலன்களைக் கொடுக்கக்கூடிய உபதேசம் வேறொன்று இல்லவே இல்லை.

நாத நாத பத நோத்ர வினாதாம் மா த்யஜோரு கருணோ பகவன்ஸ்த்வம் | (6-49)

ஆசார்யரே, எங்களை விட்டுப் போகாதீர்கள் என்று சொல்ல சிஷ்யருக்கு பயம். ஆசார்யரின் அபிப்பிராயத்திற்கு எதிராக எதுவும் சொல்லக்கூடாதே. இதுவே அனைத்து சாதகர்களின் எண்ணமாக இருக்கவேண்டும். ஆசார்யர் கூறிய நான்கு செய்திகள், வேதத்திற்கு ஒப்பாக, அனைவரும், எல்லா காலங்களுக்கும் பொருத்தமாக இருந்தது.

ஸ்ரீ சத்யதீர்த்தரின் குருபக்தி

ஐதரேய உபநிஷத்தினை மூன்று முறை ஆசார்யரிடம் கேட்டு மகிழ்ந்த ஸ்ரீசத்ய தீர்த்தர், ஆசார்யரின் பிரிவைத் தாங்கமுடியாமல் அவரை பின்தொடர்ந்தார். ஆனால் ஆசார்யரின் வேகத்திற்கு அவரால் ஈடு கொடுக்கமுடியவில்லை. அது ஹனுமந்தன் கடலைத் தாண்டியபோது காட்டிய வாயுவேகத்திற்கு இணையாக இருந்தது. பின்தங்கிய சத்யதீர்த்தரைப் பார்த்து ஆசார்யர் 'நீங்கள் திரும்பிப் போய்விடுங்கள்' என்று சைகை செய்தார். அவரின் அருளினால் முழு நாள் நடந்து

வந்த சத்யதீர்த்தர், பின் ஒரே முகூர்த்தத்தில் முன்பு புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தார். ஆசார்யரின் பயண வேகம், தம்மால் ஈடுகொடுக்க முடியாதது, ஆசார்யர் தம்மை உடனடியாக திருப்பி அனுப்பியது என அனைத்தையும் சத்யதீர்த்தர் தமது உடனிருந்தவர்களிடம் பகிர்ந்துகொண்டார்.

வானரேந்திர இவவாயு ஜவோசௌ பீமசேன இவ தானவபீம: |
உல்லலாச கிரி புங்கவ ஸ்ருங்கே ஸ வ்ரஜன் வ்ரஜின நாஷன நாமா || (6-54)

ஹிமவத் பர்வதத்தில் ஸ்ரீமதாசார்யர் பயணித்த வேகமானது, அவரது முந்தைய அவதாரங்களான ஹனும மற்றும் பீமனின் நினைவைத் தந்தது என சத்யதீர்த்தர் வர்ணித்தார். வியாசாஸ்ரமத்திற்கு பயணம் மேற்கொண்ட ஸ்ரீமதாசார்யர், அற்புதமான இமயமலையைப் பார்த்தவாறு, ஸ்ரீமன் நாராயணனை சிந்தித்தார். தாம் எப்போதும் அனைத்து இடங்களிலும் சர்வோத்தமனை காண்பவர் என்னும் தத்வ சிந்தனையை தெரிவித்தார்.

ஸ்வானந்தா கிருதி மஸ்மரன் முரரிபும் ஸ்வானந்த தீர்த்தஸ்ததா || (6-57)

மிகவும் அழகான, ஆனந்தாதி நற்குணங்களால் நிறைந்த ஸ்ரீமன் நாராயணனை மனதார நினைத்துக் கொண்டார்.

***

ஏழாவது சர்க்கத்தின் சுருக்கம்

தசபிரமதிகளான பூர்ணப்ரக்ஞர் தென்னிந்தியாவின் பயணத்தை வெற்றிகரமாக முடித்தார். வேதவியாசரிடமிருந்து பத்ரிக்கு வருமாறு அழைப்பு வந்தது. ஸ்ரீமதாசார்யர் பதரிக்குப் புறப்பட்டார். பாதராயணரைப் பார்ப்பதற்கு சிஷ்யர்களை விட்டு முன்னே சென்றார். வியாச ஆசிரமத்தை அடைந்தார். வேதவியாசரை கண்டார். இங்கு ஆசார்யரின் தேக வர்ணனை மற்றும் வேதவியாசரின் தோற்ற வர்ணனை வருகிறது. இது படிப்பதற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடியது, என்றும் புதியது, ஞானத்தை தரக்கூடியது. இவ்விருவரின் சந்திப்பைக் கண்ட ஞானிகளே தன்யர். இதை இந்த சர்க்கத்தில் அருமையாக வர்ணித்திருக்கும் நாராயண பண்டிதாசார்யரின் திறன் அற்புதமானது.

ஆத ஹைமவதே தடாந்தரே பதரீஷண்ட விசேஷ மண்டிதம் |
பரமாஸ்ரம மாஸ்ரயம் ஸ்ரிய: சகலஞ: ச ததர்ஷ விஸ்ருதம் || (7-1)

இமாலயத்தின் அனந்தமடத்திலிருந்து இன்னும் முன்னேறினார் பூர்ணப்ரக்ஞர். பதரி மரங்களினால் சூழப்பட்ட வேதவியாசரின் ஆசிரமத்தைக் கண்டார். இதுவே உத்தர-பத்ரி. இந்த ஆசிரமம் பற்பல மரங்களினால் சூழப்பட்டு, பசு-பறவைகளினால் கூடி, வேதங்களைப் படித்த அறிஞர்களின், ரிஷிகளின் இருப்பிடமாக இருந்தது. எந்தவொரு குறைகளும் இல்லாத இந்த தபோபூமி, எப்போதும் ஸ்ரீஹரியிடம் வேண்டியவாறு இருக்கும் பரமஹம்ஸர்களால், மகரிஷிகளால் தன் அழகினைப்

பெற்றது. சுக, ஹம்ஸ முதலான பறவைகள் இங்கு வசித்திருந்தன. பொறாமை, கர்வம், காமம், கோபம் முதலான தோஷங்கள் இல்லாத ஞானிகள் இருந்து, 'வைகுண்டமிவாச்யுதாலயம்' (7-4), வைகுண்டத்திற்கு ஈடான ஸ்ரீஹரி வசிக்கும் பரந்தாம என்றே அழைக்கப்பட்டது.

ஸ்ரீமத்வரின் தோற்ற வர்ணனை

அதிஉத்தமமான ஸ்ரீவேதவியாசரின் ஆசிரமத்தை பூர்ணபிரக்ஞர் பிரவேசித்தார். இவரைக் கண்ட முனிவர்கள் வியப்படைந்தனர். அபூர்வ புருஷரான, 32 லட்சணங்களைக் கொண்ட, தேஜஸ்ஸினைப் பெற்ற இவரைக் கண்ட ஞானிகள் மனதில் மகிழ்ச்சி உண்டாயிற்று.

கனகாதுல தால சன்னிப: கமலாக்ஷோ விமலேந்து சன்முக: |
கஜராஜ கதிர்மஹாபுஜ: ப்ரதியான் கோயமபூர்வ புருஷ: || (7-6)

கஜரானைப் போல கம்பீர நடை. தங்கத்தினாலான பனை மரம் போன்ற உயரம், தாமரைக் கண்கள், முழு நிலவின் ஒளியைப் போன்ற முகம், ஆஜானுபாஹு உருவம், பயம் சோர்வு இல்லாதவர், அனைத்து லட்சணங்களையும் கொண்டவர், தண்ட கமண்டலத்தைப் பிடித்தவர், காஷாய வஸ்திரம் தரித்தவர் என வரும் இவர் யாராக இருக்கக்கூடும்? **'சதுரஸ்சதுரானன: ஸ்வயம் பவனோ வா வ்ரதிரூப ஆவ்ரஜன் |' (7-9)** சன்யாசி ரூபத்தில் வந்திருக்கும் பிரம்மனோ அல்லது வாயுதேவனோ ?. இப்படி ரிஷி முனிகள் யோசித்திருக்க, ஸ்ரீமதாசார்யர் தூரத்திலிருக்கும் கல்பவிருக்ஷம் போலிருக்கும் பதரி மரம் ஒன்றைக் கண்டார்.

மிகச்சிறந்த அந்த மரம், உயரமாக, பரந்து விரிந்த பற்பல கிளைகளில், ஆபரணங்களைப் போன்ற பூக்களைக் கொண்டு வளர்ந்திருந்தது. சேஷதேவரே ஸ்ரீஹரியின் அருகில் அவரது சேவைக்காக காத்திருந்ததைப் போல இருந்தது. பற்பல வண்ணங்களினாலான இலைகளுடன், ஸ்ரீஹரியின் வாகனமான கருடனைப் போல இருந்தது அந்த மரம். ஹரிபக்தர்களுக்கு அமிர்தத்தைக் கொடுக்கும், வேதஸ்வரூபத்தைப் போன்ற உயரமான அந்த மரத்தின் அருகில் வந்தார். எப்போதும் ஸ்ரீஹரியையே சிந்திக்கும் மத்வர், பற்பல கிளைகளைக் கொண்டு வேதமூர்த்தியைப் போல நின்றிருக்கும் மரத்தின் அடியில் பெரிய மேடையையும், அதில் வீற்றிருந்த பல முனிவர்களையும் கண்டார். ஜடாமுடியுடன், ஞான பக்தி வைராக்கியத்துடன் இருந்த அவர்கள் எப்போதும் வாயு பக்தர்களாக இருந்தனர்.

ஜகத்குரு வேதவியாசரின் வர்ணனை

முனிமண்டல மத்யவர்தினம் த்ரிஜகன்மண்டல மண்டனாயிதம் |
இஹ சத்யவதி சுதம் ஹரி பரிபூர்ண ப்ரமதி: சமைக்ஷத: || (7-16)

முனிவர்களுக்கு நடுவில், மூன்று உலகத்திற்கும் அலங்காரரான சத்யவதியின் மகனான, சிறந்த இருக்கையில் அமர்ந்திருந்த வேதவியாசரை, பூர்ணப்ரமதியான ஆசார்யர் கண்டார். எப்போதும் இதய-கமலத்தில் இறைவனைக் காணும் ஆசார்யர்,

வேதவியாசரை ஒரு புத்தம்புதிய மனிதரைக் காண்பதுபோல கண்டு வியப்படைந்தார்.

அகணய்ய குணார்ணவோऽமல: ஸ ஹி நாராயண ஏஷ கேவலம் | (7-18). இவர் தோஷங்கள் அற்ற, அனைத்து நற்குணங்களையும் கொண்ட ஸ்ரீமன் நாராயணனே ஆவார். பிரம்மாதிகளின் வேண்டுதல் மற்றும் சஜ்ஜனர்களின் மேலுள்ள கருணையினால், ஸ்ரீஹரி, வேதவியாசராக அவதரித்து வேதங்களை சரியாகப் பிரித்து, மகாபாரதம், 18 புராணங்கள், பிரம்மசூத்ரங்களை இயற்றி, பாண்டவர்களுக்கு அருளி, ஸ்ரீஹரியின் பரிபூர்ண பார்வை இருந்தால் கலியுகமும் க்ருதயுகம் ஆகுமென்று, யாருக்கும் புலப்படாமல் பதரிகாஸ்ரமத்தில் இருக்கிறார். வேதவியாசரின் உடல் ஞானானந்த ஸ்வரூபமாக இருந்தது. கிருஷ்ணாஞ்சனத்தின் மேல் யோகபீடத்தில் அமர்ந்து, கண்ணிற்கு மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவர் இவர்தானே? ரமா, பிரம்மா, வாயு, கருட, சேஷ, ருத்ர, இந்திராதி தேவதைகள் வியாசரின் பாததூளியை தங்கள் தலையில் தரித்திருந்தனர்.

அகணய்ய குணை: சுபூரிதம் பரிபூர்ணகணிதாத்ம சத்குணை: | (7-24)

பரிபூர்ண-அனந்த-மங்களகர நற்குணங்களால் நிரம்பிய ஞானானந்த ஸ்வரூபனை, வேதவியாசரின் பரம மங்களகரமான அழகான உடலைக் கண்டு தன்யனானேன் - என்று நினைத்தார் மத்வர்.

வேதவியாசரின் பாதங்களை வர்ணிக்கும்போது பண்டிதர், **'உபமானமஹோ ந லப்யதே'** (7-28) என்கிறார். இப்படி ஸ்ரீஹரியின் தேகத்தை, ஞானத்தின் ஒளியை பலவிதமாக கண்டு வர்ணித்த ஆனந்ததீர்த்தர் பரமானந்தத்தை அடைந்தார். வேதவியாசர் யோகபட்டி-ஆசனத்தில் அமர்ந்திருந்த பாங்கினை அழகாக வர்ணிக்கிறார் நாராயண பண்டிதர்.

அசலாசனயோக பட்டிகா வரகக்ஷ்யா சக்ருதாப்தமிஷ்ட தம் |
பரிதோபி ஹரி ஸ்புரந்த்யஹோ அனிஷம் தன்யதமேதி மே மதி || (7-30)

சூரியனின் ஒளியை மிஞ்சும் வேதவியாசரின் இடுப்பை வணங்கி தன்யரானார். உலகத்தையே அடக்கியிருக்கும் வயிறு மெலிதாக மூன்று மடிப்புகளைக் கொண்டிருந்தது. வேதங்களின் ஸ்வரூபமாகத் தோன்றிய பிரம்மசூத்ரம் மார்பினை அலங்கரித்தது. பிரம்மர் வழங்கிய கௌஸ்துப மாலை, சங்கு சக்ரங்களைக் கொண்ட கரங்கள் சிவப்பாக இருந்தன. தனது பக்தர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கவேண்டி வலதுகையில் ஞானமுத்திரையை காட்டி, இடதுகையில் அபயமுத்திரையைக் காட்டி, மங்களத்தை உண்டுபண்ணினார்.

வேதங்களை பிரித்த வேதவியாசரின் முகம், மூன்று ரேகைகளினாலான கழுத்து, பற்பல நிலவினைப் போல ஒளிமிகுந்திருந்தது. சிரிப்புடனான அழகான பல்வரிசை, அகலமான கண்களைக் கொண்ட புண்டரீகாயதாக்ஷன், பக்தர்களுக்கு அவர்கள் கேட்ட வரங்களைக் கொடுப்பவராக இருந்தார். துளசியை அணிந்த காதுகள்,

படைப்புகளை செய்யவல்ல கண் இமைகள், திலகம் பொருந்திய நெற்றி மிகவும் அழகாக இருந்தது. ஜகத்குருவான, மூன்று உலகங்களுக்கும் நியாமகரான வேதவியாசர், நீலமேகஸ்யாமராக, ஜடையுடன், பரமமங்கள ரூபத்துடன் இருந்ததை ஆசார்ய மத்வர் கண்டார்.

இத்தகைய பற்பல நற்குணங்களைக் கொண்ட ஸ்ரீஹரியின் ஒரே ஒரு குணத்தையும், மகாலட்சுமி முழுமையாக அறியமாட்டார். **'கணயேத் கணயந்த்யனாரதம் பரமான் கோஸ்ய பரோகுணான் வதேத்' (7-46)** என்ன ஆச்சரியம்? சர்வக்ஞ சிகாமணியான உலகமே வணங்கும் வேதவியாசரின் புத்தம்புதிய சரீரத்தைக் கண்டு வியப்படைந்ததில் என்ன வியப்பு?

வியாச-மத்வரின் சந்திப்பு

இப்படியாக சிந்தித்தவாறு, ஆசார்யர், வேதவேத்யரான, தியானத்தால் அடைபவரான வேதவியாசரை நெருங்கினார். குருபக்தியுடன், கலங்கிய கண்களுடன், பக்தி பரவசத்துடன், கைகளை கூப்பியவாறு ஸ்தோத்திரம் செய்தார். **'வினயாபரணேன பூஷித: ... ப்ரணநாம பாக்யவான் ' (7-50)** - புண்யபுருஷர், பரமபாவன சரிதரான மத்வர், சிறந்தவரான வியாசரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.

நற்குணங்களைப் பெற்றவரான மத்வரை **'கரயோர்யுகளேன வல்குனா தமுதஸ்தாபயதாஷு பாதினா' (7-51)** வேதவியாசர் உடனடியாக, மென்மையான தமது கைகளினால் தொட்டு எழுப்பினார். அதே கைகளினால் அவரை இறுகத் தழுவினார். வேதங்களின் தலைவரான வியாசரின், தசபிரமதிகளான மத்வரின் இந்த சந்திப்பு அற்புதக் காட்சியாக இருந்தது. நீல வர்ணரான வியாசர், மஞ்சள் நிறத்தின் மத்வரின் தழுவல் - இது வர்ணிப்புக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. பிராமண ஸ்ரேஷ்டர்களான இந்த வியாச மத்வரின் சந்திப்பு, கிருஷ்ணபீமர் அல்லது ராமஹனுமந்தனின் ஆலிங்கனத்தைப் போலவே இருந்தது. வேதவியாசரிடமிருந்து அவரின் மகனான சுகாசார்யரும் அடையாத அன்பினை, ஆசார்ய மத்வர் பெற்றது அவரது பணிவையே காட்டுகிறது.

பின், வியாசருக்கு அடுத்து தகுந்த ஆசனத்தில் அமர்ந்த ஆனந்ததீர்த்தர், முனிவர்களைப் பார்த்து அவர்களை மகிழ்வித்தார். சர்வோத்தமரான வியாசர் தமது சிஷ்யர்களுக்கு, இவர் ஜீவோத்தமர் என்று அறிமுகம் செய்தார். தபஸ்வியான, முனிவர்களில் சிறந்தவரான ஆசார்யர் கௌரவிக்கப்பட்டார். ஞானகாரியத்திற்காக அவதரித்து சஜ்ஜனர்களுக்கு ஞானோபதேசம் செய்து காப்பாற்ற வந்த இந்த இருவரும் விஷ்ணுவாயுகள். பூமியில் மக்களுக்கு தத்வஞானத்தை போதிப்பதற்கு அவர்களை கடைத்தேற்ற அவதாரம் செய்த ஹரிவாயுகள், ஆசிரமத்தில் பரமமங்கள ஸ்வரூபராக காட்சியளித்தனர். இந்த இருவரின் சந்திப்புக் காட்சி, மோட்சத்தையே தரவல்லதாக இருந்தது. ஞானானந்தமயரான, சிறந்தவரான, சர்வோத்தம - ஜீவோத்தமரு பதரிகாஸ்ரமத்தில் முனிவர்களுக்கு நடுவில் வீற்றிருந்தனர்.

சஞ்ஞானாயானந்த விக்ஞான மூர்த்தி ப்ராப்தௌ ப்ருத்வீமாஸ்ரமே தத்ர தாவத் |
ஜாஜ்வல்யதே விஷ்ணு வாயுஸ்ம தேவௌ வேதவியாசானந்த தீர்த்தாபிதானௌ || (7-59)

***

எட்டாம் சர்க்கத்தின் சுருக்கம்

உத்தர-பதரியில் வியாஸமத்வரின் சந்திப்பு. சர்வோத்தமரிடத்தில் ஜீவோத்தமரின் சிஷ்யத்வம். சிறிது காலத்திலேயே பற்பல வேதங்களின் பொருளைக் கற்றார். இன்னொரு ரூபமான நாராயணரைக் காண்பதற்கு, நாராயண ஆசிரமத்திற்கு வியாசரே மத்வரை அழைத்துச் சென்றார். தவம் செய்து கொண்டிருந்த நாராயணரைக் கண்டார். எண்ணிக்கையற்ற ரூபங்களைக் கொண்ட ஸ்ரீஹரியின் திவ்யரூபங்களை சிந்தித்தார். மத்ஸ்யாதி பல ரூபங்களின் வர்ணனையை மிகச் சிறப்பாக கொடுத்திருக்கிறார் நாராயண பண்டிதர். அனந்தரூபியான நாராயணன், மத்வரை பிரம்மசூத்ர பாஷ்யத்தை இயற்றுமாறு கூறினார். வேதவியாஸ - நாராயண - மத்வர் ஆகியோர் மூன்று-அக்னியைப் போல அமந்திருந்ததை இந்த சர்க்கத்தில் பார்க்கலாம்.

சர்வோத்தமரிடத்தில் ஜீவோத்தமரின் சிஷ்யத்வம்

பதரிகாஸ்ரமத்திலிருந்த முனிவர்களுக்கு பூர்ணப்ரக்ஞரின் தேஜஸ்ஸினைக் கண்டு ஆச்சரியமானது. ஆசார்யர் தத்வஞானத்தைப் பற்றி மேலும் அறிவதற்கு வேதவியாசரை அணுகினார். வேறு தேவதைகள் யாருக்கும் தெரியாத விஷயங்களை கற்பித்த வேதவியாசரின் குருத்வம் மற்றும் சத்பாத்திரரான ஸ்ரீமதாசார்யரின் சிஷ்யத்வத்தைக் கண்ட தேவதைகள் அவர்களை வணங்கினர். **’இதிஹாச சுந்தர புராண சூத்ர சத்ப்ரிய பஞ்சராத்ர நிஜபாவ சம்யுதம் | (8-4)’** இத்தகைய சிறப்பு விஷயங்களை மகாஞானியான பூர்ணபிரக்ஞருக்கு உபதேசம் செய்தார். ருஜூபுங்கவரான ஆசார்யரின் ஞானமானது மேலும் வளர்ந்தது.

நாராயண மத்வரின் சந்திப்பு

தன் இன்னொரு ரூபமான நாராயணனின் ரூபத்தை வணங்குவதற்கு, சிஷ்யரை அழைத்துப் போனார். நாராயணாஸ்ரமத்தில் மகா தேஜஸ்ஸினைக் கொண்ட நாராயணன் நார்மடியை உடுத்தி, ஜடாதாரியாக இருந்தார். ஸ்வ-ரமணனானாலும் தவம் மேற்கொண்டிருந்தவரைக் கண்டார். **’தமவேக்ஷ்ய தர்ம ஜமதர்ம துர்லபம் மனசேதி பூரிதர மானசோஸ்மரத் | (8-9)’** அபாரமான தேஜஸ் கொண்ட, யமதர்மனின் மகனான அவதரித்து வந்த நாராயணன், புண்ணியம் செய்யாதவர்களால் அடைய முடியாதவராக இருந்தார். இவரைக் கண்ட ஆசார்யர் இப்படி நினைத்தார். 14 உலகங்களின் அழிவு, காத்தல், படைத்தலுக்குக் காரணமானவர் இவரே. மூன்றுவித ஜீவர்களின் தகுதிக்கேற்ப கதியைக் கொடுப்பவர் இவரே. படைத்தல் முதலான அஷ்ட-கர்த்ருத்வத்திற்கு காரணமான

நாராயணன் இந்த உலகத்திற்கே தலைவன். புராணபுருஷன், அனந்த நற்குணங்களைப் படைத்தவன், தோஷங்கள் அற்றவன், ஸ்வதந்திரன். தன் உண்மையான பக்தர்களைக் காப்பாற்றவேண்டி அனைத்து காலங்களிலும் பற்பல ரூபங்களை எடுத்து அவதரிக்கிறார்.

தசாவதார வர்ணனை

ஸ்ரீஹரி மத்ஸ்ய ரூபத்தை எடுத்து, ஹயக்ரீவ அவதாரத்தினால் மது என்னும் தைத்யனைக் கொன்று பிரம்மதேவருக்கு வேதங்களைக் கொடுத்தார். தேவ-அசுரர்கள் அமிர்தத்திற்காக மந்தரமலையினால் பாற்கடலைக் கடைந்தபோது, ஸ்ரீஹரி கூர்மரூபத்தினால் மலையைத் தாங்கிப் பிடித்தார். பின், வராகரூபி ஹரி, உலகத்தைக் காத்து அசுரனைக் கொன்றார். பக்தபிரகலாதனைக் காத்து, பிரம்மதேவரின் வாக்கினை உண்மையாக்க, நரசிம்மனாகி வந்து ஹிரண்யகசிபுவைக் கொன்றார். தாபஸ ரூபத்தினால் கஜேந்திரனைக் காப்பாற்ற தன் சக்ராயுதத்தால் நக்ரனைக் கொன்றார். இந்திரனுக்காக அழகான வாமனரூபியாக வந்து, பலியை ஏமாற்றி காத்தார். துஷ்ட க்ஷத்திரியர்களைக் கொல்வதற்கு பரசுராமராக அவதரித்து உலகத்திற்கு நிம்மதி அளித்தார். தேவதைகள் மற்றும் சஜ்ஜனர்களின் மித்யாஞானத்தைப் போக்கி, உண்மையான ஞானத்தை அளித்தார். வேதவியாசராக அவதரித்தார். பல அவதாரங்களை இங்கு பண்டிதர் விவரித்திருக்கும் பாணி மிகவும் அற்புதமாக உள்ளது.

ராமகிருஷ்ண அவதாரங்களின் சாரம்

அசுரர்களைக் கொல்வதற்கும் சஜ்ஜனர்களைக் காப்பதற்கும் நாராயணன் பூமியில் அவதரிக்கிறான். தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும்போது அவதாரம் எடுக்கும் ஸ்ரீஹரியின் அனைத்து ரூபங்களும் ஒன்றே ஆனாலும், பலம் மற்றும் ஞான காரியங்களில் ராமகிருஷ்ண அவதாரங்களின் சிறப்பினை மட்டும் விளக்கமாக விவரிக்கிறார் பண்டிதர்.

த்ரேதாயுகத்தில் சூர்யவம்சத்தில் ஸ்ரீராமசந்திரனாக அவதரித்து தசரதனை மகிழ்வித்தார். துவாபரத்தில் சந்திரவம்சத்தில் ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்து வசுதேவனை மகிழ்வித்தார். வாயுதேவர் ராமனின் நண்பரானால், அவரே கிருஷ்ணனின் சிறந்த பக்தராக பீமனாக அவதரித்தார். சேஷதேவர் முன்னர் லட்சுமணனாக அவதரித்தால், இங்கு பலராமனாக அவதரித்தார். யக்ஞத்தைக் காப்பதற்கு விஸ்வாமித்ரருடன் சென்ற ஸ்ரீராமன் தாடகையைக் கொன்றான். கோகுலத்திற்கு வந்த கிருஷ்ணன் பூதனியைக் கொன்றான். துஷ்டனான சுபாஹுவைக் கொன்று தேவ மனிதர்களுக்கு ஆனந்தம் அளித்தவன் ஸ்ரீராமனானால், கேசி முதலான தைத்யர்களை ஸ்ரீகிருஷ்ணன் அனாயாசமாக கொன்றான்.

விஸ்வாமித்திரருடன் சென்ற ராமன், யக்ஞயாகாதிகளில் பங்கேற்று பின் சுயம்வரத்திற்கு சென்றான். விருந்தாவனத்தில் சஞ்சரித்து ஸ்ரீகிருஷ்ணன், கோபிகா பெண்களுடன் விளையாடினான். ஸ்ரீராமன் லட்சுமணனுடன் மிதிலா நகரத்துக்குச்

சென்றால், ஸ்ரீகிருஷ்ணன் பலராமனுடன் அழகான மதுராவிற்குச் சென்றான். ஸ்ரீராமன் மிதிலா நகரத்து மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தால், கிருஷ்ணன் மதுரா நகரத்து மக்களுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தான். ஸ்ரீராமன் சீதா சுயம்வரத்தில் சிவதனுசினை முறித்தால், ஸ்ரீகிருஷ்ணன் கம்சனிடம் இருந்த சிவ-வில்லை முறித்து கம்சனையும் கொன்றான்.

லட்சுமிரூபியான சீதாதேவியை ஸ்ரீராமன் மணம் புரிந்து, பரசுராமனை வென்றதுபோல் செய்து அயோத்திக்கு வந்தார். ஸ்ரீகிருஷ்ணன் லட்சுமிரூபியான ருக்மிணியை மணம் புரிந்து, ஜராசந்தன் ருக்மியைக் கொன்று சமுத்திரத்திலிருந்த துவாரகையை அடைந்தான். சஜ்ஜனர்களை காப்பாற்றும் பொருட்டு, ஸ்ரீராமன் சீதா லட்சுமணனுடன் காட்டிற்குச் சென்றால், முனிவர்களைக் காக்கவேண்டி ஸ்ரீகிருஷ்ணன், கருடன் மேல் ஏறி சத்யபாமையுடன் நரகாசுரனைக் கொல்ல புறப்பட்டான். வனத்தில் ஸ்ரீராமன் கரதூஷணர்களைக் கொன்றான். ஸ்ரீகிருஷ்ணன் முரன், நரகாசுரர்களைக் கொன்றான். காட்டில் சீதையுடன் இருந்த ஸ்ரீராமன், துவாரகையில் ருக்மிணி சத்யபாமாயுடன் வசித்தான் கிருஷ்ணன்.

ராவணன் சீதையைக் கடத்தினான் என்று அறிந்த ராமன் வாளாவிருந்தான். சூதாட்டத்தில் பாண்டவர்களின் அரசு ஆகியவை போனாலும் ஸ்ரீகிருஷ்ணன் வாளாவிருந்தான். ஸ்ரீராமன் அனுமனைக் கண்டு, சுக்ரீவனிடம் நட்பு கொண்டு, வாலியைக் கொன்று, சுக்ரீவனுக்கு மகுடம் சூட்டினான். பீமனுடன் பாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டனர். போர்க்களத்தில் அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்து, போரின் முடிவில் பாண்டவர்களுக்கு மகுடம் சூட்டினான்.

சீதையின் செய்தியைக் கேட்டதும் ராமன் கடலுக்கு நடுவில் இருந்த இலங்கைக்குப் புறப்பட்டான். பாண்டவர்களின் சுப-செய்தியைக் கேட்டதும் கடலுக்கு நடுவில் இருந்த துவாரகைக்குப் புறப்பட்டான் கிருஷ்ணன். ஸ்ரீராமன் தன் பாணங்களால் ராவண கும்பகர்ணாதிகளைக் கொன்றான். ஸ்ரீகிருஷ்ணன் பீம அர்ஜுனர்களின் மூலம் கௌரவர்களைக் கொன்றான். சீதை பரிசுத்தமானவள் என்று நிரூபித்து, சீதா லட்சுமணனுடன் அயோத்திக்கு வந்து அரசாட்சி புரிந்து பக்தர்களுடன் வைகுண்டத்திற்கு விரைந்து, மூலரூபத்துடன் ஐக்கியமானான் ஸ்ரீராமன். கௌரவர்களை அழித்தபிறகு, பாண்டவர்கள் ஸ்வர்க்கத்திற்குப் போகும்முன், அக்னிபிரவேசம் செய்த ருக்மிணி சத்யபாமையருடன், பலராமனுடன், வைகுண்டத்திற்குச் சென்று தன் மூலரூபத்துடன் ஐக்கியமானான் ஸ்ரீகிருஷ்ணன்.

ஐதராதேவியிடம் அவதரித்த நாராயணன், வைஷ்ணவ தந்திரசாரத்தை இயற்றினான். விஷ்ணுயஷஸ் என்னும் பிராமணனின் நிமித்தத்தினால் கல்கி ரூபத்தை எடுத்து தனது வாளால் துஷ்டர்களைக் கொன்றார். ருசிபிரஜாபதி மற்றும் ஆகுதியிடம் யக்ஞ நாமகனாக அவதரித்து தேவேந்திரன் ஆனான் யக்ஞன். கர்தம - தேவஹூதியிடம் கபில நாமகனாக அவதரித்து சாங்க்ய சாஸ்திரத்தை இயற்றினான். தன்வந்த்ரி மற்றும் மோகினி ரூபத்தினால், பாற்கடலை கடையும்போது தேவர்களுக்கு அமிர்தத்தை வழங்கினான். அத்ரி-அனுசுயையரிடம் தத்தாத்ரேய, சனத்குமாரனாகவும் அவதரித்தான். யமதர்மனின் மகனாக ஹரி,

கிருஷ்ண ரூபங்களை எடுத்தான். இத்தகைய பற்பல ரூபங்களை எடுத்து துஷ்டர்களைக் கொன்று, சாத்விகர்களான தன் பக்தர்களைக் காப்பாற்றினான்.

பரமாத்மனே சததமேக ரூபிணே தசரூபிணே ஷதசஹஸ்ர ரூபிணே |
அவிகாரிணே ஸ்புடமனந்த ரூபிணே சுகசித் சமஸ்ததனவே நமோ நம: || (8-41)

வேதவியாசனாக, ஆத்ம என்னும் பெயரைக் கொண்டு, ஒன்று பத்து ஆயிர ரூபங்களைக் கொண்டவன். எண்ணிக்கையற்ற ரூபங்களைக் கொண்டவன். அழகானவன். சச்சிதானந்த மயனானவன். தோஷங்கள் அற்றவன். அற்புத மகிமைகளைக் கொண்ட பரப்பிரம்மனான உனக்கு பற்பல நமஸ்காரங்கள். இப்படி வணங்கியவாறு, ஸ்வகதபேதவிவர்ஜிதரான வியாச நாராயணரை மறுபடி மறுபடி பூர்ணப்ரக்ஞர் நமஸ்கரித்தார். ஸ்ரீமன் நாராயணன் பேரன்பு கொண்டவனாகையால் மத்வரை கௌரவித்தார். ஒருவரேயான வியாச நாராயணரால் விசேஷமாக போற்றப்பட்ட மத்வர் மிகுந்த மரியாதையுடன் அவர்களைக் கண்டார். வியாச நாராயணர் அமர்ந்தபிறகு, அவர்களின் ஆணையின் பேரில் மத்வரும் அருகில் அமர்ந்தார். இந்த சமயத்தில் நாராயண பண்டிதர், ஸ்ரீஹரியின் அவதாரங்களை மிக அழகாக வர்ணித்திருக்கிறார்.

ஸ்ரீஹரியின் ஆணை - சூத்ரபாஷ்யத்தை இயற்றுதல்

மிகுந்த பணிவு கொண்ட, ஏகாந்த பக்தரான ஆசார்யரிடம் நாராயணன் - **’பவிதான்ய துஷ்கரதரம் விதாய தத் தருணம் தவாவதரணம் மஹாபலம் ||’ (8-44)** - மத்வாசாரியரே ! யாராலும் செய்யமுடியாத செயல்களை செய்து முடித்தால் தங்களின் அவதார நோக்கம் நிறைவேறும். அசுரர்கள் துர்பாஷ்யங்களை இயற்றி, தத்வஞானத்தை மறக்கடித்தனர். பிரம்மசூத்ரங்களின் உண்மையான பொருள் மறைந்திருக்கிறது. சஜ்ஜனர்களுக்கு உண்மையான ஞானத்தைக் கொடுப்பதற்காக, பிரம்மசூத்ரத்திற்கு பாஷ்யத்தை விரைவாக எழுதுவீர். வேதபுராணங்களின் உண்மையான பொருளை ஆராய்ந்து அவற்றை பரப்புவீர் என்று சொன்னதைக் கேட்டதும், சர்வக்ஞரான ஆசார்யர் - ‘ஹே பகவந்தா ! உன் சன்னிதியில் எப்போதும் இருந்து உனக்கு சேவை செய்ய எனக்கு சந்தர்ப்பம் கொடு. இந்த பாக்கியம் எனக்கு ஆகட்டும். ‘**கலி கால காலித குணே தராதளே சுஜனோ ந நூனமதுனாஸ்தி யோக்ய தீ: |’ (8-49)** - இந்த கலிகாலத்தில் தத்வஞானத்திற்கு அருகதையானவர் யாருமில்லை. அருகதையற்றவர்களுக்கு வழங்கப்படும் உபதேசம் வீணாகும்’ என்றார்.

அதற்கு நாராயனன் ‘மத்வரே ! அருகையதையுடைய ஜீவிகள் இருப்பர். தூசு படிந்த ரத்னங்களை தூய நீரில் கழுவுவதைப் போல, நீ தூய்மையான ஞானத்தை உபதேசித்து, அவர்களை ஞானியாக்கு. சூரியனின் கிரணங்களால் தாமரை மலர்வதைப் போல், உன் ஞானம் என்னும் கிரணங்களால் சஜ்ஜனர்களின் மனம் என்னும் தாமரை மலரட்டும்’ என்றார். திடஅறிவைக் கொண்ட மத்வர், நாராயண வியாசரின் ஆணையை சிரமேற்கொண்டார்.

தத்வஞானத்தை போதிக்கும் மூன்று வேதங்களைப் போல, பாவத்தைப் போக்கும் மூன்று அக்னியைப் போல, அனைத்தையும் கொண்டிருக்கும் மூன்று உலகங்களைப் போல, நாராயண வியாச மத்வர் என்னும் இந்த மூவரும், மிகவும் மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தனர்.

ஆம்னாயாஸ்ரய இவ தத்வ போதகாஸ்தே பாபக்னாஸ்த்ரய இவ பாவகா: ப்ரஜானாம் |
லோகா வா சகல ப்ருதஸ்த்ரயோத்ர ரேஜு: சானந்தா முனிசுததர்ம சூனு மத்வா: || (8-54)

***

ஒன்பதாம் சர்க்கத்தின் சுருக்கம்

நாராயணரின் ஆசிரமத்திலிருந்து வேதவியாசரின் ஆசிரமத்திற்கு திரும்பினார் மத்வர். வேதவியாசரிடமிருந்து தத்வோபதேசம். அக்னிசர்மா முதலான 5-6 பிராமணர்களிலிருந்து ஒரே நேரத்தில் பிக்ஷை ஸ்வீகரித்தல். பதரியில் பிரம்மசூத்ர பாஷ்யம் இயற்றுதல். சத்யதீர்த்தர் அதை ஆவணப்படுத்துவது. பாஷ்யத்தின் சிறப்பினை விவரித்தல். பதரியிலிருந்து கோதாவரி நதிக்கரைக்கு மத்வர் வருகை மற்றும் அங்கு தத்வபிரசாரம். சோபனபட்டர் ஸ்ரீபத்பனாப தீர்த்தர் என்று பெயர் பெற்று ஆசார்யரின் சிஷ்யராதல். உடுப்பியில் ஸ்ரீகிருஷ்ண பிரதிஷ்டை. குரு புத்ரரினால் யக்ஞம். மத்வரின் இரண்டாவது பதரியாத்திரை. வேதவியாசரை வணங்கி மறுபடி ரஜதபீடபுரத்திற்கு வருகை - ஆகிய விஷயங்கள் இந்த சர்க்கத்தில் வருகின்றன.

நாராயணரிடமிருந்து ‘சூத்ர பாஷ்யத்தை உடனடியாக இயற்றுங்கள்’ - ‘குரு சூத்ர பாஷ்யம் அவிலம்பிதம் வ்ரஜே:’ என்ற ஆணையப் பெற்ற மத்வர், வேதவியாசருடன் வியாச ஆசிரமத்திற்கு வந்தவுடன், அவரிடமிருந்து தத்வோபதேசத்தைக் கேட்டார். அவரது அனுமதியைப் பெற்று பதரிக்கு திரும்பினார். ஸ்ரீஹரியை எப்போதும் தனது இதயத்தில் தரித்த ஆசார்யருக்கு, ஸ்ரீஹரியின் இன்மை என்பதே இல்லை. வியாச ஆசிரமத்திலிருந்து விஷாலபதரிக்கு திரும்ப வந்த ஆசார்யரின் நிலையை நாராயண பண்டிதர் விவரித்திருக்கும் விதம் மிக அற்புதமானது. மத்வரின் திரும்புதலுக்காக காத்திருந்த சிஷ்யர்களுக்கு, அவரைக் கண்டதும் புதிய பிறவியே வந்ததுபோல் மகிழ்ந்தனர்.

வானரேந்த்ர இவ தீர்ண வாரிதி: வாசுதேவ இவ ரத்ன ராஜவான் |
பீமசேன இவ சூனவர்யஹ்ருத் நிர்வ்ருத்திம் ஸ்வஜனமானினாய ஸ: || (9-6)

ஸ்ரீமதாசார்யர் அனந்தமடத்திற்கு திரும்பி வந்தபோது, அவர்களுக்கு உண்டான மகிழ்ச்சி - சீதையைக் கண்டேன் என்ற செய்தியைக் கொண்டு வந்த அனுமனைக் கண்டது போலவும், ஸ்யமந்தக மணியைக் கொண்டு வந்த கிருஷ்ணனைக்

கண்டது போலவும், சௌகந்திகா புஷ்பத்தைக் கொண்டு வந்த பீமனைக் கண்ட திரௌபதிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைப் போலவும் இருந்தது.

பதரியில், அக்னிசர்மா முதலான 5-6 பிராமணர்கள் ஒரே காலத்தில் தனித்தனியாக சமர்ப்பித்த பிக்ஷையை ஏற்று அவர்களுக்கு வியப்பூட்டினார் ஆசார்யர். பிரளய காலத்தில் ஸ்ரீஹரியின் அருளால் அனைத்தையும் விழுங்கும் முக்யபிராணரின் அவதாரமான மத்வரின் விஷயத்தில் இது ஆச்சரியமே இல்லை.

பிரம்மசூத்ர பாஷ்யத்தை இயற்றுதல் மற்றும் அதன் சிறப்பு

சூத்ரகாரரான வேதவியாசருக்கு சம்மதமான பிரம்மசூத்ர பாஷ்யத்தை ஸ்ரீமதாசார்யர் பதரியில் இயற்றினார். இந்த பாஷ்யத்தின் சிறப்பினை நாராயண பண்டிதாசார்யர் ஐந்து ஸ்லோகங்களில் விவரிக்கிறார்.

வியாசதேவ ஹ்ருதயாதி வல்லபம் வாசுதேவமகணய்யா சத்குணம் |
சாதயத் சகலதோஷ வர்ஜிதம் ஞானபக்தி தமனந்த சௌக்யதம் || (9-8)

வேதவியாசருக்கு மிகவும் பிடித்தமான ஸ்ரீஹரியை நற்குணங்களைக் கொண்டவன், தோஷங்கள் அற்றவன் என்று நிரூபித்து, ஞானபக்திகளை வழங்கும் இந்த பாஷ்யம், நித்யசுகமான மோட்சத்தை தரவல்லதாகும். வேதவியாசரின் சூத்ரத்திற்கு ஒப்பான வேத வாக்கியத்தை சமர்ப்பித்து, வியாசரின் கருத்தை அப்படியே பிரதிபலிப்பதாக இருக்கிறது, ஆசார்யரின் பாஷ்யம்.

பால சங்கமபி போதயத்ப்ருஷம் துர்னிரூப வசனம் ச பண்டிதை: |
அப்ரமேய ஹ்ருதயம் பிரசாதவத் சௌம்யகாந்தி ச விபக்ஷ பீஷணம் || (9-10)

சாதாரணமானவர்களுக்கும் புரியுமாறும், முழுதும் அறிந்த பண்டிதர்களுக்கு புரியாத வகையிலும் இருக்கிறது இந்த பாஷ்யம். இதில் மிக எளிமையான சொற்களே உள்ளன, ஆனால் இதிலுள்ள விஷயங்கள் புரிந்துகொள்ள கடினமானவை. சஜ்ஜனர்களுக்கு இதமாகவும், துர்ஜனர்களுக்கு மிக பயங்கரமானதாகவும் இருக்கிறது..

அனைத்து தேவதைகளாலும் புகழப்பட்ட, அனைத்து லட்சணங்களும் பொருந்திய, தேவையற்ற எந்த ஒரு அதிகப்படியான சொல்லும் இல்லாத இந்த பாஷ்யமானது மிகவும் மங்களகரமானதாக இருக்கிறது. 'ரூபமன்யதிவ தன்யமாத்மன: |' ஆசார்யரின் ரூபம் 32 லட்சணங்களைக் கொண்டது. அவரின் இன்னொரு பிரதியே இந்த பாஷ்யம் என்று சொல்லலாம்.

ஏக விம்சதி குபாஷ்ய தூஷகம் பிரம்மசூத்ர கண பாஷ்யமத்புதம் |
அப்யதூஷ்யமதனோதனந்ததீ: பூதபாவி பவதாந்தமபி: க்வசித் || (9-12)

எல்லையற்ற ஞானத்தைக் கொண்ட ஸ்ரீமதாசார்யர் இந்த பிரம்மசூத்ர பாஷ்யத்தை இயற்றினார். முந்தைய 21 குபாஷ்யங்களையும் இது நிராகரித்தது.

பிரம்மசூத்ர பாஷ்யத்தை இயற்றுதல்

மிகச்சிறந்த மொத்த பாஷ்யத்தையும் முதன்முதலில் ஆவணப்படுத்தியவர் ஸ்ரீசத்ய தீர்த்தர் ஆவார்.

காங்கமங்கள தரங்கபங்கத ப்ராந்த சுஸ்ரீஹரி வேஷ்ம க்ருத்ஸம: |
யத்கதைக தமவர்ண லேகக: சத்யதீர்த்த இஹ பாஷ்யமாலிகத் || (9-13)

ஆசார்யரின் பிரிய சிஷ்யரான சத்யதீர்த்தர் இந்த பாஷ்யத்தை முழுவதுமாக ஆவணப்படுத்தினார். இதன் ஒரே ஒரு எழுத்தினை எழுதுவதும் மிகப் பெரிய புண்ணியத்தைப் பெற்றுத் தரும். கங்கைக்கரையில் விஷ்ணுவிற்கு கோயில் கட்டினால் வரும் புண்ணியத்திற்கு இது ஒப்பாகும். அப்படியே சூத்ரகாரரான வியாசரின், பாஷ்யகாரரான ஆசார்யரின் மகிமை எத்தகையது என்று ஊகிப்பது சாத்தியமில்லை. அப்படியே சத்யதீர்த்தருக்கு ஆசார்யரின் அருளும் அபாரமானது ஆகும்.

கோதாவரி நதிக்கரைக்கு மத்வரின் வருகை

பதரிகாஸ்ரமத்தில் நாராயணரை பலமுறை நமஸ்கரித்து, பல புண்ணிய தீர்த்தங்களை மற்றும் க்ஷேத்திரங்களை தரிசித்து அவற்றை பவித்ரமாக்கியவாறு கோதாவரி நதிக்கரைக்கு வந்தார் ஆசார்யர். ரிகாதி அனைத்து வேதங்களிலும் வல்லவர்களான சில பண்டிதர்கள், ஆசார்யரை சோதிக்க வேண்டி சில வேத மந்திரங்களைக் கூறினர். ஆசார்யர் அந்த வேத மந்திரங்களை சரியாக உச்சரித்து, அவற்றின் பொருளை விளக்கியவாறு, சார்வக முதலான ஆறு தத்வங்களையும் கண்டித்தார். **'சர்வவித் த்வமஸி முக்யத: கவே நாஸ்தி தே சத்ருஷ: |'** (9-16) - 'ஆசார்யரே, நீங்கள் சர்வக்ஞர். உங்களுக்கு சமமானவர் இந்த உலகத்தில் வேறு யாரும் இல்லை' என்று புகழ்ந்தனர்.

அந்த சபையில், தர்க்கத்தில் வல்லவரான, வேத புராண பாரதம் முதலான சாஸ்திரங்களில் சிறந்தவரான, சோபன பட்டர் என்னும் பண்டிதர் இருந்தார். மத்வரின் முக-கமலத்திலிருந்து வெளிவந்த பாஷ்யம் என்னும் அமிர்தத்தைப் பருகி, மத்வர் கூறிய தத்வவாதத்திற்கு மனதைப் பறிகொடுத்து, அவரின் சிஷ்யரானார். பின்னர் மத்வரின் சித்தாந்த பிரசாரத்திற்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்தார். பின்னர் ஆசார்யரிடம் உபதேசம் பெற்று, துர்வாதிகளைக் கண்டித்தார். மத்வசாஸ்திரத்தை சிறந்ததான வலம்புரி சங்கிற்கு ஒப்பிட்டு, அந்த சித்தாந்தத்தை பிரசாரம் செய்யத் துவங்கினார். இவரே இந்த சித்தாந்த சாம்ராஜ்யத்தின் முதல் சிஷ்யரும் ஆனார்.

சுண்ணாம்பு செய்பவர் வலம்புரி சங்கின் சிறப்பினை அறியாமல் அது பயன்படாது என்று தூக்கி எறிவதைப் போல, மத்வ சாஸ்திரத்தின் சிறப்பினை அறியாமல் அதை நிராகரிப்பவன் அதமன் (தாழ்ந்தவன்). அவனைவிட குறைந்த புத்தி உள்ளவன் வேறு யாருமில்லை. வலம்புரி சங்கின் சிறப்பை அறிந்த இன்னொருவன், அதை நல்ல விலைக்கு விற்று லாபத்தை அடைவான். ஆனால்

அவனும் அந்த சங்கின் முழுமையான பலனை அனுபவிக்கவில்லை. இதுபோல் மத்வ சாஸ்திரத்தை பின்பற்றி அதிலிருந்து கிடைக்கும் ஞான, பக்தி, ஸ்ரீஹரியின் அருளிற்கு முயலாமல், வெறும் பணம் மற்றும் புகழுக்காக இந்த சாஸ்திரத்தை பயன்படுத்துபவன் முட்டாள் ஆவான்.

வலம்புரி சங்கின் முழுமையான பலனை அறிந்த ஒருவன், அதை தனது பூஜையில் வைத்து பூஜித்து, நற்பலன்களைப் பெறுவது போல், கல்பவிருட்சத்தைப் போலிருக்கும் மத்வ சாஸ்திரத்தை சிரத்தையுடன் படித்து, அதன் நற்பயனான ஸ்ரீஹரியின் அருள் மற்றும் அதிலிருந்து மோட்சத்தைப் பெறுகிறான். **'பாக்ய தெய்வமிஹ யோக்யதானுகம் |' (9-23)** - ஸ்ரீஹரி அவரவர்களின் தகுதிக்கேற்ப பலன்களைக் கொடுக்கிறான். சோபன பட்டர் இவ்வாறு வலம்புரி சங்கின் ஒப்பீட்டினைக் கொடுத்து, மத்வ மதத்தின் சிறப்பினை விளக்கி, சபையினரை ஆனந்தப்படுத்தினார்.

இப்படி மத்வசாஸ்திரத்தின் அருமை பெருமைகளை எவ்வளவு சிரத்தை பக்தியுடன் அறிவரோ அவ்வளவு புருஷார்த்தங்களை, ஞான பக்திகளை அடைவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்று சொல்லி பட்டர் மக்களை சமாதானம் செய்தார். இந்த சித்தாந்தத்தை தமது பாஷ்யத்தின் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்த ஸ்ரீமதாசார்யர், ருத்ர, இந்திர, பிருஹஸ்பதி ஆசார்யர்களாலும் பூஜிக்கப்படுகிறார். சோபனபட்டர் (பத்பனாப தீர்த்தர்), மத்வ சாஸ்திரத்தை (த்வைத சித்தாந்தத்தை) அனைத்து பண்டித சபைகளில் பரப்பியதாலேயே, ஸ்ரீமதானந்த தீர்த்தர், அவரை பீடத்தில் அமர்த்தி சித்தாந்தத்தை பரப்புவதற்காக நியமித்தார் என்று அறியலாம்.

மத்வர் ரஜதபீடபுரத்திற்கு திரும்பினார்

தனது பயணத்தில் மத்வர் மக்களுக்கு தத்வோபதேசம் செய்தவாறு, ரஜதபீடபுரத்திற்கு வந்தார். மூத்த யதிகள் மற்றும் அச்யுதப்ரேக்ஷர் ஆசார்யரைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். அனந்தேஸ்வரரை மற்றும் குருகளை ஆசார்யர் நமஸ்கரித்தார். ஆசார்யர் முன்னரே அனுப்பியிருந்த பிரம்மசூத்ர பாஷ்யத்தை குருகள் பார்த்திருந்தார். தமது கிரந்தத்தின் மூலம் குருகளின் மனதில் இருந்த அனைத்து அஞ்ஞானத்தையும் போக்கியிருந்தார் ஆசார்யர். **'ஆனனந்த ச ஹி மத்வ சாஸ்திரமாகர்ணயன் !' (9-37)** - சித்தாந்தத்தின் மகிமையை அறிவது - உப்பு நீரைக் குடித்தபிறகு சுத்தமான நீரைக் குடித்து வாய் கொப்பளிப்பதைப் போல இருந்தது. மத்வ சாஸ்திரத்தின் சிறப்பினைக் கண்ட அச்யுதப்ரேக்ஷர் மற்றும் மூத்த யதிகள், இதனை மக்களிடம் பிரசாரம் செய்யத் தொடங்கினர். ஸ்ரீமதாசார்யர் பக்தர்களுக்கு தத்வோபதேசம் மற்றும் தப்தமுத்ரா தாரணம் செய்தார்.

உடுப்பியில் ஸ்ரீகிருஷ்ணனின் பிரதிஷ்டை

முக்காலும் உணர்ந்தவரான ஸ்ரீமதாசார்யர், பக்தர்களுக்கு அருள்வதற்காக ரஜதபீடபுரத்தில் ஸ்ரீகிருஷ்ணனின் சிலையை பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்று நினைத்து, மேற்கு கடற்கரைக்குச் சென்றார். அங்கு குளித்து, ஜப தபங்களை

முடித்தார். படகிலிருந்து கிடைத்த கோபிசந்தனக் கட்டியை உடைத்து அதிலிருந்த முத்து கிருஷ்ணனை, மத்வ சரோவரத்தில் அபிஷேகம் செய்து, அதில் ஸ்ரீகிருஷ்ணனின் விசேஷ சன்னிதானத்தை உண்டுபண்ணி, அங்கு பிரதிஷ்டை செய்தார். ஆண்டு 1276 என்று சில ஆதாரங்களிலிருந்து தெரியவருகிறது.

’வந்தே வந்த்யம்’ என்று ஸ்ரீஹரியை போற்றியவாறு ஸ்ரீமதாசார்யர் கடற்கரைக்குச் சென்றார். துவாரகையிலிருந்து இவருக்காகவே வந்த கிருஷ்ணனைக் கண்டு ‘தேவகி நந்தன’ என்றவாறு பாடி, ‘த்வாதச ஸ்தோத்திரம்’ என்னும் ஸ்தோத்திரத்தை இயற்றினார். **’சித்திவிக்ன முக தோஷ பேஷஜம் |’ (9-40)** சஜ்ஜனர்களை கடைத்தேற்றவும், மோட்சத்தின் பாதைக்கான தடைகளை போக்குவதற்காகவும், அழகான கடெகோலு கிருஷ்ணனை விதிபூர்வகமாக பிரதிஷ்டை செய்தார்.

பல கிரந்தங்களில் சொல்லியவாறு, ஸ்ரீகிருஷ்ணனின் பிரதிஷ்டைக்கான கதை இப்படியாக இருக்கிறது. ஸ்ரீமதாசார்யர் ஒருமுறை குளிப்பதற்காக ஒடெபண்டேஸ்வர ஆலயத்தின் அருகில் கடற்கரைக்குச் சென்றார். சர்வக்ஞரான மத்வர், அன்றைய மற்றும் பின்வரும் பக்தர்களுக்கு இஷ்டார்த்தங்களை கொடுக்கவேண்டி, ஒரு கிருஷ்ணனை பிரதிஷ்டை செய்யவேண்டி விரும்பினார். துவாதச ஸ்தோத்திரத்தை சொல்லத் துவங்கினார். ஜபங்களையும் செய்யத் துவங்கினார். தூரத்தில் ஒரு படகு, கடற்கரையை அடையமுடியாமல், புயலில் சிக்கித் தவிப்பதை கண்டார். தவித்துக்கொண்டிருந்த அந்தப் படகோட்டி, கரையில் இருந்த ஆசார்யரை வேண்டினான். கருணாமயியான ஆசார்யர் தமது காவி மேலாடையை எடுத்து காற்றினில் வீசினார். படகும் பிரச்னையில்லாமல் கரையை அடைந்தது.

அந்த படகோட்டி மத்வரிடம் வந்து ‘ஸ்வாமி, என்னைக் காப்பாற்றிய நீங்கள், எங்களிடமிருந்து எதையாவது பெற்றுக் கொள்ளுங்கள்’ என்று மன்றாடினான். ஆசார்யரும், படகில் பாரத்திற்காக வைக்கப்பட்டிருந்த கோபிசந்தனக் கட்டியை கொடுக்குமாறு கேட்டார். ஸ்ரீகிருஷ்ணனே அவரிடம் வந்ததை அறிந்த பூர்ணப்ரக்ஞர், அந்த கட்டியில் இருந்த கிருஷ்ணனை மத்வசரோவரத்தில் அபிஷேகம் செய்து அங்கு பிரதிஷ்டை செய்தார்.

மந்தஹாஸ ம்ருது சுந்தரானனம் நந்த நந்தனமதீந்திரியாக்ருதிம் |
சுந்தரம் ச இஹ சன்னயாதபயத் வந்த்யமாக்ருதி ஷுசி ப்ரதிஷ்டயா || (9-43)

அழகான சிரித்த முகத்தைக் கொண்ட, நந்தநந்தனனான ஸ்ரீகிருஷ்ணன் எப்போதும் அனைவராலும் வணங்கப்படுகிறவன். இந்த சிறந்த சிலையை உத்தம இடத்தில் உத்தமோத்தமரான ஸ்ரீமதாசார்யர், விதிகளின்படி பிரதிஷ்டை செய்தார்.

குருவின் மகனின் யக்ஞம்

மடடித்தாய (மெரடித்தாய) என்பவன், தானே யாகம் செய்வதில் வல்லவன் என்ற கர்வத்தில் இருந்தான். ஆசார்யர் அவனையும் அவனது சகாக்களையும் வாதத்தில் தோற்கடித்து, குருபுத்ரனான வாசுதேவன் மூலமாக யாகத்தை செய்வித்தார். அந்த

யாகத்திற்கு அவரது சகோதரரே தலைமை தாங்கினார். ஸ்ரீமதாசார்யரின் முன்னிலையில் நடந்த யக்ஞத்தை - **‘கோத்ர வர்ணயதி தம் மஹாக்ரதும் |’ (9-50)** யாரும் வர்ணிப்பதற்கு சாத்தியமே இல்லை. யக்ஞயாகாதிகள் மோட்சத்திற்கான வழி என்று ஆசார்ய மத்வர் செய்து காண்பித்தார்.

உலகத்தில் மறைந்திருந்த சத்-சித்தாந்தத்தை பிரதிஷ்டை செய்வதற்கு அவதரித்தவர் ஆசார்ய மத்வர். இவரின் ஒவ்வொரு பேச்சும், செயலும் உலகத்தை வியப்படையச் செய்தது. அவரின் அற்புத லீலைகள் சஜ்ஜனர்களுக்கு வழிகாட்டியாகி ஸ்ரீஹரியின் மகிமைகளைக் காட்டுமாறு இருந்தது.

யானி யானி சரிதானி யானி யா நீரிதானி ய மனோ ஹராண்யஹோ |
தானி தானி ச விதானி சேதஸோ விஷ்வ விஸ்மய கராணி பாந்தி ஹி || (9-52)

இரண்டாவது பத்ரி யாத்திரை

ஆசார்ய மத்வர், இரண்டாவது முறையாக பத்ரி யாத்திரை மேற்கொண்டு, தாம் இயற்றிய வியாசருக்கு ஒப்பிய சத்சித்தாந்த்தை வலியுறுத்தும் பிரம்மசூத்ர பாஷ்யத்தை வேதவியாசருக்கு சமர்ப்பித்தார். வியாசரிடம் இன்னொருமுறை ‘சஹபோக’ என்னும் சிறந்த - முன்னர் அனுமனுக்கு ஸ்ரீராமனாகி கொடுத்ததைப் போல, பாவி-பிரம்மபதவி (எதிர்கால) அருளை - மத்வர் பெற்று, வேதவியாசரின் ஆணைப்படியே தம் சிஷ்யர்களுடன் உடுப்பிக்கு திரும்பினார். நாராயணரூபி அனந்தேஸ்வரனை வணங்கி, அனைத்து பக்தர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தார்.

***

பத்தாவது சர்க்கத்தின் சுருக்கம்

இரண்டாம் பத்ரி யாத்திரையின்போது ஆசார்ய மத்வர் செய்துகாட்டிய பல மகிமைகள் இந்த சர்க்கத்தில் விளக்கமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான விஷயங்கள் என்றால், ஸ்ரீமத்வர் தாம் பிராணதேவர் என்று காட்டியது, துளுவ அரசனுடனான சந்திப்பு, பயணத்தில் செய்து காட்டிய விஷயங்கள், யோகசக்தியைக் காட்டியது ஆகியன வந்திருக்கின்றன. மத்வரின் வெற்றிப்பயணம் மற்றும் தேக வர்ணனையானது அற்புதமான காவிய நடையில் சொல்லப்பட்டிருக்கின்றன. பல நடைகளினால் நிரம்பிய இந்த சர்க்கம் மத்வவிஜய-சுருக்கம் என்றே அழைக்கப்படுகிறது.

ஸ்ரீமதாசார்யர் தமது இரண்டாவது பத்ரி யாத்திரையை முடித்து, தமது சிஷ்யர்களுடன் ரஜதபீடபுரத்திற்கு வந்து தத்வபிரசாரம் செய்யத் தொடங்கினார். ஒரு முறை சில சஜ்ஜனர்கள் சிஷ்யர்களிடம், ஆசார்யர் தனது இரண்டாம் பத்ரி யாத்திரையின்போது செய்து காட்டிய மகிமைகளை விளக்குமாறு கேட்டனர். அவருடன் பத்ரிக்குச் சென்றிருந்த சிஷ்யன் ஒருவன், அந்த மகிமைகளை சொல்லத் துவங்கினான். பல நடையில் உத்தம காவியத்தைப் போல, மத்வரின் விஜயத்தை வர்ணித்தான்.

புவனாத்புத மத்வ சேஷ்டிதம் ந வதேமாபி சுராயுஷா வயம் |
சகலம் கலு கிந்து கிஞ்சிதப்யத சுஷ்ரூஷு ஜனாய வர்ண்யதே || (10-3)

ஸ்ரீமதாசார்யரின் அற்புத சக்தியினை அனைத்து தேவதைகளும் தங்களின் ஆயுளில் சொல்லி முடிப்பது அசாத்தியம் என்று கூறி, விருப்பமுள்ள சஜ்ஜனர்களுக்காக தெரிந்ததை சொல்கிறேன் என்று துவக்கினான்.

துஷ்ட அரசனை திருத்தியது

ஈஸ்வரதேவ என்னும் அரசன், தனது நாட்டிற்கு வரும் பயணிகளை, ஏரி/கிணறுக்காக மண்ணை வெட்டி உதவுமாறு கேட்பான். அந்த அரசின் வழியே பத்ரிக்குச் செல்லவிருந்த மத்வரைப் பார்த்து அந்த அரசன் 'நீங்கள் இந்த குழி தோண்டும் வேலையை செய்துவிட்டு, முன்னர் செல்லுங்கள்' என்றான். அதற்கு மத்வர் 'நமக்கு இந்த வேலை தெரியாது. ஒருமுறை நீ அதை செய்துகாட்டு' என்றார். சரி என்று வேலையைத் தொடங்கிய ஈஸ்வரதேவ, அதையே தொடர்ச்சியாக செய்துகொண்டே இருந்தான். ஆசார்யரும் அவனை அப்படியே விட்டு, முன்னர் பயணத்தைத் தொடர்ந்தார். அனைத்து ஜீவராசிகளையும் நடத்தும் வாயுதேவரின் மூன்றாவது அவதாரமான மத்வாசார்யர், ஈஸ்வரதேவனை குழி தோண்டும் வேலையில் ஈடுபடுத்தியதில் வியப்பொன்றும் இல்லை. பிராணனையும், மனதையும் அவரே கட்டுப்படுத்துகிறார் அல்லவா?

ஆசார்ய மத்வரின் சாமர்த்தியம் மற்றும் சர்வக்ஞத்வம்

வடக்கு நோக்கி தன் சிஷ்யர்களுடன் பயணத்தை முன்னெடுத்த ஆசார்யர், படகுகளே இல்லாத கங்கைக் கரைக்கு வந்து சேர்ந்தார். சிஷ்யர்களை தமக்குப் பின்னால் வரிசையாக கைபிடித்துக் கொள்ளுமாறு சொல்லி, யாருடைய உதவியும் இன்றி கங்கையை அனாயாசமாகக் கடந்தார். அந்தபக்கம் இருந்த இஸ்லாமிய அரசனின் சேவகர்கள் - **'வாரயத வாரயத வைரி சுஹ்ருதோமுன் மாரயத'** (10-10) - 'யாரோ எதிரி அணியினர் நம்மிடத்திற்கு வந்துவிட்டனர். வேகமாக வாருங்கள். அவர்களைக் கொல்லுங்கள்' - என்று கூவத் தொடங்கினான். அந்த சேவகனைப் பார்த்து, ஸ்ரீமத்வர் - 'ஏ முட்டாளே! நீரில் இறங்கும் சாகசத்தை செய்யாதீர்கள். அதிக ஆட்கள் இருக்கும் உங்களுக்கு, சிலரே இருக்கும் எங்களைப் பார்த்து ஏன் பயம்? உங்கள் அரசனைப் பார்க்கவே வந்திருக்கிறோம்' என்று அவர்கள் மொழியிலேயே பதிலளித்தார்.

ஒரு பாம்பாட்டி கருட மந்திரத்தை ஜெபித்து, பாம்புகளால் தனக்கு எந்தப் பிரச்னையும் வராதிருக்கச் செய்வதுபோல, கருடரைவிட சிறந்தவரான மத்வர், அந்த ராஜனின் சேவகர்களை தடுத்து, தம் சிஷ்யர்களை மரண பயத்திலிருந்து காத்தார். **'சிம்ஹராடிவ ஸ்ருகால சமூஹே ||'** (10-13), நரிகளின் கூட்டத்தில் சிங்கம் தைரியமாக முன்னேறுவதைப்போல, மத்வரும் நடந்தார். சிறந்ததும் அழகானதுமான மத்வரின் உடற்கட்டினைப் பார்த்து ராஜன் 'நற்புத்தியைக் கொண்ட மகானுபாவரே! யமதூதர்களைப் போல இருக்கும், பயங்கரமான எனது

சேவகர்களிடமிருந்து தப்பினீர். படகுகளே இல்லாமல் கங்கையை எப்படிக் கடந்தீர்?' என்று கேட்டான்.

யோஸௌ தேவோ விஸ்வதீப: ப்ரதீப்த: குர்ம: சர்வம் தத்பரானுக்ரஹேண। யாமஸ்தாவத் தூர்ணமாஷாமுதீசீம் இத்யாத்யம் தத்பாஷயா சித்ரவாக்யம் || (10-17)

மொத்த உலகத்திற்கே ஒளி கொடுக்கும் சூரியனின் உள்ளிருக்கும் ஸ்ரீமன் நாராயணனின் விசேஷ அருளினால் அனைத்தையும் செய்கிறோம். இப்போது வடநாட்டிற்குச் செல்கிறோம்' என்று அரசனின் மொழியிலேயே அவன் வியக்கும்படி பதிலளித்தார். ஸ்ரீமத்வாசார்யரின் காம்பீர்யம், தைரியம், சாமர்த்தியம், அறிவு, பேச்சு ஆகியவற்றைக் கண்டு வியந்த அந்த ராஜன் **'ராஜ்யார்தம் சபதி சமர்ப்பயாம்பபூவ |' (10-18)** தனது அரசில் பாதியையே கொடுக்க முயன்றான். மத்வரை எதிரி என்று நினைத்து கொல்ல நினைத்தனர் அரசனின் சேவகர்கள். ஆனால் அரசனோ தனது அரசில் பாதியையே பரிசாக அளிக்கிறான். அவர்களை தன வலிமையால் வீழ்த்தும் வல்லமை பெற்றிருந்தாலும், பல சந்தர்ப்பங்களில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை தன் சிஷ்யர்களுக்குக் காட்டுவதற்காக இப்படி செய்தார். அவருக்கு வேண்டியதைக் கொடுக்கிறேன் என்று அரசன் சொன்னாலும், சிறுவிஷயங்களில் ஆசை கொள்ளாத மத்வர், அதை மறுத்து முன்னே பயணித்தார்.

கொள்ளையர்களை ஜெயிக்கக் காட்டிய அற்புதங்கள்

பயணத்தில் இவரிடமிருந்த பணத்தை அபகரிக்க ஒரு முறை கொள்ளையர்கள் இவர்கள் மேல் பாய்ந்தனர். ஆசார்யர் உடனடியாக ஒரு துணியை மூட்டையாகக் கட்டி, அதில் செல்வம் இருப்பதுபோல் பாவித்து, அவர்களுக்கு நடுவில் வைத்தார். கொள்ளையர்கள் அந்த மூட்டையை எடுப்பதற்காக, தங்களுக்குள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு இறந்தனர். இது எப்படி இருந்ததென்றால், மகாபாரதப் போரினில், சம்சப்தகர்கள் அர்ஜுனனை எதிர்த்துப் போரிட்டபோது, அர்ஜுனன் சம்மோகன அஸ்திரத்தைப் பிரயோகித்ததால், அவர்கள் அதற்கு வசப்பட்டு, தங்களுக்குள்ளேயே அடித்துக் கொண்டு இறந்தனர். ஆசார்யர் பயணத்தைத் தொடர்ந்தார்.

இன்னொருமுறை, மிகவும் பயங்கரமான வலிமையுள்ள நூறுக்கும் மேற்பட்ட கொள்ளையர் கும்பலொன்று ஆசார்யரின் மற்றும் அவரது சிஷ்யர்களின் மேல் பாய்ந்தபோது, தமது சிஷ்யரான ஸ்ரீஉபேந்திர தீர்த்தரின் (புத்திகெ மடத்து மூலபுருஷர்) மூலமாக, திருடர்கள் கையிலிருந்த கோடலியைப் பறித்து, அதன்மூலமாக அவர்கள் அனைவரையும் ஓடஓட விரட்டினார்.

மற்றொருமுறை, கொள்ளையர் ஆசார்யர் அருகில் வந்தபோது, தன்னை மற்றும் சிஷ்யர்களை பாறை போல மாற்றினார். **'க்வசிச்சிலா ச்சடா ப்ரமாதமும் ச சங்கமத்யஜன் | அவேக்ஷ்ய தஸ்யவ: புன: குதூஹலாத் தமானமன் ||' (10-22)** திருடகளின் கும்பல் சிறிது தூரம் போனபிறகு, தாம் பாறைகள் அல்ல என்று தமது

நிஜருபங்களைக் காட்டினார். இவரது மகிமையைக் கண்ட, கொள்ளையடிக்க வந்த திருடர்கள், அவரை வணங்கினர். இங்கும் தமது சிஷ்யர்களை ஆபத்திலிருந்து காப்பாற்றினார் ஆசார்யர்.

சத்யதீர்த்தரை காப்பாற்றினார்

ஒரு முறை ஆசார்யர் தமது சிஷ்யர்களுடன், இமயமலையின் அடிவாரத்தில் பயணித்தபோது, தைத்யன் ஒருவன் புலி ரூபத்தில் வந்து, சத்யதீர்த்தரின் மேல் அவரைக் கொல்வதற்காக பாய்ந்தான். ஆசார்யர் தமது கைகளினாலேயே அந்தப் புலியை விரட்டி, தமது சிஷ்யரைக் காப்பாற்றினார். சஜ்ஜனர்களுக்கு வரும் பிரச்னைகளைக் காப்பாற்ற வல்லவர் வாயுதேவர்தானே!

வேதவியாசரிடமிருந்து வியாசமுஷ்டிகள்

மேல் பதரிக்குச் சென்ற ஸ்ரீமத்வாசார்யர், வேதவியாசரிடமிருந்து, லட்சுமி நாராயணின் சன்னிதானம் இருக்கும் எட்டு சிலாரூப-ப்ரதிமைகளைப் பெற்றார். வேதவியாசர் அருளிக் கொடுத்த அபூர்வமான அந்த பிரதிமைகளுக்கு 'வியாசமுஷ்டி' என்று பெயர். மொத்தம் எட்டு இருந்தன. இவற்றில் ஸ்ரீலட்சுமி நாராயணரின் சன்னிதானம் இருந்ததால், இவை லட்சுமி நாராயண பிரதிமைகள் என்றும் அழைக்கப்பட்டன.

மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் இயற்றுவதற்கான ஆணை

பல தீர்த்தங்கள் மற்றும் க்ஷேத்திரங்களில் இருக்கும் ஸ்ரீஹரி ரூபங்களை வணங்கியவாறு, ஆசார்யர் தமது சிஷ்யர்களுடன் மறுபடி கங்கை நதிக்கரைக்கு வந்தார். **'தீர்த்தேஷு தீர்த்தேஷுச சௌக்ய தீர்த்த: க்ஷேத்ரேஷு ச க்ஷேத்ர விதாம் வரிஷ்ட: |' (10-26)** கங்கை வேகத்துடன் பாய்ந்து கொண்டிருந்தது. கடப்பதற்கு படகுகள் இல்லை. சூரியன் அஸ்தமிக்கும் நேரம். சிஷ்யர்கள் அங்கங்கே அமர்ந்துவிட்டனர். ஜலஸ்தம்ப வித்யையை அறிந்திருந்த ஸ்ரீமத்வர் அனாயாசமாக கங்கையைக் கடந்து அக்கரைக்குச் சென்றார். ஆசார்யரின் மகிமையை மறந்த சிஷ்யர், அவரைக் காணாமல் தேடினர். அவருக்கு என்னவாயிற்றோ என்று கவலைப்பட்டனர். ஹனுமந்தனாக கடலைத் தாண்டியது, பீமனாக கங்கை வெள்ளத்தில் ஓடியாடி விளையாடி என ஆசார்யரின் அவதாரங்களை மறந்தனர்.

ஆடைகூட நனையாமல் கங்கையை அனாயாசமாக கடந்துவந்த ஆசார்யரை, அந்தக் கரையிலிருந்த ராஜன் வியப்புடன் பார்த்தான். மக்கள் இவரை மகான் என்று அறிந்து வணங்கினர். பின், அரசன் படகுகளை ஏற்பாடு செய்து, ஆசார்யரின் சிஷ்யர்களை அந்தப்பக்கத்திலிருந்து வரச்செய்தான். கரையைக் கடந்து வந்த சிஷ்யர்கள், சபையில் புன்னகையுடன் வேதமூர்த்தி நான்முகப் பிரம்மனைப் போல அமர்ந்திருந்த ஆசார்யரைக் கண்டு வியப்புடன் மகிழ்ச்சியடைந்தனர்.

கங்கை மத்வரின் காலடியில்

கங்கைக் கரையிலிருந்த அஸ்தினாபுரத்திற்கு ஆசார்யர் பயணித்து, அங்கு சாதுர்மாஸ்ய விரதத்தை மேற்கொண்டார். கங்காதேவி ஆசார்யரை வந்து வணங்கினாள். மிக அழகான பெண் ரூபத்தில் வந்து வணங்கிய கங்காதேவியைக் கண்ட சிஷ்யர்கள் வியப்படைந்தனர். ருத்ராதி தேவர்களாலும், சரஸ்வதி பாரதியராலும் வணங்கப்படும் ஆசார்யரை, கங்காதேவி வந்து வணங்கியதில் எந்தவொரு ஆச்சரியமும் இல்லை.

சிஷ்யர்களிடம் வலிமையைக் காட்டுதல்

ஒரு சமயம் சிஷ்யர்களுக்கு - ஆசார்யரைவிட தாம் இளையவர்கள். அவரைவிட அதிகபலம் பொருந்தியவர்கள் - என்ற எண்ணம் / கர்வம் தோன்றியது. அப்போது ஆசார்யர் தமது சிஷ்யர்களை ஒருசேர மல்யுத்தத்திற்கு அழைத்தார். ஒரே நேரத்தில் ஆசார்யருடன் மல்யுத்தம் செய்ய வந்த சிஷ்யர்களை (15 வாலிப சிஷ்யர்கள்) தன் திறமையால் வென்று, சிரித்தவாறு 'சாமர்த்தியம் இருந்தால் மேலே இழுங்கள்' என்றார். '**தயாளோ ஸ்வாமின் விமுஞ்ச்யேத்ய வதம்ஸ்ததா தே |' (10-40)**. 'குருவே, உங்களில் விரல்கள் எங்கள் மேல் மேருமலையைப் போல பாரமாக இருக்கின்றன. அதைத் தாங்க முடியாமல் நாங்கள் இறந்துவிடுவோம். எங்களை தயவு செய்து விடுவிக்கவும்' என்று சிஷ்யர்கள் வேண்டினர். ஆசார்யரின் மகிமையை அறிந்து சிஷ்யர்கள் பிரமித்தனர். தன் கண் இமையினாலேயே ருத்ரர், இந்திரர் முதலான தேவர்கள் ஆளும் இந்த உலகத்தினை கட்டுப்படுத்தக்கூடிய வல்லமை பெற்ற ஆசார்யருக்கு, இந்த சிஷ்யர்கள் எம்மாத்திரம்?.

இந்திரபுரியின் தோல்வி

இந்திரபுரி (அமராவதி) என்னும் சிறந்த அத்வைத சன்யாசி ஒருவர், மோட்சத்தின் வழியினைக் குறித்து கேள்வி கேட்க - 'அபரோக்ஷ ஞானியின் எல்லா கர்மங்களும் மோட்சத்திற்கான சாதனையே' என்று பதிலளித்து, அவர் கேட்ட தவறான கேள்விகளுக்கும் சரியான பதிலளித்தார் ஆசார்யர். இந்த சம்பவம் நடந்தது காசியில்.

மத்வாசார்யரின் பிரவசன சாரம்

அனைத்து வித்வத்சபைகளிலும், தனது சிறந்த மற்றும் உணர்ச்சிகரமான சொற்பொழிவுகளால், அனைத்து பரவாதிகளின் வந்தனைகளையும் பெற்றார் என பண்டிதர் வர்ணிக்கிறார்.

விதத தம தமோந்தம் சாதயந்த்யா நிதாந்தம்
சதஸி சதஸி ரேஜே வ்யாரக்யயா வியாஸ சிஷ்ய: |
சகல சமயி ஹஸ்தாம்போஜ பந்தாபினந்தீ
ஷரதி ஷரதி சந்த்ரஸ்சந்திரிகா சம்பதேவ || (10-44)

விஷ்ணு அனைத்திடங்களிலும் இருப்பவன். ஸ்வதந்த்ரன். ஜீவர்களின் உள்ளேயும் வெளியேயும் இருப்பவன். ஜீவர்களிடமிருந்து வேறுபட்டவன். தோஷங்கள் அற்றவன். சிதானந்த ஸ்வரூபன். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய

செயல்களை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிப்பவன். பரப்பிரம்மன். வேதங்களால் புகழப்படுபவன். அனைத்து எழுத்துக்களால் அறியப்படுபவன். அனைத்து ஜீவர்களுக்கும் அவரவர் தகுதிக்கேற்ப கதியை கொடுப்பவன் அவனே. அனைத்து ஜீவர்களிலும் நிலைத்திருப்பவன். அனைத்தையும் கட்டுப்படுத்துபவன். பக்தர்கள் காப்பாற்றி, துஷ்டர்களை கொல்பவன். தகுதி உடைய ஜீவர்களை மோட்சத்தின் பாதையில் அழைத்துச் செல்பவன். லட்சுமிபதியான விஷ்ணுவிற்கு சமமானவர் யாரும் எக்காலத்திலும் இல்லை. அனைவரிடமிருந்தும் வேறுபட்டவன். எப்போதும் தன்னை நினைத்திருக்கும் பக்தர்களுக்கு மட்டும் காட்சியளிப்பவன்.

இப்படிப்பட்ட வேத சாரங்களை மத்வர் விவரித்தார். அனைத்திற்கும் வேத இதிகாச புராணங்களின் வாக்கியங்களை ஆதாரமாகக் காட்டி, சித்தாந்தத்தை நிரூபித்தார். இதர மதங்கள் எப்படி ஆதாரமற்றவை என்று தனது ஆதாரங்களின் மூலம் நிரூபித்தார். அவரது விளக்கங்கள் எதிர்த்துப் பேசமுடியாததாக இருந்தன. இப்படியாக தான் சென்ற இடங்களிலெல்லாம் தத்வவாதத்தை பரப்பினார் ஆசார்யர்.

குருக்ஷேத்திரத்தில் முந்தைய அவதாரத்தின் சிந்தனை

தனது பயணத்தில் ஆசார்யர் அடுத்ததாக குருக்ஷேத்திரம் வந்தார். தமது முந்தைய பீம அவதாரத்தை நினைத்தவாறு, அப்போது தான் பயன்படுத்திய - பூமியில் புதைந்திருந்த கதையை எடுத்துக் காட்டினார். சத்யதீர்த்தர் முதலான சிஷ்யர்களிடம், தாம் அப்போது போரில் செய்த சாதுர்யங்களை சொல்லிக்கொண்டார். அங்கு ஒரு துறவியைக் கண்டனர். ஆசார்யர் - அவன் ஒரு தைத்யன். முந்தைய கல்பத்தில் அவனே மாரீசன் என்றார். முக்காலும் அறிந்த ஆசார்யரின் திறமையைக் கண்ட சிஷ்யர்கள் வியப்படைந்தனர்.

ருத்ரதேவர் வருகை

தமது பயணத்தில் அடுத்து ஹ்ருஷிகேசத்திற்கு வந்தார் ஆசார்யர். அங்கு ருத்ரதேவர் ஒரு பிராமண ரூபத்தில் வந்து, அனைவரின் முன்னிலையில் ஆசார்யரை விழுந்து வணங்கி, அவரை பிக்ஷைக்கு அழைத்து, உடனே பார்வையிலிருந்து மறைந்தார். பிறகு இன்னொருவரின் கனவில் வந்த ருத்ரதேவர், அவனுக்கு ஆணையிட்டு, அவன் மூலமாக ஆசார்யருக்கு பிக்ஷை செய்வித்தார். அனைவருக்கும் குருவான மத்வர், தமக்கும் குருவானவர் என்று இதன்மூலம் ருத்ரதேவர் தெரிவித்தார். **’ஸ்வம் குருமகில குரும் வேதயன் வேத பந்தும் ||’ (10-50)**

மத்வரின் வேறு சில மகிமைகள்

அடுத்து மேற்கு திசையில் ‘இஷுபாத’ க்ஷேத்திரத்திற்கு வந்த ஆசார்யர், அங்கு க்ஷேத்திர மூர்த்தியான பரசுராமரை பக்தியுடன் வணங்கினார். அங்கிருந்து கோவா சென்று, அங்கு ராஜன் கொடுத்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழைப்பழங்கள்

மற்றும் பாலையும் ஏற்றுக்கொண்டு, தான் மனிதனில்லை தேவதை என்று காட்டினார். வாயுதேவரின் இந்தச் செயலில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

பிறகு சங்கரன் என்னும் பிராமணன் சமர்ப்பித்த நாலாயிரம் வாழைப்பழங்கள் மற்றும் முப்பது குட பாலையும் ஏற்றுக்கொண்டார். ஆசார்யருக்கு இது சாதாரணமே ஆனாலும், சிஷ்யர்களுக்கும் கூடியிருந்த மக்களுக்கும் இது வியப்பான செயலாகும். அங்கிருந்த ராஜனின் சேவகர்கள் இவரை தமது அரசிலேயே வைத்துக் கொள்ளவேண்டும் என்று ஆசைப்பட்டனர். ஆனால் ஆசார்யரோ யார் கண்ணிலும் படாமல் அங்கிருந்து வெளியேறினார். தமது யோகசித்தியையும் காட்டினார்.

பஷுபே ஊரின் மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மத்வர் தமது திவ்ய குரலில் அழகான பாடல்களைப் பாடினார். **விததே ஜன சுப்திதானுபம கான சம்பதா ||' (10-53)** மக்கள் அவரது குரலில் பாடலில் மயங்கினர். சிறிது நேரம் கழித்துப் பார்த்தால், அங்கிருந்த மரங்கள் பூத்து, காய்த்து தொங்கியதைக் கண்டு மகிழ்ந்தனர். அந்த மக்களின் வேண்டுகோளுக்கேற்ப, 'கானசாஸ்திர' என்னும் நூலை ஆசார்யர் இயற்றினார் என்று தகவல் உள்ளது. இதிலிருந்து இவரின் சங்கீதத் திறமையும் வெளிப்பட்டது.

மத்வாசார்யரின் திவ்ய வடிவம்

மத்வாசார்யர், தைத்யர்களுக்கு சிம்ம சொப்பனம், பிரம்மனுக்கு சமமானவர், கெட்ட சாஸ்திரங்களை கண்டித்தவர், அமைதியானவர், சர்வக்ஞர், துக்கங்கள் இல்லாதவர், எப்போதும் விஷ்ணு தியானத்தில் இருப்பவர், உலகத்தில் அனைவராலும் வணங்கப்படுபவர். இத்தகைய சிறப்புகள் மிக்க மத்வாசார்யரின் மகிமைகள் இவ்வளவே என்று சொல்வதற்கு யாராலும் சாத்தியமில்லை. **'ஸ்ரவண மனன கீர்த்தனை ரபீஷ்டம் ப்ரதி தததீத்யமரா: ப்ரகீர்த்தயந்தி ||' (10-55)** இங்கு சொல்லப்பட்டிருக்கும் கதைகளைக் கேட்பது, சொல்வது, படிப்பது, சிஷ்யர்களுக்கு இஷ்டார்த்தங்களைக் கொடுக்கிறது என்று தேவதைகள் கொண்டாடுகின்றனர்.

ஆசார்யரின் மகிமைகளைக் கேட்பதன் பலன்

வெயிலின் தாபத்தால் நொந்திருக்கும் மரங்களின் மேல் மழை பொழிந்தால், அவை பூ, காய், பழங்களை பெறுவது போல, சம்சாரத்தின் தாபத்தால் வாடியிருக்கும் மக்களின் மேல் மத்வரின் அற்புத மகிமைகளின் கதைகள் விழுந்தால், அவர்களின் துக்கங்கள் நீங்கி மகிழ்ச்சி பெருகும். சஜ்ஜனர்களுக்கு ஞானானந்தாதிகள், ஒரே நேரத்தில் வருமாறு ஆசார்ய மத்வரின் கருணைமழை பொழியும்.

இந்த சர்க்கத்தில் இருக்கும் 56 ஸ்லோகங்களை, 55 வித நடைகளில் இயற்றி நாராயண பண்டிதாசார்யர், தமது காவியத்தை சாஸ்திர-காவியமாக மாற்றியிருக்கிறார்.

***

பதினோறாம் சர்க்கத்தின் சுருக்கம்

ஶ்ரீமதாசார்யர் இயற்றிய பிரம்மசூத்ர பாஷ்யத்தை கேட்பதன் பலன், ஶ்ரீஹரியின் மற்றும் வாசுதேவனான வைகுண்டனின் வர்ணனை, முக்தர்களின் சாதனை மற்றும் வைகுண்டத்தில் இருக்கும் கோயில், வீடு, பொருட்களின் வர்ணனை, அங்கு ரமாதேவியின் விசேஷ சேவையின் வர்ணனை, முக்தர்களின் / முக்த ஸ்திரீகளின் வர்ணனை, ஹரிமந்திரத்தின் மகிமை - இந்த விஷயங்கள் அனைத்தும் இந்த சர்க்கத்தில் உள்ளன.

ஒரு முறை ஶ்ரீமதாசார்யர், ஒரு வளர்பிறை நாளின் மாலையில், உடுப்பியில் பிரம்மசூத்ர பாஷ்யத்தின் சொற்பொழிவை செய்துகொண்டிருந்தார். சேஷதேவர், சனகாதி முனிவர்களுடன் அங்கு வந்து, ஆசார்யரின் பாஷ்யத்தைக் கேட்டு பின் தம்மிடத்திற்குத் திரும்பினார். ஆகாயத்தில் திடீரென்று தோன்று ஒரு ஒளியைக் கண்டு வியப்படைந்த சிஷ்யர்களுக்கு, அது சேஷதேவரின் ஒளி என்று ஆசார்யர் வர்ணித்தார். இவர்கள் அனைவரும் வாயுதேவரின் சேவகர் அல்லவா?

மத்வ சாஸ்திரத்தை கேட்பதின் பலன்

மத்வ சாஸ்திரங்களை சேஷதேவர் நன்றாக அறிந்திருந்ததால், சனகாதி முனிவர்கள் அவரிடம், மத்வரின் பிரம்மசூத்ர பாஷ்யத்தைக் கேட்பதன் பலன்களை சொல்லுமாறு கேட்டனர். **'ஸ்வ பலம் து முக்தி பதமுக்தி பதம் சுகசாரதாதி பரமார்த்த விதாம் ||' (11-6)** அதற்கு சேஷதேவர், விவசாயம் செய்பவனுக்கு தானியம் எப்படி முக்கிய பலனோ, அப்படி மத்வ சாஸ்திரங்களைக் கேட்பவனுக்கு சுகாசார்யர், சரஸ்வதி தேவி ஆகியோரால் வர்ணிக்கப்பட்ட மோட்சமே முக்கிய பலன்' என்றார். தானியத்துடன் புல், பூண்டு என தேவையற்றவையும் வளர்வது போல, மத்வ சாஸ்திரங்களைக் கேட்பதால், மோட்ச பலனுடன், ஸ்வர்க்காதி பலன்கள், லௌகிக சுகங்கள், செல்வங்கள் ஆகியனவும் கிடைக்கின்றன என்று பொருள்.

பக்தியுடன் மத்வ சாஸ்திரங்களைப் படிப்பவர்களுக்கு, கேட்பவர்களுக்கு, வணங்கும் பரம வைஷ்ணவர்களுக்கு ஶ்ரீஹரி அவர்கள் வசிப்பதற்கு தன்னுடைய வைகுண்டத்தையே அளிக்கிறான். சம்சார பந்தனத்திலிருந்து ஸ்வரூப சுகத்திற்கான இடமான வைகுண்டத்தின் வர்ணனையை சேஷதேவர் விளக்குகிறார்.

'பூர்ணபுருஷஸ்ய புரி'

ஶ்ரீஹரியின் பட்டணமான வைகுண்டம் அனைத்து போக பாக்கியங்களுக்குமான இடமாக இருக்கிறது. இதற்கு சமமான மற்றொரு பட்டணம் இல்லை. இங்கு இல்லாத பொருட்களே இல்லை. அனைத்து மங்களப் பொருட்களும் நிறைந்திருக்கின்றன. அங்கிருக்கும் வீடுகள் பத்மராக ரத்னங்களால் கட்டப்பட்டுள்ளன. அவை ஸ்படிக மணிகளால் கட்டப்பட்ட வீடுகளால்

சூழப்பட்டுள்ளன. ஸ்ரீஹரி, சேஷனை தன் உடலில் சுற்றியிருப்பதைப் போல இவை காட்சியளிக்கின்றன. வீடுகளின் கூரைகள் மரகத மணிகால் இழைக்கப்பட்டு, வெள்ளி ஸ்படிகங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இவை கங்கையுடன் யமுனை நதி சேரும் காட்சியைப் போல இருக்கிறது.

அந்த வீடுகளில் பறவைக்கூடுகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் செயற்கை பறவைகள் இருக்கின்றன. சுவர்க்கத்தில் இருக்கும் மக்களுக்கு மயக்கம் இல்லாததால், அவற்றை அவர்கள் உண்மையான பறவைகள் என நினைக்காமல் இருக்கின்றனர்.

வைகுண்டத்தில் இருக்கும் அனைத்து பொருட்களும் ரமா ஸ்வரூபமே ஆகியிருக்கின்றன. 'விமலாக்ருதி: ப்ரக்ருதிரேவ'. அனாதி காலத்திலிருந்து பிரம்ம ருத்ரர்களால் வசிக்கப்பட்டு வந்தாலும், வைகுண்டம் ஸ்ரீஹரியின் அருளால் எப்போதும் புதியதாகவே காட்சியளிக்கிறது. இது ஸ்ரீஹரியின் அதிஅற்புதமான மகிமையாகும்.

பவனம் விபாதி புவனைக பதே: புவன த்ரயாத்புத குணாதிஷயி |
வரமந்திர ப்ரகர மத்யகதம் த்விஜமண்டலஸ்த சஷிமண்டலவத் || (11-15)

நட்சத்திரங்களுக்கு நடுவில் நிலவு ஒளிர்வதைப்போல, பல வீடுகளுக்கு நடுவில் பிரம்மாண்ட நாயகனான ஸ்ரீஹரியின் வீடு விசேஷமாக ஒளிர்கிறது. ரமாதேவிக்கு பற்பல சேவகர்கள் இருந்தாலும், ஸ்ரீஹரியின் வீட்டு வேலைகளையும், ஸ்ரீஹரிக்கான சேவையையும் ரமாதேவி எப்போதும் தானே செய்கிறார். அனைத்து பொருட்களிலும் தானே இருந்து, அனைத்து விதமாகவும் ஸ்ரீஹரியை பூஜிப்பதை யாராலும் வர்ணிப்பதற்கு சாத்தியமே இல்லை.

கமலாபதி: கமலயாऽமலயா கமனீயயா கமலலோசனயா |
அம்ருதாஹி ராஜம்ருது போககத: ஸ்வரதோऽபி தத்ர ரமதே பரம: || (11-17)

சர்வோத்தமனான ஸ்ரீஹரி ஸ்வரமணன். சிறந்த பக்தையான ரமாதேவிக்கு மகிழ்ச்சியைக் கொடுக்க அவளுடன் விளையாடுவான்.

ஸ்ரீஹரியின் மகிமை

ஸ்ரீஹரி அனந்தகல்யாண குணபரிபூர்ண, சத்சிதானந்த ஸ்வரூபி, புண்டரீகாக்ஷன், பீதாம்பரதாரி. ஸ்ரீஹரியின் மகிமைகளை ரமா பிரம்ம ஆகியோரால் எக்காலத்திலும் முழுமையாக வர்ணிப்பது சாத்தியமே இல்லை.

கணயேத் ரமாஸ்ய ந குணானகிலான் சதுரானனஸ்சதுரவாகபி நோ |
ந வயம் சஹஸ்ரவதனா அபிதான் அபரோதிதானதி வதேம புன: || (11-19)

நான்முக பிரம்மன், ஆயிர முகமுடைய நான் (சேஷர்), கருட, ருத்ரர் ஆகிய பற்பல முக்தர்கள் ஸ்ரீஹரியின் குணங்களை முழுமையாக அறியாமல் தியானம் செய்து,

அவரவர்களின் தகுதிக்கேற்ப பூர்ணசுகத்தை அனுபவிக்கின்றனர். இப்படி அனைத்து தேவதைகளும் அவரவர் மனைவியருடன் பூரண சுகத்தை அனுபவிக்கின்றனர்.

பலவிதமான முக்தர்களின் வர்ணனை

முக்தர்கள் 4 வகைப்படுவர். 1. சாரூப்ய முக்தர் 2. சாமீப்ய முக்தர் 3. சாலோக்ய முக்தர் 4. சாயுஜ்ய முக்தர்.

சாரூப்ய முக்தர்: நான்கு தோள்களுடன், அழகாக ஸ்ரீஹரிக்கு சிறிது அருகில் சென்று ஆனந்தத்தைப் அனுபவிக்கின்றனர்.
சாமீப்ய முக்தர்: ஸ்ரீஹரியின் அருகிலேயே இருந்து தமது தகுதிக்கேற்ப ஆனந்தத்தை அனுபவிக்கின்றனர்.
சாலோக்ய முக்தர்: ஸ்ரீஹரியின் உலகத்திலேயே இருந்து, முழுமையான ஆனந்தத்தை அனுபவிக்கின்றனர்.
சாயுஜ்ய முக்தர்: ஸ்ரீஹரியின் தேகத்தைப் போலவே தேகம் பெற்று, முக்தியடைந்து, முழுமையான ஆனந்தத்தை அனுபவிக்கின்றனர்.

முக்தர்களின் லட்சணங்கள்

ந பவந்தி யத்ர ம்ருதிஜன்மஜரா: த்ரிவிதம் பயம் கிமுத துக்ககண: |
அபரம் ச கிஞ்சிதசுபம் ந பவேத் ந குணாதி தத்ப்ரபவ மூலமபி || (11-23)

மோட்சத்தில் பிறப்பு, இறப்பு, சுகம், துக்கம், நோய், நொடி ஆகிய எந்த தோஷங்களும் யாருக்கும் எந்த காலத்திற்கும் வருவதில்லை. சிதானந்த ஸ்வரூபத்தை அடைவர். எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவுபவர் ஸ்ரீஹரி என்று அறிந்திருப்பர். தாரதம்யத்தை கொண்டிருந்தாலும், ஒருவருக்கொருவர் அன்புடன் இருப்பர். தம்மைவிட உத்தமரிடம் பக்தி கொண்டிருப்பர். தமது தகுதிக்கேற்ப முழுமையான ஆனந்தத்தைப் பெற்றிருப்பர். எப்போதும் இளமையாக, அழகாக, ஸ்ரீஹரியைப் பார்த்தவாறு ஆனந்தத்தை அனுபவிப்பர். ஸ்ரீஹரியை எப்போதும், அனைத்து இடங்களிலும், காண்பர். தம்முடைய மனைவியருடன் விமானங்களில் பயணிப்பர்.

பெண்களின் அழகு

பெண்களின் அழகு இங்கு வர்ணிக்கப்படுகிறது. பற்பல ஆபரணங்களினால் அலங்கரித்து நடனம், பாடல், வாத்தியம் ஆகியவற்றால் தத்தம் கணவர்களுடன் மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர். எப்போதும் இளமையான அவர்களின் உடல் ஒளி, வண்ணம் சிறந்ததாக இருக்கிறது. சிதானந்த உடல்கொண்ட பெண்கள் ஆபரணங்களினால் அலங்கரித்துக்கொண்டு, அழகான உடலையும், இனிமையான குரலையும் பெற்றிருக்கிறார்கள். அவர்களின் நடை, உடை, தேக-காந்தி, பேச்சு ஆகியவை எந்த ஆணையும் ஈர்க்கும் வண்ணம் இருக்கிறது. இந்தப் பெண்களிடம் இருந்த தெய்வபக்தி, பெரியவர்களிடம், கணவரிடம் இருந்த மரியாதை ஆகியவற்றை வர்ணிக்க இயலாது. இவர்கள் செய்யும் செயல்களில் எவ்வித தோஷங்களும் இருப்பதில்லை. இப்படி பெண்களின் உடல்களின் அழகுணர்ச்சி,

நடவடிக்கைகளில் இருக்கும் தூய்மை, நம் மனதை கவர்வதாக இருக்கிறது. இது வேறெங்கும் காணமுடியாததாகும்.

வைகுண்டத்தின் மகிமை

உபசார நந்தனமிதம் த்ருவனம் நியமேன நந்தயதி யத்ர ஜனம் |
பரமேவ நந்தனம் உபேந்திரவனம் சகலம் சதா யதபி நந்தயதி || (11-38)

வைகுண்டத்தில் இருக்கும் நந்தவனம், இந்திரனின் நந்தவனத்தைவிட அற்புதமாக இருந்தது. அந்த தோட்டத்தில், பாரிஜாதம், கல்பவிருக்ஷம் ஆகிய சிறந்த மரங்கள் வளர்ந்திருந்தன. வசந்தாதி ஆறு ருதுகளின் காலநிலையே ஆண்டு முழுவதற்குமாக இருந்தது. அனைத்து ருதுக்களின் நறுமணம் எப்போதும் இருந்தது. ஆனால் அந்தந்த ருதுக்களின் காலமான குளிர், வெயில், பனி, மழை ஆகியவற்றின் தொல்லை இல்லாமல் அவை மகிழ்ச்சியையே தந்துகொண்டிருந்தது. மயில், குயில் ஆகிய பறவைகள் தங்கள் விளையாட்டினால் அனைவரையும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கின. முக்தர்களுக்கு எவ்வித பிரச்னைகளும் இருப்பதில்லை. இஷ்டப்பட்டு ஸ்ரீஹரி பூஜைகளையே செய்து வருகின்றனர். அவர்கள் ஸ்ரீஹரிக்கு அர்ப்பித்ததை மட்டுமே ஏற்றுக்கொள்வர். பெண்கள் தங்கள் கணவருடன் ஸ்ரீஹரியின் கதையினை எப்போதும் கேட்டுக் கொண்டிருப்பர். கணவன் மனைவியர் எப்போதும் மகிழ்ச்சியுடன் நடை பயின்றிருப்பர். துக்கத்தின் சாயலே எங்கும் இல்லை. மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. (அவரவர்களின் தகுதிக்கு தக்கவாறு). தர்மத்தை யாரும் மீறுவதில்லை. கணவன் மனைவிக்கு எப்போதும் கருத்து வேறுபாடுகள் இல்லை. பிறப்பு இறப்பு இல்லை என்பதால், கணவனை / மனைவியை இழந்தோர் என யாருமில்லை. யாருக்கும் சோர்வு இல்லை. பெண்களின் பாடல், நடனம், கணவனின் சேவை, ஸ்ரீஹரிபக்தி, என அனைத்தும் அனைவருக்கும் மகிழ்ச்சியை உண்டுபண்ணியது. அவர்களது சரீரம் ஞானானந்த மயமானதாக இருந்தது.

வினயோ ஹி பூஷயதி சர்வரசம் | (11-53). அனைத்து குணங்களிலும் சிறந்தது பணிவு. இப்படி பணிவு நிறைந்த பெண்கள் தமது கணவர்களுடன் மகிழ்வுடன் இருந்தனர். முக்தர்களின் ஸ்வரூபானந்தத்தின் அனுபவம் எவ்வித தோஷங்களும் இல்லாமல் இருந்தது.

மோட்சத்தில் இருக்கும் பகவத்ரூபங்களின் வர்ணனை

மோட்சத்தில் இருக்கும் பகவத்ரூபங்கள், மற்ற உலகங்களில் மற்றவர்களுக்கு காணக்கிடைக்காதது. அவை மிக அழகானவை. அந்த ரூபங்கள் சூரியஒளியையும், சந்திரனின் அழகையும் மீறியதாக இருக்கிறது. ஸ்ரீஹரி தனது பல ரூபங்களை முக்தர்களுக்கு எப்போதும் காட்டுகிறான். தங்களின் தகுதிக்கேற்ப பூர்ணானந்தத்தை அனுபவிப்பவர்களாகின்றனர்.

பரிபூர்ண சந்த்ர பரிஹாசி முகம் ஜலஜாயதாக்ஷம் அருணோஷ்டபுடம் |
ஹசிதாவலோக லலிதைரதுலை: அபி நந்தயத் ப்ரணதமாத்ம ஜனம் || (11-64)

பக்தர்களுக்கு மகிழ்ச்சியை கொடுப்பவன். வைகுண்டத்தில் ஸ்ரீஹரி, நான்கு கரங்களுடன், சுதர்சன (சக்ரம்), பாஞ்சஜன்ய (சங்கு), கௌமோதக (கதை), ஷார்ங்க (தனுஸ்) இவற்றை கையிலேந்தியிருக்கிறார். மார்பில் லட்சுமி, வயிற்றில் 14 உலகங்களையும், நாபி-கமலத்தில் பிரம்மனையும், தரித்திருக்கிறான். ஸ்ரீஹரியின் சரீரம் ஞானானந்த மயமாகி இருக்கிறது. ஸ்ரீஹரியின் குணங்களுக்கு, அவயவங்களுக்கும், ரூபங்களுக்கும் எவ்வித பேதங்களும் இல்லை. ஸ்ரீஹரி தோஷங்கள் அற்றவன்.

அவரவர்களின் ஞானபக்தி முதலான தகுதிக்கேற்ப அவர்களுக்கு காட்சியளித்து, மகிழ்ச்சியைக் கொடுக்கிறான். அனைத்து ஸ்ரீஹரியின் ரூபங்களும் மிக அழகானவை, அனந்தகுண பரிபூர்ணன், தோஷங்கள் அற்றவன், அழகானவன். அனைத்து வித முக்தர்களாலும் எப்போதும் போற்றப்படுபவன்.

ஆஸ்சர்ய ரத்னேஷ்வதிக ஜகத்ரயே ப்யாஸ்சர்ய மாஸ்சர்ய மஹோ முஹுர்முஹு: |
சௌந்தர்ய சாரைக ரசம் ரமாபதே: ரூபம் ததானந்தயதீஹ மோக்ஷிண: || (11-73)

ஸ்ரீஹரியே ஆச்சரியம்! அவனின் ரூபங்கள் ஆச்சரியம்! அவனின் குணங்கள் ஆச்சரியம்! மகிமைகள் ஆச்சரியம்! இத்தகைய ஸ்ரீஹரியின் ரூபங்களை முக்தர்கள் எப்போதும் சிந்தித்தவாறு, மகிழ்ச்சியுடன் இருப்பது அங்கிருக்கும் அனைத்து சஜ்ஜனர்களுக்கும் ஆச்சரியம்! பிரம்மாதி தேவதைகளால் நிரம்பிய வைகுண்டபதியின் திவ்ய சான்னித்யத்தின் அழகினை தரிசிப்பது, அந்த வைகுண்டத்தை வர்ணிப்பது யாரால் சாத்தியம்?

மோட்சத்தின் சிறப்பு

மோட்சத்தில் முக்தர்கள் எதை தேவை என்று நினைக்கிறார்களோ, அப்படி நினைத்த மாத்திரத்திலேயே அவை கிடைக்கின்றன என்று வேதங்கள் சொல்கின்றன. அனைத்து புருஷார்த்தங்களும், நற்-சித்திகளும், ஸ்ரீஹரியை எப்போதும் காணும் சௌபாக்கியமும் கிடைக்கும் இடம் வைகுண்டம்.

யம்யம் சுகீ காமயதேSர்த்தமத்ர சங்கல்ப மாத்ராத் சகலோSபி ச ஸ்யாத் |
இத்யேவ வேதா அபி வேதயந்தி முக்திம் தத: கோ விபவாதிரேக: || (11-78)

மோட்சத்திற்கான வழி

ஸ்ரீமதாசார்யரின் பிரம்மசூத்ராதி கிரந்தங்களை யார் கேட்டு, படித்து என்று எப்போதும் இருக்கிறாரோ, அவர்கள் ஸ்ரீஹரியின் அருளினால், முன்னர் வர்ணிக்கப்பட்ட மோட்சத்தை அடைவது நிச்சயம்.

மஹானந்த தீர்த்தஸ்ய யே பாஷ்யபாவம் மனோ வாக்பிரா வர்தயந்தே ஸ்வ ஷக்த்யா |
சுராத்யா நாராந்தா முகுந்த ப்ரசாதாத் இமம் மோக்ஷமேதே பஜந்தே சதேதி || (11-79)

நித்ய முக்தஸ்தானம் எனப்படும் மோட்சம் எனப்படும் விஷ்ணுபுரமானது, ஸ்ரீமதாசார்யரின் பாஷ்யாதி கிரந்தங்களை கேட்பதால், மறுபடி மறுபடி படிப்பதால் கிடைக்கிறது. என்றால் குரு மற்றும் ஸ்ரீஹரியின் அருளுக்கு பாத்திரமாவர் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை என்று தழுதழுத்த குரலில் சனகாதி அனைத்து தேவதைகளுக்கும் சேஷதேவர் கூறினார்.

பன்னிரெண்டாம் சர்க்கத்தின் சுருக்கம்

ஸ்ரீமத்வாசார்யரின் தத்வவாதம் அனைத்து திசைகளிலும் பரவத் துவங்கியதும், அதை தடுப்பதற்கும் கண்டிப்பதற்கும் மாயாவாதிகள் முயன்றனர். (மாயாவாதத்தின் சுருக்க அறிமுகம் உள்ளது). ஸ்ரீமதாசார்யர் வேதங்களை உச்சரிக்கும் முறை, பத்மதீர்த்தரினால் மாத்வ கிரந்தங்கள் திருடப்படுவது, புண்டரீகபுரியை ஆசார்யர் வாதத்தில் வெல்லுதல், ஆசார்யரின் மகிமையை சிஷ்யர் விளக்குதல், 'கோடிப்பாடி' கிராமத்தில் மத்வரின் சாதுர்மாச விரதம் - ஆகிய விஷயங்கள் இந்த சர்க்கத்தில் வந்துள்ளது.

தத்ரானந்த ஸ்வாந்த வேதாந்தி சிம்ஹே முக்யாவியாக்யா நிஸ்வனே ஜ்ரும்பமாணே |
சத்யோமாத்யாத் வாதி தந்தீந்த்ரபீமே பேஜே க்ஷோபோ மாயிகோமாயு யூதை: || (12-1)

பிரம்மசூத்ர பாஷ்யத்தை இயற்றுதல் மற்றும் சித்தாந்தத்தை அனைத்து இடங்களிலும் சிறப்பாக பிரச்சாரம் செய்வது, ரஜதபீடபுரத்தில் தம் சிஷ்யர்களுக்கு தத்வோபதேசத்தை விளக்குவது என ஆசார்யர் ஜொலித்துக் கொண்டிருந்தார். ஆசார்யரின் சித்தாந்தத்தை கண்டிக்க திறனற்ற மாயாவாதிகள் கலக்கமடைந்தனர். பொறாமையில் வெந்த அந்த மாயாவதிகள், சோள தேசத்திலிருந்த பத்மதீர்த்த மற்றும் புண்டரிகபுரி ஆகியோரிடம் சர்வக்ஞரான மத்வாசார்யரை வாதத்தில் எப்படி வெல்வது என்று ஆலோசித்தனர்.

அங்கு வந்திருந்த மாயாவாதிகளில் சகுனியைப் போன்று வஞ்சகனாக இருந்த ஒருவன் இவ்வாறு கூறினான். 'சங்கராசார்யரின் மாயாவதமானது நெடுங்காலமாக வந்துகொண்டிருக்கிறது. மேலோட்டமாகப் பார்த்தால் மாயாவாதமானது அனைத்து பிரமாணங்களுக்கும் எதிராகவே தோன்றினாலும், நமக்கு அது சாதகமாகவே இருக்கிறது. மாயாவாதத்தை நன்றாக அறிந்தால், பிரம்மனைவிட வேறாகத் தெரியும் இந்த ஜீவ ஜடாத்மகவான பிரபஞ்சத்தை - வேறுபாடு இல்லாத ஒன்று என்று நிரூபிக்கலாம். பிரம்மன் ஒருவரே உண்மை. அவன் உருவமற்றவன். நிர்குணன். நிர்விசேஷன். பழமையான வேதங்களினாலும் விளக்கப்பட முடியாதவன். ஜீவ - பிரம்மனின் வேறுபாடு இல்லை.

ஒருவருக்கு பிரம்மஞானம் கிடைத்தவுடன், அவரைப் பொறுத்தவரையில் உலகம் நெருப்பில் எரியும் துணியைப் போல ப்ரோக்ஷ நிலையில் மறைந்து போகின்றது. அபரோக்ஷ நிலையில், உலகம் பழுக்கக் காய்ச்சிய இரும்பில் தண்ணீர்

ஊற்றினால் அது ஆவியாகப் போய்விடுவதைப் போல மறைந்து விடுகிறது. நமது தத்வங்களான அஞ்ஞானம், மாயாவாதம் ஆகியவை உலகத்தை வியவஹாரிக நிலையிலும், பரமார்த்திக நிலையிலும் காண்பதற்கு உதவி புரிகின்றன. இத்தகைய உறுதியான தத்வங்களைக் கொண்டு நாம் மத்வரின் வேறுபாட்டுக் கொள்கையை நிராகரிப்போம். மத்வாசார்யரும் அவரது சிஷ்யர்களும் - ஸ்ரீஹரி அனந்தகுணபரிபூர்ணன், உலகம் உண்மை, பிரம்மன் ஜீவனிடமிருந்து வேறுபட்டவன் போன்ற தத்வங்களை போதித்தவாறு, மாயாவாதிகளின் அனைத்து வாதங்களையும் கண்டிக்கின்றனர். நாம் எதிர்க்கமுடியாத பல ஆதாரங்களைக் கொடுக்கின்றனர்.

ப்ராச்யம் சாஸ்திரம் யத் ஸபாதம் து லக்ஷம் வாக்யேனைகேனாsக்ஷிபத்தர்ஷ தீர்த்த: | (12-11). ஒன்றேகால் லட்ச கிரந்தங்களினால் கூடிய பழமையான மாயாவாதத்தை ஸ்ரீமதாசார்யர் **அஞ்ஞானா...** (12-12) என்னும் ஒரே வாக்கியத்தினால் நிராகரிக்கிறார். இப்படிப்பட்ட மத்வரை வெல்வதற்கு பத்மதீர்த்தர் ஒருவரால் மட்டுமே சாத்தியம் என்று நினைத்து உங்களை வந்து அடைந்திருக்கிறோம். புன்சிரிப்புடன் இருக்கும் மத்வாசார்யரை பார்த்தால் - **'வேதவியாஸேன்வேஷ வேதோ ந மூர்த்தோ திவ்யா மூர்த்திர்யஸ்ய சா சுஸ்மிதஸ்ய |'** (12-12) - 'இவர்தான் சாட்சாத் வேதவியாசரோ? உடல் கொண்டு வந்துள்ள வேதமோ' - என்று புகழ்ந்து - 'மாயாபக்ஷமூலம் பினத்தி' - மாயாவாத மதத்தின் மூலத்தையே கத்தரிப்பதைப் போல தோன்றுகிறது.

ஞானிகளான மத்வாசார்யரையும் அவரின் சிறந்த சித்தாந்தத்தையும் கண்டு கலக்கம் கொண்ட மாயாவாதிகள் - 'இப்போது நம் கோபத்தை கேளுங்கள். மாயாவாதம் அழிந்து கொண்டிருக்கிறது. எத்தகைய கஷ்டம் வந்திருக்கிறது. அய்யோ, நாம் அபாக்யசாலிகள்' என்று துக்கப்பட்டனர். **'ஆக்ரந்தம் மே ஹந்த ஸ்ருண்வந்து சோsயம் ஹாஹா மாயாவாத உத்சாதமேதி ||'** (12-7). மத்வரின் சிஷ்யர்கள், அவர்களின் தத்வவாதத்தை அனைத்து இடங்களிலும் சிறப்பாக பரப்பிக் கொண்டிருக்கின்றனர். நம்மவரே ஆன சிலர், மத்வ பாஷ்யத்தை புகழ்கின்றனர்.

இத்தகைய பேச்சினைக் கேட்டு இன்னொருவன் - 'இந்த மத்வாசார்யரைக் கண்டு பயப்படுபவர்கள் கோழைகள். பத்மதீர்த்தரைப் போன்ற பெரிய பண்டிதர் இருக்கும்போது நமக்கு பயம் எதற்கு? தத்வவாதத்தை கண்டிக்க முடியாவிட்டாலும், மந்திர தந்திரங்களினால் பத்மதீர்த்தர் முதலானோர் மத்வாசார்யரை வெல்லமுடியும்.

மத்வ சித்தாந்தத்தில் இல்லாதவற்றை நாம் எடுத்துச் சொல்லவேண்டும். தந்திரத்துடன் பிரதிவாதிகளை நாம் எதிர்கொள்ள வேண்டும். நெருப்பு தூரத்தில் இருந்தாலும், வெண்ணெய் உருகுவதைப் போல, ஆசார்ய மத்வர் தூரத்தில் இருந்தாலும், மாயாவாதிகள் பயங்கொண்டது நன்கு தெரிந்தது. ஆனால் மந்திரம், தந்திரம் என எதையாவது செய்து மத்வரை வெல்லவேண்டும் என்று தீர்மானித்தனர். **'கிராமே கிராமே வார்யதாம் மானனைஷாம் பூர்வம் பூர்வம் சாம பூர்வருபாயை: |'** (12-24). ஒவ்வொரு கிராமத்திற்கும் போய் மத்வரின் சிஷ்யர்கள் அங்கு வராதவாறு தடுப்போம். அப்படி நுழைந்தாலும் அவர்களுக்கு

மரியாதை கிடைக்காதவாறு செய்வோம். அவர்களது புத்தகத்தை பறிப்பது, தண்டத்தை முறிப்பது, ஆகியவற்றை செய்யவேண்டும்.

சிறுமதி படைத்த மாயாவாதிகள் இத்தகைய துராலோசனைகளை செய்து, மத்வாசார்யரை வெல்ல வேண்டுமென்ற நோக்கத்துடன், விஷ்ணு மற்றும் விஷ்ணு பக்தர்களின் த்வேஷியான புண்டரிகபுரி என்னும் சன்யாசியை உடுப்பிக்கு அனுப்பினர். இந்த புண்டரிகன் எப்படி இருந்தான் என்றால் - **'யத்வத் சிம்ஹம் கிராம சிம்ஹோsஷுசீச்சோ ஹம்சம் காகோ யத்வதேவைக த்ருஷ்டி: |' (12-27).** அழுக்கை விரும்பும் நாய், சிம்மத்தை; ஒரு கண்ணுள்ள காக்கை, அன்னத்தை; தந்திரமிக்க நரி, புலியை; போட்டிக்கு அழைப்பதைப் போல, மூடனான புண்டரிகபுரி சர்வக்ஞரான மத்வாசார்யரை வாதத்திற்கு அழைத்தான். மகாதேஜஸ்வியான பூர்ணப்ரக்ஞர், தமது சித்தாந்தத்தை ஸ்ருதி, ஸ்ம்ருதி, புராணங்களினால் நிரூபித்து அந்த புண்டரிகபுரியை வென்றார். ஸ்ரீஹரியை மகிழ்விப்பதற்காக வேத பிரவசனங்களை செய்தார்.

ஸ்ரீமதாசார்யர் வேத கோஷங்களை துவக்கினார். அவரது உச்சரிப்பு மிகவும் அற்புதமாக இருந்தது. திடமான குரல், ஏற்ற இறக்கம் சரியாக, மாத்திரை அளவுகளை சரியாகவும் உச்சரித்தார். பஷ்யந்தி, மத்யமா மற்றும் வைகரி என்னும் மூன்று நிலைகளை அந்தந்த தேவதைகளை தியானிப்பதன் மூலம் தெரியவைத்த ஸ்ரீமதாசார்யர், அந்த தேவதைகள் மற்றும் ஸ்ரீமன் நாராயணனை விசேஷமாக சிந்திப்பவரானார்.

வேதகோஷம் செய்யும்போது ஆசார்ய மத்வர் 'பாகவதீ' 'பிபீலிகா' ஆகிய விருத்திகளை மிகச்சிறப்பாக சரியாக உச்சரித்தார். உதாத்த, அனுதாத்த மற்றும் ஸ்வரித ஆகிய மூன்று சிறந்த ஸ்வரங்களுடன் மந்திரங்களை உச்சரித்தார். ஆசார்யரின் வேத உச்சாடனம் பார்ப்பதற்கு அபூர்வமாக இருந்தது. **'ரேஜே மாத்வி சுஸ்வரா வேத வாணி ||' (12-33)** . ஸ்ரீமதாசார்யரின் அழகான, விதிகளுக்கு உட்பட்ட வேத உச்சாடனம் - அவர் இன்னொரு திரௌபதியோ என்பதாக அனைவரையும் நினைக்க வைத்தார். அவரது வேத உச்சாடனம் வேதாங்கங்களான சிக்ஷா, சந்தஸ், வ்யாகரண, நிருக்த, கல்ப, ஜ்யோதிஷ ஆகியவற்றிக்கு ஏற்றவாறு இருந்தது.

காம்பீர்யாத்யை: யுக்தமௌதார்ய கார்யை: நானா நாத ஷ்லாக்யமுச்சாரணம் தத் |
சீக்ஷா சிக்ஷா லக்ஷணானாம் ஹி லக்ஷ்யம் மான்யம் மன்யே தன்ய புத்தேரதுல்யம் || (12-34)

ஆசார்யரின் கம்பீர உச்சாடனங்கள் பார்ப்பதற்கு நன்றாக இருந்தது. சபையில் கூடியிருந்த பிராமணர்கள், ஸ்ரீமதாசார்யரின் வேத உச்சாடனங்கள் மற்றும் வியாக்யானங்களைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். புண்டரிகபுரியை வேத வியாக்யானம் செய்வதற்கு அழைத்தனர். புண்டரிகபுரியோ, முதல் ஸ்லோகத்திலேயே தவறாக உச்சாடனம் செய்து, அனைவரின் சிரிப்புக்கு ஆளாகி, வாதத்தில் தோற்றான். சபையினரிடம் அவமானமடைந்தான். இங்கு நாராயண பண்டிதர், வேதாபிமானியான சரஸ்வதி, கருடாதிகளே பூர்ணபிரக்ஞரின் வேத

உச்சாடனம், வியாக்யானங்களை வர்ணிக்க வல்லவர்கள். நம்மால் இது சாத்தியமே இல்லை என்கிறார்.

மத்வரின் கிரந்தங்களை திருடுதல்

லிகுச வம்சத்து சங்கராசார்யர் என்பவரிடம் ஸ்ரீமதாசார்யர் தமது கிரந்தங்களை பாதுக்காகக் கோரியிருந்தார். அவரால் இந்த கிரந்தங்கள் காப்பாற்றப்பட்டு வந்தன. ஆனாலும், பத்மதீர்த்தர் என்னும் சன்யாசி (இவர் சோளதேசத்து மாயாவாத மதத்தவர்) அந்த கிரந்தங்களை திருடினார். அதைக் கேள்விப்பட்ட ஆசார்யர், மூத்த யதிகளுடன் 'ப்ராக்ரவாட' என்னும் கிராமத்தில் இருந்த பத்மதீர்த்தரிடம் வந்து அவரை வாதத்தில் வென்றார். பத்மதீர்த்தருக்கு உதவிக்காக வந்த புண்டரிகபுரியை மறுபடி வாதத்தில் தோற்கடித்து, கிரந்தங்களை திருடிய பத்மதீர்த்தருக்கு தக்க தண்டனை வழங்கவேண்டுமென்று நினைத்தார். ஏகவாட என்னும் கிராமத்தின் தலைவனிடத்தில் அந்த கிரந்தங்களைக் கொடுத்து வைத்து, பின் அரசர் மூலமாக அவற்றை பெற்றுக்கொண்டார்.

மத்வரின் பெருந்தன்மை

பின் ஆசார்யரின் சிஷ்யர், மாயாவாதிகளைக் குறித்து இவ்வாறு கூறினார். **'ப்ராப்த: காலோ த்ராக் குஹாந்தம் ப்ரவேஷ்டும் ||' (12-47)** ஹே மாயாவாதிகளே! மத்வாசார்யர், பிரம்மஸ்வரூபத்தை அனைத்து இடங்களிலும் பரப்பியவாறு சூரியனைப் போல ஒளிர்கிறார். சூரிய உதயத்தின்போது இருட்டு அழிகின்றது. மத்வர் என்னும் சூர்யோதயத்தினால் அஞ்ஞானம், தவறான ஞானம் ஆகியவை நாசமடைகிறது. வேகமாகப் போய் குகைக்குள் ஒளிந்து கொள்ளுங்கள். உங்களை வெல்வதற்கு ஆசார்யர் சப்த-ஆகமங்களை ஏந்தி அவதரித்திருக்கிறார். கருடனைப் பார்த்து பாம்பு ஓடிப்போவதைப் போல, கருடோத்தமரான மத்வரைப் பார்த்து ஓடிப் போய்விடுங்கள் மாயாவாதிகளே'. ஏனென்றால் - **'மத்வாதித்யம் சம்ஸ்ரிதம் கோSபிதத்தே |' (12-50)** 'மத்வ சூரியரை யாரால் மூடமுடியும்?. சூரிய ஒளியினால் இருட்டு அழிவது சகஜம்தானே'.

விதாவத விதாவத த்வரிதமத்ரி வாதாசுரா (12-51)

ஜீவ-ஈஸ்வரனில் பேதங்கள் இல்லையென்று சொல்லி, உண்மையை மறைத்து, அனைவரின் அனுபவத்திற்கும் வரும் இந்த உலகினை பொய் என்று வாதிக்கும் மாயாவாதிகளே! ஸ்ரீமதானந்த தீர்த்தர் என்னும் நரசிம்மன் வருகிறார். ஆதாரங்கள் என்னும் கூரிய நகங்கள் அவரிடம் உள்ளன. இவற்றினால் அவிவேகிகளான குவாதிகளை, தமது வியாக்யானம் என்னும் பயங்கரமான கர்ஜனையின் உதவினால் கிழித்துவிடுவார். ஆகையால், மாயாவாதிகளே வேகமாக இங்கிருந்து ஓடிவிடுங்கள். இரு நாக்குகள் உடைய பாம்பினைப் போன்றவர்கள் நீங்கள். சத் சித்தாந்தத்தை நிரூபித்த ஸ்ரீமதானந்ததீர்த்தர் கருடனைப் போன்றவர். மோட்சத்தைக் கொடுக்கக்கூடிய சித்தாந்தத்தை நிறுவியவாறு, உங்களையும் கண்டிக்கிறார். வேகமாக ஓடி குகைகளில் ஒளியுங்கள்.

ஸ்ரீமன்மத்வாசார்யரை ஸ்ரீமன் நாராயணனுக்கு ஒப்பிடுகிறார். நாராயணன் அசுரர்களை வதம் செய்கிறார் என்றால், மத்வர் மாயாவாதிகளை கண்டிக்கிறார். வேதங்கள் சுதர்சன சக்ரத்தைப் போன்றதாகும். பிரம்மதர்க்கம் சங்கினைப் போன்றதாகும். வேதவியாசரின் புராணங்கள் கௌமோதகீ கதையைப் போன்றதாகும். பஞ்சராத்ரங்கள் ஷார்ங்க ஆகும். பிரம்மசூத்ரங்களை பாணங்களாக, மூல ராமாயண பாரதாதிகள் வாள் என்றும், மாயாவதிகளை முழுமையாக நிராகரிக்க, ஆசார்யர் என்னும் நாராயணன் வருகிறார். ஆகையால் உடனடியாக ஓடிப்போய் ஒளியுங்கள் என்று சிஷ்யர்கள் மாயாவாதிகளை எச்சரித்தனர்.

பிறகு ஸ்ரீமத்வர் காபு கிராமத்திலிருந்து கிளம்பி கோடிபாடி என்னும் ஊரின் ஆலயத்தில் சாதுர்மாசத்திற்கு அமர்ந்தார். அங்கிருக்கும் ஜனார்த்தன ரூபி ஸ்ரீஹரியை வணங்கினார்.

***

பதிமூன்றாம் சர்க்கத்தின் சுருக்கம்

ஸ்ரீமன் மத்வாசார்யர், ப்ராக்ர்யவாட கிராமத்தில் சாதுர்மாசத்தை முடித்து சஹ்யாத்ரிக்கு வந்தார். ஜயசிம்ம ராஜனின் அழைப்பின் பேரில் அந்த பிராந்தியத்திற்கு பிரயாணம். மதனேஸ்வர தேவாலயத்திலிருந்து வந்த, அழகான தேஜஸ்ஸினை உடைய ஆசார்ய மத்வருக்கு ஜயசிம்ம்மன் செய்த அபூர்வமான வரவேற்பு, அனைத்து தேவர்களாலும் வணங்கப்படும், சச்சிதானந்த மூர்த்தியான ஸ்ரீமத்வரின் மங்கள உருவ வர்ணனை. பாகவத பிரவசன ரூபத்தில் மத்வவாணி, த்ரிவிக்ரம பண்டிதரின் பின்னணி, பாலலீலைகளுடன் அவரது சிறப்புகள், தத்வங்களை அறியவேண்டுமென்ற அவரது ஆவல், ஆசார்யருடன் சந்திப்பு - ஆகியவை இந்த சர்க்கத்தில் உள்ளன.

ஸ்ரீமத்வாசார்யர் ப்ராக்ர்யவாட கிராமத்தில் தமது சாதுர்மாசத்தை முடித்து, பத்மதீர்த்தரிடமிருந்து திரும்பப் பெற்ற கிரந்தங்களை கிராமத்து தலைவனிடம் ஒப்படைத்து, சிஷ்யரின் வேண்டுகோளுக்கிணங்க சஹ்யாத்ரி கிராமத்திற்கு வந்தார். ஜயசிம்மனின் அழைப்பையும் ஏற்றார். **’ஸ்வபாத சங்காத் ப்ருதிவீம் ப்ராக்ஞு திவாகரேண ரேஜே |’ (13-3)** - தம் நடைப்பயணத்தால் பூமியை பவித்ரமாக்கியவாறு, கங்கையைப் போல பிரவாகித்து வந்தார். மாயாவதிகளை வாதத்தில் வீழ்த்தி, சஜ்ஜனர்களுக்கும், தம்மில் பக்தி உள்ளவர்களுக்கும் அருளினார். தோஷமற்ற ஸ்வரூபமுள்ள ஆசார்யர், அங்கிருந்து விரைவாக கபீனாடு (காசரகோடு) மதனேஸ்வர ஆலயத்திற்கு வந்தார்.

அடுத்த நாள். தனது ஆன்ஹிகங்களை முடித்தார். பயணத்தை தொடர்ந்தார். சிஷ்யர்களுடனான ஆசார்யரின் பயணம் என்றால் அது ஒரு விழா போன்றதாகும். ஒரு சன்யாசி சிஷ்யர், ஆசார்யருக்கு ஒரு துளசி மாலையை சமர்ப்பித்தார். இன்னொருவர் சாலிகிராமங்கள் நிறைந்த பெட்டியை தனது தலையில் ஏந்தினார். இன்னொருவர் புத்தக மூட்டையை சுமந்தார். ஒரு சிஷ்யர் ஆசார்யருக்கு குடை

பிடித்தால், இன்னொருவர் அவரை தனது தோளில் சுமந்து நடந்தார். உலகத்தையே சுமக்கும் வாயுதேவருக்கு இது எப்படி இருக்கும்?

ஸ்ரீமதாசார்யரின் பயணம் என்றால், அது ஸ்ரீஹரியின் ரதயாத்திரை. அதில் உடனிருந்தவர்களே தன்யர். சிஷ்யர்களில் சன்யாசி, கிருஹஸ்தர், ப்ரம்மசாரிகள் என அனைவரும் இருந்தனர். அவரவர்களின் ஆசிரம தர்மங்களை பின்பற்றினர்.

பரிவார ஜனா ந மார்க துக்கம் ப்ரயயு: பூருஷ ரத்னமீக்ஷ்யமாணா: |
இதி நாத்புதமஸ்ய ஹி ப்ரயாந்தி ஸ்ம்ருதி மாத்ராத் பவினோ பவாபவர்கம் ||
(13-20)

ஆசார்யருக்கு சோர்வு என்பதே இல்லை. ஆனந்ததீர்த்தரை பார்ப்பவர்களுக்கு பிரச்னைகள் இல்லை. அவரை நினைப்பவர்களுக்கு, சம்சாரம் என்னும் துக்கம் நாசமடைகிறது என்றால் அவரது தரிசனத்தால் மோட்சத்தையே பெறுகிறார்கள் என்பதில் ஆச்சரியம் என்ன?

இதற்குள் ஆசார்யர் வரும் செய்தி ஜயசிம்மனுக்கு கிடைத்தது. உடனடியாக அவரை சந்திக்கவேண்டி புறப்பட்டான். தன் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக ஆயிற்று என்று நினைத்தான். **’சஹ கைஸ்சன பூ சுரைரவாப்த: த்ரிஜகத் பூஜ்ய பதாந்திகே நனாம ||’ (13-22)**. சைன்யத்தை தூரத்தில் நிறுத்தி, மூன்று உலகத்தவரும் வணங்கும்படியான ஆசார்யரின் பாதம் பணிந்தான். பணிவு, பக்தி நிரம்பிய மனதுடன் ஆசார்யரை வரவேற்றான். விஷ்ணுமங்கள ஆலயத்திற்கு அருகில் வந்தனர். பல கிராமங்களிலிருந்து அரசனைக் காண வந்த மக்கள், ஸ்ரீபூர்ணப்ரக்ஞரை கண்டவுடன் மெய்மறந்து அவரையே பார்த்து நின்றனர். ஸ்ரீமதானந்த தீர்த்தரால் இயற்றப்பட்ட ஹரிஸ்தோத்திரம் (த்வாதச ஸ்தோத்திரம் முதலான) படித்தவாறு, அழகான குரல்களில் பாடியவாறு, சிலர் நடனமாடியவாறும் வந்தனர்.

பூர்ணபிரக்ஞரின் தோற்ற வர்ணனை

உதயசூரியனின் ஒளியைவிட அதிக ஒளிகொண்டவரான பூர்ணபிரக்ஞரின் நடை சிங்கத்தின் நடையைப் போல இருந்தது. அனைத்து சுப லட்சணங்களையும் கொண்டவரான ஸ்ரீமதாசார்யரை மக்கள் பார்த்த விதத்தை பண்டிதர் அழகாக வர்ணிக்கிறார்.

நக நிர்ஜித பத்மராக ராகம் வரகூர்ம ப்ரபதம் நிகூடகுல்பம் |
சுரவர்ய கராக்ர சேவ்ய ஜங்கம் த்விரதோதார கரோபமோரு யுக்மம் || (13-29)

பத்மராக மணியைப் போன்ற கால் நகங்கள். ஆமையைப் போன்ற பாதங்கள். ருத்ராதி தேவதைகளும் வணங்கத்தக்க கால்கள், வலுவான இரு தொடைகள், யானையின் துதிக்கையைப் போன்று இருந்தன. தூய பட்டாடையை இடுப்பில் அணிந்திருந்தார். மெலிந்த வயிறு, கழுத்து மற்றும் நெற்றியில் மூன்று ரேகைகள் இருந்தன. விசாலமான மார்பு, பெரிய சுவரினைப் போன்ற தோள்கள், பெரிய, நீண்ட,

வட்டமான அழகான தும்பிக்கையைப் போன்ற கைகள், அவரது உள்ளங்கை சிவப்பாக, த்வஜ, சக்ராங்கித போன்ற ரேகைகளைக் கொண்டிருந்தன.

முதன்முதலில் பார்ப்பவர்கள் அவரது முகத்தை முழுநிலவோ என்று எண்ணுவர். பிறகு நிலவில் இருக்கும் குறைகள் இவர் முகத்தில் இல்லை என்று அறிவர். மத்வரின் சிரிப்பு மிகவும் அழகானது. அனைவரும் ஈர்க்கவல்லது. அவரது வரிசையான பற்கள், மல்லிகை மொட்டுக்களை போல அழகாக இருந்தன. உதடுகள் செக்கச் சிவந்திருந்தன. தாமரை இதழ்களைப் போன்ற பெரிய கண்கள். துளசி தரித்த பெரிய காதுகள். அழகான கன்னங்கள் இவற்றுடன் கூடிய ஸ்ரீமதாசார்யரை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டனர்.

மொத்தமாக சொல்லவேண்டுமெனில் **'சகலாவயவான் ஸ்புடம் மிமானா: ப்ரதிமா லக்ஷண லக்ஷணாய லக்ஷ்யம் |'** (13-36) லட்சண சாஸ்திரத்தில் சொல்லியவாறு அனைத்து உறுப்புகளையும் கொண்டிருந்தார் ஸ்ரீமதாசார்யர். கடவுளர்களின் சிலைகளுக்கான மாதிரிக்கான சரியான அளவுகளைக் கொண்டிருந்தார். ஆயிரக்கணக்கான மக்களுக்கு நடுவில் இருந்தாலும், சஜ்ஜனர்களின் மேலிருந்த கருணையால், மார்புக்கு மேலான பகுதியை அனைவருக்கும் தெரியுமாறு இருப்பார். இவரைக் கண்ட மக்கள் வியப்புடன், நாம் தன்யரானோம் என்று கருதினர். மத்வரின் சித்தாந்தமும் இவ்வாறு மக்களிடையே பரவத் துவங்கியது என அறியலாம்.

சர்வக்ஞ மத்வரின் சொற்பொழிவு

பிறகு விஷ்ணுமங்கள ஆலயத்தில் நுழைந்தார். பெரிய சபை. நரசிம்ம பூபாலன், பல அரசர்கள், அறிஞர்களுக்கு நடுவில் ஆசார்யர் நட்சத்திரங்களுக்கு நடுவே ஒளிரும் நிலவைப் போல காட்சியளித்தார். ஸ்ரீமதாசார்யரின் சிஷ்யரான ஹ்ருஷிகேச தீர்த்தர் பாகவத பிரவசனத்தை செய்ய, ஸ்ரீமதாசார்யர் ஸ்ரீகிருஷ்ணனின் கதையை மிகவும் அற்புதமாக சொற்பொழிவாற்றினார். இவரது பேச்சில் இருந்த உணர்ச்சிகளைக் கண்டு அனைவரும் மயங்கி மகிழ்ச்சியடைந்தனர். பண்டிதர்களுடன் பாமரர்களையும் இவரது சொற்பொழிவு அமிர்த சாகரத்தில் மூழ்கடித்தது.

கமனாசன சங்கதாதி லீலா: ஸ்ம்ருதி மாத்ரேண பவாபவர்க தாத்ரீ: |
கதமப்யமரா: ப்ரபஞ்சயேயு: நனு மத்வஸ்ய ந மாத்ருஷோऽல்ப போதா: || (13-42)

ஜீவோத்தரமான ஸ்ரீமதாசார்யரின் வருகை, பேச்சு, சொற்பொழிவு ஆகிய லீலைகளை நினைத்த மாத்திரத்திலேயே சஜ்ஜனர்களுக்கு சம்சார துக்கம் களைந்து, நித்ய சுகமயமான மோட்சம் கிடைக்கிறது. மத்வரின் ஸ்மரணையே துக்கத்தைப் போக்கும்; ஞானானந்தங்களைக் கொடுக்கும்; இறுதியில் மோட்சமே கிடைக்கும். இத்தகைய மகிமை பொருந்தியவரின் லீலைகளை பாரதிதேவி, ருத்ராதிகளின் அருளால் தேவதைகள் மட்டுமே சொல்லவல்லர். என்னைப் போன்ற சிறுமதியினர் எப்படி வர்ணிக்க முடியும் என்று மிகப் பணிவுடன், தழுதழுத்த குரலில் நாராயண பண்டிதர், ஆசார்யரைக் குறித்து விவரிக்கிறார்.

ஸ்ரீத்ரிவிக்ரம பண்டிதரின் பின்னணி

லிகுச வம்சம் அங்கிரச கோத்ரத்தை சேர்ந்தவர் சுப்ரமண்யர். சிறந்த தவம் செய்துவந்த பண்டிதர். கவிஞர். இவரது மனைவி உத்தமள். கிருஷ்ணபக்தை. இவர்களுக்கு பல குழந்தைகள் பிறந்தாலும், யாரும் தங்கவில்லை. கவலைப்பட்ட தம்பதிகள் லோகேஸ்வரனான ஹரியை மற்றும் சங்கரநாராயணனை (ஹரிஹர) வேண்டினர். ஸ்ரீஹரியின் அருளால் ஒரு சிறந்த குழந்தையைப் பெற்றனர். இந்த குழந்தைக்கு சுப்ரமண்யர், ஜாதகர்மம் முதலான கர்மங்களை செய்து, த்ரிவிக்ரம என்று பெயரிட்டனர். **'களா பாஷண ஏவ ஸூரி போத: கவிராசீதனவத்ய பத்யவாதீ |' (13-47)** மழலைப் பேச்சின்போதே இந்தக் குழந்தை பிழைகளற்ற சமஸ்கிருத ஸ்லோகங்களை இயற்றும் ஆசு-கவியாக இருந்தான். தக்க சமயத்தில் உபநயனம், வேத அத்யயனம் ஆயிற்று. அனைத்து சாஸ்திரங்களிலும் தலைசிறந்தவனாக ஆனான். இப்படி அனைத்து மதங்களின் அறிஞர்களிடமும் நற்பெயர் பெற்றார். உஷாஹரண என்னும் நவரசங்கள் நிரம்பிய காவியத்தை படைத்தார்.

அத்வைத பண்டிதரான த்ரிவிக்ரமர், அதிலிருந்த குறைகளை முன்பே அறிந்திருந்தாலும், சரியான விளக்கத்தைப் பெறமுடியாமல் குழப்பத்தில் இருந்தார். ஒருமுறை இவரது தந்தை இவரிடம் - 'மகனே, அனைத்தையும் யோசித்து சொல்கிறேன், கேள். பிரம்மன் நிர்குணன் என்பது சரியல்ல. இதனால் என்றும் மோட்சம் கிடைக்காது. ஆகையால், **'பஜ தேவம் வசுதேவ ஸூனுமேவ ||') (13-52)** ஞானானந்தாதி சகலகுணபூர்ணனான வாசுதேவனை வணங்கு - என்றார்.

'அபரஸ்பர சங்கதானி பாஷ்யாண்யபி சர்வாணி ந மானதாம் வ்ரஜேயு: ||') (13-55). பிரம்மசூத்ரத்திற்கு அன்று இருந்த 21 பாஷ்யங்கள் ஒன்றுக்கொன்று முரணாகியும், தத்வத்திற்கு எதிராகவும் இருந்தன. ஆகையால் உண்மையான பிரம்மனின் ஸ்வரூபத்தையும், உபாசன கிரமத்தையும், நித்யசுகமான மோட்சத்தைப் பற்றியும் அறியலாம் என்று எண்ணினார். அப்படியெனில், உண்மையான, வேதவியாசருக்கு சம்மதமான பாஷ்யம் இன்னொன்று இருக்கக்கூடும் என்று ஊகித்தார்.

இப்படி சிந்திக்கையில் பண்டிதருக்கு சம்சார சாகரத்தைத் தாண்டும் யோசனையும் இருந்தது. வேதவியாசரின் பிரம்மசூத்ரத்திற்கு இயற்றப்பட்ட அனைத்து பாஷ்யங்களையும் படித்தார். பிறகும் அவர் சமாதானம் அடையவில்லை. அன்றைய சங்கர பாஷ்யத்திலும் சரியான ஆதாரங்கள் இல்லாததை அறிந்தார். பிரம்மனின் உபாசனை இல்லாமல், நித்ய சுகம் கிடைக்காது என்று அறிந்தார். ஆனாலும், அனைத்து சாஸ்திரங்களையும் கற்று, நாராயணனை வணங்குவதற்கு ஸ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கும் தர்மங்களை பின்பற்றவும் தயாரானார்.

அப்போது, ஸ்ரீபூர்ணப்ரக்ஞர் என்னும் ஞானசூரியனின் புகழ் பண்டிதரின் காதில் விழுந்தது. மாயாவாதி பண்டிதர்கள் சிலர் த்ரிவிக்ரமரை அணுகி - 'பண்டிதரே! ஸ்ரீமதானந்ததீர்த்தர் என்னும் அறிஞர் பிறந்து, மாயாவாதிகளை கண்டித்து, த்வைத

சித்தாந்தத்தை பரப்பி வருகிறார். அவருடன் வாதிப்பதற்கு யாரும் தயாராக இல்லை. சிறந்த அறிஞரான நீங்கள் மட்டுமே அவருடன் வாதம் செய்யத் தகுந்தவர். வேறு யாராலும் செய்யமுடியாத இந்த செயலை நீங்கள் செய்து நம் சித்தாந்தத்தை காப்பாற்றவும்' என்று வேண்டினர். த்ரிவிக்ரமரும் அதற்கு தான் தயார் என்று சொல்லி, ஸ்ரீமதாசார்யாரை எப்படி எதிர்கொள்வது என்று சிந்திக்கலானார். 'மனஸா சம்ஷயமாப'. இதுவரை தோற்று அறியாத பண்டிதர், ஆசார்ய மத்வரின் உண்மையான சித்தாந்தத்தை நிராகரிப்பதில் சந்தேகம் கொண்டார்.

அதவேத புராண பாரதானி ஸ்வயமாலோச்ய யதாவபோத மத்ர ।
குணவந்தம் உபாஸ்மஹே முகுந்தம் ஸ்ம்ருதி தர்மான் ஸ்புடமா சரந்த ஏவ ||
(13-60)

த்ரிவிக்ரம பண்டிதர், வேத சாஸ்திர புராணங்களின் சாரத்தை அறிந்தவராக, தமக்கு தெரிந்தவரையில், சகலகுண பரிபூர்ணனான முகுந்தனையும் மற்றும் ஸ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லியவாறும் தன் கடமைகளைச் செய்து வந்தார். மத்வரிடம் ஏற்கனவே இருந்த தனது சகோதரன் அனுப்பியிருந்த மத்வரது கிரந்தங்களை, இரவு சமயங்களில் படித்து வியப்படைந்து உண்மையான அறிவினைப் பெற்றார். ஸ்ரீமதாசார்யரின் தத்வவாத மற்றும் அபூர்வமான வர்ணனைகளைப் படித்து, மனதில் மாத்வராகவே மாறிவிட்டார்.

பிறகு ஸ்ரீமதாசார்யரைக் கண்டு தம் மனதிலிருந்த சந்தேகங்களைப் போக்கி, ஸ்ரீமதாசார்யரின் சித்தாந்தமே தோஷங்கள் இல்லாதது என்று மெச்சினார். ஆனாலும் பண்டிதர் த்வைத சாஸ்திரங்களை ஒப்பவில்லை. **'விம்ருஷ்ய க்ருதி குருதேSகிலம் ||'** **(13-68)** காரணம், விவேகிகள் எந்த விஷயத்தையும் விமரிசனமில்லாமல் செய்யமாட்டார்கள். ஒருமுறை த்ரிவிக்ரம பண்டிதர், விஷ்ணுமங்களத்தில், சஜ்ஜனர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய, தசப்ரமதிகள் என்று அழைக்கப்பட்ட, ஸ்ரீபூர்ணப்ரக்ஞரிடத்தில் வந்து வணங்கினார். இது தேவேந்திரன் பரபிரம்ம தத்வங்களை அறிவதற்கு நான்முக பிரம்மனிடத்தில் வந்ததைப் போலிருந்தது.

***

பதினான்காம் சர்க்கத்தின் சுருக்கம்

ஸ்ரீமதானந்ததீர்த்தரைக் கண்ட ஜயசிம்ம பூபாலன், அவரின் அறிவு, திறன், தவம், தேஜஸ்ஸினைக் கண்டு மயங்கினான். பணிவுடன் அவரது சேவகனானான். பத்மதீர்த்தரிடமிருந்து கைப்பற்றிய கிரந்தங்களை மறுபடி ஆசார்யரிடம் ஒப்புவித்தான். சபையில் த்ரிவிக்ரம பண்டிதரின் வருகை. தேவதைகளும் நினைக்கக்கூடிய ஸ்ரீமதானந்ததீர்த்தரின் தினப்படி செயல்களை நாராயண பண்டிதர் மிக அழகாக வர்ணிக்கிறார். அருணோதய காலத்திலிருந்து துவங்கி மாலையில் ஆன்ஹிகங்களின் வரை அனைத்து செயல்களையும் ஸ்ரீஹரியின் யக்ஞமாக

நினைத்து, சஜ்ஜனர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும், தேவதைகளாலும் மதிக்கத் தக்கவராக இருந்தார் - என்ற விஷயங்கள் இந்த சர்க்கத்தில் உள்ளன.

பரிவ்ருடகனசங்கே ராஜ சிம்ஹோர்ஜ ஷக்த்யா த்யஜதி மலின பாவம் நீரஸ த்வான்னிகாமம் |
ஸ்புடமுதயதி தேஜஸ் உஜ்ஜ்வலே மத்வபானௌ சுஜன ஜயஜகாந்த்யை விஷ்வமாசீன்மனோஜும் || (14-1)

சஜ்ஜனர்களை காப்பாற்றுவதற்காக வந்த ஸ்ரீமதாசார்யரின் தினப்படி ஆன்ஹிகங்கள் / செயல்கள், பக்தர்களுக்கு தெரியவருகிறது. இதனை அறிந்த சுஜனர்கள் சுகத்தை அடைந்தார்கள். பத்மதீர்த்தன் களவாடிச் சென்ற கிரந்தங்களை ஜயசிம்மன் மறுபடி கொண்டு வந்து ஒப்படைத்தான். ஆசார்யர் அதனை மறுபடி சங்கர பண்டிதரிடம் கொடுத்து பாதுகாக்கும்படி சொன்னார். கிரந்தங்களை திருடியவரை பூபாலன் மற்றும் ஆசார்யர் மன்னித்தனர்.

ஸ்ரீமதாசார்யர் தலைமையில் ஒரு சபை. அறிஞர்கள், ராஜன் ஆகியோர் இருந்தனர். கவிகுலதிலகரான த்ரிவிக்ரம பண்டிதர் வருகை தந்தார். ஸ்ரீமதாசார்யரின் பாதங்களில் அமர்ந்தார். ஆனந்ததீர்த்தரின் நட்பினால் ஜயசிம்மனுக்கு கிடைத்த சௌபாக்கியத்தைக் கண்ட த்ரிவிக்ரம பண்டிதர் - **'ஆனந்ததீர்த்த பகவத்பதபத்மரேணு: ஸ்வானந்ததோ பவது தே ஜயசிம்ஹபூப'** (பாவபிரகாசிகா) 'ஜயசிம்ம ராஜனே ! ஆனந்ததீர்த்தரின் பாதத்துளிகள் உனக்கு எப்போதும் ஆனந்தத்தையே கொடுக்கட்டும்' என்று ஆசிர்வதித்தார். ஆனந்ததீர்த்தரை முதன்முதலில் பார்த்த த்ரிவிக்ரம பண்டிதரின் வாக்கு இப்படியாக இருந்தது. இதற்குள் பண்டிதர் ரகசியமாக ஆசார்யரின் திறன், புலமை, நற்குணங்கள் என அனைத்தையும் அறிந்திருந்தார்.

இப்படி பூர்ணப்ரக்ஞர், தம்மிடம் பக்தி கொண்ட சஜ்ஜனர்களுக்கு ஞானபக்தி ஐஸ்வர்யங்களை வழங்கியவாறும், எதிரிகளல்லாத மத்யஸ்தர்களுக்கு வியப்பை உண்டுபண்ணியும், துஷ்டர்களுக்கு அதிகப்படியான த்வேஷத்தையும் கொடுத்து விஷ்ணுமங்களத்தில் நாட்களை கழித்தார்.

ஸ்ரீபூர்ணப்ரக்ஞரின் ஆன்ஹிக வர்ணனை

சர்வக்ஞரான மத்வாசார்யர் தமது தினப்படி ஆன்ஹிகங்களை அருணோதய காலத்தில் துவங்கி, காலையில் செய்ய வேண்டியவற்றை முடித்து, அனந்தகுண பரிபூர்ணனான நாராயணனை, யோகாசனத்தில் அமர்ந்து தியானித்தார். **'குருபிரபி ஹிதேஷ்வாசார பேதேஷு நிஷ்டாம்ஸ்புடமவ கமயந்த: சௌஷ்டவாத் கர்மணாம் ச ||'** (14-8). சிஷ்யரான பல யதிகள் குருகளின் ஆணைப்படியே தங்களது தினப்படி செயல்களை செய்துவந்தனர். குரு தூங்கிய பின் தூங்கி, அவருக்கு முன்னரே எழுந்து, மரியாதையுடன் குருசேவை செய்தனர். இல்லையெனில் சத்கதி எப்படி கிடைக்கும்?

குருகளின் ஸ்னானத்திற்கு ஏற்பாடு செய்யும் ஒருவன், முந்தைய இரவில் குருகளிடம் கேட்ட கிரந்தத்தைப் பற்றி சிந்தனை செய்தவாறு தாமதமாக தூங்கினான். எழுந்துவிட்ட குரு, தானே வஸ்திரங்களை எடுத்துப் புறப்பட்டார். அதைக் கண்ட சிஷ்யன், தான் கடமையிலிருந்து தவறியதாக வருந்தினான். தயாளுகளான குரு அவனை மன்னித்தார். இதுவே அவரது சகஜமான குணமாக இருந்தது.

இப்படி தகுந்த நேரத்தில் சிஷ்யர்கள் ஸ்னான சந்தியாவனத்தை முடித்து, சிலர் ஜபதபங்களை செய்து, வேறு சிலர் நிர்மால்ய சாலிக்ராம பூஜையை செய்பவர்களாக இருந்தனர். ஸ்ரீமன் மத்வாசார்யரால் எடுக்கப்பட்ட நிர்மால்ய தீர்த்தத்தில் அவரது மகிமை என்னும் அமிர்தமும் நிறைந்திருந்தது. இவை அனைத்தும் சூர்யோதத்திற்கு முன்னர் நடப்பவை. இங்கு பண்டிதர், சூர்யோதயம், தின உதயம் மற்றும் பிம்ப-உதயம் என்னும் மூன்று உதயத்தை விவரிக்கிறார். சிஷ்யர்கள் காயத்ரி முதலான ஜபங்களை முடித்து, குருகளை வணங்கி, பாடத்திற்கு தயாரானார்கள். **'ஸ்ரவண பரம க்ருத்யாயோப தஸ்து: சமேதா: |'** (14-18) பாடங்களை கேட்பது மிகச்சிறந்த செயலாகும் என்று நினைத்து நடந்தனர். அதிலும் பாரதிபதியான வாயுதேவரின் அவதாரமான குருவின் வாயிலாகக் கேட்பது, தங்களின் பிறவிப்பயனே என்று நினைத்தனர். பிரவசன மண்டபத்தில் ஆசார்யருக்காக சிறந்த ஆசனம் போடப்பட்டிருந்தது. மூத்த யதிகள் பீடத்தை சுற்றி அமர்ந்து பாடத்தைக் கேட்பதற்கு தயாராக இருந்தனர். என்றைக்கும் போல, சிஷ்யர்கள் குரு வருவதற்கு முன்னரே, தூய்மையான ஆடைகளை அணிந்து, சுத்தமான துணிகளைச் சுற்றிய புத்தகங்களைக் கொண்டு வந்திருந்தனர். தாங்கள் கேட்டவற்றை அவற்றில் அழகாக, தெளிவாக எழுதிக் கொண்டனர். எந்த கிரந்தத்தையும் யார் சரியாக அறிந்திருக்கிறாரோ, அவரிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டும் என்று இதிலிருந்து தெரிகிறது. **'ப்ரயயுரபர சாம்யம் சித்தயே ஸ்யாத்தி யத்ன: ||'** (14-21) முயற்சி செய்பவனுக்கு காரியசித்தி கண்டிப்பாக நடக்குமல்லவா?

சிஷ்யர்கள் குருவின் பாடத்திற்காக தயாராக இருந்தனர். சூரியன் மாலையில் சிவப்பாக இருப்பதைப்போல, சூர்யாதி தேவதைகளால் வணங்கப்பெறும் ஸ்ரீமதாசார்யர், தனது அறையிலிருந்து வெளிவந்து, தயாராக இருந்த ஆசனத்தின் மேல் அமர்ந்தார். சபையில் சூரியனைப் போலவே ஜொலித்தார். சிஷ்யர்களின் பார்வை, மனது என அனைத்தும் ஆசார்யரின் மேல் இருந்தது. பூர்ணப்ரக்ஞர் **'ப்ரவசன பரிஷுத்தை ஸ்ம ப்ரணௌதி ப்ரவீண: ||'** (14-23) பாடத்தை துவக்கியவாறு ஓங்காரத்தை உச்சரித்தார்.

அனைத்து வேதங்களின் பொருளான, வியாஹ்ருதிகளின் சாரமான இந்த ஓங்காரம் மிகச் சிறந்ததாகும். முதலில் உபநிஷத் பாஷ்யத்தை சிஷ்யர்களுக்கு அற்புதமாகச் சொன்னபிறகு, மோட்சத்திற்கு சாதனமான **'அம்ருதமம்ருத பாவஸ்யைஷ ஹேதும் சகார ||'** (14-24) இவரின் வியாக்யானத்தையே அமிர்த மழையாக பொழிந்தார். இதைக் கேட்டவர்களுக்கு மோட்சமே கிடைக்கிறது. பக்தர்கள் கேட்ட

சந்தேகங்களுக்கு தகுந்த பதிலை அளித்துவந்தார். இவரை வெல்லவேண்டுமென்று வந்த துஷ்டர்களை கண்டித்து, பதில் பேசமுடியாதவாறு செய்தார்.

சூரியன் மேற்கு நோக்கி நகரும்போது, ஸ்ரீமதாசார்யர் அன்றைய பிரவசனத்தை முடித்து, மாத்யான்ஹிகத்திற்காக குளத்திற்கு சென்றார். உத்தமர்களின் சம்பந்தத்தைப் பெற்று பவித்ரமாவதற்கு, கங்காதி தீர்த்தங்களின் அபிமானி தேவதைகள் அங்கு வந்தனர். சிஷ்யர்களும் அங்கிருந்ததால் தன்யனானர். பின்னர் பூர்ணபிரக்ஞர், நிர்மால்ய தீர்த்தத்தை அருந்தி, த்வாதச ஊர்த்வபுண்டரிகங்களை தரித்துக் கொண்டார். மக்கள் மிகுந்த பக்தியுடன் அழகானவரான ஸ்ரீமதாசார்யரின் பாத-கமலங்களைக் கழுவி, பாதோதகத்தை மேல் தெளித்துக்கொண்டு புனிதரானர். அனைத்து தேவதைகளாலும் எப்போதும் வணங்கப்படும் சர்வக்ஞருக்கு பாதபூஜை, பாதோதகத்தின் ப்ரோக்ஷணம், தரிசனம், உரையாடல் ஆகியவை தேவதைகளுக்கும், சிறந்த மனிதர்களுக்கு மட்டுமே சாத்தியம். இவரைக் கண்டவர்களே தன்யர். சர்வக்ஞரின் ஒவ்வொரு செயல்களும் தேவதைகளுக்கும், உத்தமர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக இருக்கிறது.

ஸ்ரீமதாசார்யரின் பூஜைக்காக இன்னொரு யதிகள், வேறு எங்கும் எதிலும் படாதவாறு சுத்தமான தெளிவான நீரை, தனது கமண்டலத்தில் எடுத்து வந்திருந்தார். ஆசார்யர் நீர் நிரம்பிய சங்கிலிருந்து அபிஷேகம் செய்தார். பின்னர் சிறந்ததான கந்த, அக்ஷதைகளை எடுத்து, லட்சுமி ஸ்வரூபமான பூக்களுடன் ஸ்ரீஹரியை பூஜித்தார். ஸ்ரீஹரிக்கு 16விதமான பூஜைகளை செய்தார். எப்போதும் ஸ்ரீஹரியையே காணும் ஏகாந்த பக்தரான ஸ்ரீமதாசார்யர், எட்டு வித பாவ-புஷ்பங்களினால் பூஜித்தார். ஆசார்யரின் திடமான பக்திக்கு ஸ்ரீஹரி மனமிரங்கி, சஹபோகத்தையே முந்தைய ஹனும அவதாரத்தில் அளித்தான் என்பது நினைவு கூறத்தக்கது.

இப்படியாக நிர்மல-ஞானியான ஆசார்யர், சர்வோத்தமனான நாராயணனை பூஜித்து, அவனுக்கு அர்ப்பித்த கந்தம் ஆகியவற்றை தரித்து, பட்டாடையை உடுத்திக் கொண்டார். எப்போதும் சிரித்த முகத்தவரான ஆசார்யரின் தரிசனமே பாக்கியம் என்று தேவதைகள், முனிகள், மனிதர்கள் அவரது தரிசனத்தைப் பெற்று மகிழ்ந்தனர். இங்கு நாராயண பண்டிதர், ஸ்ரீமதாசார்யர் தினமும் பிரதிமா சாலிகிராமத்தில், ஸ்ரீஹரியின் பூரண சன்னிதானத்தை பக்தியுடன், 16வித பூஜைகளுடன், பாவ புஷ்பங்களுடன் பூஜைகளை எப்படி விதிப்படி செய்கிறார் என்பதை விவரமாக வர்ணித்திருக்கிறார். சர்வஸ்வாமியான நாராயணனின் பரமபக்தரான ஆசார்யர் ஸ்ரீஹரிக்கு சமர்ப்பிக்கப்பட்ட நைவேத்தியத்தை உண்டார்.

பரமத பரமான்னம் ப்ராப்தமேவா ப்ரயாசம் ப்ரபுரிஹ புபுஜேஸௌ வேதவாத ப்ரவீண: |
அஜிதபரம பக்த: சந்ததம் மன்யமான: சகல ஜகததீஷ: ப்ரீயதாம் ஷௌரிரித்தம் || (14-39)

போஜனத்திற்கு முன் ‘அனைத்து உலகிற்கும் நியாமகனான, சர்வஸ்வாமியான ஸ்ரீகிருஷ்ணன் மகிழட்டும்’ என்று பரமபக்தரான ஸ்ரீமதாசார்யர் தியானித்தார் என்று தெரிவிக்கிறார் பண்டிதர்.

பிறகு, மண்டபத்தில் சிறந்த ஆசனத்தில் அமர்ந்து பண்டிதர் குழாமில் பல சாஸ்திரார்த்தங்களை சொல்லி மகிழ்வித்தார். பல கிருஹஸ்த, பக்தர்கள் இந்த திவ்ய மூர்த்தியின் தரிசனத்திற்காக வந்து வணங்கினர். பல ஊர்களிலிருந்து, ஆசார்யரின் மகிமைகளைக் கேட்டு வந்தவர்கள் மிருந்த ஆச்சரியத்துடன் அவரைக் கண்டனர். தாம் அறிந்ததைவிட அவர் சிறந்தவர், குணவந்தர் என்று மகிழ்ந்தனர். அனைவரையும் ஸ்ரீபூர்ணப்ரக்ஞர் ஆசிர்வதித்தார்.

’அரமயதிஹ நானா ஹ்ருத்யவித்யா விலாசை: கவி ஜன பரிவாரம் மண்டயன் மண்டபாக்ர்யம் ||’ (14-40). வந்திருந்த மக்களுக்கு, ஸ்ரீமதாசார்யர் பல சாஸ்திர விசாரங்களினால், ஸ்ரீஹரியின் மகிமைகளை தெரிவித்து அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார். ஸ்ரீமதாசார்யரை காண்பதற்கும், அவரது முக-கமலத்திலிருந்து வரும் அமிர்த வாணியைக் கேட்பதற்கும் வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள், அவரை கண்டதும் மெய்மறந்தனர். **’ஷதகுண குணமேனம் விஸ்மிதா வீக்ஷமாணா: |’ (14-43).** தாம் கேள்விப்பட்டத்தைவிட ஆசார்யரின் நற்குணங்கள் ஆயிரம் மடங்கு உயர்ந்தவை என்பதை அறிந்து ஆச்சரியப்பட்டனர்.

அதிக திஷணமேனம் வியாக்யயா ஷோபமானம் ஹரிமிவ கவிவர்யம் சத்யவத்யாஸ்தனூஜம் |
சததமனிமிஷம் சந்த்ருஷ்ய சானந்த சித்தா: சமயமபி கதம் சம்வித்ரதே நஸ்ம லோகா: || (14-45)

ஞானிகளில் சிறந்தவரான இவரது சொற்பொழிவைக் கேட்டவாறு, அவரது சிறந்த தேகத்தைப் பார்த்தவாறு, இவர் சத்யவதியின் மகனான வேதவியாசரோ என்று நினைத்து, நேரம் போவதே தெரியாமல் மெய் மறந்தனர்.

பூர்ணப்ரக்ஞர், மாலை வேளையில், சகலகுணபூர்ணனான, தோஷதூரனான ஸ்ரீமன் நாராயணனை தியானித்தார். ஆசார்யரின் அருகிலிருந்த அறிஞர்கள், சிஷ்யர்கள், மாலை நேரத்து சந்தியாவந்தனைகளில் ஈடுபட்டிருந்தனர். இங்கு பண்டிதர், மகாகாவியத்தின் லட்சணங்களைப் போல, சூரிய அஸ்தமனம், சந்திர உதயம் ஆகியவற்றை வர்ணிப்பதை காணலாம். ஸ்ரீமதாசார்யர் தமது சிறந்த உணர்ச்சிபூர்வமான உரைகளிலால் பக்தர்களின் அஞ்ஞானம் என்னும் இருட்டினை போக்கினார். மாலைவேளையில், ஸ்ரீமதாசார்யர், பலவிதங்களில் ஸ்ரீஹரியை நினைத்தவாறு, சமாதி நிலையில் தியானத்தில் இருந்தார்.

சாஸ்திரங்களில் சொல்லியவாறு தினப்படி செயல்களை செய்தவாறு, அனைத்து சிஷ்யர்களுக்கும், உலகத்திற்கும் வழிகாட்டியாக இருந்து, பகவத் தத்வங்களை உரைத்தவாறு இருந்தார். ஞானானந்தனும், பக்தவத்ஸனும் ஆன ஸ்ரீமன் நாராயணனே மோட்சத்தைக் கொடுப்பவன். அவனைப் பற்றி அறிந்து, அவனிடம்

பக்தியை செலுத்துவதே, முக்திக்கு சாதனை என்பது சித்தாந்தம். இந்த தத்வவாதத்தை பூலோகத்தில் முதல்முறையாக சஜ்ஜனர்களுக்கு போதித்து இஹபரங்களில் சுக அனுபவத்திற்கு காரணரான ஸ்ரீமதாசார்யர் வீற்றிருந்தார்.

****

பதினைந்தாம் சர்க்கத்தின் சுருக்கம்

அமராலயத்தில் தங்கியிருந்த ஆசார்யரிடமிருந்து சூத்ரபாஷ்யத்தின் அபூர்வமான சொற்பொழிவு, துர்மதங்களை கண்டித்தல், ஸ்வமதத்தின் சிறப்புகளை ஆசார்யரின் முகத்திலிருந்து கேட்ட த்ரிவிக்ரம பண்டிதர் அத்வைத சித்தாந்தத்தை கைவிடுவதற்கு தீர்மானித்தல். 15 நாட்கள் வாதத்திற்குப் பிறகு, உண்மையை அறிந்து ஆசார்யரின் சிஷ்யராதல். த்ரிவிக்ரம பண்டிதர் மூலமாக மாத்வ கிரந்தங்களின் வர்ணனை. இவர் கேட்டுக்கொண்டதால், ஆசார்யர் அனுவியாக்யானத்தை இயற்றினார். வைராக்ய மூர்த்தியான தனது சகோதரருக்கு அருளி, சன்யாச ஆசிரமத்தைக் கொடுத்து ‘விஷ்ணு தீர்த்தர்’ என்ற பெயரையும் சூட்டினார். விஷ்ணுதீர்த்தரின் சிறப்புகள் வர்ணிக்கப்பட்டுள்ளது. சித்தாந்த பிரசாரத்திற்காக பத்பனாப தீர்த்தரை நியமித்தார். பல சன்யாசி சிஷ்யர்களைப் பெற்ற ஸ்ரீமதாசார்யரின் மகிமைகள் மற்றும் சிஷ்யர்களின் சிறப்புகள் ஆகியவற்றை நாராயண பண்டிதர் இந்த சர்க்கத்தில் விளக்கியுள்ளார்.

ஸ்ரீமதானந்ததீர்த்தர் அமராலயத்தில் தம் அற்புத நடையில் சூத்ரபாஷ்ய பிரவசனத்தைத் துவக்கினார். அங்கிருந்த புகழ்பெற்ற அத்வைத பண்டிதரும், கூர்மையான அறிவுடையவரும், சாஸ்திரங்களைக் கற்றவருமான த்ரிவிக்ரம பண்டிதாசார்யரைக் கண்டார்.

பரபக்ஷ ரதாரூடம் கர தர்க மஹாயுதம் |
த்ரிவிக்ரமார்யம் சோऽபஷ்யத் ப்ரதி வீரமிவாக்ரத: || (15-2)

இங்கு நாராயண பண்டிதர், ஸ்ரீமதாசார்யரின் உபன்யாச நடையை கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார்.

நாத்யத்வரா நாதிரயா ந ஸ்கலந்தி நிரந்தரா |
அனனா வயவேத்ய தவீயோபி: ப்ரதர்கிதா || (15-4)

மத்வரின் சொற்பொழிவு, காலாட்படையின் நடையைப் போல மெதுவாக இருந்தாலும், ஒரு சீராக இருந்தது. ஆசார்யரின் சொற்பொழிவினால் பாற்கடலைக் கடைந்தபோது வந்த லட்சுமியைப் போல இப்போது இன்னொரு லட்சுமிதேவி வந்துவிட்டாளோ என்று தோன்றியது. அவரது நடை கங்கைப் பிரவாகத்தைப் போலவும் தோன்றியது. நாராயண பண்டிதாசார்யர், ஆசார்யரின் சொற்பொழிவை இப்படியாகக் கூறி முடிக்கிறார்.

நாராயணோ அனந்தகுணோ பிரம்மாக்யோ வேதவேதித: |
விஷ்வகர்தேதி விஷ்வக்ஞ: ஸ்ருத்யா யுக்த்யாऽப்யசேஷதத் || (15-8)

நாராயணன் அனந்தகுண பரிபூர்ணன். வேதங்களால் புகழப்படுபவன். பிரம்மன் என்ற சொல்லிற்கு உரியவன். உலகத்தில் அனைத்தின் படைத்தலுக்கும் காரணமானவன். பூர்ணப்ரக்ஞர் துர்மதங்களான நிரீஷ்வர சாங்க்ய, பாஸ்கர, பாசுபத, வைஷேஷிக, சூன்யவாத, மாயாவாத, சார்வாக, பௌத்த ஆகிய மதங்களின் தோஷங்களை நிரூபித்து நிராகரித்து, த்வைத சித்தாந்தத்தின் சிறப்புகள் மோட்சத்திற்கான வழியாக இருப்பதை விளக்கினார். இங்கு நாராயண பண்டிதர், அனைத்து மதங்களைப் பற்றியும் சுருக்கமாகச் சொல்லியிருப்பது, அவரது புலமைக்கு ஒரு சான்றாக இருக்கிறது.

துர்மதங்களை நிராகரித்தல்

நிரீக்ஷ சாங்க்யர், ப்ரதானமே (இயற்கை) சுதந்திரமாக (தானாக) - பால் தயிராவதைப் போல - வளர்ந்து உலகமாக ஆகியிருக்கிறது என்கின்றனர். இது சரியல்ல. பால் தயிராவதற்கு ஒரு கர்த்ரு வேண்டும். இங்கு அது சொல்லப்படாததால் அதை தோஷமாகக் காட்டினார். போலவே, உலகத்தின் படைத்தலுக்கு சர்வக்ஞனான ஈஸ்வரன் அவசியம்.

பாஸ்கரர் சொல்வது - சேதனனான பிரம்மனே வளர்ந்து உலகத்தின் ரூபங்களைப் பெறுகிறான். இதுவும் சரியல்ல. சேதனனாதவர் என்றைக்கும் வளர்வதில்லை. சேதனனான பிரம்மன் என்றைக்கும் மாற்றத்தின் காரணம் ஆவதில்லை. சேதனனின் வேலை இல்லாமல் எப்படி பால் தயிராக மாறாதோ அப்படி.

பாசுபத, காணாபத்ய, ஸ்காந்த, ஸௌர ஆகிய மதத்தவர் சொல்லும் ருத்ரதேவர், கணபதி, ஸ்கந்த, சூர்ய இவர்களுக்கு உலகத்தை படைக்கும் ஆற்றல் இருப்பதில்லை. காரணம், இவர்கள் அனைவரும் தோஷங்கள் கொண்டவர்கள் ஆகையால், நற்குணங்கள் நிரம்பிய, தோஷங்கள் அற்ற விஷ்ணுவே ஜகத்கர்த்ரு என்று அனைத்து சாஸ்திரங்களிலிருந்து அறியப்படுகிறது.

வைசேஷிகர் ஈஸ்வரனை ஒப்புக்கொண்டாலும் அவனிடம் ஆனந்தாதி நற்குணங்களை ஒப்புவதில்லை. **‘சௌக்யாதிமான் நேஷோ துக்காதி ரஹிதத்வத: |’ (15-16)** துக்கங்கள் இல்லை என்பதால் சுகங்களும் இல்லை என்பர். இது சரியல்ல. ஈஸ்வரனுக்கு துக்கம் இல்லை ஆகவே அவன் ஞானி இல்லை என்கின்றனர். ஆனால் வேதங்களில், ஸ்ரீஹரி சர்வக்ஞன், ஆனந்தபூர்ணன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்மனின் சர்வக்ஞத்வத்தை ஒப்பினால் கூடவே ஆனந்தபூர்ணன் என்றும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. ‘ஈஸ்வர: சர்வக்ஞ:’ ‘ஆனந்தோ பிரம்மே திவ்யஜானாத்’ என்று வேதம் சொல்கின்றன. சாதாரண ஜீவர்களுக்கு சுகம் இருப்பதுபோல துக்கங்களும் உண்டு என்பதால், ஸ்ரீஹரிக்கும் துக்கம் உண்டு என்று சொல்வது தவறு. சுகம் இருக்குமிடத்தில் துக்கமும் இருக்கவேண்டும் என்னும் விதி தவறு.

பௌத்தத்தில் மாத்யமிகர் என்று ஒரு பிரிவு உண்டு. வேதத்வேஷிகளான இவர்கள், சூன்யமே உண்மை என்கின்றனர். சூன்யவாதிகளில் இரு பிரிவுகள் - ஸ்பஷ்டரு மற்றும் பிரச்சன்னர். (சூன்யத்தை வெளிப்படையாக ஒப்புக் கொள்பவர்கள் மற்றும் மறைமுகமாக ஒப்புக் கொள்பவர்கள்). இந்த பிரச்சன்னரே மாயாவாதிகள். அதாவது, அத்வைதிகள் சூன்யம் என்பதை ரகசியமாக ஒப்புக் கொள்வர். பிரம்மனை தத்வம் என்னும் மாயாதிகள், வேதத்தின் உபநிஷத் பாகம் மட்டும் பரதத்வத்தை போதிக்கிறது என்றும், சூன்யமே பிரம்மன் என்றும் சொல்வர். ஆகையால், பௌத்தம் மற்றும் மாயாவாதிகளில் எந்த வேறுபாடும் இல்லை எனலாம்.

சூன்யவாதம் உண்மை இல்லை என்கிறார் ஆசார்யர். உண்மையல்லாத எதுவும், எதற்கும் ஆதாரமாக இருக்கமுடியாது என்கிறார். உண்மையாக உள்ள உலகத்திற்கு, பொய்யான சூன்யம் ஆதாரமாக இருக்கமுடியாது. முத்துச்சிப்பி உண்மையாக உள்ளது. ஆனால் சூன்யவாதம் உண்மையானது அல்ல. எனவே உலகம் தோன்ற சூன்யம் ஆதாரமாக இருக்கமுடியாது என்று அவர் குறிப்பிடுகிறார். இவ்வாறு ஸ்ரீமத்வரால் பௌத்த மதம் முழுமையாக நிராகரிக்கப்பட்டது.

மாயாவாதிகள் வேதங்களை அதத்வாவேதக (பிரம்மனின் குணங்களை சரியாக விளக்கவில்லை) என்கின்றனர். இது அவர்களின் கருத்திற்கே முரணாக இருப்பதால், அவர்கள் வேதத்தை ஆதாரமாகவே கொள்ளாததால், அந்த மதத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது. என்றால் வேதங்களை தத்வாவேதிக, அதத்வாவேதிக என்று பிரித்த இவர்கள் எப்படி வேதாந்திகள் ஆகமுடியும்? மேலும் பிரம்மனை வேதங்கள் புகழவில்லை என்று சொன்னதால், இவர்களும் சூன்யவாதிகளைப் போலவே வேதங்களை திட்டுவர்களாகின்றனர். இவர்களை வேதங்களுக்கு சம்பந்தப்படாத அத்வைதிகள் என்றே அழைக்கவேண்டும். இப்படியாக, சூன்யவாதிகளில் மற்றும் மாயாவாதிகளில் எந்த வேறுபாடுகளும் காணப்படாததால் அவர்கள் இருவரையும் நிராகரிக்க வேண்டியதாகிறது.

அகண்ட கண்டன ந்யாயான கண்டமபி கண்டயன் |
அகண்டயதகண்டக்ஞோ த்வயாஸ்சா கண்டலத்விஷ: || (15-27)

இன்னொரு வகையிலும் மாயாவாதிகள் வேதத்தை நிந்திப்பவர் ஆகின்றனர். நிர்குணனான பிரம்மனை அவாச்ய (வேதங்களால் புகழப்படாதவன்) என்கின்றனர். ஆகையால் சூன்யவாதிகளுக்கும் மாயாவாதிகளுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லையென்று சர்வக்ஞரான ஆசார்யர் தெளிவு படுத்தினார்.

இன்னும் பௌத்தர்களைப் போல மாயாவாதிகளும் வேதங்களை ஆதாரமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றனர். இப்படியாக இவரும் வேதத்தை திட்டுபவர்களாகவே ஆயினர். இதனால் சூன்யவாதிகளுக்கும் மாயாவாதிகளுக்கும் ஒற்றுமை காணப்படுவதால், ஒரு சித்தாந்தத்தை (வாதத்தை) நிராகரித்தால், இன்னொன்றையும் நிராகரித்ததைப் போலவே ஆகின்றது. ஏனென்றால்,

சூன்யவாதிகள் பிரம்மனை சூன்யன் என்றால் அதே பொருள் தரக்கூடிய ‘அஸத்’ என்கின்றனர் மாயாவாதிகள்.

‘சாட்சாத்’ ஒன்றே ஆதாரம் என்று வாதிக்கும் சார்வாகர், அனுமானம் மற்றும் வேத ஆதாரங்களை ஒப்பவில்லை. உலகத்தில் இருக்கும் தர்ம அதர்மங்கள் கண்களுக்குத் தென்படாததால், அவற்றை அபௌருஷேய (வேத) வாக்கியங்களினால் மட்டுமே தெரிந்து கொள்ள முடியுமாகையால், இவற்றை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். உலகத்தில் சத்தியம், அகிம்சை, நீதி ஆகியவற்றை அறிந்து சுகமாக வாழ்வதற்கு சார்வாகரை நிராகரிக்கவே வேண்டும்.

மேற்கூறிய துர்மதங்களை ஆதாரங்களுடன் பூர்ணப்ரமதிகள் நிராகரித்தார். தம் சித்தாந்தத்தின் சிறப்பினை நிறுவினார். சஜ்ஜனர்கள் தங்கள் ஸ்வரூப சுகமான மோட்சத்தை அடைவதற்கு, இந்த வைதிக சித்தாந்தத்தை அனுபவித்து, அதோக்ஷஜனின் அருளைப் பெற்றால் மட்டுமே சாத்தியம் என்றார். இதர மதங்களில் சொல்லப்பட்டிருக்கும் மோட்ச சுகத்தை, அவற்றின் விதங்களை தொகுத்து நிராகரித்த, ஸ்ரீமத்வாசார்யர், துஷ்டமதங்களின் தோஷங்களை தெரிவித்து அவற்றை நிராகரித்தார். இங்கு முக்தர்களின் ஸ்வரூப லக்ஷணங்கள், தோஷமற்ற ஆனந்தத்தை, மோட்சத்தைக் கொடுப்பவனான விஷ்ணுவின் கருணையை, வேதங்களின் மூலமாக தனது கருத்துகளை சஜ்ஜனர்களுக்கு எடுத்துரைத்தார். வேதங்களால் புகழப்படுபவனான, ஸ்வதந்திரனான விஷ்ணுவே மோட்சத்தைக் கொடுப்பவன் என்று அறிந்தால், மங்களம் உண்டாகும் என்று சாதித்தார்.

பூர்ணப்ரக்ஞருடன் த்ரிவிக்ரம பண்டிதர் வாதம்

‘த்ரிவிக்ரமார்யேண ததா விஷ்வாபிக்ஞஸ்ய சுஸ்ருவே ||’ (15-64) இப்படி பூர்ணப்ரக்ஞரால் விவரிக்கப்பட்ட, ஆதாரங்களுடனான சொற்பொழிவை த்ரிவிக்ரம பண்டிதர் கேட்டார். அறிஞரான பண்டிதர், ஸ்ரீமதாசார்யரின் சித்தாந்தத்தை எதிர்த்து பல வாதங்களை புரிந்தார். ஸ்ரீபூர்ணப்ரக்ஞர் அனாயாசமாக சிரித்தவாறு அவற்றைக் கண்டித்து நிராகரித்து தம் சித்தாந்தத்தை நிரூபித்தார். அடுத்து பண்டிதர், ஆசார்யரின் ஒவ்வொரு வாக்கியத்திற்கும் எதிராக வேதவாக்கியங்கள் என்னும் அஸ்திரங்களை பிரயோகிக்கத் தொடங்கினார்.

சப்தாஷ்டானி தினான்யேவம் வாதம் க்ருத்வா ஸஹாமுனா |
நிருத்தரம் தம் நிஷ்சோத்யம் சக்ரே சக்ராயுத ப்ரிய: || (15-69)

சாமான்யரால் பதிலளிக்கமுடியாத கேள்விகளுக்கு, ஸ்ரீமதாசார்யர் மேலும் சிறந்த வேத வாக்கியங்களினால் பதிலளித்து பண்டிதரின் வாதங்களைக் கண்டித்தார். இப்படி த்ரிவிக்ரம பண்டிதருடன் 15 நாட்கள் தத்வ நிர்ணயத்திற்காக வாதம் செய்தார். த்ரிவிக்ரம பண்டிதர் வாயடைத்துப் போனார். இரு சஜ்ஜனர்களுக்கிடையே நடந்த வாதம் இப்படியாக இருந்தது. அவரின் சந்தேகங்கள் தீர்ந்தன. தோற்றதை ஒப்புக்கொண்டார். உத்தம ஜீவிகளான பண்டிதர், ஆசார்யரிடம் ‘க்ஷம்யதாம்’ என்று மன்னிப்பு கேட்டார். மேலும் **‘பத பத்ம ரஜோ தாஸ்யம் த்ருவம் மே தீயதாமிதி ||’ (15-70)** என்று, ’தங்கள் சரணங்களில் விழுந்தேன்.

என்னை காப்பாற்றுங்கள்' என்று வேண்டினார். இதனால் சஜ்ஜனர்களுக்கு மகிழ்ச்சியும், மாயாவாதிகளுக்கு துக்கமும் உண்டாயிற்று. ஸ்ரீமத்வாசார்யர் தமது பிரம்மசூத்ர பாஷ்யத்திற்கு வியாக்யானம் எழுதுவதற்கு ஆணையிட்டார். தங்கள் சித்தம் என்று கூறி த்ரிவிக்ரம பண்டிதர் 'தத்வப்ரதீபா' என்னும் உத்தமமான வியாக்யானத்தை எழுதினார்.

ஸ்ரீபூர்ணப்ரக்ஞரின் கிரந்தங்களின் வர்ணனை

கவிவரேண்யரான த்ரிவிக்ரம பண்டிதரால், ஆசார்ய மத்வரின் சர்வமூல கிரந்தங்களின் சிறப்புகள் அற்புதமாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

1. பிரம்மசூத்ர பாஷ்யம் ஒரு கம்பீரமான பெருங்கடல். இதில் நியாயங்கள் என்னும் ரத்தினங்கள் பல உண்டு. ஞானிகளில் சிறந்தவரானவரிடமிருந்து எவ்வளவு கற்றாலும் போதாது என்பதுபோல, பாஷ்யத்தின் சிறப்புகளும் அதிஆச்சரியமாக இருக்கிறது.

2. தேவதைகள் தங்களின் கணவர்களை மகிழ்விப்பதுபோல, பத்து உபநிஷத் பாஷ்யங்களில், யோக்யமான, மிகச்சிறந்த அர்த்தங்களைச் சொல்லி, படிப்பவர்களுக்கு உபநிஷத்தின் நோக்கம் தெரியவருகிறது.

3. கீதா பாஷ்யம் மற்றும் கீதா தாத்பர்யங்கள் உலகத்திற்கு ஒளி கொடுக்கும் சூரிய சந்திரர்களைப் போல இருக்கின்றன.

4. ஸ்ரீமன் மகாபாரததாத்பர்ய நிர்ணயமானது, அமிர்தத்தைப் போல இருக்கிறது. இதிகாச புராணங்கள் என்னும் பாற்கடலை, மனம் என்னும் மந்தரமலையைக் கொண்டு கடையும்போது, வந்த அமிர்தமே இந்த கிரந்தம்.

5. ஸ்ரீபாகவததாத்பர்ய நிர்ணயம் மிகச்சிறந்த வழிகாட்டி எனப்படுகிறது. புராணங்களில் பயன்படுத்தப்படும் மூன்று விதங்களான குஹ்யம், தரிசனம் மற்றும் சமாதி ஆகியவற்றை அறியாமல் படிக்கத் துவங்குபவர்களுக்கு ஒரு நண்பனாக இந்தக் கிரந்தம் இருக்கிறது.

6. தந்த்ரசார கிரந்தம் ஒரு கல்பவிருட்சம். இதனை படிக்கும் யாரும் வேண்டியதை பெறாமல் இருப்பார்களோ? கேட்டதை கொடுப்பதாக இருக்கிறது இந்தக் கிரந்தம்.

7. ப்ரமாண லட்சணம் மற்றும் கதா லட்சணம் என்னும் இரு கிரந்தங்களும் சாதகர்களுக்கு இரு கண்களைப் போன்றது. ஆன்மிக உலகில் நுழைபவர்களுக்காக கருணாமயியான நீங்கள் இந்த இரு கிரந்தங்களையும் இயற்றியிருக்கிறீர்கள்.

8. விஷ்ணுதத்வ நிர்ணயம், பரவாதிகளை நிராகரிப்பதில் சிறந்த கிரந்தம் எனப்படுகிறது. தனியொருவனான போராடிய அர்ஜுனனைப் போல இந்த கிரந்தம் இருப்பதை யார்தான் போற்ற மாட்டார்கள்?

9. தத்வோத்யோத முதலான தசபிரகரண கிரந்தங்கள், தீக்கங்குகளைப் போல உள்ளன. கங்குகள் சிறியதாக இருந்தாலும், காற்று பட்டால், பிரதிவாதிகள் என்னும் காட்டினை அழிக்கும் வல்லமை பெற்றவை.

10. பாஷ்ய சங்க்ரஹத்தில் (அணுபாஷ்ய), தம் ஸ்வரூப சாமர்த்தியத்தை தெரிவிப்பதற்காக, பிரம்மசூத்ரத்தின் பற்பல அர்த்தங்களைக் காட்டியிருக்கிறீர்கள். ஸ்ரீகிருஷ்ணன் தனது சிறிய வாயில் மொத்த உலகத்தையே காட்டிய அற்புதத்தைப் போல இருக்கிறது.

11. தங்களின் யமகபாரத கிரந்தம் அபூர்வ சித்ர-காவியமாக மிகவும் ஆச்சரியமான கிரந்தமாக இருக்கிறது. மகாபாரதத்தின் சாரமாக, ஷப்த அலங்காரத்துடன் வீற்றிருக்கிறது.

12. **நானா சுபாஷித ஸ்தோத்ர காதாதி க்ருதி சத்க்ருதீ: |**
த்வயி ரத்னாகரே ரத்னஸ்ரேணீர்வா கணயந்தி கே || (15-84)

தாங்கள் இயற்றிய மற்ற ஸ்தோத்திரங்கள், சதாசார ஆகிய உத்தம கிரந்தங்கள் எவ்வளவு என்று வர்ணிப்பது சாத்தியமில்லை. கடலில் மூழ்கியிருக்கும் முத்தினை எப்படி எண்ணமுடியாதோ அப்படியாக இவையும் உள்ளன.

இப்படியாக ஸ்ரீமதாசார்யரின் அனைத்து பேச்சுகளும் சாஸ்திரங்களே, கிரந்தங்களே. ஆகையால் - உங்கள் கிருதிகளின் எண்ணிக்கையை யாரும் சொல்வதற்கு அசாத்யம் - என்றார். ஸ்ரீமதாசார்யரின் ஒவ்வொரு பதமும், பிரதிவாதங்களும் மிகச்சிறந்த அர்த்தங்களைக் கொண்டவை மற்றும் சிறந்த பலன்களைக் கொடுக்க வல்லவை; ஆகவே தேவதைகளாலும் போற்றப்படுகின்றன. அவற்றின் மகிமைகளை எடுத்துச் சொல்வது சாத்தியமேயில்லை.

த்ரிவிக்ரம பண்டிதரின் வேண்டுகோள். ஆனந்ததீர்த்தர் அனுவியாக்யானத்தை இயற்றுதல்பற்பல கிரந்தங்களை இயற்றியவரான ஸ்ரீமதானந்ததீர்த்தரை, இன்னொரு கம்பீரமான, பற்பல யுக்திகளுன் கூடிய, அனைத்து சாஸ்திரங்களின் சாரமான, மந்தமதிகளுக்கும் புரியுமாறு, புதியதான ஒரு கிரந்தத்தை இயற்றி அருளவேண்டும் என்று த்ரிவிக்ரம பண்டிதர் வேண்டினார்.

கிரந்தேப்ய ஏப்யோऽகாதேப்யோ யுக்தயோ நோ துராத்தரா: |
மனோ மான்யாத் ததோ கிரந்தம் வ்யக்த தர்க ததிம் குரு || (15-87)

இதன் மூலமாக 'அனுவியாக்யான' என்னும் அமிர்தம் சஜ்ஜனர்களுக்கு கிடைத்தது. சுஜனர்களுக்கு அமிர்தமாகவும், துஷ்டர்களுக்கு கர்வம் என்னும் மலையை வஜ்ராயுதம் கொண்டு அடித்தது போலவும் இருந்தது. சர்வசமர்த்தரான ஸ்ரீமதாசார்யர் **'சதுரஸ்சதுர: சிஷ்யான் லீலயாऽலேகயத் கலு ||' (15-89)** நான்கு சிஷ்யர்களுக்கு நான்கு அத்தியாயங்களை ஒரே நேரத்தில் சொல்லியவாறு மிக அற்புதமாக இந்த கிரந்தத்தை இயற்றினார். இவரே எதிர்கால பிரம்மதேவர் என்பதற்கு இது சாட்சியாக இருக்கிறது. இதற்கு துணையாக, பண்டிதர்களுக்கும்

புரியாத விவரங்களை தெளிவுபடுத்துவதற்கு 'நியாயவிவரண' என்னும் இன்னொரு கிரந்தத்தையும் இயற்றினார்.

ஸ்ரீவிஷ்ணுதீர்த்தர்

ஸ்ரீபூர்ணப்ரக்ஞர் போன்ற ஒரு ரத்தினத்தைப் பெற்ற மத்யகேஹ தம்பதிகள், ஆசார்யரின் திவ்ய தரிசனம், அவரது பிரவசனங்களை கேட்டதால் அஞ்ஞானங்களைக் களைந்து, சுத்தமான மனதுடன், மரணமெய்தி வைகுண்டத்திற்குச் சென்றனர். பாஜகவில் பெற்றோருடன் இருந்த ஆசார்யரின் சகோதரர், விதிவசத்தால் தனது சொத்துக்களை இழந்தார். வேதஞானி மற்றும் வைராக்ய சிகாமணிகளான இவர், ஸ்ரீமதாசார்யரிடம் வந்து சன்யாசத்தைக் கொடுக்க வேண்டினார். **'பாரிவ்ராஜ்யம் ப்ரார்த்தயந்தம் பாதானம்ரமிமம் முஹு: |' (15-93)** அப்போது சன்யாசம் ஏற்றுக்கொள்வதற்கு தகாத காலமான சாதுர்மாசம் ஆகையால், ஆசார்யர் சரியான நேரம் வரட்டும் என்றதால் மறுபடி பாஜவிற்கு திரும்பினார்.

ராமனுக்காக பரதன் காத்திருந்ததைப் போல, மத்வரின் சகோதரர் மத்வரையே மனதில் நினைத்தவாறு இருந்தார். **'ந ஜகாஸ ந சுஷ்வாப ந ஜஹாஸ ச தீரதீ: |' (15-94).** அனைத்து போக பாக்யங்களையும் துறந்தார். உணவையும் மறுத்தார். தூக்கத்தை விட்டார். சுகம் என்பதே இல்லை. இவற்றை அறிந்த ஸ்ரீமதாசார்யர், சாதுர்மாசம் முடிந்தபிறகு, ஜயசிம்ம பூபாலனை சமாதானம் செய்து, தாம் அவதரித்த புண்யபூமி பாஜகவிற்கு வந்தார்.

பித்ரு காரியங்களை சரியாக முடித்து, நல்ல செய்திக்காக காத்திருந்த, சன்யாசத்திற்கு அருகதரான, பரிசுத்தரான சகோதரருக்கு, அனைத்து விதிகளுக்கேற்ப யதிதீக்ஷையை அருளினார். மிக ரகசியமான 'பரபிரம்ம தத்வோபதேசத்தை' மிகவும் ரகசியமாக வழங்கினார். ஸ்ரீமதாசார்யரின் பூரண அருளுக்குப் பாத்திரரான இவருக்கு மிகவும் அன்புடன் 'ஸ்ரீவிஷ்ணுதீர்த்தர்' என்ற பெயரை வைத்தார்.

ஸ்ரவணேன அனுவாதேன மனனேனாவிருதா கரோத் |
காலம் வேதாந்த சாஸ்திரஸ்ய வேதாந்த குர சோதர: || (15-99)

ஸ்ரீவிஷ்ணுதீர்த்தர் எப்போதும் ஸ்ரவண, உபன்யாசங்களில் காலத்தை பயனுள்ளதாக ஆக்கிக்கொண்டிருந்தார். அவரிடமிருந்த குருபக்தி அபாரம். குருசேவை அதிகமாக செய்தார். இந்திரியங்களை கட்டுப்படுத்தினார். இத்தகைய யதிவரேண்யரின் சரிதத்தை 'அவர்ண்யே மஹிமாதஸ்ய' வர்ணிப்பதற்கு சாத்தியமே இல்லை என்று நாராயண பண்டிதர் சொல்லி, தாம் அறிந்தவரை மட்டுமே சொல்வதாக அறிவிக்கிறார். இத்தகைய மகானைப் பற்றி சிந்திப்பது புண்ணியம்.

பிரணவம் முதலான மந்திர சித்தியைப் பெற்ற, வேதங்களை அறிந்தவரான விஷ்ணு தீர்த்தர், ஆசார்யரின் சிறந்த சிஷ்யனாக வேண்டுமென்று, சித்தாந்தத்தை

பிரசாரம் செய்யத் தொடங்கினார். வட இந்தியாவில் பயணித்து, கங்காதி நதிகளில் குளித்து, மேலும் பவித்ரமானார். அந்த க்ஷேத்திரங்களை, தீர்த்தங்களை மேலும் புனிதமாக்கினார். ஹரிசந்திர மலையில் மறைந்திருந்து தவத்தை செய்யலானார். உணவினை துறந்தார். ஐந்து நாட்களுக்கு ஒரு முறை பஞ்சகவ்யம் மட்டும் உண்டார். பின் அதையும் நிறுத்தி, வெறும் தண்ணீரைக் குடித்து, கடுந்தவம் புரியலானார். பிராணாயாமம் செய்து யோகசித்தியைப் பெற்றார். ஸ்ரீஹரியை ஒருமனதுடன் தியானித்து சமாதி நிலையை அடைந்தார். வேறு யாரையும் காணாமல் ஸ்ரீஹரியை மட்டுமே காண்பவரானார்.

மத்வானுஜே மத்வ நாதோ யம் ப்ரசாதம் வ்யதாத் ததா |
ஸ சித்தாவிஷயத்வாத் வா கோப்யத்வாத் வா ந வர்ண்யதே || (15-113)

அபரோக்ஷ ஞானிகளான ஸ்ரீவிஷ்ணுதீர்த்தருக்கு, மத்வவல்லபனான ஸ்ரீ நாராயணன் செய்த பரமானுக்கிரகமானது, பரம ரகசியமானது. யாராலும் அறிய முடியாது. இவரது செயல்கள், தேவதைகளாலும் புகழப்பட்டு, ஆசார்ய மத்வரின் கருணை மற்றும் அருளைப் பெற்றார். இது ரகசியமாதலால், நாராயண பண்டிதரும் மேற்கொண்டு வர்ணிக்கவில்லை.

விஷ்ணுதீர்த்தருக்கு மிகவும் பிடித்த சிஷ்யர் அனிருத்த தீர்த்தர். இவர் ஹரிசந்திர மலைக்குச் சென்று, குருகளை உடுப்பிக்கு திரும்பி வருமாறு, மிகுந்த பக்தியுடனும், மரியாதையுடனும் கேட்டுக் கொண்டார். சஜ்ஜனர்களுக்கு அருள்வதற்கு விஷ்ணு தீர்த்தர் திரும்பி வந்தார். ஸ்ரீமதாசார்யரின் அருளுக்குப் பாத்திரரான விஷ்ணுதீர்த்தரின் சிஷ்யனான பாதராயண தீர்த்தருக்கு அருளி, அவரை உத்தமஞானியாக மாற்றினார். சோதே மற்றும் சுப்ரமண்ய மடங்களுக்கு மூலபுருஷராகி, பின் தமது சாதனை மற்றும் தவத்தினை தொடர்வதற்கு குமாரபர்வதத்திற்கு சென்றார் விஷ்ணுதீர்த்தர். ஸ்ரீமதாசார்யரின் சித்தாந்தத்தை மேலும் பரப்புவதற்கு, அங்கிருந்து மறுபடி நம்மிடையே வருவார் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பத்பனாப தீர்த்தர் மற்றும் இதர சிஷ்யர்கள்

கோதாவரி நதிக்கரையிலிருந்து வந்த பண்டிதர், அனைத்து சாஸ்திரங்களையும் அறிந்த, ஷோபன பட்டர், அன்றைய பண்டிதர்களில் சிறந்தவர் ஆவார். ஸ்ரீமதாசார்யரின் நற்குணங்களுக்கு ஈர்க்கப்பட்டார். அவர் மூலமாக சூத்ர பாஷ்யத்தை ஒருமுறை கேட்டார். அவரில் மாற்றம் ஏற்பட்டது. மத்வ சாஸ்திரங்களை ஒப்பி, இதர மதங்களை நிராகரித்து, மத்வ சாஸ்திரங்களை தகுந்த ஆதாரங்களுடன் பிரசாரம் செய்யத் துவங்கினார். ஆசார்யரிடம் சன்யாசம் பெற்று, முதல் சிஷ்யராகி, பத்பனாப தீர்த்தர் என்று அழைக்கப்பட்டார்.

ஸ்ருத்யா மத்யா சதா பக்த்யா விரக்த்யா நித்ய சேவயா |
யஸ்மை ப்ரசன்ன: ப்ராஜ்யேஷ: சத்யோ வித்யாம் ததெள ஷுபாம் || (15-121)

இவரிடமிருந்த குருபக்தி, சித்தாந்த அறிவு, நினைவுத்திறன், தவ வலிமை ஆகியவற்றைக் கண்ட ஸ்ரீமதாசார்யர் மகிழ்ந்து, வேதாந்த கல்வியை உபதேசம் செய்தார். சிம்மத்தைப் போலிருந்த பத்பனாப தீர்த்தர், சித்தாந்தத்தை பிரசாரம் செய்தவாறு, துர்மதங்களை கண்டிக்கத் துவங்கினார்.

மத்த துர்வாதி மாதங்கதர்க மஸ்தக தாரணே |
பஞ்சாஸ்யோ யோபவத் வ்யக்தம் சதுராஸ்யோऽபி கேவலம் || (15-124)

ஸ்ரீமதாசார்யரின் ஞானத்திற்கு சாரமாக இருந்தார். ஆசார்யரின் அனுவியாக்யான என்னும் சிறந்த கிரந்தத்திற்கு 'சன்யாய ரத்னாவளி' என்னும் உரையை இயற்றினார். ஆசார்யரின் புகழை அனைத்து இடங்களிலும் பரப்பினார். ஸ்ரீமதாசார்யருக்குப் பிறகு வேதாந்த சாம்ராஜ்யத்தை அலங்கரித்த உத்தம புருஷர் ஆவார்.

ஸ்ரீவிஷ்ணுதீர்த்தர் மற்றும் ஸ்ரீபத்பனாப தீர்த்தருக்கு முன்னும் பின்னும் ஸ்ரீமதாசார்யருக்கு பல சிஷ்யர்கள் இருந்தனர். பல ஊர்களிலிருந்து வந்திருந்த அவர்களில் சன்யாசிகளும், கிருஹஸ்தர்களும் இருந்தனர். இவர்களில் சன்யாசி சிஷ்யர்கள் என்றால் - ஸ்ரீபத்பனாப தீர்த்தர், ஸ்ரீஹ்ருஷிகேச தீர்த்தர், ஸ்ரீ ஜனார்த்தன தீர்த்தர், ஸ்ரீ நரசிம்ம தீர்த்தர், ஸ்ரீஉபேந்திர தீர்த்தர், ஸ்ரீ நரஹரி தீர்த்தர், ஸ்ரீ மாதவ தீர்த்தர், ஸ்ரீஅக்ஷோப்ய தீர்த்தர் எனச் சொல்லலாம். இவர்களைத் தவிர, ஸ்ரீவாமன தீர்த்தர், ஸ்ரீராம தீர்த்தர், ஸ்ரீ அதோக்ஷஜ தீர்த்தர் ஆகியோரும் இருந்தனர். இவர்கள் பூமிக்கு இறங்கிவந்த சூரியனைப் போலிருந்தனர். வைராக்யசாலிகளாக, சித்தாந்தத்தில் ஈடுபாடு, இந்திரியங்களை கட்டுப்படுத்தி, விஷ்ணுபக்தியுடன் ஞானிகளாக இருந்தனர்.

மேலும் பல பக்தர்கள், கிருஹஸ்தர்கள் ஸ்ரீமதாசார்யரின் சாஸ்திரங்களில் ஈர்ப்பு கொண்டு, பாடங்களைப் படித்து வந்தனர். அவர்கள் அனைவருக்கும் விஷ்ணுபக்தி வளருமாறு செய்தார் ஆசார்யர். மகிழ்ச்சியை, இஹபரங்களில் சுகத்தைக் கொடுத்து, இறுதியில் மோட்சத்தையே கொடுக்கும் சித்தாந்தத்தை போதித்தார். சஜ்ஜனர்களின் மேல் உள்ள கருணையால், பூமியில் அவதாரம் செய்த ஜீவோத்தமரான ஆனந்ததீர்த்தரை யார்தான் சேவிக்க மாட்டார்கள்?

ஸ்ரீமதாசார்யரின் ஆணைப்படி ஸ்ரீ நரஹரி தீர்த்தர், கலிங்க தேசத்திற்கு சென்று, அங்கு அரசன் இல்லாத காரணத்தால், 12 ஆண்டுகள் ஆட்சி புரிந்து, பின் இளவரசனுக்கு பட்டம் சூட்டி, அவனின் கருவூலத்தில் இருந்த, பிரம்மதேவரினால் பூஜிக்கப்பட்டு, அந்த பரம்பரையில் வந்த ஸ்ரீமூலராம பிரதிமைகளைக் கொண்டு வந்து ஸ்ரீமதாசார்யரிடம் ஒப்படைத்தார். பத்மனாப தீர்த்தருக்குப் பிறகு வேதாந்த சாம்ராஜத்தில் வீற்று, இவருக்குப் பின் மாதவ மற்றும் அக்ஷோப்ய தீர்த்தர் பீடாதிபதியாக இருந்தனர்.

இப்படியிருந்தபோது, சாதுர்மாச விரதம் நெருங்கி வந்தது. கண்வதீர்த்தம், ஏகவாட கிராமத்தின் முக்கியஸ்தர்கள் ஸ்ரீமதாசார்யரை வணங்கி கேட்டபோது, அங்கிருந்த சிறந்த மடத்தில் தங்கினார். ஸ்ரீமதானந்ததீர்த்தர் அழகிய முகம், சிறந்த ஒளி

கொண்டவர். அவரை வணங்கிய பக்தர்களின் வாழ்க்கையிலிருந்த துக்கங்கள் நீங்கின. அவரது சேவை செய்யும் பக்தர்களின் சேவகர்களுக்கும் ஸ்ரீமதானந்த தீர்த்தர் தனது அருளை வாரி வழங்குகிறார்.

****

பதினாறாம் சர்க்கத்தின் சுருக்கம்

மகாவேதாந்த காவியத்தின் இந்த சர்க்கத்தில் பண்டிதர் ஸ்ரீமதானந்ததீர்த்தரின் பல மகிமைகளை வர்ணித்திருக்கிறார். பத்தாவது சர்க்கத்தில் விளக்கியதைப் போல இங்கும் சித்தாந்தத்தின் சிறப்புகள் விளக்கப்பட்டுள்ளன. இந்த பூர்ணப்ரக்ஞ விஜயம், ஸ்ரீமதாசார்யரிடம், அவர் நிறுவிய சித்தாந்தத்தில், நிர்மலமான பக்தியை வளர்த்து, ஸ்ரீஹரியின் அருளைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆசார்ய மத்வர் தம் வாழ்க்கை முழுவதும் காட்டிய திவ்யமான, அற்புதமான, காணக்கிடைக்காத, ஸ்ரீஹரியின் மகிமைகளில், நாராயண பண்டிதர் சிலவற்றை மட்டும் இங்கு தொகுத்து, அழகான நடையில் விளக்கியிருக்கிறார். ஸ்ரீமதாசார்யரின் பல மகிமைகளை விவரிக்கும் இந்த சர்க்கத்தில் ஸ்ரீமதாசார்யர், தேவதைகளால் போற்றப்பட்டு, பார்வையிலிருந்து மறைந்த காட்சியை வர்ணித்து, ஸ்ரீ சுமத்வவிஜயத்தின் விஜயமகோத்ஸவமாக சொல்லியிருக்கிறார்.

ஒரு முறை பல அறிஞர்கள் கூடிய சபை ஒன்று நடந்தது. **’வேதாந்தம் ஸ்வயமிவ பந்தமோக்ஷமூலம் வ்யாசஷ்ட ஸ்புடமத கோSபி கோவிதோத்ர ||’** **(16-1)** ஸ்ரீமதாசார்யரின் மேல் அதிக பக்திகொண்ட சிஷ்யர் ஒருவர், மோட்சத்திற்கான வழியான, ஆனந்ததீர்த்தரின் பரமோத்ஸவமான மகிமைகளை தெளிவாக விளக்கத் துவங்கினார்.

வேதங்களின் நிலையை நிரூபித்தல்

கோமதி நதிதீரத்தில் ஒரு அரசன். அதிகமாகப் பேசக்கூடியவன். அங்கு பயணத்தில் வந்த ஸ்ரீமதாசார்யரைக் கண்டான். வேதங்களை நிரூபிக்கக்கூடிய, நிலவைப் போல ஒளிர்ந்த, அனைத்தையும் அறிந்த ஸ்ரீமதானந்த தீர்த்தரைக் கண்டு பேசத் துவங்கினான். ’வேத வாக்கியத்தின் பலன் கிடைக்கவில்லையெனில், வேத வாக்கியங்கள் மது குடித்தவன் பேசுவதைப் போலாகும்; அவை நிரூபிக்க முடியாதவை’ என்றான். ‘மந்திர சித்திக்கு தகுதி தேவை’ என்றார் ஸ்ரீமதாசார்யர். இதை ஒப்புக்கொள்ளாத அந்த ராஜனுக்கு பாடம் புகட்ட வேண்டி, சர்வக்ஞரான ஆசார்யர், ஒரு தானியத்தின் விதையை தம் உள்ளங்கையில் வைத்துக்கொண்டு ‘யா ஔஷதீ: பூர்வஜாதா தேவேப்ய:’ என்ற சூக்தத்தை கூறினார். என்ன ஆச்சரியம்! உடனே, அதிலிருந்து இலை, பூ ஆகியவை வளர்ந்ததைக் காட்டினார். வேத பிரமாண்யத்தை நேரடியாக நிரூபித்தார்.

கால் நகத்திலிருந்து ஒளி

ஒரு முறை இரவு வேளையில், ஆசார்யர் சிஷ்யர்களுக்கு பாடம் எடுக்கையில் தீபம் அணைந்து போயிற்று. கருணைக்கடலான ஸ்ரீமதாசார்யர் தம் காலின் கட்டைவிரலின் நகத்தின் நுனியிலிருந்து வெளிச்சத்தை தருவித்தார். அந்த வெளிச்சத்திலேயே பாடத்தை நடத்தியும் முடித்தார். கல்வியின் அபிமானியான பாரதிதேவியின் கணவருக்கு இது ஒன்றும் ஆச்சரியமில்லையே.

பீமனின் நினைவு

சர்வக்ஞரான ஸ்ரீமத்வாசார்யர் பயணத்தில் பத்ரா நதிக்கரைக்கு வந்தார். அங்கு வெள்ளத்தை தடுக்க ஒரு தடுப்பு வைக்கவேண்டுமென்று ஒரு பெரிய பாறையைத் தூக்கிய பலர், அதை தூக்கமுடியாமல் நடுவில் இறக்கிவைத்தனர். அதைக் கண்ட ஆசார்யர், 'மக்களின் நலனுக்காக இந்த பாறையை ஏன் சரியான இடத்தில் வைக்கவில்லை?' என்று கேட்டார். அவர்களோ 'யதிஸ்ரேஷ்டரே! இது பீமசேனனால் மட்டுமே முடியும் வேலையாகும்' என்றனர். ஆசார்யர் '**லீலாவத்கரகமலேன சோடதுலேன'** அனாயாசமாக, அந்த பெரிய பாறையை தன் ஒரே கையில் தூக்கி, வைக்கவேண்டிய சரியான இடத்தில் வைத்தார். இந்த பாறையை இன்றும் பார்க்கமுடியும். மக்களுக்கு ஸ்ரீமத்வரின் உதவியாக செயலாகும் இது.

இந்த பாறைக்கு 'பீமனகல்லு' என்று பெயர். 20அடி நீளம். 16 அடி அகலம். 10 அடி உயரமான பாறை. சுமார் 50 டன் எடை இருக்கும். அதன் மேல் மத்வாசார்யரின் படம் வரைந்து 'ஸ்ரீமத்வாசார்யர் ஒரே கையினால் தூக்கி நிறுத்தியது' என்று எழுதினர். இதை இன்றும் சிக்மங்களூர் ஜில்லா மூடுகெரெ தாலுகா மாவினகெரெ கிராமம் அம்புதீர்த்தத்தின் அருகில் காணலாம். அப்போது ஸ்ரீமதாசார்யரின் வயது 74 இருக்கலாம்.

சூரிய கிரகணம். கடலைவிட உயரமாக ஸ்ரீமத்வர்

ஒரு நாள் அமாவாசை. சூரிய கிரகண பர்வ காலமிருந்தது. ஸ்ரீமதாசார்யர் தமது சன்யாசி, கிருஹஸ்த என பல சிஷ்யர்களுடன் சமுத்ர ஸ்னானத்திற்காக சென்றார். **'கன கன கோஷ கோர வேஷ:' (16-13)** பெரிய பெரிய அலைகள் கடலில் எழுந்தன. சர்வக்ஞாசார்யரின் கால்களில் பட்டு, அவருக்கு சாஷ்டாங்கமாக வணங்குவதாக இருந்தது. இங்கு பண்டிதர், கடலையும் ஆசார்யரையும் ஒப்பிட்டு, இவர் கடலைவிட உயர்ந்தவர் என்று வர்ணிக்கிறார். பிறகு ஆசார்யர் தனது கம்பீரமான குரலில், ரிக் வேதத்தின் ஐதரேய பகுதியின் சூக்தங்களின் வியாக்யானத்தை பாடத் துவங்கினார். பர்வகாலத்தில், சமுத்ர ஸ்னானம் செய்து கடலுக்கு அதிக புனிதத்தைக் கொடுத்தார். அவருடன் வந்த அனைவரும் கடலில் குளித்து புனிதராயினர். கடலில் அலைகளின் வேகத்தை தாங்கமுடியாத பக்தர்களுக்கு குளிக்க முடியாமல் பிரச்னை உண்டாயிற்று. **'ஆக்ராந்தோடதிக குருணா ஸ தேன தாவத் முஞ்சன் சஞ்சலனமபூத் தடாக தேஷ்ய: ||' (16-23)** உடனே அனைத்திலும் வல்லவரான ஆசார்யர், தமது தீர்க்கமான பார்வையால், ஆர்ப்பரித்த கடலை மட்டுப்படுத்தினார்.

கண்டவாட சகோதரர்களின் தோல்வி

ஆசார்யரின் வலிமையை சோதிக்கவேண்டும் என்று எண்ணிய சிலர், கண்டவாட என்னும் ஊரில் இருந்த சகோதர மல்யுத்த வீரர்களை ஆசார்யரின் சேவைக்கென அவரிடம் அனுப்பினர். தன் சகோதரனுடன் வந்திருந்த கண்டவாட என்பவனை, ஆசார்யர் அவனது வலிமையை நிரூபிக்குமாறு கூறினார். உடனே அங்கிருந்த ஸ்ரீகாந்தேஸ்வர ஆலயத்தின் மிக கனமான (30 பேர் சேர்ந்து தூக்கிய) த்வஜஸ்தம்பத்தை ஒருவனாக தூக்கினான். தென்னை மரத்தை ஆட்டி மேலிருந்து தேங்காய்களை விழச் செய்தான். பிறகு ஆசார்யரின் ஆணைப்படி, இருவரும் அவரின் கழுத்தினை அழுத்திப் பிடிக்க முயன்றனர். **'சங்கர்ஷாத் க்ரம பரிவர்தமான தைக்ஷ்ணம் ||' (16-27)** ஆசார்யரிடம் எந்த மாற்றமும் காணப்படாமல், கழுத்தை இன்னும் பலமாக அழுத்தினர். அப்போதும் தெளிவாக பேசிக் கொண்டிருந்த மத்வர், பீமரே ஆவாரல்லவா? பிறகு ஆசார்யரின் வலிமையைக் காட்டுமாறு கூறினர். ஆசார்யரும் தமது கால் கட்டைவிரலை நிலத்தில் அழுத்தி, அதை மேலே எடுக்குமாறு கூறினார். **'சாமர்த்யம் யயதுரிமௌ ந கம்பனேஸ்யா ||' (16-29)** அவர்கள் ஆசார்யரின் கால் விரலைக்கூட அசைக்க முடியாமல் கஷ்டப்பட்டனர். ஹனுமபீமராக வலிமையைக் காட்டிய இவருக்கு இது ஒன்றும் ஆச்சரியமில்லை.

லகிமாதி வலிமையை காட்டுதல்

நிர்யத்னம் வடுமதி ருஹ்ய மந்தஹாஸி ஸ ப்ராயாதிஹ பரிதோ ந்ருசிம்ஹகேஹம் ।
ஐஸ்வர்யேரிதி லகிமாதிகைருபேதோ மத்வோபூத் த்ரிபுவன சித்ரரத்ன ராஜ: || (16-30)

ஒருமுறை ஒரு சிறிவன் மேல் அமர்ந்து ஸ்ரீமதாசார்யர் ந்ருசிம்ஹ ஆலயத்தைச் சுற்றி வந்தார். இது மூன்று உலகத்தாருக்கும் வியப்பை அளித்தது. லகிமா, கரிமாதி செல்வங்களை பெற்றிருப்பவரான பூர்ணப்ரக்ஞரின் இந்த செயல், இவர் ஞானத்தில் மட்டும் வல்லவர் இல்லை; வலிமையிலும் இவர் வல்லவரே - என்ற செய்தியை தந்தது. இவரது கிரந்தங்களின் காம்பீர்யமும் இவ்வாறே இருக்கின்றன என்று அறிஞர்கள் அறிந்தனர்.

பூர்வவாடனின் கர்வ பங்கம்

இன்னொரு முறை முன்னாள் மல்யுத்த வீரனான பூர்வவாட (50 பேர் சேர்ந்து தூக்க முடியாத மரத்தை தூக்கியவன்), ஆசார்யரின் வலிமையை சோதிக்க வந்தான். முந்தைய சம்பவத்தைப் போலவே ஆசார்யர் தனது சொற்பொழிவை செய்து கொண்டிருக்க, பூர்வவாட, ஆசார்யரின் கழுத்தை அழுத்த முயன்றான். எவ்வளவு பலமாக அழுத்தினாலும், ஆசார்யரின் குரலில் எவ்வித மாற்றமும் வரவில்லை. ஆசார்யர் எப்போதும் போல, கணீரென்று தன் சொற்பொழிவைத் தொடர்ந்து கொண்டிருந்தார். போலவே ஆசார்யர் நிலத்தில் வைத்த தன் கை விரல்களை, தூக்க முடியாமல் தோற்றான் பூர்வவாடன்.

பீமனை நினைவுபடுத்திய மத்வர்

ஷிவாக்னி, வாசுதேவ, உக்ர, அமோக முதலான பிராமணர்களுடன் வந்த மல்யுத்த வீரர்கள், ஸ்ரீமதாசார்யரின் வலிமையை சோதிக்க விரும்பி தோற்றனர். அவரது உடம்பிலிருந்து ஒரே ஒரு முடியையும் பிய்க்க முடியாமல் சோர்ந்தனர். **'நாசாக்ரே மைதுனி க்ருதைஸ்ச முஷ்டிகாதை: நாஸ்யேந்தோரதி பலிபி: ப்ரசன்னதாSSசி ||' (16-34).** ஆசார்யரின் மூக்கின் மேல் தங்களின் பலம்கொண்ட மட்டும் வேகமாக குத்திப் பார்த்தனர். ஆசார்யரிடம் அது எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை. அவர் சிரித்த முகத்துடனேயே இருந்தார். இப்படி பல சந்தர்ப்பங்களில், ஆசார்யரின் முந்தைய அவதாரங்களான ஹனும மற்றும் பீமனை நினைவுபடுத்தினார் ஸ்ரீமதாசார்யர்.

பாரந்தி கோயிலை சீர்படுத்தியது

த்வாபரத்தில் பீமனாக இருந்தபோது, த்ரௌபதி மற்றும் சகோதரர்களுடன் 'பாரந்தி' என்னும் ஆலயத்தில் ஐந்து ரூபத்தில் இருந்த ஸ்ரீஹரியை வணங்கி, நித்ய பூஜைக்கு ஏற்பாடு செய்திருந்தார். அதே இடத்திற்கு ஸ்ரீமத்வராக வந்தவர், அந்தக் கோயிலின் பூஜைகள் நின்று போயிருப்பதைக் கண்டார். உடனடியாக கிராமத்து முக்யஸ்தர்களின் முன்னிலையில், அந்த ஊரின் அரசனையும் அழைத்து, அனைத்து நியமங்களையும் மறுபடி துவக்குமாறு ஏற்பாட்டினைச் செய்தார். ஸ்ரீஹரியை பூஜித்திருந்த மற்றும் அவனின் மகிமைகளை நினைத்துக் கொண்டார். ஆசார்யரின் யோகசித்தியை பலமுறை கண்டிருந்த அவரது சிஷ்யர்களுக்கு இது ஒன்றும் ஆச்சரியமில்லை.

ஸ்ரீபூர்ணப்ரக்ஞரின் விஜயம்

தமது பயணத்தில் ஆசார்யர் ஒருமுறை 'சரிதந்த' என்னும் இடத்திற்கு வந்தார். அது மழைக் காலமாக இருந்தாலும், அங்கிருந்த ஏரி வறண்டு காணப்பட்டது. வருத்தத்துடன் இருந்த மக்களைக் கண்டு, கருணாமயியான ஆசார்யர் உடனடியாக மேகங்களை வரவழைத்து அங்கு மழை பொழியச் செய்தார். அந்த ஏரி மட்டும் நிரம்பியது. மக்கள் மகிழ்ந்தனர். சஜ்ஜனர்கள் ஆசார்யரின் மகிமைகளை எப்போதும் நினைத்தனர். (இன்றும் ராமகுஞ்ச என்னும் கிராமமாகி, அந்த ஏரி தண்டதீர்த்தம் என்று பெயர் பெற்றிருக்கிறது).

ஆசார்யரின் புகழை விரும்பாத சில துஷ்டர்கள் அவரைக் கொல்ல முயன்று, அதில் தோற்று, பின் கிராம அதிகாரிகளிடம் துர்போதனை செய்தனர். சிறிது யோசித்த அவன், பின் ஆசார்யரைக் கொல்வதற்கு வந்து, அவரின் மகிமைகளை அறிந்து, தான் செய்தது தவறென்று உணர்ந்து, அவர் காலில் விழுந்தான். ஆசார்யரின் தரிசனமே ஒருவரின் மனதை எப்படி திருத்துகிறது என்பதற்கு இந்த சம்பவமே சாட்சி.

பயணத்தில் முன்னர், கொக்கட என்னும் கோயில் இருக்கும் கிராமத்திற்கு வந்தார் ஆசார்யர். இடெபடித்தாய என்னும் பிராமண பக்தன். அவனின் பக்திக்கு மெச்சிய

ஸ்ரீமதாசார்யர், அவனது நன்மைக்காக உத்தம கிரந்தமான ‘கிருஷ்ணாம்ருத மஹார்ணவம்’ என்னும் கிரந்தத்தை இயற்றினார். **‘ஸ்ரீகிருஷ்ணாம்ருத பரமார்ண வாபிதானாம் சக்ரே சத்வசன ததிம் ஸ்வபக்த பூத்யை: ||’ (16-40)**

பின் உஜிரே என்னும் கிராமத்திற்கு வந்தார் ஆசார்யர். அங்கு இருந்த அறிஞர் ஒருவர் தானே சர்வக்ஞர், சர்வஸ்ரேஷ்டன் என்று நினைத்து கர்வத்துடன் இருந்தார். ஆசார்யருக்கு யக்ஞ யாகாதிகளை செய்வதற்கு அதிகாரம் இல்லாத காரணத்தால், அதற்கான நியமம், விதிகள் அவர் அறியார் என்று எண்ணி, அதில் அவரை எப்படியாவது வெல்லவேண்டும் என்றெண்ணி, ‘சந்தஸாம்-வை’ ஆகிய வேத பாகங்களின் பொருளை சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சர்வக்ஞரான ஆசார்யர், அவருக்கும் தெரியாத பல விஷயங்களை, மந்திரங்களை விதி பூர்வகமாக உச்சரித்தார். ஆசார்யரின் அற்புத பாண்டித்யத்தைக் கண்ட அறிஞர் அங்கிருந்து ஓடிவிட்டார். உலகத்தில் ரிக்குகளின் பொருள் நிலைத்திருக்க வேண்டுமென்று, சஜ்ஜனர்களின் மேல் இருந்த கருணையினால் ‘கர்மநிர்ணய’ (கண்டார்த்த நிர்ணய) என்னும் கிரந்தத்தை இயற்றினார் ஆசார்யர்.

’கிம் தேன க்ஷதமம்ருதாகரஸ்ய தஸ்ய ||’ (16-46) பூர்ணப்ரக்ஞரை வெல்ல வந்த சிலர், வாதத்தில் ஈடுபட்டு தோற்றனர்; சிலர் மல்யுத்தத்தில் ஈடுபட்டும் தோற்றனர். நிலவை, யானையைக் கண்டு குரைத்த நாய் போல ஆனார்கள் துஷ்டர்கள். பக்தியுடன் வணங்கிய சஜ்ஜனர்களுக்கு ஸ்ரீமதாசார்யர், காமதேனு கல்பவிருக்ஷத்தைப் போன்று அருளினார். அவர்களை காப்பாற்றினார். பயணத்தில் இருந்தபோது ஒரு முறை பக்தனின் வேண்டுகோளுக்கு இணங்க, 30 பேரின் உணவினை ஆசார்யர் ஒருவராகத் தின்றார். ஒரு முறை ஐந்து பேருக்காக செய்திருந்த உணவினை, ஐம்பது பேருக்கு பரிமாறுமாறு செய்தார். மழை இல்லாத இடங்களில் மழை பொழியச் செய்தார். இப்படி பல அற்புதங்களைச் செய்தார்.

நிஸ்த்வானாம் கதிபய புக்தி யுக்த பக்தம் பக்தானாம் வ்யதித சதுர்குணம் தயாளு: |
பூங்க்தே ஸ்ம த்ரிதஷ நரோப போக்யமன்னம் ஸ்ருப்ரீத்யை ஸ தன வதாம் ப்ருஹத் ப்ரபோத: || (16-47)

இப்படி அறியவேண்டியவர்களுக்கு ஞானத்தையும், ஏழையாக வந்தவர்களுக்கு செல்வத்தையும், உலகத்தை காப்பவரான வாயுதேவரின் அவதாரமான ஸ்ரீமத்வாசார்யர் மோட்சத்திற்கான வழியைக் காட்டி சஜ்ஜனர்களுக்கு மகிழ்ச்சியளித்தார். ஆசார்யர் காட்டிய மகிமைகள், அவருக்கு சாதாரணமாக இருந்தாலும் பக்தர்களுக்கு பக்தி அளிப்பதாக இருந்தது. ஜகத்குருவான ஆசார்ய மத்வரின் நிரந்தர சிந்தனை, அவரது கிரந்தங்களின் பாடம், புராணம் - **‘கமனாசன சங்கதாதி லீலா: ஸ்ம்ருதி மாத்ரேண பவாபவர்க தாத்ரீ: |’ (13-42)** - ஆகியவை மோட்சத்தைக் கொடுப்பதாக இருக்கிறது. நாராயண பண்டிதர் ‘மனோவிஷுத்யை சரிதானுவாத:’ அதாவது பவித்ரமான, ஞானபக்திகளை வளர்க்கும், மகிழ்ச்சியைக் கொடுக்கும் கதையினை நினைவுபடுத்துகிறார்.

ஸ்ரீமதாசார்யரின் திவ்ய சரித்திரத்தை தேவாதி தேவதைகள், தினமும் மனதில் தரிக்கின்றனர். கந்தர்வர்கள் தேவ சபைகளில் இதையே பாடுகின்றனர். ஸ்ரீபூர்ணப்ரக்ஞரின் சரித்திரம், கங்கையைவிட புனிதமானது. இப்படியாக நினைத்து, பாடி, ஆடினால், தேவதைகள், கந்தர்வர், ரிஷி முனி கணங்களுடன் ஆசார்யரின் திவ்ய க்ருதிகளைக் கேட்பதற்கு பார்ப்பதற்கு, ஆகாய விமானங்களில் ஏறி ஆகாயத்தில் ஒளிமயமாக வருகின்றனர். மத்வசரிதாம்ருதத்தை பாடத் தொடங்குவர்.

கீர்வாணை: விஜய மஹோத்சவஸ்ய பூஜாம்
குர்வாணைரவிரள சம்விதஸ்ததானீம் |
விஸ்மேரைர் முனினிகரூப தேவயுக்தை:
சுஸ்மேரைரத தமவேக்ஷிதம் ப்ரஜக்மே || (16-52)

பூலோகத்தின் மிகச்சிறந்த க்ஷேத்திரமான அனந்தாசனனின் திவ்ய சன்னிதியில், உத்தம நற்குணங்களைக் கொண்ட சிஷ்யர்களுடன் வீற்றிருந்த, மங்களகீர்த்தியினால் ஒளிரும், எண்ணற்ற நற்குணங்களைக் கொண்டவரான, ஞானபக்தி வைராக்கியத்தை பெற்றிருப்பவர்களில் முதல்வரான, ஆனந்தத்தைக் கொடுக்கும் சாஸ்திரங்களை இயற்றிய, ஐதரேய உபநிஷத் பாஷ்ய பாடத்தை சிஷ்யர்களுக்கு எடுத்துக் கொண்டிருந்த ஸ்ரீமதாசார்யரை காண்பதற்கு, சுரர்கள் வானத்திலிருந்து வணங்கினர். ஸ்ரீபூர்ணப்ரக்ஞரைக் கண்டு சுரோத்தமர்கள் பணிவுடன் போற்றி வணங்கினர்.

நமஸ்தே ப்ராணேஷ ப்ரணத விபவாயாவனிமகா:
நம: ஸ்வாமின் ராமப்ரியதம ஹனுமன் குருகுண |
நமஸ்துப்யம் பீமப்ரபல க்ருஷ்ணேஷ்ட பகவன்
நம: ஸ்ரீமன் மத்வ ப்ரதிஷ சத்ருஷன் நோ ஜயஜய || (16-57)

'பரமகுருகளான ஸ்ரீமன்மத்வாசார்யரே | நீங்கள் நற்-சாஸ்திரங்களால் துர்-சாஸ்திரங்கள் என்னும் இருட்டினைப் போக்கினீர்கள். ஸ்ரீ நாராயணின் நற்குணங்களை சஜ்ஜனர்களுக்கு தெரியவைத்தீர்கள். ஜீவோத்தமரான நீங்கள் எங்களுக்கு அருளுங்கள்' என்றனர். ஸ்ரீராமசந்திரனுக்கு ப்ரியமான ஹனுமந்த தேவருக்கு வணக்கங்கள். ஸ்ரீகிருஷ்ணனுக்கு இஷ்டமான பீமசேனதேவருக்கு வணக்கம். ஸ்ரீவேதவியாசரின் ப்ரியத்திற்கு ஆளான ஸ்ரீமத்வாசார்யருக்கு வணக்கங்கள். நமக்கு ஞானத்தை கொடுப்பவராக, துஷ்டர்களை அழிப்பவராக ஜெயித்தீர்கள். இப்படி வணங்கியவாறு பிரம்ம ருத்ராதி தேவதைகள் பூர்ணப்ரக்ஞரின் விஜய மஹோத்ஸவத்தை காண்பதற்காக குடும்பத்துடன் வந்தனர். இங்கு பண்டிதர், ஸ்ரீமதாசார்யரின் திவ்ய உருவத்தைக் கொண்டாடியிருக்கிறார்.

ஸ்ரீமந்தம் சசிவதனம் குசேஷயாக்ஷம் கம்பீர ஸ்வரமதி திவ்ய லக்ஷணாட்யம் |
பஷ்யந்த: ஸ்வகுருமதார்சிசன் க்ருதார்த்த வாண்யாதம் ஹரிரதிபூர்ண காமமேதி || (16-55)

வானில் காட்சியளித்த ருத்ர, இந்த்ராதி தேவதைகள் குருகளான மத்வாசார்யரின் மஹாவிஜயோத்ஸவத்தை பாராட்டியவாறு, ஜயஜய என்றவாறு, **'ஷரணம் குரோ கருணயாऽபி நோ பவே |' (16-56)** - அஞ்ஞானத்தைப் போக்கி, சுஞ்ஞானத்தைக் கொடுத்து, முகுந்தனைக் காட்டுங்கள். தங்களுடைய கருணையும், அருளும் இருக்கட்டும் என்று வேண்டினர். ஸ்ரீவாயுதேவரின் மூன்றாவது அவதாரத்தை மனதார கொண்டாடி ஜயஜய என்றனர்.

இதி நிகதிதவந்தஸ்தத்ர விருந்தாரகேந்த்ர குருவிஜய மஹந்தம் லாளயந்தோ மஹாந்தம் |
வவ்ருஷுரகில த்ருஷ்யம் புஷ்பவாரம் சுகந்தம் ஹரிதயித வரிஷ்டை ஸ்ரீமதானந்த தீர்த்தே || (16-58)

அனைவரும் பார்த்திருக்கையில், ஸ்ரீநாராயணரின் அன்பிற்குப் பாத்திரரான ஸ்ரீமதானந்ததீர்த்த பகவத்பாதரின் மேல் தேவலோகத்து நறுமணம் நிறைந்த புஷ்பவிருஷ்டி ஆனது. அங்கிருந்த பார்வையிலிருந்து மறைந்த ஆசார்யர், ஸ்ரீவேதவியாசருடன் பதரியில் தங்கினாலும், ரஜதபீடபுரத்திலும், அவரது கிரந்தங்களிலும் எப்போதும் நிலைத்திருக்கிறார். **'அத்ருஷ்யோ ரூப்யபீடேऽஸ்தி த்ருஷ்யஸ்து பதரீதடே'**.

ஸ்ரீமத்வாசார்யர் பிங்கள சம்வத்சரம் மாக சுத்த நவமி ஆண்டு 1317 உடுப்பி அனந்தேஸ்வர ஆலயத்தில் சிஷ்யர்களுக்கு ஐதரேய பாஷ்ய பாடத்தை எடுத்துக் கொண்டிருந்தபோது, தேவதைகள் செய்த புஷ்பவ்ருஷ்டியில் கண்களிலிருந்து மறைந்தார்.

ஸ்ரீ நாராயண பண்டிதாசார்யர் இயற்றிய ஸ்ரீசுமத்வவிஜயம் ஒரு வேதாந்த மஹாகாவியம் ஆகும். ஜகத்குருவான ஸ்ரீமன் மத்வாசார்யரின் வாழ்க்கை சரிதத்தை விளக்கமாச் சொல்லும் சிறந்த காவியம். இந்த காவியம், மந்திர துல்யமாக, வேண்டிய அனைத்தையும் கொடத்தக்க, மாத்வரில் தினமும் பாராயணம் செய்யத்தக்க கிரந்தமாக பெயர் பெற்றிருக்கிறது.

ஸ்ரீசுமத்வவிஜயமானது, ஸ்ரீமதாசார்யரின் பரம்பரையில் வந்திருக்கும் அனைத்து பரம்ஹம்ஸர்களிடமும் மற்றும் அனைத்து கிருஹஸ்த உரையாசிரியர்களிடமும் தக்க மரியாதையைப் பெற்றிருக்கிறது. இந்த கிரந்தத்தை பாராயணம் செய்பவர், ஸ்ரீஹரியிடம் பக்தி உண்டாகி பகவத் அருளுக்குப் பாத்திரமாவர். ஸ்ரீசுமத்வவிஜயத்தின் பாடம், சொற்பொழிவு, பாராயணத்தால் சஜ்ஜனர்கள் விரும்பியது நடக்கும். அனைத்து பிரச்னைகளும் விலகும்.

மிகச் சிறந்த சித்தாந்தத்தை கொடுத்த ஸ்ரீமதாசார்யர் அனைவரின் வணக்கத்துக்குரியவராகி, சஜ்ஜனர்களுக்கு மோட்சத்தின் பாதையைக் காட்டிய ஒரேயொரு வழிகாட்டியாவார். இன்றைக்கும் வேதாந்த சாஸ்திரங்களைப் படிப்பவர்கள் 'ஸ்ரீமத்சுமத்வவிஜய' காவியத்திலிருந்தே பாடத்தை துவக்குவது சம்பிரதாயத்தில் வந்திருக்கிறது. பவரோகத்தைப் போக்கும் சிறந்த மருந்தாக இந்த

காவியம் இருக்கிறது. அனைத்து நற்பலன்களையும் கொடுக்கவல்ல கல்பவிருக்ஷ காமதேனுவாக இருக்கிறது இந்த காவியம்.

'ஆசார்யா: ஸ்ரீமதாசார்யா: சந்து மே ஜன்மஜன்மனி'

***

ஸ்ரீமத்வகதாம்ருதம்

பிற்சேர்க்கை - 1 : கிரந்தமாலிகா ஸ்தோத்திரம்

கிருஷ்ணம் வித்யாபதிம் நத்வா பூர்ணபோதாதி சத்குரூன் ।
ஜயதீர்த்த முனீம் நத்வா வக்ஷ்யேஹம் கிரந்தமாலிகாம் ॥

நாராயணேன வியாஸேன ப்ரேரிதஸ் தத்வஸம்விதே ।
கிரந்தான் மத்வாஸ்சகாராஸௌ சப்தத்ரிம்சத மந்த்தீ : ॥

கீதாபாஷ்யம் விதாயாதௌ பிரதமம் துஷ்டிதம் ஹரே ।
பாஷ்யாணுபாஷ்யே சக்ரேऽத ஹ்யனுவியாக்யான முத்தமம் ॥ 1

பிரமாண லக்ஷணம் நாம கதா லக்ஷண சம்ஹிகம் ।
உபாதிகண்டனம் சக்ரே மாயாவாதஸ்ய கண்டனம் ॥ 2

சக்ரே பிரப்ஞ்ச மித்யாத்வம் ஆனகண்டனமுச்சதீ: ।
சகார தத்வ சங்க்யானம் சாதனம் விஷ்ணுதர்சனே ॥ 3

கிரந்தம் தத்வ விவேகாக்யம் தத்வோத்யோத் ஹரே: ப்ரியம் ।
கர்மநிர்ணய நாமானம் கிரந்தம் நியாயார்த்த ப்ரும்ஹிதம் ॥ 4

சுகதீர்த்த யதிஸ்சக்ரே விஷ்ணுதத்வ நிர்ணயம் ।
ரிக்பாஷ்யம் ச சகாராஸௌ சர்வ வேதார்த்த நிர்ணயம் ॥ 5

ஐதரேயம் தைத்தரீயம் ப்ருஹதாரண்யமேவ ச ।
ஈஷாவாஸ்யம் காடகம் ச சாந்தோக்யாऽதர்வணே ததா ॥ 6

மாண்டூக்யம் நாம ஷட்ப்ரஸ்னம் ததா தலவகாரகம் ।
சக்ரே பாஷ்யாணி திவ்யானி தஷோபனிஷதம் குரு: ॥ 7

நிர்ணயம் சர்வஷாஸ்த்ராணாம் கீதா தாத்பர்ய சங்யகம் ।
சன்யாய விவ்ருதிம் நாம நியாயஷாஸ்திர நிக்ருந்தனம் ॥ 8

நரசிம்ம நகஸ்தோத்திரம் சக்ரே யமகபாரதம் ।
த்வாதச ஸ்தோத்ரமகரோத் கிருஷ்ணாம்ருத மஹார்ணவம் ॥ 9

தந்திரசாரம் சகாராஸௌ சதாசாரஸ்ம்ருதிம் சுதீ: ।
ஸ்ரீமத்பாகவதஸ்யாபி தாத்பர்யம் ஞானசாதனம் ॥ 10

மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் சம்சயஸ்சிதம் |
யதிப்ரணவ கல்பஞ்ச பிரணவார்த்த பிரகாசனம் || 11

ஜயந்தி நிர்ணயம் சக்ரே தேவகிகர்ப்ப ஜன்மன: |
கிருஷ்ணஸ்ய கிருஷ்ண பக்தோயம் த்வைபாயன கராப்ஜபூ: || 12

த்ரிம்ஷத் சஹஸ்ர சங்க்யாகம் த்வ்யதிகம் துஷ்டிதம் ஹரே: |
ஏதேஷாம் பாடமாத்ரேண மத்வேஷ: ப்ரீயதே ஹரி: || 13

***

ஸ்ரீமன் மத்வாசாரியாரின் கிரந்தங்கள் (சர்வமூல கிரந்தங்கள்)

ஸூத்ரபிரஸ்தான கிரந்தங்கள்:

1. ஸ்ரீமத் பிரம்மசூத்ர பாஷ்யம்
2. அணுபாஷ்யம்
3. அனுவியாக்யான
4. நியாயவிவரணம்

கீதாபிரஸ்தான கிரந்தங்கள்:

5. கீதாபாஷ்யம்
6. கீதா தாத்பர்ய நிர்ணயம்

உபநிஷத் பிரஸ்தான கிரந்தங்கள்:

7. ஈசாவாஸ்யோபநிஷத் பாஷ்யம்
8. தலவகாரோபநிஷத் பாஷ்யம்
9. காடகோபநிஷத் பாஷ்யம்
10. ஷட்ப்ரஸ்னோபநிஷத் பாஷ்யம்
11. அதர்வணோபநிஷத் பாஷ்யம்
12. மாண்டோக்யோபநிஷத் பாஷ்யம்
13. தைத்திரிய உபநிஷத் பாஷ்யம்
14. மஹைதரேயோபநிஷத் பாஷ்யம்
15. சாந்தோக்யோபநிஷத் பாஷ்யம்
16. ப்ருஹதாரண்யகோபநிஷத் பா.

ஸ்ருதி பிரஸ்தான கிரந்தம்:

17. ரிக்பாஷ்யம்

பிரகரண கிரந்தங்கள்:

18. தத்வசங்க்யானம்
19. தத்வ விவேக:
20. பிரமாணலக்ஷணம்
21. கதாலக்ஷணம்
22. உபாதிகண்டனம்
23. மாயாவாத கண்டனம்
24. பிரபஞ்சமித்யாத்வானு கண்டனம்
25. தத்வோத்யோத:
26. விஷ்ணு தத்வ நிர்ணயம்
27. கர்ம நிர்ணயம்.

இதிகாச பிரஸ்தான கிரந்தங்கள்

28. மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்
29. யமகபாரதம்

புராணபிரஸ்தான கிரந்தங்கள்

30. பாகவத தாத்பர்ய நிர்ணயம்

ஆசாரகிரந்தங்கள்

31. சதாசாரஸ்ம்ருதி
32. கிருஷ்ணாம்ருத மஹார்ணவம்
33. தந்திரசார சங்க்ரஹம்
34. யதிபிரணவ கல்பம்
35. ஜயந்தி நிர்ணயம்

ஸ்தோத்திர கிரந்தங்கள்

36. நகஸ்துதி
37. த்வாதச ஸ்தோத்திரம்

இந்த சர்வமூல கிரந்தங்களைத் தவிர, கந்துகஸ்துதி, பில்வமங்கல சாது:, திதி நிர்ணயம், சன்யாச பத்ததி ஆகிய சில ஸ்தோத்திரங்களும் ஸ்ரீமதாசார்யர் இயற்றியிருக்கிறார் என்று அறிகிறோம்.

***

சர்வமூல சங்க்ரஹ ஸ்லோகங்கள்

[1]பாஷ்யாணாம் தஷகம் ச [2]பஞ்சகயுதம் [3]த்ரிஸ்ரஷ்ச நிர்ணேதயோ: |
[4]விஷ்ணோ: ஸ்தோத்ரயுகம் [5]தஷப்ரகரணம் [6]கல்பத்வயம் ச [7]ஸ்ம்ருதி: ||
[8]ஸ்ரீக்ருஷ்ணாம்ருத [9]தந்த்ரஸார [10]யமகம் [11]நியாயாவலீ தீபனம் |
யேனாகாரி சதைவ மத்வமுனிராட் தத்வாத் சுவித்யாம் மம ||
--ஸ்ரீமதாசார்யர்

1. ஈசாவாஸ்யம் முதலான பத்து உபநிஷத்களின் பாஷ்யங்கள்
2. கீதாபாஷ்யம், ரிக்பாஷ்யம், பிரம்மசூத்ர பாஷ்யம், அணுபாஷ்யம், அனுவியாக்யான
3. கீதாதாத்பர்ய நிர்ணயம், ஸ்ரீமத்பாகவத தாத்பர்ய நிர்ணயம், மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்
4. நகஸ்துதி, த்வாதச ஸ்தோத்திரம்
5. தசபிரகரணங்கள்: தத்வ சங்க்யானம், தத்வ விவேக, மாயாவாத கண்டன, உபாதி கண்டன, பிரபஞ்சமித்யாத்வானுமான கண்டன, பிரமாண லக்ஷண, கதாலக்ஷண, கர்ம நிர்ணய, தத்வோத்யோத, விஷ்ணுதத்வ நிர்ணய.
6. ஜயந்திகல்ப வியாக்யா, யதிப்ரணவ கல்ப

7. சதாசாரஸ்ம்ருதி
8. கிருஷ்ணாம்ருத மஹார்ணவ
9. தந்திரசார
10. யமகபாரத
11. நியாயவிவரண

ஸ்ரீமதாசாரியாரின் 37 (சர்வமூல) கிரந்தங்களின் பெயர்களைக் கொண்ட ஸ்லோகம் இதுவே.

கீதாபாஷ்யம் சபாவம் நயவிவ்ருதிமனுவியாக்ருதிம் சாணுபாஷ்யம் |
பாஷ்யம் சூத்ரஸ்ய காவ்யம் ஸ்துதியுகலமபி ஸ்வேயபாவம் ஸ்ம்ருதிம் ச ||
ரிக்பாஷ்யம் தந்த்ரசாரம் ப்ரகரணதஷகம் வேதஸாரஸ்ய பாஷ்யம் |
கல்பத்வந்த்வம் சுதாப்திம் தஷமதிரதனோத் பாரதஸ்யாபி பாவம் ||

ஸ்ரீமத்வ த்வாதச நாம ஸ்தோத்திரம்

பூர்ணப்ரக்ஞோ ஞானதாதா மத்வோத்வஸ்த துராகம: |
தத்வக்ஞோ வைஷ்ணவாசார்யோ வியாச்சிஷ்யோ யதீஷ்வர: ||
ஆனந்ததீர்த்த: ஷம் நாமா ஜிதவாதி ஜிதேந்திரிய: |
ஸ்ரீமதானந்த சன்னாம்னாமேவம் த்வாதஷகம் படேத் |
லபதே வைஷ்ணவீம் பக்திம் குருபக்தி சமன்விதாம் ||

பிற்சேர்க்கை 2 - சுமத்வ விஜயத்தில் இருக்கும் சில பொன்மொழிகள்

* த்ராதா ய ஏவ நரகாத் ச ஹி புத்ர நாமா | (2-17)
யாரொருவன் தன் பெற்றோரை, புன் நாமக நரகத்திலிருந்து காப்பாற்றும் வல்லமை படைத்திருக்கிறானோ, அவனே 'புத்ரன்' எனப்படுவான்.

* தானம் த்ருவம் பலதி பாத்ர குணானுகூல்யாத் | (2-30)
தகுதி படைத்தவருக்குக் கொடுத்த தானமானது, எப்போதும் அதிக நற்பலன்களையே தரும்.

* முகரமிச்சதி கோ ம்ருக-தூர்தகம் பிரக்ருத ஹுங்க்ருத சிம்ஹசிஷௌ சதி | (3-24)
ஒரு சிங்கக்குட்டி கர்ஜிக்கும்போது, அழுதுகொண்டிருக்கும் நரியை யார் கவனிப்பர்?

* ஷுபாந்தராயம் ன பவாம்ஸ்சரேதிதி || (4-21)
நற்காரியங்களுக்கு என்றும் தடை போடக்கூடாது.

* ந புத்ர பித்ரோரவனம் வினா சுபம் வதந்தி சந்த: || (4-22)
வயதான பெற்றோரை கவனித்துக் கொள்வதைவிட ஒரு மகனுக்கு வேறொரு செயலும் பெரியது இல்லை.

* யதா விரக்த: புருஷ: பிரஜாயதே ததைவ சன்யாசவிதி: ஸ்ருதௌ ஸ்ருத: || (4-23)
எப்போது ஒரு புருஷனுக்கு (ஆணுக்கு) விரக்தி வருகிறதோ, அப்போதே சன்யாசத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

* அசங்கபூஷா நனு சாது சங்கிதா || (4-39)
பொருட்கள் மேல் பற்றினை விட்ட விரக்தர்களுக்கு, சஜ்ஜனர்களின் சங்கமம் ஒரு அலங்காரமாகவே ஆகியிருக்கிறது.

* ஹேதோகுதஸ்சித்விமனி க்ருதோப்யஹோ குணாப்திலுப்த: சுஜன:பிரசீததி | (5-23)
சஜ்ஜனர்கள் எப்போதும் நற்குணங்களைக் கொண்ட மற்ற சஜ்ஜனர்களிடம், எந்தவொரு வேறுபாட்டினையும் நோக்காமல், அன்பாக இருப்பார்கள்.

* சந்தோ ஹி குணாம்ஷதோஷித: || (5-26)
சஜ்ஜனர்கள் எப்போதும் அடுத்தவர்களிடத்தில் காணப்படும் குறைகளை கவனிக்காமல் (புறக்கணித்து) அவர்களது நற்குணங்களையே விரும்புவார்கள்.

* நேத்ருஷம் ஸ்தளமலம் ஷமல க்னம் நாஸ்ய தீர்த்த சலிலஸ்ய சமம் வா |

நாஸ்மதுக்தி சத்ருஷம் ஹிதரூபம் நாஸ்தி விஷ்ணுசத்ருஷம் நனுதைவம் || (6-47)
ஜீவர்களின் பாவங்களைப் போக்குவதற்கு இந்த பதரி க்ஷேத்திரத்தைவிட சிறந்த க்ஷேத்திரம் வேறெதுவும் இல்லை. ஜீவநதியான இந்த (விஷ்ணு பத்னியான) கங்கையைவிட புனிதமான தீர்த்தம் வேறெதுவும் இல்லை. மகாவிஷ்ணுவிற்கு சமமான தெய்வம் எப்போதும் எந்த உலகத்திலும் இல்லவே இல்லை. ஆசார்யரின் உபதேசங்களைவிட சிறந்த உபதேசம் வேறெதுவும் இல்லை.

* ஹவ்யதானமிவ நிந்த்யதே ஷுனே | (8-49)
தகுதியில்லாதவர்களுக்கு செய்யும் உபதேசமானது, ஹோமத்தின் பிரசாதத்தை ஒரு நாய்க்குக் கொடுத்தது போல வீணாகும்.

* பாக்யதெய்வமிஹ யோக்யதானுகம் | (9-23)
ஜீவர்களின் தகுதிக்கு ஏற்றவாறு, ஸ்ரீஹரி அவர்களுக்கு பலன்களைக் கொடுப்பார்.

* மோஹபீத லவணோதகோ முஹு:ப்ராக் பிபாசுரம்ருதம் பிபன்னிவ | (9-37)
உப்பு நீரினைக் குடித்தால், பின் நல்ல சுத்தமான நீரினைக் குடித்து தாகத்தை தீர்த்துக் கொள்வதைப்போல, (ஸ்ரீமதாசார்யரின் சாஸ்திரங்களைக் கேட்பது அப்படி இருக்கிறது).

* பிரக்ருதிம் பிரயாதி சகலோபி சதா || (11-46)
அனைவரும் அனைவரின் குணத்திற்கேற்ப செயல்களை செய்கின்றனர்.

* வினயோ ஹி பூஷயதி சர்வரஸம் || (11-54)
அனைத்து நற்குணங்களிலும் பணிவே மிகச் சிறந்தது.

* நஹி தாக்ஷஸ்ய சமோ குணோபரோஸ்தி | (13-14)
ஆற்றலுக்கு (திறன்) சமமான இன்னொரு குணம் இல்லவே இல்லை.

* அபரஸ்பர சங்கதானி பாஷ்யாண்யபி சர்வாணி ந மானதாம் வ்ரஜேயு: | (13-55)
மத்வரின் பாஷ்யத்திற்கு முன் வந்த வெவ்வேறு பாஷ்யங்களில் தவறாக தகவல்களும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துகளும் இருப்பதால், அவற்றை என்றும் ஆதாரமாகக் கொள்ள முடியாது.

* நனு விம்ருஷ்ய க்ருதே குருதேகிலம் || (13-68)
அறிவுள்ளவன் எந்தவொரு செயலைச் செய்தாலும், நன்கு ஆராய்ந்து செய்வான்.

* கமபி சகலஹ்ருத்யம் கல்பயன்யைவ த்ருவம் || (14-52)
எல்லாப் பொருட்களும் எல்லா காலங்களிலும் அனைவருக்கும் பிடித்தமானதாக இருக்காது. ஸ்ரீஹரியின் படைப்பு அப்படி.

* தர்மாத்யபாவே நோ மானம் ப்ரத்யக்ஷைகப்ரமாணின: || (15-43)

ப்ரத்யக்ஷம் ஒன்றே பிரமாணம் என்று சொல்பவர்களுக்கு (சார்வக), தர்மங்கள் இல்லை என்று சொல்வதற்கு எந்தவித ஆதாரங்களும் இல்லை.

* ஷரணம் குரோ கருணமாsபி நோ பவே: || (16-56)
குருகளே | ஆசார்ய மத்வரே | தாங்கள் எந்நேரமும் எங்களை கருணையுடன் காப்பாற்றுங்கள்.

மஹான்ந்த தீர்த்தஸ்ய யே பாஷ்யபாவம்
மனோவாக்பிராவர்தயந்தே ஸ்வஷக்யா |
சுராத்யா நராந்தா முகுந்த ப்ரஸாதா
திமம் மோக்ஷமேதே பஜந்தே சதீதி |

பிற்சேர்க்கை 3 - ஆசார்ய மத்வரினால் பிரதிஷ்டை செய்யப்பட்ட உடுப்பி ஸ்ரீகிருஷ்ணன்

ஸ்ரீகிருஷ்ணனை மத்வர் உடுப்பியில் பிரதிஷ்டை செய்த ஆண்டு	சக 1276 (ஹேவிளம்பி சம்வத்சரம் மாக சுத்த த்ருதியை
ஸ்ரீகிருஷ்ண மடத்தில் கர்ப்பகிருஹத்தின் அளவு	வடக்கு தெற்காக 35 அடி கிழக்கு மேற்காக 28 அடி
ஸ்ரீகிருஷ்ணர் சிலையின் உயரம்	25.5”
ஸ்ரீகிருஷ்ணர் சிலையின் சுற்றளவு	12”
சிலைக்குக் கீழ் தளத்தின் உயரம்	59”
சிலைக்குக் கீழ் தளத்தின் அகலம்	59”
பாணிபீடத்தின் உயரம்	22”
சோமசூத்திரத்தின் உயரம்	12”
சோமசூத்திரத்தின் அகலம்	6”

பாணிபீடம் - சிலைக்குக் கீழ் இருக்கும் தளத்தின் நடுவில் உள்ளது. அதற்கு மேல் ஸ்ரீகிருஷ்ணர் சிலை நின்றிருக்கிறது. அஷ்ட மடத்தின் யதிகளைத் தவிர வேறு யாரும் ஸ்ரீகிருஷ்ணர் சிலையைத் தொடுவதற்கு அனுமதி இல்லை.

ஸ்ரீகிருஷ்ணனின் தாய் தேவகியின் வேண்டுகோளுக்கேற்ப, தன் பால லீலைகளை ஒரு முறை பாலகனாக மாறி, காண்பித்தான். அப்போது அதைக்கண்டு மகிழ்ந்த ருக்மிணிதேவி, பின்னர் வரப்போகும் சஜ்ஜனர்களின் மேலுள்ள கருணையால், தேவ சிற்பி விஸ்வகர்மா மூலம், அதைப் போலவே ஒரு சிலையை செய்வித்தார். அந்தச் சிலையில் ஸ்ரீஹரி தன்னுடைய சன்னிதானத்தை இறக்கினார். ருக்மிணிக்குப் பிறகு, இதர கிருஷ்ணரின் மனைவிகள், பின்னர் அர்ஜுனாதிகள் அந்தச் சிலையினை பூஜித்தனர். அந்தச் சிலை, கோபிசந்தனத்தில் சேர்ந்து, ஒரு பெரிய பாறையைப் போல் ஆயிற்று. அதனை படகோட்டிகள் தமது படகின் பாரத்திற்காக ஏற்றிக் கொண்டனர்.

ஒரு முறை அந்தப் படகு, துவாரகையிலிருந்து உடுப்பி கடற்கரைக்கு அருகில் வந்துகொண்டிருந்தபோது, புயலில் சிக்கி மூழ்கும் நிலைக்கு வந்தது. அதே வேளையில், ஸ்ரீமதாசாரியர் தமது ஆன்ஹிகங்களை செய்துகொண்டிருந்தார். இவரைக் கண்ட படகின் தலைவன், தூரத்திலிருந்தே இவரை நோக்கி தம்மைக் காப்பாற்றுமாறு வேண்டினான். கருணைக்கடலான ஸ்ரீமதாசார்யர், தமது காவி ஆடையை வீசி, படகு மற்றும் அதிலிருந்தவர்களை காப்பாற்றினார்.

பத்திரமாக கரைக்கு வந்த படகிலிருந்து தலைவன், தம்மிடமிருந்து எதையாவது பெற்றுக் கொள்ளுமாறு வேண்டினான். சர்வக்ஞரான ஸ்ரீமதாசார்யர், படகிலிருந்த கோபிசந்தனக் கட்டியை கொடுக்குமாறு கேட்டார். அதிலிருந்த கிருஷ்ணனை,

த்வாதச ஸ்தோத்திரத்தைச் சொல்லியவாறு, மத்வ சரோவரத்தில் அபிஷேகம் செய்வித்து, அதன் அருகில் பிரதிஷ்டை செய்தார். மோட்சத்தை விரும்பும் சஜ்ஜனர்களுக்கு வரும் பிரச்னைகளை தீர்க்கவேண்டியும், அவர்களது விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்காகவும், ஸ்ரீமதாசார்யர் மிகுந்த கருணையுடன் இந்தச் சிலையை அங்கே பிரதிஷ்டை செய்தார். இதற்கு மாறாக இன்னொரு கதையும் இருக்கிறது என்று தெரிந்துகொள்வோம்.

ஸ்ரீகிருஷ்ணனுக்கு செய்யப்படும் நித்ய பூஜைகளின் விவரம்

ஸ்ரீமத்வாசாரியரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட உடுப்பி ஸ்ரீகிருஷ்ணனுக்கு, யதிகளால் தினப்படி செய்யப்படும் பூஜைகளின் விவரம்.

1. நிர்மால்யாபிஷேகம்
2. உஷ:கால பூஜை
3. அக்ஷயபாத்திர - கோபூஜை
4. பஞ்சாம்ருத அபிஷேகம்
5. உத்வர்த்தன
6. கலசபூஜை
7. தீர்த்த பூஜை
8. அலங்காரம்
9. அவசரசனகாதி பூஜை
10. மகாபூஜை
11. சாமர சேவை
12. ராத்திரி பூஜை
13. மண்டப பூஜை
14. சயனோத்ஸவம்

இவற்றில் முதல் பத்து பூஜைகள், மகா நைவேத்தியற்கு முன்னரும், அடுத்த நான்கு பூஜைகள், மாலை மற்றும் இரவு வேளையில் நடைபெறுகின்றன.

உடுப்பியில் ஆண்டு முழுவதும் உற்சவங்கள் தொடர்ந்து நடக்கின்றன. ஒவ்வொரு மாதமும், சிறப்பு தினங்களில், பண்டிகை நாட்களில் உற்சவங்களைக் காண்பது சிறப்பு. சிறப்பான விழாக்கள் என்றால் வசந்தோத்ஸவம், கார்த்திக உற்சவம், சங்க்ரமண, கிருஷ்ண ஜென்மாஷ்டமி, மத்வ நவமி என பல உண்டு. இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் பர்யாய உற்சவமானது மறக்கமுடியாத, அற்புதமான உற்சவமாகும். கிருஷ்ண பூஜையை மாற்றிக்கொடுக்கும் விழாவே பர்யாய எனப்படுகிறது. இதற்கு முன் நடைபெறும் நிகழ்ச்சிகள் பல உண்டு. தினமும் நடைபெறும் பிரம்ம ரதோத்ஸவம், சுவர்ண - ரஜத ரதோத்ஸவங்கள் என ஸ்ரீகிருஷ்ணனின் வைபவங்கள் காணக் கண்கோடி வேண்டும்.

(இந்த தினப்படி பூஜையின் கிரமங்களை வகுத்துக் கொடுத்தவர் - ஸ்ரீமதாசார்யர்).

பிற்சேர்க்கை 4

ஸ்ரீபரசுராமர் உருவாக்கிய ஏழு க்ஷேத்திரங்கள்

உடுப்பி (ரஜதபீடபுரம்), சுப்ரமண்ய (குமாராத்ரி), கோகர்ண, கும்பாஸி, கோடேஸ்வர (த்வஜேஸ்வர), க்ரோட (சங்கர நாராயண), கொல்லூர் (மூகாம்பிமா). வடக்கிலிருக்கும் கோகர்ணவிலிருந்து தெற்கில் இருக்கும் சுப்ரமண்ய வரையிலான தூரம் சுமார் 200 மைல்கள்.

ஸ்ரீபரசுராமர் உருவாக்கிய தீர்த்தங்கள்

பரசுதீர்த்தம், பாணதீர்த்தம், தனுஸ் தீர்த்தம் மற்றும் கதா தீர்த்தம்.

ஸ்ரீபரசுராம க்ஷேத்திரத்தில் இருக்கும் இதர க்ஷேத்திரங்கள்

ரஜதபீட (உடுப்பி), பாஜக (மத்வர் பிறந்த இடம்), குஞ்சாரு துர்கா மலை, அம்பலபாடி ஜனார்த்தன மற்றும் மகாகாளி ஆலயங்கள், கடற்கரையில் இருக்கும் ஒடபண்டேஸ்வர ஆலயம் (மால்பே), சிட்டாடி ஸ்ரீனிவாசன் ஆலயம், கொடவூரின் சங்கரநாராயண ஆலயம், பன்னஞ்சே மகாலிங்கேஸ்வர ஆலயம், கடியாளி துர்காலயம், அலேவூரின் துர்காலயம், பெரணங்கில கணபதி ஆலயம்.

உடுப்பியின் நான்கு திசைகளில் இருக்கும் துர்கா ஆலயங்கள்

பைலூர் (மஹிஷமர்த்தினி துர்கா), கன்னரபாடி (ஜயதுர்கா), புத்தூர் (ஸ்ரீதுர்கா), இந்திராளி (பஞ்சதுர்கா)

உடுப்பியின் நான்கு திசைகளில் இருக்கும் நாக ஆலயங்கள்

மச்சிலகோடு, மாங்கோடு, அரிகோடு மற்றும் தாங்கோடு

உடுப்பியிலிருக்கும் ஆலயங்கள்

* ஸ்ரீமதாசார்யரால் நிர்மாணிக்கப்பட்ட துவாரகையிலிருந்து வந்த கிருஷ்ணன் - கிருஷ்ண மடம்.
* அனந்தேஸ்வரன் (அனந்த பத்பனாப, அனந்தசயன, புஜங்கசயன என்றும் அழைக்கின்றனர்). மகாவிஷ்ணு லிங்கரூபத்தில் இருக்கும் ரூபம்.
* ஸ்ரீமத்வாசார்யர் ஆலயம். அனந்தேஸ்வர ஆலயத்தில் ஆசாரியர் அமர்ந்து பாடம் எடுத்த இடம். சிலாரூபம். அவர் கண்களிலிருந்து மறைந்த இடமும் இதுவே.
* ஸ்ரீசந்திரமௌலீஸ்வர ஆலயம். அனந்தேஸ்வர ஆலயத்தின் எதிர்புறம் உள்ளது.
* உடுப்பி கிருஷ்ணனின் முன்பாகத்தில் (மேற்கு) இருப்பதே சந்திர சாலை. அங்கு இருக்கும் ஜன்னலே 'கனகன கிண்டி'. இதற்கு இடம் மற்றும் வலம் இருப்பதே

ஸ்ரீவாதிராஜர் அயோத்தியிலிருந்து கொண்டு வந்து நிறுவிய முக்யபிராணர் மற்றும் கருட விக்கிரகங்கள்.

* கர்ப்பகிருகத்தின் வடக்குப்புறம் மத்வராயரின் சிறிய ஆலயம் உள்ளது. மத்வர் கௌபீனம் தரித்து தண்டத்தை ஏந்தியவாறு இருக்கும் ரூபம். ஸ்ரீவாதிராஜர் பிரதிஷ்டை செய்தது.

* கர்ப்பகிருகத்தின் கிழக்கில் இருப்பதே மத்வ சரோவரம். சரோவத்தின் நைருத்ய திசையில் ஒரு அழகான பாகிரதி சிலை இருக்கிறது. அங்கிருந்து 12 ஆண்டிற்கு ஒருமுறை பாகிரதி, சரோவரத்திற்கு வருகிறாள்.

* போஜனசாலையில் ஒரு பிராணதேவரின் ஆலயம். இங்கு தயாரிக்கப்படும் உணவினை இந்த பிராணதேவருக்கு சமர்ப்பிக்கின்றனர்.

* வடக்கில் சுப்ரமண்யரின் ஆலயம் இருக்கிறது. இந்த சிலையின் கீழ், தங்க, ரத்னங்கள் இருக்கின்றன. வடக்கில் எட்டு மடங்களின் முந்தைய யதிகளின் பிருந்தாவனங்கள் உள்ளன. உள்ளே பழங்கால அரச மரம் ஒன்று இருக்கிறது. பக்கத்தில் கோசாலையும் இருக்கிறது.

* ரத வீதியிலேயே எட்டு மடங்களின் கட்டிடங்களும் இருக்குமாறு ஸ்ரீவாதிராஜர் ஏற்பாடு செய்தார்.

* பிரம்ம ரதத்துடன், இரு ரதங்கள் மற்றும் ரஜத & தங்க ரதங்களின் ரதோத்ஸவங்களும் நடைபெறுகின்றன.

பிற்சேர்க்கை - 5

ஸ்ரீமத்வர் பூஜித்த விக்கிரகங்களின் முழு விவரம்

ஸ்ரீபத்பனாப தீர்த்தருக்கு	திக்விஜய ராமர், பிரம்மன் பூஜித்த மூலசீதாராமர்
ஸ்ரீஹ்ருஷிகேச தீர்த்தருக்கு (பலிமார்)	லக்ஷ்மண சீதா சமேத கோதண்டராம
ஸ்ரீ நரசிம்ம தீர்த்தர் (அதமார்)	சதுர்புஜ காலிய மர்த்தன கிருஷ்ண
ஸ்ரீ ஜனார்த்தன தீர்த்தர் (கிருஷ்ணாபுர)	த்விபுஜ காலிய மர்த்தன கிருஷ்ண
ஸ்ரீ உபேந்திர தீர்த்தர் (புத்திகே)	விட்டலன்
ஸ்ரீ வாமன தீர்த்தர் (ஷிரூர்)	ஸ்ரீபூ சஹித விட்டலன்
ஸ்ரீ விஷ்ணு தீர்த்தர் (சோதே)	பூவராகன்
ஸ்ரீ ராம தீர்த்தர் (காணியுர்)	யோகா நரசிம்மன்
ஸ்ரீ அதோக்ஷஜ தீர்த்தர் (பேஜாவர)	ஸ்ரீபூ சஹித விட்டலன்

சன்யாசிகளுக்கு மட்டுமல்லாமல், பல கிருஹஸ்தர்களுக்கும் ஸ்ரீமதாசாரியர் தனது கரங்களினால் பூஜிக்கப்பட்ட விக்கிரகங்களை கொடுத்திருக்கிறார். அதில் சிலவற்றை கீழே கொடுத்துள்ளோம். அவற்றை இன்றும் அந்த வம்சத்தினர் பூஜித்து வருவது விசேஷம்.

தோடண்டில்லாய	குஞ்சிகிருஷ்ண
கார்னூர் கல்லூராயர்	கோபாலகிருஷ்ண
குஞ்ஞுண்ணா	கிருஷ்ணமூர்த்தி பிரதிமை
பாங்கல்படி பாங்கண்ணா	விஷ்ணுமூர்த்தி
கோடிபாடித்தா	அனந்தாசன மூர்த்தி
அர்க்காடித்தா	பூவராக மூர்த்தி
கோசாட அம்மண்ணா	லட்சுமி நாராயண தேவர்
பஜத்தாய குடும்பம் (த்ரிவிக்ரம பண்டிதாசார்யரின் குடும்பம்)	ஸ்ரீவத்ஸ நாராயண தேவரு
மஞ்சனாடி பல்லாளர்	நாட்டிய கிருஷ்ண
எர்கி மடத்தின் தலைவர்	லட்சுமி சென்ன கேசவ
இடேபாடித்தாய	யக்ஞ நாராயண தேவரு
மூடிலத மூடில்லாய	லட்சுமி நாராயண தேவரு

மாத்வ மடங்கள்

ஸ்ரீமத் உத்தராதி மடம்

ஸ்ரீபாதராஜர் மடம் (முளபாகில்)	மாதவதீர்த்த மடம் (தம்பிஹல்லி)
கூடலி ஆர்ய அக்ஷோப்ய மடம்	பாளகாரு ஆர்ய அக்ஷோப்ய மடம்

ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் மடம்

குந்தாபுர வியாசராஜ மடம்	சோசலே வியாசராஜ மடம்

உடுப்பி அஷ்ட மடங்கள்

பலிமாரு மடம்	அதமாரு மடம்
கிருஷ்ணாபுர மடம்	புத்திகே மடம்
ஷிரூரு மடம்	சோதே மடம்
காணியூர் மடம்	பேஜாவர மடம்
பண்டாரகெரெ மடம்	பீமனகட்டே மடம்
சுப்ரமண்ய மடம்	சித்ராபுர மடம்

கௌடசாரஸ்வத்ய பிராமணரின் மடங்கள்

காசிமடம், கோகர்ண பர்தகாளி ஜீவோத்தம மடம்

தேஷஸ்த மடங்கள்

மாத்வ காண்வ மடம், சாகரகட்டே மடம்

மத்வ சித்தாந்தத்தை பின்பற்றும் இதர மடங்கள்

மத்வ கௌடீய மடம் (பேகால), ஹரேகிருஷ்ண வழி மடம்

பிற்சேர்க்கை - 6

ஸ்ரீமதானந்த தீர்த்தரின் திவ்ய வாழ்க்கையில் நடந்த சம்பவங்களின் தொகுப்பு

* ஸ்ரீஹரியின் முதல் பிரதிபிம்பராகி ஜீவோத்தமரான வாயுதேவரின் மூன்றாவது அவதாரமே ஸ்ரீமன் மத்வாசார்யர்.
* ஸ்ரீமத்வாசார்யர் முன்னெடுத்த சித்தாந்தம் த்வைத சித்தாந்தம் (தத்வவாத, பரபிரம்மவாத, பூர்ணப்ரக்ஞுவாத, பராபர தத்வவாத, வைஷ்ணவ சித்தாந்த, த்வைத வேதாந்த, த்வைத தர்சன என்றும் அழைக்கலாம்).
* வேதவியாசருக்கு அடுத்து தத்வாதத்தை முன்னெடுத்தவர் ஸ்ரீமன் மத்வாசார்யர்.
* குருகளான அச்யுதப்ரேக்ஷரிடம் ஆசிரமம் பெற்றபோது கிடைத்த பெயர் ஸ்ரீபூர்ணபோதர்.
* ஹம்ஸ நாமக பரமாத்மாவிடமிருந்து வந்த வேதாந்த சாம்ராஜ்யத்தில் அபிஷேகம் நடந்தபோது கிடைத்த பெயர் - ஸ்ரீஆனந்ததீர்த்தர்.
* ஸ்ரீஆனந்ததீர்த்தரின் வேதத்தில் சொல்லப்பட்ட பெயர் - மத்வர்.
* ஸ்ரீமத்வாசார்யர் அவதரித்த தலம் - பாஜக கிராமம். உடுப்பியிலிருந்து சுமார் 8கிமீ.
* ஸ்ரீமத்வர் அவதரித்த ஆண்டு விளம்பி சம்வத்ஸரம் ஆஸ்விஜ சுத்த தசமி புதன்கிழமை மதியம்.
* ஸ்ரீமத்வரின் காலம் 1238 - 1317 அல்லது 1200 - 1280. ஆண்டுகளைப் பற்றி சர்ச்சை இருக்கிறது. அன்று விஜயதசமி.
* 32 லக்ஷணங்களைக் கொண்டவராக, ஜீவர்களில் ஞான, வலிமைகளில் சிறந்தவர் ஆசார்ய மத்வர்.
* ஸ்ரீமதாசார்யரின் பெற்றோர் - நடில்லாய தம்பதிகள் (மத்யகேஹ பட்டர் தம்பதிகள்). தாயின் பெயர் வேதவதி. தந்தை நாராயண பட்டர் என்றும் சொல்வர்.
* மத்யகேஹரின் மூல இடம் ஷிவள்ளி கிராமம். இந்த வீட்டினர் பாஜக கிராமத்திற்கு வந்து தங்கினர். (ஆனாலும் மத்யகேஹபட்டரின் சொந்த ஊர், பெயர், அவரின் கோத்திரம், பிரிவு இவற்றைப் பற்றிய தகவல்கள் சரியாகக் கிடைக்கவில்லை. மத்யகேஹபட்டர் அனந்தேஸ்வரத்தில் சேவை செய்வதற்கு, உடுப்பியை நோக்கி போயிருக்கலாம் என்று தகவலும் உண்டு).
* மத்யகேஹபட்டர் தம்பதிகள் அனந்தேஸ்வரத்தில் 12 ஆண்டுகள் சேவை செய்தபிறகு, ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அவர்கள் வைத்த பெயர் - வாசுதேவன்.
* வாசுதேவன் பிறந்தபோது, மத்யகேஹ பட்டருக்கு கோ-தானம் செய்தவர் - மூடில்லாய. (சிட்டாடிபீளு பள்ளாள).
* பால வாசுதேவனை அனந்தேஸ்வரனுக்கு சமர்ப்பித்துவிட்டு திரும்பி வரும்போது, நடுஇரவில் பேய் காட்சியளித்த இடம் - புண்ணிரபாடி (சந்தளிகெபாடி).

* வாசுதேவனுக்கு அக்ஷராப்யாசம் செய்த இடம் - பாஜக (இன்றும் அந்த அக்ஷராப்யாசம் செய்த கல்லினைப் பார்க்கலாம்).

* எருதின் வாலினைப் பிடித்து காட்டிற்குச் சென்றபோது வாசுதேவனின் வயது சுமார் ஒன்று.

* வணிகருக்கு புளியங்கொட்டைகளைக் கொடுத்து, தந்தையின் கடனைத் தீர்த்தபோது, வாசுதேவனின் வயது சுமார் ஒன்றரை (இது பாஜக வீட்டில் நடந்தது).

* மடின்னாய என்னும் குலத்தில் பிறந்த சிவபட்ட என்னும் பிராமணர், புராணம் சொல்லிக் கொண்டிருந்தபோது வாசுதேவன் அவரை கேள்வி கேட்ட இடம் - நயம்பல்லி (மல்லிகார்ஜுன ஆலயம்). அப்போது அவனின் வயது சுமார் இரண்டரை.

* மத்யகேஹரின் சம்பந்தியின் இல்லத் திருமணம் என்று நிடியூருக்குச் சென்றபோது வாசுதேவனின் வயது சுமார் மூன்று.

* தயிர் மற்றும் பால் பாத்திரங்களின் மேல் ஒரு பெரிய பாறையை தூக்கி வைத்தபோது வாசுதேவனின் வயது நான்கு. இந்த கற்களை இன்றும் பாஜகவில் பார்க்கலாம்.

* வாசுதேவனுக்கு உபநயனம் ஆனது உடுப்பி அனந்தேஸ்வர ஆலயத்தில். அப்போது அவன் வயது ஐந்து. ஆண்டு 1243. க்ரோதன நாம சம்வத்ஸரம் புஷ்ய சுத்த பஞ்சமி.

* ஆசார்ய மத்வர் 7 வயது சிறுவனாக இருந்தபோது (உபநயனம் ஆனபிறகு) பதரிக்குச் சென்று வேதவியாசரிடம் அனைத்து கல்விகளையும் கற்று திரும்பி வந்தார் என்று ஸ்ரீவிஷ்வபதி தீர்த்தர் தனது உரையில் எழுதியிருக்கிறார்).

* வாசுதேவனுக்கு ஐந்து வயது இருக்கும்போது, பாஜக வீட்டின் ஈசான்யத்தில், தன் தாயிற்காக, வாசுதேவ தீர்த்தத்தை நிர்மாணித்தான்.

* மணிமந்தன் என்னும் பாம்பு வடிவில் வந்த அசுரனின் தலையை தன் கால்விரல்களால் நசுக்கிக் கொன்றபோது வாசுதேவனுக்கு ஐந்து வயது. பாதங்களின் அச்சினை இன்றும் காணலாம்.

* சுமார் 6 முதல் 9 வயது வரை குருகுலவாசம். குரு - தோடந்தில்லாய. பாக்கு தோட்டத்தின் வீட்டினர் என்று பொருள். இதற்கு தண்டதீர்த்தத்தின் மடம் என்றும் பெயர் உண்டு. (தோடந்தில்லாயரின் பின்புலம், பெயர், பரம்பரையைப் பற்றி மேலதிக தகவல்கள் இல்லை.)

* தோடந்தில்லாயரின் குருகுலத்தில் வாசுதேவ தன் குருவிற்காக தண்டத்தினால் 'தண்ட தீர்த்தத்தை' நிர்மாணித்தான். அப்போது அவன் வயது எட்டு. அதே வயதில், குருகளின் மகனின் காதில் ஊதி, அவன் தலைவலியை தீர்த்தான் வாசுதேவன்.

* அச்யுதப்ரேக்ஷர் முதலில் வசித்த மடம் - கார்யூரின் குத்யாடி மடம். உடுப்பியில் அருகிலேயே இருந்த மடம். தற்போது இந்த ஊரை குட்யாடி - கார்னூரு என்கின்றனர். இவரை அச்யுதப்ரக்ஞர் என்றும் அழைக்கின்றனர். முன்னர் இவர் ஜகன்னாதபுரத்தில் இருந்தார் என்றும் சொல்வர்.

* வாசுதேவன் தனது மேலாடையைக் கிழித்து, கௌபீனமாக அணிந்து, தந்தையை சம்மதிக்க வைக்க முயன்றான் - அப்போது குத்யாடி மடத்தில் இருந்தான்.

* வாசுதேவனுக்குப் பிறகு 10 ஆண்டுகளுக்குப் பின் மத்யகேஹ பட்டருக்கு இன்னொரு மகன் பிறந்தான். ஆண்டு 1248ல். (இவரே பின்னர் ஸ்ரீவிஷ்ணுதீர்த்தர் ஆனார். இவரது இயற்பெயர், இன்ன பிற விவரங்கள் சரியாகக் கிடைக்கவில்லை).

* வாசுதேவன், அச்யுதப்ரேக்ஷரிடமிருந்து சன்யாசம் பெற்றது குட்யாடி - கார்னூர் மடத்தில். அப்போது அவன் வயது 10. சௌம்ய சம்வத்ஸரம் ஆண்டு 1248. பூர்ணபோத தீர்த்தர் என்னும் பெயர் பெற்றான். பூர்ணப்ரக்ஞர் என்றும் சொல்வர்.

* அச்யுதப்ரேக்ஷர் பூர்வாசிரமத்தில் கல்லூராய வம்சத்தில் விச்வாமித்ர கோத்ரத்தின் சாம வேதிகள். இவருக்கு புருஷோத்தம தீர்த்தர் என்னும் பெயர் இருந்ததென்றும் தெரியவருகிறது.

* அச்யுதப்ரேக்ஷருக்கு அப்போதே சில சன்யாசிகள் சிஷ்யராக இருந்தனர். அவர்களில், லிகுச வம்சத்தவரான மூத்த யதி ஒருவர் இருந்தார். ஸ்ரீமதாசார்யருக்கும் முன் சன்யாசம் ஏற்றதால் இவரை 'மூத்த யதி' என்றே அழைத்தனர். இந்த மூத்த யதிகளே புருஷோத்தம தீர்த்தர் என்றும் சொல்கிறார்கள்.

* ஸ்ரீசத்ய தீர்த்தர், அச்யுதப்ரேக்ஷரிடமிருந்தே சன்யாசம் பெற்று, பின் ஸ்ரீமதாசார்யரிடம் பாடம் படித்தார் என்று தெரிய வருகிறது.

* சன்யாசம் பெற்ற 40 நாட்களில், ஸ்ரீமதாசார்யருடம் குட்யாதி மடத்தில் வாதத்திற்கு வந்து அதில் தோற்றவர் - வாசுதேவ பண்டிதர்.

* அனந்த சரோவரத்திற்கு கங்கையை வரவழைத்தார். அப்போது ஆசார்யரின் வயது 12. அன்றிலிருந்து அது மத்வ சரோவரம் என்று அழைக்கப்பட்டது. அன்றிலிருந்து ஒவ்வொரு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பாகிரதி மத்வ சரோவரத்திற்கு வரத் துவங்கினாள்.

* ஆசார்யருக்கு அச்யுதப்ரேக்ஷர் பாடம் சொல்லிக் கொடுக்க எடுத்த முதல் கிரந்தம் - விமுக்தாத்மரின் (ஆண்டு 950) இஷ்டசித்தி. இதன் முதல் ஸ்லோகத்திலேயே 32 பிழைகளை எடுத்துக் காட்டினார் ஆசார்யர்.

* 1.5லிருந்து 2ஆண்டுகள் வரை ஆசார்யர் (ஆசிரமம் பெற்றபிறகு) தம் குருகளுடன் கார்யூர் மடத்தில் இருந்தார். பிறகு தென்னிந்திய பயணத்திற்குப் புறப்பட்டார்.

* பௌத்தர்களான வாதிசிம்ம மற்றும் புத்திசாகரனுடன், ஸ்ரீமதாசார்யர் வாதிட்டு அவர்களை வென்றது உடுப்பியில். அப்போது அவர் சன்யாசம் பெற்று 2 ஆண்டுகள் ஆகியிருந்தது. அனுமான தீர்த்தர் என்று புகழ் பெற்றார். (இந்த வாதம் நடைபெற்றது இன்றைய பண்டாரகெரெ மடத்தின் தலைமையிடம் என்று சொல்கிறார்கள்).

* ஒரு முறை ஸ்ரீமதாசார்யர் உண்டபிறகு, 400க்கும் அதிகமான வாழைப்பழங்களைத் தின்றார். கட்டைவிரலளவு ஒரு நெருப்பு தன் வயிற்றில் இருப்பதாக குருவிடம் தெரிவித்தார். இது நடந்தது விஷ்ணுமங்களத்தில். காசர்கோடிலிருந்து சுமார் 2கிமி தூரத்தில் இருக்கும் விஷ்ணு க்ஷேத்திரம். இது நடந்தபோது ஆசார்யருக்கு வயது சுமார் 15.

* கலியுகம் தொடங்கி 36,000 ஆண்டுகள் ஆனபிறகு, துர்காதேவி - காசர்கோடின் தெற்கில் இருக்கும் பயஸ்வினி நதி தீரத்தில் - மறுபடி அவதரிப்பாள்.

* ஸ்ரீமதாசார்யர், விஷ்ணு சஹஸ்ரநாமத்தின் 'விஷ்வ' பெயருக்கு 100 அர்த்தங்களைச் சொல்ல வந்த இடம் அடூரின் ஆலயத்தின் சபையில். அப்போது அவரது வயது சுமார் 16.

* தான சூக்தார்தத்தை ஸ்ரீமதாசார்யர் விளக்கிய இடம் - பைலங்கடியின் விஷ்ணு ஆலயத்தில்.

* 'அபாலா' என்னும் சொல்லிற்கு 'சிறிய வயதுப் பெண்' என்று பொருள் சொல்லி, பண்டிதர்களை ஸ்ரீமதாசார்யர் வென்ற இடம் - செம்மாடியின் ருத்ர ஆலயம்.

* ஆசிரமம் ஸ்வீகரித்த தினத்திலிருந்தே சிஷ்யர்களுக்கு பாடம் எடுக்கத் துவங்கினார் ஸ்ரீமதாசார்யர். அன்றைய மாயாவாத கிரந்தங்களையே முதலில் பாடமாக எடுத்தார்.

* ஆசார்யரை சோதிப்பதற்காக, பாகவதத்தின் பஞ்சம ஸ்கந்தத்தின் கத்ய பாகத்தை சொல்லுமாறு பணித்தார், குருவான அச்யுதப்ரேக்ஷர்.

* தனக்கு அடுத்து பூர்ணப்ரக்ஞரே இந்த வேதாந்த சாம்ராஜ்யத்தை ஆள்வதற்கு சிறந்தவர் என்று கருதிய அச்யுதப்ரேக்ஷர், இவரை பீடத்தில் அமரவைத்து 'ஆனந்ததீர்த்தர்' என்னும் பெயரையும் சூட்டினார்.

* ஸ்ரீமதாசார்யர் எழுதிய முதல் கிரந்தம் கீதாபாஷ்யம். அப்போது அவருக்கு சுமார் 13 வயது.

* உடுப்பியில் ஸ்ரீகிருஷ்ணனை பிரதிஷ்டை செய்வதற்கு முன், அது ஸ்ரீமதாசார்யர் தங்கியிருந்த மடமாக இருந்தது.

* முதல் பத்ரி யாத்திரை மேற்கொண்டபோது, ஸ்ரீமதாசார்யரின் வயது சுமார் 19-20.

* பதரியில் ஸ்ரீமதாசார்யர் நிறுவிய ஆனந்தமடம் பதரி நாராயணனின் ஆலயமாகவே ஆனது.

* பதரியில் வேதவியாசரின் சன்னிதியில் கீதாபாஷ்யத்தை சமர்ப்பித்து, வேதவியாசருடன் மேல் பதரிக்கு ஸ்ரீமன் நாராயணனின் தரிசனத்தைப் பெறுவதற்கு போனபோது அவரது வயது 23.

* புண்டலீகபுரி என்னும் மாயாவதியை ஆசார்யர் வாதத்தில் தோற்கடித்தது காபு என்னும் இடத்தில். அப்போது அவருக்கு வயது 55 இருக்கலாம்.

* துளு நாட்டில் பயணம் மேற்கொண்டபோது ஒரு ஊருக்கு மத்வ என்னும் பெயர் வந்தது. அந்த மத்வ கிராமம் இன்றும், காவளபாடியின் அருகில் இருக்கிறது.

* சோழதேசத்தின் பத்மதீர்த்த மற்றும் புண்டலீகபுரி இருவரும் சேர்ந்து கெட்ட ஆலோசனை செய்த இடம் உடுப்பி. அப்போது மத்வரின் வயது 55-60க்குள்.

* ஆசார்யரின் கிரந்தங்கள் கொண்ட மூட்டையை பத்மதீர்த்தர் அபகரித்தது ஏகவாடி என்னும் கிராமத்தில். தற்போது இந்த ஊரின் பெயர் வர்காடி. கண்வதீர்த்தத்திற்கு கிழக்கில் இந்த ஊர் இருக்கிறது.

* மேற்கு கடற்கரையில் வந்துகொண்டிருந்த படகிலிருந்த கோபிசந்தன கட்டியை பெற்றது - விளம்பி நாம சம்வத்ஸரம் மாக சுத்தத்தில். ஆண்டு சுமார் 1276.

* கோபிசந்தனத்தில் இருந்த கடகோலு கிருஷ்ணனை, ஸ்ரீமதாசார்யர், மத்வ சரோவரத்தில் அபிஷேகம் செய்து, மேற்கு முகமாக பிரதிஷ்டை செய்தது - விளம்பி சம்வத்ஸரம் மாக சுத்த த்ருதியை. ஆண்டு சுமார் 1276 இருக்கலாம். அப்போது ஆசார்யருக்கு வயது 40 இருக்கலாம். கனகதாசருக்காக கிருஷ்ணன் மேற்கு திசைக்கு திரும்பினான் என்பதற்கு எந்தவித ஆதாரங்களும் கிடையாது.

* பதரியிலிருந்து உடுப்பி வரும் முன்னரே, ஆனந்ததீர்த்தர், பிரம்மசூத்ர பாஷ்யத்தை இயற்றி, குருகளுக்கு, மூத்த யதிகளுக்கு அனுப்பினார். (ஆசார்யர், பிரம்மசூத்ர பாஷ்யத்தை பதரியில் இயற்றினார்).

* ஹிமவத் மலையில் (விஷாலபதரி) ஸ்ரீமதாசார்யர் 48 நாட்கள் காஷ்டமௌன விரதம் மற்றும் உபவாச விரதத்தை மேற்கொண்டார். அப்போது அவருக்கு சுமார் 24 வயது இருக்கலாம்.

* 'நீத்ருஷம் ஸ்தலமலம்... ' ஸ்ரீமதாசார்யரே சிஷ்யர்களுக்கு தன் கைப்பட எழுதிக்கொடுத்த இந்த ஸ்லோகம், சர்வமூலத்திற்கு ஒப்பாக கருதப்படுகிறது.

* ஹிமவத் பர்வதத்தில் ஒரு நாள் முழுக்க ஆசார்யரை தொடர்ந்து நடந்து வந்த ஸ்ரீசத்ய தீர்த்தரை, ஒரே முகூர்த்த நேரத்தில் அனந்தமடத்திற்கு திருப்பி அனுப்பினார் ஆசார்யர்.

* அக்னிசர்மா முதலான ஐந்தாறு பிராமணர்கள், ஸ்ரீமதாசார்யருக்கு ஒரே சமயத்தில் பிக்ஷை சமர்ப்பித்தபோது, அனைத்தையும் அனாயாசமாக தின்று தன் திறனைக் காட்டியது, அவர் பதரியிலிருந்து திரும்பி வந்தபோது.

* கோதாவரி நதிக்கரையில் நடந்த சபையில், நான்கு சாஸ்திரங்களிலும் வல்லவரான சோபன பட்டர், ஆசார்யரின் சிறந்த சொற்பொழிவைக் கேட்டு, அவரின் சிஷ்யரானார். இவர் வாதம் செய்ததற்கு ஆதாரம் இல்லை. இது பதரியிலிருந்து திரும்பி வந்தபோது நடந்தது.

* சோபன பட்டருக்கு ஆசார்யர் ஆசிரமம் கொடுத்த ஆண்டு 1268. பிங்கள ஆண்டு வைசாக சுத்த சப்தமி. பேலூரை தனது இருப்பிடமாக வைத்துக் கொண்டிருந்தார்.

* யாகயக்ஞங்கள் செய்து, துர்தேவதைகளை தன்வசப்படுத்தி, ஸ்ரீமதாசார்யரிடம் வாதத்திற்கு வந்த மோரடித்தாயை ஆசார்யர் வீழ்த்திய இடம் உடுப்பி.

* ஈஷ்வரதேவா என்னும் கெட்ட அரசன், பயணிகள் அனைவரையும் குளம் வெட்டுவதில் உதவுமாறு துன்புறுத்திவந்தான். ஸ்ரீமதாசார்யர் இரண்டாம் முறை பதரிகாஸ்ரமத்திற்கு செல்லும்போது அவைரையும் கேட்க - மாயம் செய்து அவனையே அந்தச் செயலை செய்யவைத்தார்.

* துலுக்க அரசனை (ஜலாலுத்தின் கில்ஜியாக இருக்கலாம். ஆண்டு 1296) சந்தித்தார். சிஷ்யருடன் ஸ்ரீமதாசார்யர் கங்கையை அனாயாசமாக தாண்டினார். இது இரண்டாம் முறை பதரிக்குச் சென்றபோது. அப்போது அவரின் மொழியிலேயே அவர்களும் பேசினார். அப்போது ஆசாரியரின் வயது சுமார் 60.

* அமராவதி (இந்திரபுரி) என்னும் அத்வைத சன்யாசியை வாதத்தில் வென்றது காசி நகரத்தில்.

* குதுபுஸ்தூரு (வித்யாசங்கர தீர்த்தராக இருக்கலாம்) என்னும் மாயாவாதி சன்யாசியை ஆசாரியர் வாதத்தில் தோற்கடித்தது திருவனந்தபுரத்தில்.

* ஸ்ரீமதாசார்யரின் தண்டத்தை முறிப்பேன் என்று சபதம் செய்த குதுபுஸ்தூர் இன்னொரு முறை வாதத்தில் தோற்றது ராமேஸ்வரத்தில்.

* ஸ்ரீமுஷ்ணத்தில் ஒரு கர்ப்பிணியின் நலனுக்காக, அந்த மக்களுக்காக ஒரு தீர்த்தத்தை ஆசார்யர் தனது தண்டத்தினால் நிர்மாணித்தார். அதுவே தண்டதீர்த்தம்.

* பூ-வைகுண்டம் என்று சொல்லப்படும் திருப்பதிக்குச் சென்று ஸ்ரீனிவாசனின் தரிசனம் பெற்று, அருகிலிருந்த சுவர்ணமுகரி நதிக்கரையில், பிரம்மஷிலா என்னும் இடத்தில் ஒருமுறை சாதுர்மாசத்திற்காக அமர்ந்தார்.

* ஒரு முறை பயணத்தின்போது எதிரில் திருடர்கள் வர, அவர்களை மயக்கி அவர்களுக்குள் அடிதடி ஏற்படுமாறு செய்தார்.

* இன்னொரு முறை திருடர்கள் வர, அவரது சிஷ்யரான உபேந்திர தீர்த்தரை விட்டு (புத்திகே மடத்து மூலபுருஷர் இவரே) அவர்களை ஓடச் செய்தார். இமாலயம் ஏறும்போது இந்த சம்பவம் நடந்திருக்கலாம்.
* இன்னொரு முறை சிஷ்யர்களை கல் போன்று மாறச் செய்து திருடர்களுக்கு பிரமை உண்டுபண்ணினார். இது பதரியிலிருந்து திரும்பி வரும்போது நடந்திருக்கலாம்.
* ஸ்ரீமதாசாரியர் இரண்டாம் முறை பதரிக்குச் செல்லும்போது அவருடன் இருந்த பாலசன்யாசி சிஷ்யர் ஸ்ரீஹ்ருஷிகேச தீர்த்தர், ஸ்ரீசத்யதீர்த்தர், ஸ்ரீ நரசிம்ஹ தீர்த்தர், ஸ்ரீ உபேந்திர தீர்த்தர் மற்றும் ஸ்ரீஜனார்த்தன தீர்த்தர்.
* மஹாபதரியில் வேதவியாசர் தமது நித்ய சான்னித்யம் இருக்கும் வியாசமுஷ்டிகளை (சிலா பிரதிமைகள்) ஸ்ரீமதாசார்யருக்குக் கொடுத்தார். மொத்தம் எட்டு இருந்தன.
* ஸ்ரீமதாசார்யருக்கு ஸ்ரீவேதவியாசர் மஹாபாரத தாத்பர்ய நிர்ணயத்தை எழுதுவதற்கு ஆணையிட்ட இடம் உத்தரபதரி. (இரண்டாவது முறையாக பதரி யாத்திரை செய்தபோது).
* ஜலஸ்தம்பம் முதலான தனது திறமைகளால் ஸ்ரீமதாசார்யர் தமது சிஷ்யர்களை (ஆடைகள் நனையாமல்) கங்கை நதியை தாண்டச் செய்தது, இரண்டாம் முறை பத்ரியிலிருந்து திரும்பியபோது.
* ஸ்ரீமதாசார்யருக்கு சாக்ஷாத் கங்காதேவியே மூலரூபத்தில் வந்து வணங்கிய இடம் ஹஸ்தினாபுரத்தில் கங்கா நதிக்கரையில்.
* ஸ்ரீமதாசார்யர் மிகச்சிறந்த பாடகர். கோவெய பசுபே என்னும் இடத்தில் பாடி மக்களை மெய்மறக்கச் செய்தார். ஸ்ரீமதாசார்யர் சங்கீத கிரந்தம் ஒன்றை இயற்றினார் என்று சொல்லப்படுகிறது.
* காபு மடத்திலிருந்த ஆசார்யரின் கிரந்தங்களை சங்கரபண்டிதர் (த்ரிவிக்ரம பண்டிதரின் சகோதரர்), ஆசார்யரின் ஆணைப்படி பாதுகாத்து வந்தார்.
* மாந்திரீக பத்மதீர்த்தன் (சோழதேசத்து மாயாவாதி) ஆசார்யரின் கிரந்தங்களை திருடிச் சென்றது, காபு மடத்தில் (காசரகோடின் அருகில் இருக்கும் க்ஷேத்திரம்).
* ஸ்ரீமதாசார்யருக்கும் பத்மதீர்த்தனுக்கும் வாதம் நடந்த இடம் ஊர்காடின் மகாவிஷ்ணு ஆலயத்தில். (காசரகோடின் அருகில் இருக்கும் க்ஷேத்திரம்).
* ஸ்ரீமதாசார்யர், பத்மதீர்த்தனை வாதத்தில் வென்றார். இந்த வாதமே 'தத்வோத்யோத' என்னும் கிரந்தமாக வெளிவந்தது.
* கபேநாடு (காசரகோடு) - அன்றைய துளு நாட்டின் பகுதி. இங்கு அரசனாக இருந்தவர் இம்மடி ஜயசிம்ம வர்மா. இவரை கபேசிம்ம (ஸ்தம்பசிம்ம) என்றும் அழைத்தனர்.
* ஸ்ரீமதாசார்யரின் ஆளுமையைப் பார்த்து ஜயசிம்மராஜா அவரின் பக்தனான இருந்தான். களவுபோன கிரந்தங்களை தருவித்து ஆசார்யரிடம் ஒப்புவித்தான். இது நடந்த இடம் விஷ்ணுமங்களம். ஜயசிம்ம பூபாலன் ஆசார்யரை முதன்முதலாகப் பார்த்தது இதே இடத்தில்தான்.
* ஸ்ரீமதாசார்யர் விஷ்ணுமங்களத்தின் அருகில் இருந்தபோது, ஜயசிம்மராஜா அவரை தகுந்த மரியாதைகளுடன் வரவேற்றான். பல சிஷ்யர்கள், சேவகர்கள், ஆசார்யரின் த்வாதச ஸ்தோத்திரத்தை படித்தவாறு, நடனமாடியவாறு அவரை வரவேற்றனர்.

* விஷ்ணுமங்கள மகாவிஷ்ணு ஆலயத்தின் அதிகாரிகளாக இன்றைக்கும் இந்த அரசனின் வம்சத்தவரே இருக்கின்றனர்.

* விஷ்ணுமங்கல மகாவிஷ்ணு ஆலயத்திற்கு கிருஷ்ண பிரதிமை ஒன்றை அளித்தார் ஸ்ரீமதாசார்யர். அந்த விக்ரகம் தற்போது குத்யாள சந்தானகோபாலகிருஷ்ண ஆலயத்தில் உள்ளது.

* தப்தமுத்ரா தாரணை செய்வதற்கு ஸ்ரீமதாசார்யர் பயன்படுத்திய இரும்பிலான முத்திரைகள் ராமகுஞ்ச க்ஷேத்திரத்தில் இருப்பதை தற்போதும் பார்க்கலாம்.

* தென்னிந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டபோது நாரம்பாடியில் (நாராயணபாடி) பீமனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விஷ்ணுவை மறுபடி பிரதிஷ்டை செய்தார். இந்த ஆலயத்தில் நித்யபூஜைக்காக ஒடம்பளெ குலத்தினரை நியமித்தார். அங்கிருந்த மாயிஷ்டாதி அரசரின் வம்சத்தினரே இன்றும் அங்கு முக்கியஸ்தர்களாக இருக்கின்றனர்.

* த்ரிவிக்ரம பண்டிதர் வசித்த இடம் - காபுமடம். விஷ்ணுமங்களத்திலிருந்து 6கிமீ தூரத்தில் உள்ளது. லிகுச வம்சம் அங்கிரச கோத்ரத்தை சேர்ந்தவர்.

* த்ரிவிக்ரம பண்டிதர், மத்வரை சந்திக்கும் முன்னர் ஒரு மத்வ சிஷ்யரை காபுகோளி என்னும் இடத்தில் வாதத்தில் வென்றிருந்தார். இதற்கு சாட்சியாக அந்த இடத்தில் ஒரு அறிவிப்பினை இன்றும் காணலாம்.

* த்ரிவிக்ரம பண்டிதர், கபீ நாட்டின் ஸ்தம்ப சிம்மனின் (ஜயசிம்ம) ஆஸ்தான கவியாக இருந்தார். அத்வைதத்தில் சிறந்த அறிஞராக இருந்தார். இவரது தம்பி சங்கரபண்டிதர் அங்கிருந்த ஆசார்யரின் கிரந்தங்களை ரகசியமாக படித்துக் கொண்டிருந்தார்.

* த்ரிவிக்ரம பண்டிதர் ஸ்ரீமதாசார்யருடன் வாதம் புரிந்தது 15 நாட்கள். இது பல அறிஞர்களின், அரசர்களின், ஜயசிம்ம பூபாலனின் முன்னிலையில் நடந்தது. வாதத்தில் தோற்ற பண்டிதர், ஆசார்யரின் பக்தராகி சிஷ்யரும் ஆனார்.

* ஸ்ரீசத்ய தீர்த்தருக்கு ஸ்ரீமதாசார்யரிடம் மூன்று முறை ஐதரேய பாஷ்ய பாடத்தைக் கேட்பதற்கும், பிரம்மசூத்ரபாஷ்யத்தை எழுதுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. (இவரது பரம்பரை இன்று வரை வளர்ந்து வந்திருக்கிறது).

* த்ரிவிக்ரமர் மற்றும் அவரது மகனான நாராயண பண்டிதர் இருவரும் தமது இறுதிக்காலத்தில் சன்யாச ஆசிரமத்தை ஏற்றனர் என்பது நாம் அறியும் செய்தி. இருவரின் பிருந்தானவத்தையும் காபுமடத்தில் காணலாம்.

* ஸ்ரீமதாசார்யரின் சகோதரர் (பெற்றோர் உயிர் நீத்தபிறகு) காபுகொளிக்கு வந்து சன்யாசம் ஏற்கவேண்டுமென்று வேண்டினார். ஆனால் ஆசார்யர் தகுந்த நேரத்தில் பாஜகவில் விஷ்ணுதீர்த்தர் என்று பெயர் சூட்டி சன்யாச ஆசிரமத்தைக் கொடுத்தார்.

* விஷ்ணு தீர்த்தர் குமாரதாரா மலையில் ஏறினார். ஆண்டு 1312. ஹரிஸ்சந்திர மலை என்றும் அழைக்கின்றனர். சுப்ரமண்யவிலிருந்து கிழக்கில் இருக்கிறது.

* ஸ்ரீமதாசார்யரின் தம்பியான வைராக்யசாலியான ஸ்ரீவிஷ்ணுதீர்த்தருக்கு அனிருத்த தீர்த்தர், வேதவியாஸ தீர்த்தர் மற்றும் பாதராயண தீர்த்தர் ஆகிய சிஷ்யர்கள் இருந்தனர்.

* ஸ்ரீமதாசார்யரிடம் ஆசிரமம் வாங்கியதில் முதலாமவர் ஸ்ரீஹ்ருஷிகேச தீர்த்தர்.

* ஸ்ரீமதாசார்யர் தமது சர்வமூல கிரந்தங்களை ஆவணமாக எழுதி, பூமிக்கடியில் புதைத்து வைத்த இடம் சேதுதில. (கட்டில் பண்ட்வாள தாலுக்கா

சாலெத்தூரிலிருந்து 2கிமி தூரம்). துர்க்கையின் அவதாரம் ஆனபிறகு ஸ்ரீவிஷ்ணு தீர்த்தர் மறுபடி வந்து இவற்றை எடுத்து மறுபடி சித்தாந்தத்தை நிரூபித்தார் என்பதற்கு ஆதாரம் உள்ளது.

* ஸ்ரீமதாசார்யர் வேத-த்வேஷியான சூத்திர ராஜனை சந்தித்தபோது வேத சூக்தத்தைச் சொல்லி, தம் கையில் விதையை வைத்து, பூ பழங்களைக் காட்டி, வேதத்தின் சக்தியினைக் காட்டிய இடம் த்வாரகையின் கோமதி நதிக்கரையில்.

* ஒரு சிறிய பிரம்மசாரியின் தோளில் அமர்ந்து நரசிம்ம ஆலயத்தை பிரதக்ஷிணம் செய்து தன் உடலை மெலிதாக்கும் சக்தியைக் காட்டிய இடம் - நார்ஷ்ய (நேத்ராவதி நதியின் கரை). கட்டில மடத்திலிருந்து 4கிமீ கிழக்கில் உள்ளது இந்த இடம்.

* ஒரு சாதனி த்வாதசியன்று, தமது குரு மற்றும் சிஷ்யர்களுக்கு, தம் பிரம்மசூத்ர பாஷ்யம் பாராயணம் செய்ய முடியாதபோது, ஸ்ரீமதாசார்யர், அணுபாஷ்யத்தை இயற்றிக் கொடுத்தார்.

* ஸ்ரீமதாசார்யர் மகாயாகம் செய்த இடம் - இடேபாடி. இங்கு சில நாட்கள் தங்கி, இடேபாடித்தாயவின் சேவையைப் பெற்று 'கிருஷ்ணாம்ருத மஹார்ணம்' என்னும் கிரந்தத்தை எழுதினார்.

* அத்வைத பண்டிதனான நரசிம்ம பட்டாசார்ய என்னும் சன்யாசி, ஆசார்யரிடம் வாதத்தில் தோற்று, ஒப்புக்கொண்டபடி பழமையான ஸ்ரீநரசிம்ம பிரதிமையை கொடுத்த இடம் சுப்ரமண்ய. இது வைஷ்ணவ க்ஷேத்திரம் ஆனது.

* சரிதந்த என்னும் இடத்தில் (நேத்ராவதி மற்றும் குமாரதாரா மலைகளுக்கு நடுவில்) நீரின்றி ஏரி காய்ந்தபோது, அந்த கிராமத்தினரின் வேண்டுகோளின்படி, ஏரியின் மேல் மேகங்களை வரவழைத்து மழை பொழியச் செய்தார்.

* மூடம்பாடித்தாய என்னும் மல்யுத்த வீரர், ஆசார்ய மத்வரின் கழுத்தை தன் பலங்கொண்ட மட்டும் அழுத்திப் பிடிக்க முயன்று தோற்றான். இது நடந்த இடம் - பத்ரா நதிக்கரையில்.

* ஆசார்யருக்கு, நரஹரிதீர்த்தர், ஸ்ரீமூலராம சீதையைக் கொண்டு வந்து கொடுத்தபோது ஆசார்யரின் வயது 75. அன்று ஆஸ்விஜ சுத்த த்வாதசி மாலை வேளை. இதைப் பற்றி சுமத்வவிஜயத்தில் சொல்லப்படவில்லை.

* உடுப்பி அனந்தேஸ்வர ஆலயத்தில் ஐதரேய உபநிஷத் பாடத்தை சொல்லிக் கொண்டிருந்தபோது, ருத்ர இந்திராதி தேவதைகள், வானிலிருந்து தேவலோகத்து புஷ்பங்களை அவர் மேல் சொரிய, அனைவரும் பார்த்திருக்க ஆசார்யர் அனைவரின் கண்களிலிருந்து மறைந்தார்.

* புஷ்பவிருஷ்டியான நாள் - பிங்கள சம்வத்ஸரம் மாக சுத்த நவமி. ஆண்டு 1317. ஸ்ரீமதாசார்யர் ஒரு ரூபத்தில் உடுப்பியிலும், ஒரு ரூபத்தில் உத்தர பத்ரியில் வேதவியாசருடனும், இன்னொரு ருபத்தில் அவரின் கிரந்தங்களில் எப்போதும் நிலைத்திருக்கிறார் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

* உத்தர பத்ரியில் வேதவியாசர், ஸ்ரீமதாசார்யர் மற்றும் பல சிஷ்யர்களுடன் சேர்ந்து இந்த கல்பத்தின் இறுதிவரை இருக்கிறார் என்பது நம்பிக்கை.

இந்த அனைத்து தகவல்களும் தொகுத்து வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஏதேனும் வேறுபாடு இருந்தால் தயவுசெய்து தெரிவிக்கவும். அதனை பரிசீலித்து, அடுத்த பதிப்பில் சரிசெய்கிறோம். ***